# அசோகரும் அவருடைய காலமும்

எம். எஸ். கோவிந்தசாமி

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க.வெ.) வரிசை எண்—495

# அசோகரும் அவருடைய காலமும்

ஆசிரியர்

**எம். எஸ். கோவிந்தசாமி,** எம்.ஏ.,எம்.லிட்.,
விரிவுரையாளர், வரலாற்றுத்துறை,
அண்ணமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணமலை நகர்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—September, 1973
Second Edition (Revised)—October, 1977
Number of Copies—1000

T.N.T.B.S. (C.P.) No. 495

© Government of Tamilnadu

# ASOKA AND HIS TIMES

M. S. GOVINDASAMY

Price Rs. 4·90

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

This book has been printed on concessional paper made available by the Government of India.

*Printed by*
KALYAN PRINTERS,
1/10, Muniappa Mudali St.,
Madras-600 001.

# அணிந்துரை

(திரு. செ. அரங்கநாயகம், தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினேழாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பட்டப் படிப்பு வகுப்புவரை மாணவர்கள் தங்களின் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவருகின்றனர். நாடு முழுவதும் பரந்துள்ள மாணவர்களின் ஆர்வம், 'தமிழிலேயே கற்பிப்போம்' என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்துள்ள நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத்திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது.

வரலாற்றியல், அரசியல், உளவியல், பொருளியல், புவியியல், புவியமைப்பியல், மனையியல், மெய்ப்பொருளியல், கணிதவியல், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல், சட்டவியல் ஆகிய பல துறைகளில் மூலநூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் நூல்களை வெளியிட்டுவருகிறது.

இவற்றுள் ஒன்றான அசோகரும் அவருடைய காலமும் என்னும் இந்நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் சார்பில் வெளியான 495 ஆவது வெளியீடாகும். தமிழ் மக்களின் பேராதரவினாலும் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டவர்களின் நல்லூக்கத்தினாலும் இதன் முந்தைய பதிப்புப் படிகள் அனைத்தும் விற்பனையாகிவிட்டன. ஆதலின் இப்பொழுது இந்நூல் மீண்டும் வெளிவருகிறது. இந்நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் 'மாநில மொழியில் பல்கலைக் கழக நூல்கள் வெளியிடும் திட்டத்'தின்கீழ் வெளியிடப்படுகிறது.

தமிழில் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம்பெற வேண்டும் என்பதே நம் குறிக்கோளாகும். கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும், கலையியற் பாடங்களையும் தொழில்நுட்ப அறிவுப் பாடங்களையும் பயிலுகின்ற மாணவர்கள் அவற்றைத் தமிழில் பயில வேண்டும் என்பதை வலியுறுத்தி வருவதற்குக் காரணம், தமிழறிவு வளர வேண்டும் என்பதைவிட, தமிழ் மக்களின் அறிவு ஆற்றல் எளிதாக, விரைவாக வளர வேண்டும் என்பதுதான். 'எதிலும் தமிழ்; எங்கும் தமிழ்' என்னும் குறிக்கோளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு தமிழகத்து ஆசிரியப் பெருமக்களையும் மாணவர்களையும் சார்ந்ததாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரித்தாகுக.

செ. அரங்கநாயகம்

# பொருளடக்கம்

## பகுதி I


பக்கம்

1. அசோகரின் முன்னோர்கள் ... 1
2. அசோகரின் காலம் ... 5
3. அசோகருடைய கல்வெட்டுகளின் காலம் ... 7
4. அசோகருடைய வரலாற்றின் அடிப்படைச் சான்றுகள் ... 9


## பகுதி II


1. அசோகரின் இளமைப் பருவம் ... 16
2. அசோகர் பட்டத்திற்கு வருதல் ... 19
3. அசோகருடைய சகோதரர்களும் மனைவியரும் ... 21
4. அசோகர் ஆட்சியின் தொடக்கம் ... 23
5. கலிங்கப் போர் ... 24
6. பௌத்த சமயத்தைத் தழுவுதல் ... 25
7. அசோகர் ஆட்சியின் முக்கிய நிகழ்ச்சிகள் ... 29
8. அசோகரின் இறுதிக்காலம் ... 33


## பகுதி III


1. அசோகருடைய பேரரசின் பரப்பு ... 36
2. அசோகரின் வெளிநாட்டுக் கொள்கை ... 41
3. அசோகரின் ஆட்சிமுறை ... 43


## பகுதி IV


1. அசோகரின் சமயம் ... 63
2. அசோகருடைய தர்மம் ... 67

பக்கம்

3. அசோகர் பௌத்த சமயத்திற்கு ஆற்றிய தொண்டுகள் ... 75
4. அசோகரும் பிற சமயத்தினரும் ... 85

## பகுதி V

1. அசோகரின் பெருமை ... 89
2. அசோகருடைய வழியினரும் மௌரியப் பேரரசின் வீழ்ச்சியும் ... 95

## பகுதி VI

1. சமய நிலை ... 101
சமூகப் பொருளாதார நிலை ... 106
3. பண்பாடு : கல்வி, கலைகள் ... 113

## பகுதி VII

அசோகர் காலத்தில் தென்னிந்தியாவும் இலங்கையும் ... 125

## பகுதி VIII

அசோகரின் கல்வெட்டுகள் ... 131
மேற்கோள் நூற்பட்டியல் ... 180
கலைச்சொற்கள் (ஆங்கிலம்—தமிழ்) ... 182
,, (தமிழ்—ஆங்கிலம்) ... 186
பொருட்குறிப்பு அகராதி ... 190

# அசோகரும்
# அவருடைய காலமும்

பகுதி I

# 1. அசோகரின் முன்னோர்கள்

வரலாற்றில் ஒரு குறிப்பிட்ட காலத்தை ஆராயும்பொழுது, அதற்கு முந்திய காலத்தையும் பிந்திய காலத்தையும் நன்கு அறிந்தால்தான் முழு உண்மையும் புலப்படும். அம்முறையில் அசோகரது முன்னோர்களைப் பற்றியும் அவருக்குப் பின்வந்தவர்களைப் பற்றியும் நாம் அறிந்துகொள்வது அவசியமாகும். அசோகரை உலகுக்கு அளித்தது மௌரிய வமிசம். மௌரிய வமிசத்தை ஏற்படுத்தியவர் சந்திரகுப்தர். இவர் நந்த குலத்தின் ஒரு பிரிவைச் சேர்ந்தவர் என்றும், தாழ்ந்த குலத்தில் தோன்றியவர் என்றும் புராணங்களும் முத்திராராக்ஷசம் என்ற வடமொழி நூலும் கூறுகின்றன.

சந்திரகுப்தர் கடைசி நந்த வேந்தன் தனநந்தனுடன் முரண்பட்டு அவனையொழிக்கக் கிரேக்க வீரன் அலெக்சாண்டரின் உதவியை நாடினார். அடக்கமின்றி 'உதவி கேட்க வந்த சந்திரகுப்தரிடம் அலெக்சாண்டர் சீற்றங்கொண்டு தம் பாசறையினின்று விரட்டிவிட்டார். பின்னர்த்தான் சந்திரகுப்தர் அர்த்தசாஸ்திரத்தை இயற்றிய சாணக்கியரின் உதவியை நாடினார். இருவரும் படைதிரட்டிக்கொண்டு பாடலிபுத்திரம் சென்று நந்த மன்னனை வென்று மௌரியர் ஆட்சியை ஏற்படுத்தினர். அதன்பின் ஏறக்குறைய ஓராண்டு வரை சந்திரகுப்தருக்கு நந்தவமிசத்தைச் சேர்ந்தவர்களால் பல தொல்லைகள் ஏற்பட்டன.

இவ்வாறு சந்திரகுப்தர் மகதநாட்டின் மன்னராகியது ஏறக்குறைய கி. மு. 325 ஆம் ஆண்டாகும். பாடலிபுத்திரத்தில் தம் நிலையை உறுதிப்படுத்திக்கொண்ட பின் சந்திரகுப்தர் சிந்து சமவெளியை வெல்ல முயன்றார். அலெக்சாண்டர் இறந்தபின் வடமேற்கு இந்தியாவில் கிரேக்க ஆட்சி வலிமையிழக்கத் தொடங்கியது. பிலிப்பாஸ் என்ற கிரேக்கத் தலைவன் தன்னுடைய வீரர்களாலேயே கொல்லப்பட்டான். அவனுக்குப் பிறகு வந்த யூதிமாஸ் என்ற கிரேக்கத் தலைவன் கிரேக்க ஆட்சியைக் காப்பாற்ற இயலாமல் ஏறக்குறைய கி.மு. 317ஆம்

ஆண்டில் பஞ்சாபிலிருந்து திரும்பிச் சென்றுவிட்டான். அதன் பின்னர் சந்திரகுப்தர் வடமேற்கு இந்தியப் பகுதியை வென்று தம் நாட்டுடன் இணைத்திருக்கவேண்டும். இதனை அடுத்து சந்திரகுப்தர் குஜராத், கத்தியவார்ப் பகுதிகளை வென்றதாகத் தெரிகிறது. இப் போர் பற்றிய பிற செய்திகள் எதுவும் நமக்குத் தெரியவில்லை.

ஏறத்தாழ கி.மு. 305-ல் வடமேற்கு இந்தியாவில் மீண்டும் கிரேக்க ஆட்சியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் செல்யூகஸ் நிகேடர் என்ற மேற்கு ஆசியாவை ஆண்ட கிரேக்க மன்னன் இந்துகுஷ் மலையைக்கடந்து இந்தியாவின்மீது படையெடுத்து வந்தான். சந்திரகுப்தரும் போருக்குத் தயாராக இருந்தார். போர் நடந்ததா இல்லையா என்பதைப்பற்றி உறுதியாகக் கூறுவதற்கில்லை. இருப்பினும், இருவருக்கும் இடையே ஓர் உடன்பாடு ஏற்பட்டதைப்பற்றித் தெளிவான சான்றுகள் உள்ளன. சந்திரகுப்தர் கிரேக்க மன்னனுக்கு 500 போர் யானைகளை அளித்தார். அவற்றிற்குப் பதிலாகச் செல்யூகஸ் நிகேடர் சந்திரகுப்தருக்கு ஆப்கானிஸ்தானம், பலுசிஸ்தானம், காந்தாரம், இந்துகுஷ் மலைப்பகுதி முதலிய இடங்களை அளித்தான். தவிர, இவ்விரு வேந்தரும் திருமண உறவு கொண்டனர். செல்யூகஸ் நிகேடரின் மகளைச் சந்திரகுப்தர் மணந்தாரா அல்லது அவர் மகனாகிய பிந்துசாரர் மணந்தாரா என்பதைப்பற்றி உறுதியாக எதுவும் கூறுவதற்கில்லை. இந்த உடன்பாட்டிற்குப் பிறகு செல்யூகஸ், மெகஸ்தனிஸ் என்பவனைத் தன் தூதுவனாகப் பாடலிபுத்திரத்திற்கு அனுப்பிவைத்தான். மெகஸ்தனிஸ் பாடலிபுத்திரத்தில் பல ஆண்டுகள் தங்கி யிருந்ததுடன் இந்தியாவில் தான் கண்டதையும் கேட்டதையும் **இண்டிகா** என்ற நூலில் எழுதியிருக்கிறான். அந் நூல் மௌரிய வரலாற்றை அறிய எவ்வளவுதூரம் பயனுடையதென்பதைப் பின்னர்க் காண்போம்.

சந்திரகுப்தரின் பிற்கால வாழ்க்கையைப்பற்றி நமக்கு எதுவும் தெரியவில்லை. அவருடைய ஆட்சியின் இறுதியில் வட இந்தியாவில் ஒரு கொடிய பஞ்சம் பன்னிரண்டு ஆண்டுகள் வரை இருந்ததாகவும், சந்திரகுப்தர் முடி துறந்து, சமண மதத்தில் சேர்ந்து, பத்திரபாகு என்ற சமணத் துறவியைப் பின் பற்றித் தெற்கே வந்து சிரவணபெல்கோலா என்ற இடத்தில் தங்கியதாகவும், பின்னர் உண்ணாநோன்பிருந்து உயிர்துறந்த தாகவும் சமணநூல்கள் கூறுகின்றன. இச் செய்தியை மறுக்கவோ உறுதிப்படுத்தவோ தக்க சான்றுகள் இல்லா விடினும் பெரும்பாலான வரலாற்றறிஞர்கள் இதனை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

புராணங்களும் பௌத்த நூல்களும் சந்திரகுப்தர் இருபத்துநான்கு ஆண்டுகள் ஆண்டதாகக் கூறுவதால் அவரது ஆட்சி கி.மு. 301-ல் முடிவுற்றிருத்தல் வேண்டும். இனி, சந்திர குப்தர் தென்னிந்தியாவையும் வென்று ஆண்டதாகப் புளுடார்க், ஜஸ்டின் முதலிய மேல்நாட்டவரும் மகாவம்சத்தின் ஆசிரியரும் கூறுவது ஏற்கத்தக்கதன்று. அசாம் நீங்கலாக ஆப்கானிஸ்தானம் உட்பட வடஇந்தியாவைச் சந்திரகுப்தர் ஆண்டதாகக்கொள்வதே பொருத்தமாம்.

## பிந்துசாரர் (கி. மு. 301—273)

சந்திரகுப்தருக்குப் பின் அவர் மகன் பிந்துசாரர் அரியணையேறினர். இவர் இருபத்தைந்து ஆண்டுகள் ஆண்டதாகப் புராணங்களும், இருபத்தெட்டு ஆண்டுகள் ஆண்டதாய்ப் பௌத்த நூலான மகாவம்சமும் கூறுகின்றன. பிந்திய கருத்தைப் பொருத்தமானதாகக் கொள்ளலாம். இவர் நீண்டகாலம் ஆண்டபொழுதிலும் இவரது வரலாற்றை அறியப் போதிய சான்றுகள் இல்லை. பரிசிஷ்டபர்வன் என்ற நூல் ஆசிரியனை ஹேமசந்திரன், பிந்துசாரர் காலத்திலும் சாணக்கியர் தொடர்ந்து தலைமை அமைச்சராக இருந்து வந்ததாகக் கூறுகின்ருன். 'ஆரிய மஞ்சுஸ்ரீ மூலகல்பம்' என்ற பௌத்த நூலும் பிந்துசாரரைப் பற்றிச் சில அரிய செய்திகளைக் கூறுகின்றது. அதன்படி பிந்துசாரர் இளைஞனுக இருக்கும் பொழுதே அரியணையேறினர் என்றும், அஞ்சாநெஞ்சம் படைத்தவர், நாவன்மை மிக்கவர் என்றும் தெரிகின்றது. மேலும், சாணக்கியன் தொடர்ந்து அமைச்சனுக விளங்கியதை யும் அது குறிப்பிடுகின்றது. இது தவிர 17ஆம் நூற்ருண்டின் தொடக்கத்தில் பௌத்த சமய வரலாற்றை எழுதிய திபேத்திய நாட்டு அறிஞன் தாரநாதன், பிந்துசாரர் சாணக்கியன் உதவி யுடன் பதினறு மன்னர்களைப் போரில் வென்று மேற்குக் கடலுக்கும் கீழைக்கடலுக்கும் இடையேயிருந்த நாட்டைத் தம் பேரரசுடன் இணைத்துக்கொண்டதாகக் கூறுகின்ருன். இச் செய்தி முழுதும் கற்பனை என்றெண்ணித் தள்ளிவிட முடியாது. அப் போர்களை வடஇந்தியாவில் நடந்த போர்களெனக் கொள்ளுவதற்கும் இடமில்லை. தென்னிந்தியாவில் மௌரியர் ஆட்சி மைசூர், ஆந்திராப் பகுதிகள்வரை பரவியிருந்த தென்பது மறுக்கமுடியா உண்மையாகும். அப்படியென்ருல் தென்னிந்தியப் பகுதிகளை வென்றது சந்திரகுப்தரா, பிந்து சாரரா அல்லது அசோகரா என்று ஆராயவேண்டும். அசோகர் வென்ற ஒரே நாடு கலிங்கமென்பது அவர் கல்வெட்டு

களால் நன்கு தெரிகின்றது. சந்திரகுப்தர் தக்காணத்தை வென்ருர் என்பதற்குப் போதிய சான்றுகள் இல்லை. சங்ககாலத் தமிழ் இலக்கியங்களில் மௌரியரின் தென்னிந்தியப் படையெடுப்பைப்பற்றி நான்கு குறிப்புகள் உள்ளன. அவற்றின்படி மௌரியப் படை தெற்கே மதுரைவரை வந்ததாகத் தெரிகின்றது.[1] ஆனுல், தமிழ் நாட்டைப் பொறுத்தவரை இப் படையெடுப்புத் தோல்வியே. அசோகர் காலத்தில் தமிழ் மன்னர்கள் சுதந்தரமாய் இருந்தார்கள் என்பது அவர் கல்வெட்டுகளால் நன்கு புலனுகின்றது. ஆனுல், பிற இடங்களில் மௌரியப்படை வெற்றிபெற்றிருத்தல் வேண்டும். இனி, இப் படையெடுப்பு எப்பொழுது நிகழ்ந்திருக்கு மென்பதற்கு நேரிடையான சான்றுகள் இல்லை. ஆயினும், ஹதிகும்பாவில் கிடைத்துள்ள காரவேலன் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டின் படி கி.மு. 278-ல் தமிழ் மன்னர்களின் வலிமைமிக்க கூட்டு ஒன்று இருந்ததாகத் தெரிகின்றது. இக் கூட்டு (League) மௌரியர்களுக்கு எதிராக ஏற்படுத்தப்பட்டதென்ருல், பிந்துசாரர் தெற்கே படையெடுத்தது உண்மையெனக் கொள்ளப் பெரிதும் இடமுண்டு. தமிழ்நாட்டில் தோல்வியுற்ருலும் மைசூர் ஆந்திராப் பகுதிகளில் மௌரியப்படை வெற்றிபெற்று மௌரிய ஆட்சியை ஏற்படுத்தியிருக்க வேண்டும். கிரேக்கர்கள் பிந்துசாரரை அமித்ரகாதன் (எதிரிகளை அழிப்பவன்) என்றழைத்தது ஓரளவிற்கு அவரது இப் போர் முயற்சிகளை வலியுறுத்துவதாகும்.[2]

சந்திரகுப்தர் மேற்காசியாவில் ஆண்ட கிரேக்கமன்னர்களுடன் ஏற்படுத்திய நல்லுறவு பிந்துசாரர் காலத்தில் தொடர்ந்து வளர்ந்து வந்தது. மெகஸ்தனீஸ் இந்தியாவிலிருந்து திரும்பிய பிறகு டெயிமாக்கஸ் என்பவன் பாடலிபுரத்திற்குத் தூதுவனுக வந்துசேர்ந்தான். கி.மு.280-ல் செல்யூகஸ் கொலையுண்டபின் முதலாவது ஆண்டியோகஸ் சிரியாவின் மன்னனுனுன். அவனிடம் பிந்துசாரர் திராட்சை ரச இனிய மது, உலர்ந்த அத்திப்பழம், ஒரு கிரேக்கப் பேராசிரியன் முதலியவை வேண்டுமென்று கேட்டபொழுது அக் கிரேக்க மன்னன் முதல் இரண்டையும் அனுப்பிவிட்டு கிரேக்கப் பேராசிரியனை அனுப்புவது கிரேக்கச் சட்டத்திற்கு மாருன செயலென்றும் அது தன்னுல் இயலாது என்றும் கூறிவிட்டானும்.

[1] Prof. R. Sathianathaier, History of India, Vol. I, p. 119.

[2] Contra, K. A. Nilakanta Sastri (Ed.) Age of the Nandas and Mauryas, p. 168.

அக் காலத்தில் எகிப்து நாட்டை ஆண்ட இரண்டாவது டாலமி என்ற மன்னன் பாடலிபுத்திரத்திற்குத் தன் பிரதிநிதி ஒருவனை அனுப்பிவைத்தான். இவைதாம் பிந்துசாரரைப் பற்றி நாம் அறியும் செய்திகளாம்.

## 2. அசோகரின் காலம்

அசோகர் எந்த ஆண்டில் பட்டத்திற்கு வந்தார் என்பது பற்றி அறிஞர்களிடையே ஓரளவிற்குக் கருத்து வேறுபாடு உள்ளது. இதனை ஆராயும்பொழுது குறிப்பாக நாம் மனத்தில் கொள்ளவேண்டிய செய்தி சந்திரகுப்தரும் அலெக்சாண்டரும் ஒரே காலத்தில் வாழ்ந்தவர்கள், பஞ்சாபில் சந்தித்துக் கொண்டவர்கள் என்பதாம். சந்திரகுப்தர் ஏறக்குறைய கி. மு. 325-ல் பட்டத்திற்கு வந்தார் என்று முன்பு பார்த்தோம். இக் கருத்தை V. A. ஸ்மித் உள்படப் பல வரலாற்றாசிரியர் ஆதரிக்கின்றனர்.[1] அந்த ஆண்டிலிருந்து சந்திரகுப்தரும் பிந்துசாரரும் ஆண்ட மொத்த ஆண்டுகளைக் கழித்தால்— கி. மு. $325-24+28=$ கி. மு. 273-ல் அசோகர் பட்டத்திற்கு வந்ததாகக் கூறலாம்.

இன்னொரு முறையிலும் இதை ஆராயலாம். மகாவம்சமும் தீபவம்சமும், புத்தர் பரிநிர்வாண மடைந்து 218 ஆண்டுகள் கழித்து அசோகர் அரியணையேறினார் என்று கூறுகின்றன. புத்தர் பரிநிர்வாணம் அடைந்த ஆண்டைப்பற்றிப் பல கருத்துகள் உள்ளன. சிலர் இது நிகழ்ந்தது கி. மு. 544-ல் என்றும், வேறு சிலர் கி. மு. 486-ல் என்றும், மற்றும் சிலர் கி. மு. 483-ல் என்றும் கருதுகின்றனர். அசோகருடைய கல்வெட்டில் குறிப்பிட்டுள்ள கிரேக்க மன்னர்களின் காலத்தினையும் சந்திரகுப்தர், அலெக்சாண்டர் காலத்தினையும் வைத்துக்கொண்டு ஆராயும்பொழுது முதலில் கூறப்பட்டுள்ள ஆண்டு, அதாவது கி.மு. 544 பொருத்தமற்றதென எளிதில் புலனாகும், மற்ற இரு ஆண்டுகளில் (அதாவது கி. மு. 486, கி. மு. 483) முந்தியதே மிகவும் பொருத்தமானது என்று ரோமிலா தாபர் கூறுகிறார்.[2] இக் கருத்து, சீனாவில் கான்டன் நகரில் இருந்த, புத்தர் பரிநிர்வாண மடைந்த ஆண்டு நிறைவைக் குறிக்கும் புள்ளிகளைக்கொண்ட

[1] Contra, Romila Thapar–Asoka, p. 16.

[2] Asoka and Decline of the Mauryas, p. 15.

பதிவேட்டினையும்,[1] புராண, பௌத்த நூல்களின் சான்றுகளையும், அசோகரின் பதின்மூன்றாவது கற்பாறை ஆணையின் காலத்தையும்,[2] அதில் குறிப்பிடப்பட்டுள்ள கிரேக்க மன்னர்களின் காலங்களையும்,[3] திவ்வியாவதானத்தில் அசோகர் யாத்திரை செல்வதற்குமுன் நிகழ்ந்ததாகக் கூறப்பட்டுள்ள சூரியகிரகண காலத்தையும் (கி. மு. 249), ரும்மிந்தெய்க் கல்வெட்டில் உள்ள ஆண்டையும், மேற்கூறிய யாத்திரையைப் பற்றிய செய்தியையும் அடிப்படையாகக் கொண்டது. இவ்வாறு புத்தருடைய பரிநிர்வாணம் கி. மு. 486-ல் நிகழ்ந்ததெனக் கொள்ளுமிடத்து அசோகர் முடிசூட்டிக்கொண்டது கி. மு. 269—268-ல் என்று ரோமிலா தாபர் கூறுகிறார்.[4] இத் தேதிக்கும், முன்பு கூறப்பட்டதற்கும் அதிக வேறுபாடில்லை என்பது எளிதில் விளங்கும். இனி, அசோகர் முடிசூட்டிக்கொண்டதற்கும் அவர் பட்டத்திற்கு வந்ததற்கும் இடையே நான்காண்டுகள் இருந்ததென்று பௌத்த நூல்கள் கூறுவதை நாம் நினைவிற் கொள்ளுதல் வேண்டும்.

தவிர, புத்தர் கி. மு. 483-ல் பரிநிர்வாணமடைந்தார்; அதன்பின் தீபவம்சம் கூறுவதுபோல், 218 ஆண்டுகள் கழித்து அதாவது கி. மு. 265-ல் அசோகர் முடிசூட்டிக் கொண்டார் என்று பேராசிரியர் K. A. நீலகண்ட சாஸ்திரியார் கூறுகிறார்.[5] இதன்படி அசோகர் பட்டத்திற்கு வந்த ஆண்டு கி. மு. 269. இதிலிருந்து சந்திரகுப்தர் பட்டத்திற்கு வந்த ஆண்டைக் கணக்கிட்டால்—பிந்துசாரர் 28 ஆண்டுகள் ஆண்டதாக வைத்துக்கொண்டே—கி.மு. 269 + 28 + 24 = கி.மு. 321 ஆகும். ஆனால், அதே பேராசிரியர் சந்திரகுப்தர் கி.மு. 325—324ஆம்

[1] காண்டன் நகரில் ஒரு பதிவேட்டில் புத்தர் பரிநிர்வாணமடைந்த ஆண்டு நிறைவைக் குறிக்க ஒவ்வோர் ஆண்டும் ஒரு புள்ளியிட்டு வந்ததாகவும், அவ் வண்ணம் கி. பி. 489ஆம் ஆண்டுவரை புள்ளியிடப்பட்டு வந்ததாகவும், அவ் வாண்டில் மொத்தம் 975 புள்ளியிருந்ததாகவும், அதன் அடிப்படையில் புத்தர் பரிநிர்வாணமடைந்த ஆண்டு கி.மு. 486-ல் என்றும் கூறப்படுகின்றது. —History and Culture of the Indian People, Vol. II, The Age of Imperial Unity, p. 36.

[2] Romila Thapar, op. cit., p. 41.

[3] சிரியாவின் மன்னன் இரண்டாவது ஆன்டியோகஸ் கி.மு. 261—246, எகிப்து மன்னன் இரண்டாவது டாலமி பிலடெல்பஸ் கி.மு. 285, 247, மாசிடோனிய வேந்தன் ஆன்டிகோனஸ் கி.மு. 276—239, சிரேனி மன்னன் மகஸ்—இறந்தது கி. மு. 258-க்கும் 250-க்கும் இடையே, எபிரஸ் நாட்டு அரசன் அலெக்சாண்டர் கி.மு. 272—255—Romila Thapar, op. cit., pp. 40 and 41.

[4] Op. cit., p. 15.

Age of the Nandas and Mauryas, p. 206.

ஆண்டிலேயே பட்டத்திற்கு வந்திருக்கலாம் என்றும் கூறுகிறார்.[1] இரண்டிற்கும் உள்ள முரண்பாட்டை நோக்க அசோகர் கி.மு. 269-க்கு முன்பாகவே பட்டத்திற்கு வந்தார் என்று கொள்வதே பொருத்தமாம்.

# 3. அசோகருடைய கல்வெட்டுகளின் காலம்

அசோகரது கல்வெட்டுகள் அவரது ஆணைகளாம் (Edicts). அவை கற்றூண்களிலும் கற்பாறைகளிலும் செதுக்கப்பட்டுள்ளன. அவற்றைக் கற்பாறை ஆணைகள் (Rock Edicts), கற்றூண் ஆணைகள் (Pillar Edicts), சிறிய கற்பாறை ஆணைகள் (Minor Rock Edicts) என மூவகையாகப் பிரிக்கலாம். இக் கல்வெட்டுகள் எல்லாவற்றிலும் அவை வெளியிடப்பட்ட காலங்கள் குறிக்கப் படவில்லை. சிலவற்றில்தாம் உள்ளன. வரலாற்று நூல்களில் அசோகரின் கல்வெட்டுகளுக்கு எண் கொடுக்கப்பட்டிருப்பதை அறிவோம். அது, அவை கண்டுபிடிக்கப்பட்ட வரிசைப்படி அளிக்கப்பட்ட எண்ணுகும். அதற்கும் கல்வெட்டுகள் வெளி யிடப்பட்ட காலத்திற்கும் தொடர்பில்லை. இனி, கல்வெட்டு களில் காணப்படும் செய்திகளை அடிப்படையாகக்கொண்டு அவற்றின் காலத்தை ஆராய்வோம்.

D.R. பண்டார்க்கார் போன்ற ஒரு சில அறிஞர்கள் அசோக ருடைய கற்பாறை ஆணைகள் (Rock Edicts) காலத்தால் கற்றூண் ஆணைகளைவிட (Pillar Edicts) பிந்தியவை எனக் கூறுகின்றனர்.[2] இதற்குக் கூறப்படும் காரணம் ஏழாவது கற்றூண் ஆணையில் அசோகரது 'தம்மலிபிகள்' (தர்ம சாசனங்கள்) கற்றூண் களிலும் கற்பலகைகளிலும் செதுக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிடு கின்றதேயொழிய, கற்பாறை ஆணைகளைப்பற்றிக் குறிப்பு எதுவு மில்லை; தவிர, மேற்கூறிய கற்றூண் ஆணையில் அசோகர் தாம் செய்த எல்லா அறங்களையும் பௌத்த மதம் பரவுவதற்குத் தாம் ஆற்றிய தொண்டினையும் குறிப்பிடவேயில்லை. ஆனால், அவை இரண்டாவது கற்பாறை ஆணையிலும் பதின்மூன்றாவது கற்பாறை ஆணையிலும் விளங்கக் கூறப்பட்டுள்ளன. எனவே, கற்றூண் ஆணைகள் காலத்தால் முந்தியவை.

[1] *Ibid.*, p. 138.

[2] *Vide* D. R. Bhandarkar—Asoka, p. 268.

ஆனல், பேராசிரியர் R. சத்தியநாதய்யர் கற்பாறை ஆணைகளே முதன்முதல் வெளியிடப்பட்டவை என்று கூறுகிருர்.[1] இதற்குக் கூறப்படும் காரணங்கள் யாவையெனில், அசோகரது 13ஆம் ஆட்சியாண்டிற்குப்பின் கற்பாறை ஆணைகள் வெளியிடப்படவில்லை என்பதும், ஏழாவது கற்றூண் ஆணையில் அது வரையப்படுவதைப்பற்றிய குறிப்புத்தான் உள்ளதென்பதும், 14ஆவது கற்பாறை ஆணையில் அசோகர் தம் ஆணைகளைச் சுருக்கியும், விரித்தும், நடுத்தரமாகவும் வரையும் எல்லா இடத்திலும் எல்லாவற்றையும் சொல்லவில்லை என்று கூறப்படுவதும், கற்றூண் ஆணைகளில், கற்பாறை ஆணைகளில் குறிப்பிட்டுள்ளதை விளக்கிக் கூறியிருப்பதும் ஆகும். உதாரணமாகத் தர்மத்தை வளர்ப்பது பற்றியும் அஹிம்சையைப் பின்பற்றுவது பற்றியும் கற்பாறை ஆணைகள் சொல்வதைக் கற்றூண் ஆணைகள் ஐந்தும் ஏழும் விரித்துக் கூறுகின்றன. இவ் வடிப்படையில் கற்பாறை ஆணைகள் அசோகரது பன்னிரண்டு, பதின்மூன்ரும் ஆட்சியாண்டுகளில் வெளியிடப்பட்டிருக்கலாமென்றும் (அதாவது ஏறக்குறைய கி.மு. 256-ல்) கற்றூண் ஆணைகள் இருபத்தாறு, இருபத்தேழாம் ஆட்சியாண்டுகளில் (ஏறக்குறைய கி.மு. 242-ல்) வெளியிடப்பட்டிருக்கலாமென்றும் பேராசிரியர் சத்தியநாதய்யர் கூறுகிருர். பேராசிரியர் இராதாகுமுத் முகர்ஜியும் இக் கருத்தையே கொண்டுள்ளார்.[2] இது தான் உண்மை என்று நமக்குத் தோன்றுகிறது.

சிறிய கற்பாறை ஆணைகளின் (Minor Rock Edicts) காலத்தைப்பற்றிக் குறிப்பிடுங்கால், அவற்றில் முதலாவது ஆணையின் சில பிரதிகளில் அசோகர் தம் ஆணைகளைக் கற்பாறைகளிலும் கற்றூண்களிலும் வரைய விரும்பியதைக் கூறுவதாலும், இரண்டாவது ஆணை அசோகரது தர்மத்தைச் சுருக்கமாய்க் கூறுவதாலும், அவை கி.மு. 257-ல் வெளியிடப்பட்டிருக்க வேண்டுமெனப் பேராசிரியர் சத்தியநாதய்யர் கருதுகின்ருர்.[3] பாப்ரு ஆணை (Bhabru Edict) அசோகர் பௌத்த சமயத்தில் சேர்ந்தபின் வெளியிடப்பட்டது. சிறிய கற்பாறை ஆணைகளும் பாப்ரு ஆணையும் தொடக்கத்திலேயே வெளியிடப்பட்டவையெனக்கொள்ளலாம்.[4] இரண்டு கலிங்கக் கல்வெட்டுகளும் கி.மு. 257-6-ல் வெளியிடப்பட்டிருக்க வேண்டும். கற்பாறை ஆணை

[1] Op. cit., pp., 123 & 124.
[2] Asoka, Appendix B, pp. 208-214.
[3] Op. cit., pp. 124.
[4] Contra R.K. Mookerji, Asoka, p. 214 and Romila Thapar, op cit., p. 37.

களைவிட இவை முந்தியவையே. மூன்றாவது பௌத்த மாநாட்டைப் பற்றிக் கூறும் சிறிய கற்றூண் ஆணைகள் நான்கும் கி. மு. 242-க்கும் 232-க்கும் இடைப்பட்ட காலத்தில் வரையப் பட்டவை எனத் தோன்றுகிறது. ரும்மிந்தெய்க் கற்றூண் ஆணை அசோகரது 20ஆவது ஆட்சியாண்டில் வெளியிடப் பட்டது. நிக்லீவா கல்வெட்டும் அதே காலத்தைச் சேர்ந்ததுதான்.

# 4. அசோகருடைய வரலாற்றின் அடிப்படைச் சான்றுகள்
## (Sources)

அசோகருடைய வரலாற்றினை அறிய நமக்கு மிகவும் பயன்படும் சான்றுகள் அவர் வெளியிட்ட ஆணைகளே. அவை யாவும் அவருடைய பேரரசில் பலவிடங்களில் கற்பாறை களிலும் கற்றூண்களிலும் வரையப்பட்டுள்ளன. அவை காணப்படும் இடங்களிலிருந்து அவரது பேரரசின் பரப்பினை ஓரளவு எளிதாக அறிய முடிகின்றது. கண்டுபிடிக்கப் பட்டுள்ள கல்வெட்டுகளில் ஒன்று அராமிய மொழியிலும், பிற பாலி மொழியிலும் உள்ளன. வடமேற்குப் பகுதியில் காணப் படும் கல்வெட்டுகள் கரோஷ்டி எழுத்திலும், பிற இடங்களில் உள்ளவை பிராமி எழுத்திலும் வெளியிடப்பட்டுள்ளன. பேரரசனுக்கேயுரிய கம்பீரமான நடையில் அசோகரின் கல்வெட்டுகள் வரையப்பட்டுள்ளன. சில கல்வெட்டுகளில்தான் அசோகருடைய பெயர் காணப்படுகின்றது. பிறவற்றில் அவருடைய பட்டப்பெயர்களே உள்ளன. சுருங்கக் கூறுமிடத்து அசோகரது புகழை நமக்கு எடுத்துக்காட்டும் அவர் கல்வெட்டுகள், கல்வெட்டு வரலாற்றிலேயே சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளன.

**சிறிய கற்பாறை ஆணைகள் (Minor Rock Edicts)**

முதலாவது சிறிய கற்பாறை ஆணை அசோகர் சமயத் துறையில் படிப்படியாக அடைந்த முன்னேற்றத்தைக் கூறு வதுடன் ஆன்மீகத் துறையில் தொடர்ச்சியான முயற்சியின் சிறப்பினை விளக்குகின்றது. இரண்டாவது சிறிய கற்பாறை ஆணை அசோகருடைய நல்வழியை விளக்குகின்றது; பெற்றோ ருக்குக் கீழ்ப்படிதல், எல்லா உயிர்களிடத்தும் அன்பு கொள்ளல், உண்மையே பேசுதல், ஆசிரியருக்கு அடிபணிதல், உறவினரைத் தக்கவாறு உபசரித்தல் முதலியன வலியுறுத்தப்படுகின்றன.

பாப்ரு ஆணை (Bhabru Edict) அசோகர் பௌத்த சமயத்தைச் சேர்ந்தவர்; அதில் மிக்க ஈடுபாடு கொண்டவர் என்பதை ஐயமறக் காட்டுகின்றது. மேலும், அதில் அசோகர் பௌத்த வேதத்தின் சில பகுதிகளைக் குறிப்பிட்டு அவற்றைத் துறவிகளும், சாதாரண பௌத்தர்களும் நன்கு கற்கவேண்டும் என வற்புறுத்துகின்றார்.

### கற்பாறை ஆணைகள் (Rock Edicts)

முதலாவது கற்பாறை ஆணையில், அசோகர் கொல்லாமையை வலியுறுத்துகிறார். உணவிற்காகவோ, வேள்விக்காகவோ அல்லது வேறு கொண்டாட்டங்களுக்கோ விலங்குகளைக் கொல்லக்கூடாது என்று ஆணையிட்டதுடன் தம் அரண்மனையில் உணவிற்காக ஆயிரக்கணக்கான விலங்குகள் கொல்லப்பட்டு வந்ததை நிறுத்தி, மூன்றாகக் குறைத்துக்கொண்டு அதையும் எதிர்காலத்தில் நிறுத்திவிடுவதாக அசோகர் உறுதி கூறுகின்றார். இரண்டாவது கற்பாறை ஆணையில், அசோகர் தம் நாட்டிலும் அடுத்துள்ள சோழ, பாண்டிய, சத்தியபுத்திர, கேரளபுத்திர நாடுகளிலும், பிறநாடுகளிலும் மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் ஏற்படும் நோய்களை நீக்குவதற்கான மருந்து மூலிகைகள், வேர்கள் முதலியவற்றைப் பயிரிட்டும், சாலைகளில் நிழல்தரும் மரங்களை நட்டும், கிணறுகளை வெட்டிவைத்தும் எல்லா உயிர்களும் இன்புறும்படி செய்ததைக் கூறுகின்றார். மூன்றாவது கற்பாறை ஆணையில், மாநிலத் தலைவர்கள், மாவட்டத் தலைவர்கள் உட்பட தமது அரசாங்க அலுவலர்களை நிர்வாகக் காரணத்திற்காகவும், தம் நல்வழிக் கோட்பாட்டைப் பரப்பும்பொருட்டும் ஐந்தாண்டிற்கு ஒருமுறை (இட) மாற்றம் செய்வதைப்பற்றி அசோகர் கூறுகின்றார். இக் கல்வெட்டில், அசோகர் அந்தணர்கள், துறவிகள், நண்பர்கள் முதலியோரிடத்தில் அன்புடன் நடந்துகொள்ள வேண்டியதையும் சிக்கனத்தையும் வலியுறுத்துகிறார். நான்காவது கற்பாறை ஆணையில், அசோகர் தம் முயற்சியால் பல நூற்றாண்டுகளில் காணாத அளவிற்கு மக்கள் நல்வழியில் அல்லது தர்மத்தில் முன்னேற்றம் அடைந்துள்ளதைக் கண்டு மகிழ்ந்து, தம் குலத்தோர் தொடர்ந்து தம் பணியை ஆற்றுவார்கள் எனக் கூறுகின்றார். ஐந்தாவது கற்பாறை ஆணையில், அசோகர் தர்ம மகாமாத்திரர்களை நியமித்ததுபற்றியும் அவர்களது பணிகளையும் குறிப்பிடுகின்றார். ஆறாவது கற்பாறை ஆணையில்; அசோகர் குடிகளின் நலத்தைப்பற்றிய செய்திகளைத் துரிதமாக அவ்வப்பொழுது தமக்குத் தெரிவிப்பதற்காகச் செய்துள்ள ஏற்பாட்டைக் குறிப்பிடுவதுடன் தம்கீழ்ப் பணிபுரிவோர் தம்மைப்போன்றே

தளராது எல்லா மக்களின் நலத்திற்காகப் பாடுபடவேண்டுமென் றுரைக்கின்றார். ஏழாவது கற்பாறை ஆணையில் அசோகர் புலனடக்கத்தையும், மனத்தூய்மையையும், நன்றியையும், தர்மத்தில் நிலையான ஈடுபாட்டையும் வலியுறுத்துகின்றார். எட்டாவது கற்பாறை ஆணையில், இதற்கு முன்பு மன்னர்கள் பொழுதுபோக்கிற்காக உல்லாசப் பயணம் செய்வதும் வேட்டை யாடுவதும் பழக்கமென்றும், ஆனால் தாமோ, பத்தாம் ஆட்சி யாண்டிலிருந்து புத்தகயா முதலிய தலங்களுக்குப் புனித யாத்திரை செய்து வருவதாகவும் அது மிக்க பயனுடையதாக உள்ளதென்றும் அசோகர் குறிப்பிடுகின்றார். ஒன்பதாவது கற்பாறை ஆணையில், மாந்தர் தாம் நோய்வாய்ப்பட்டிருக்கும் பொழுதும், திருமணத்தின் பொழுதும், குழந்தைகள் பிறந்த பொழுதும், பிரயாணம் தொடங்கும் முன்பும் பல சடங்குகளைச் செய்கின்றனர்; ஆனால், அவற்றினால் பயன் எதுவும் இல்லை; உண்மையான, பொருளுள்ள, சடங்குகள் யாதெனில் அடிமை களையும் பணியாள்களையும் நன்கு நடத்துவது, ஆசிரியருக்கு மரியாதை செய்தல், எல்லா உயிர்களிடத்தும் கருணைகாட்டல், அந்தணர்களையும் துறவிகளையும் ஆதரித்தல் ஆகிய இவையே யென அசோகர் விளம்புகின்றார்.

பத்து, பதினொன்றாவது கற்பாறை ஆணைகளில், அசோகர் தாம் கூறும் தர்மத்தைக் கடைப்பிடிப்பதே உண்மையான புகழும் அறமும் ஆகுமென மொழிகின்றார். பன்னிரண்டாவது கற்பாறை ஆணை, சமயப்பொறைக்கு அசோகர் இலக்கண மாய்த் திகழ்வதையும், அவரது பரந்த உள்ளத்தையும் எடுத்துக் காட்டுகின்றது. பதின்மூன்றாவது கற்பாறை ஆணையில், அசோகர் கலிங்கப்போரின் வருந்தத்தக்க நிகழ்ச்சிகளைக் கூறுவதுடன் தர்மத்தின் வெற்றியே தலையாய வெற்றியென விளம்புகின்றார். மேலும், அக் கல்வெட்டில்தான் பிற நாடுகளுக்குச் சமயப் பரப்புக் குழுவினரை அனுப்பியதையும் குறிப்பிடுகின்றார். மேற் கூறிய பதின்மூன்று கற்பாறை ஆணைகளுக்கும் பிற்சேர்க்கையாக அமைந்துள்ளது பதினான்காம் கற்பாறை ஆணை. அதில், தம் தர்ம வழியை மக்கள் கடைப்பிடித்து நல்வாழ்வு வாழ்வதற் காகவே தம் ஆணைகளைக் கல்லில் வெட்டியதாக அசோகர் கூறுகின்றார். கலிங்க நாட்டில் காணப்படும் இரு கற்பாறை ஆணைகளில் அசோகர் கலிங்க மக்களைக் குறிப்பாக எல்லையில் வாழும் நாகரிகமற்ற மக்களை, எவ்வாறு ஆட்சி செய்ய வேண்டுமெனத் தம் அதிகாரிகளுக்கு விடுத்த செய்தி காணப் படுகின்றது. அசோகர் தம் குடிமக்களிடம் கொண்டிருந்த பேரன்பை இக் கல்வெட்டுகள் நன்கு புலப்படுத்துகின்றன.

தாம் கலிங்கத்தை வென்ற செய்தியை அசோகர் இவற்றில் குறிப்பிடவேயில்லை.

**கற்றூண் ஆணைகள் (Pillar Edicts)**

முதலாவது கற்றூண் ஆணையில் அசோகர் தம்மைப் போன்றே தம்முடைய பிரதிநிதிகளும் அறவழியில் நின்று பிறரையும் அவ்வழியிலேயே செல்லச் செய்யும் கடமையை வலியுறுத்துகின்றார். இரண்டாவது கற்றூண் ஆணையில் அசோகர், தம் தர்மவிதியின் சாரத்தைக் கூறுவதுடன் அதைத் தாம் எவ்வெவ்வழியில் பின்பற்றினர் என்பதையும் குறிப்பிடுகிறார். மூன்றாவது கற்றூண் ஆணையில், பேரரசர் ஒவ்வொருவரும் தங்கள் செயல்களை நன்கு ஆய்தல் வேண்டுமென்றும், அழிவைத்தேடும் தீயகுணங்களை நீக்க வேண்டுமென்றும் உரைக்கின்றார். நான்காவது கற்றூண் ஆணையில் அசோகர், மாநிலத் தலைவர்களின் (Governors) அதிகாரங்களையும் கடமைகளையும் விவரிக்குங்கால், ஒரு செவிலித்தாய் எப்படித் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட குழந்தை மகிழ்ச்சியுடன் இருக்க முயல்வாளோ அவ்வண்ணமே அவர்களும் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள மக்களின் நலத்திற்கும் மகிழ்ச்சிக்கும் பாடுபட வேண்டுமென வலியுறுத்துகிறார். ஐந்தாவது கற்றூண் ஆணையில், அசோகர் அஹிம்சையின் வளர்ச்சிக்காகத் தாம் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளை விளக்குகின்றார். மேலும், அக் கல்வெட்டில் ஆண்டுதோறும் தண்டிக்கப்பட்டுச் சிறையில் வாடும் கைதிகளைத் தாம் விடுவித்துவந்ததையும் குறிப்பிடுகின்றார். ஆறாவது கற்றூண் ஆணை, பன்னிரண்டாவது கற்பாறை ஆணையின் கருத்தை எதிரொலிப்பதுபோல் உள்ளது. ஒவ்வொருவரும் தங்களது சொந்த மதத்தைப் பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை அசோகர் வற்புறுத்துகின்றார்.

அசோகரது கல்வெட்டாணைகளில் மிகவும் நீண்டதும், மிகவும் முக்கியமானதும் ஏழாவது கற்றூண் ஆணையே. அதில் மற்றக் கல்வெட்டுகளில் காணப்படும் கருத்துகளும் வார்த்தைகளும் திரும்பக் காணப்படுகின்றன. தம் ஆட்சியின் பெரும் பகுதியில் தாம் போதித்து வந்த தர்மத்தின் வளர்ச்சிக்காகத் தாம் செய்த பல பணிகளை அசோகர் தொகுத்துரைக்கின்றார்.

**சிறிய கற்றூண் ஆணைகள் (Minor Pillar Edicts)**

சாரநாத் சிறிய கற்றூண் ஆணையில் அசோகர் சங்கத்தைப் பிளவுபடுத்த முயலும் உறுப்பினர் வெள்ளாடை அணிந்து வெளியில் வாழவேண்டிய கடுமையான தண்டனைக்கு ஆளா

வார்கள் என எச்சரிக்கின்றார். கௌசாம்பி ஆணையிலும் அதையே பேரரசர் கூறுகின்றார். சாஞ்சி ஆணையில் அதே எச்சரிக்கையை விடுப்பதுடன் சங்கம் பிளவுபடாதிருப்பதே தமது விருப்பம் என்பதையும் எடுத்துரைக்கின்றார். அரசியின் ஆணை (The Queen's Edict) அசோகரின் இரண்டாவது அரசியின் அறச்செயல் பற்றியது. ரும்மிந்தெய் சிறிய கற்றூண் ஆணை, அசோகர், புத்தர் பிறந்த இடத்திற்கு யாத்திரை சென்றதையும் அங்கு வசூலிக்கப்பட்டு வந்த நிலவரியை எட்டில் ஒன்றாகக் குறைத்ததையும் சமயத் தீர்வைகளைத் தவிர்த்ததையும் குறிப்பிடுகின்றது. நிக்லீவா கற்றூண் ஆணை, அசோகர் கொணகமாண புத்தத் தூபியை விரிவுபடுத்திக் கட்டியதைக் கூறுகின்றது. பராபர் குகைக் கல்வெட்டுகள் அசோகர் ஆஜீவிகர்களுக்குக் குகை இல்லங்களை அளித்து ஆதரித்ததைக் கூறுகின்றன. காண்டஹார் இருமொழிக் (Bilingual) கல்வெட்டும் அசோகரால் வெளியிடப்பட்டதே. அது கிரேக்க, அராமிய மொழிகளில் உள்ளது. அம் மொழிகளைப் பேசிய மக்கள் அக் காலத்தில் ஆப்கானிஸ்தானத்தில் காண்டஹார் பகுதியில் வாழ்ந்துவந்ததையும், அவர்கள் அசோகர் ஆட்சியின்கீழ் இருந்ததையும் இக் கல்வெட்டுப் புலப்படுத்துகின்றது. பத்தாம் ஆட்சியாண்டில் வெளியிடப்பட்ட மேற்கூறிய கல்வெட்டில் அசோகர் தாம் தர்மத்தைப் பரப்பத் தொடங்கியதையும், அதன் விளைவாக மக்கள் அறவழியில் சென்றதையும், உயிர்வதையை நிறுத்தியதையும், தன்னடக்கத்தைப் பெற்றதையும், தீயவை நலிந்ததையும் கூறுவதுடன் அஹிம்சைக் கோட்பாட்டைத் தம் வாழ்க்கையில் எவ்வாறு கடைப்பிடித்தார் என்பதையும் குறிப்பிடுகிறார்.[1]

இவை தவிர தட்சசீலம், எற்றகுடி, கவிமாத், பால்கீகுண்டு, குஜர்ரா, அமராவதி முதலிய இடங்களில் அசோகருடைய கல்வெட்டுகளின் பிரதிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.[2] எற்றகுடிப் பிரதிகளில் சில புதிய செய்திகள் உள்ளன. தம் தர்மத்தைப் பரப்ப ராஜுகர்கள், மகாமாத்திரர்கள், ராஷ்டிரிகர்கள் முதலிய அதிகாரிகளைக் கருவியாகக் கொண்டதைக் கூறுவதுடன் அசோகர் ஆசிரியர்கள், மாணவர்களை எவ்வாறு நல்வழியில் பயிற்றுவிக்க வேண்டுமென்பதை வலியுறுத்துகின்றார்.[3] உத்தரப் பிரதேசத்தில் சூனர் அருகே

1 Romila Thapar, op. cit., p. 269 and Radha Kumud Mookerji—Asokan Inscriptions A commentary, Appendix A.

2 Radha Kumud Mookerji—op. cit.

3 Radha Kumud Mookerji—Asokan Inscriptions, Appendix A.

யுள்ள அரவ்ரா குன்றில் அசோகருடைய சிறிய கற்பாறை ஆணைகளின் பிரதி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதில், பிற கல்வெட்டுகளில் இல்லாத ஓர் அரிய செய்தி உள்ளது. அசோகர் புத்த பெருமானின் அஸ்தியைத் தக்க இடத்தில் வைத்துப் பாதுகாத்ததை முதன் முறையாக அறிகிறோம்.[1]

அசோகருடைய கல்வெட்டுகள் சமயத்தைப்பற்றி அவர் வெளியிட்ட ஆணைகளே. இருப்பினும், அவற்றில் அவருடைய வாழ்க்கை, ஆட்சிமுறை, போர் முதலியவைபற்றிய அரிய பல செய்திகள் உள்ளன. பிற கல்வெட்டுகளில் பொது வாகக் காணப்படும் சில குறைகள் அசோகருடைய கல்வெட்டு களிலும் உள்ளன. உதாரணமாக, கலிங்கப் போரைப்பற்றிக் கூறும் 13ஆது கற்பாறை ஆணை அப் போரின் காரணத்தைப் பற்றி எதுவும் கூறவில்லை. அசோகருடைய சமயப்பணியின் விளைவுகள் பெரிதும் மிகைப்படுத்திக் கூறப்பட்டுள்ளன. கல் வெட்டுகள் அசோகருடைய வரலாற்றிற்கு மிக முக்கியமான சான்றுகளாக இருப்பினும் அவற்றைக் கொண்டு மட்டும் அவருடைய முழுவரலாற்றினை அறிய முடியாது; பௌத்த மதநூல்கள், புராணங்கள், அர்த்தசாஸ்திரம் முதலியவற்றின் துணையும் வேண்டும்.

தீபவம்சம், மகாவம்சம் என்பவை இலங்கையில் பௌத்த சமயம் வளர்ந்த வரலாறுகளைக் கூறும் நூல்களாகும். இவை பாலிமொழியில் செய்யுள் வடிவில் இயற்றப்பட்டவை. தீப வம்சம் கி. மு. மூன்றாம் நூற்றாண்டிற்கும் கி. பி. நான்காம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் தொகுக்கப்பட்ட தென்றும் மகாவம்சம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட தென்றும் அறிஞர்கள் கருதுகின்றனர்.[2] இவ்விரு நூல்களும் அதற்கு முன்னர் எழுதப்பட்ட நூல்களின் அடிப்படையில் எழுதப் பட்டவை. இலங்கையில் பௌத்தமத வளர்ச்சியினைக் கூறும் இந் நூல்கள், அசோகர் பௌத்தசமயத்தில் சேர்ந்தது, அம் மதம் பரவுவதற்காக அவர் ஆற்றிய பணிகள், பாடலிபுத்திரத்தில் நடைபெற்ற மூன்றாவது பௌத்த மகாநாடு, இலங்கைக்குச் சமயப்பரப்புக் குழுவை அனுப்பியது முதலியவைபற்றி அரிய விவரங்களைக் கூறுகின்றன. ஆனால், அசோகரின் கலிங்கப் போரைப்பற்றியோ அல்லது அவர் மேற்கு நாடு களுக்கு அனுப்பிய சமயப்பரப்புக் குழுவைப்பற்றியோ இந் நூல்

[1] *Ibid.*

[2] Romila Thapar, op. cit., p. 8 ; A. L. Basham, The Wonder that was India, p. 268.

களில் குறிப்பு எதுவுமில்லை. மேலும், செய்திகள் சில மிகைப் படுத்தப்பட்டும், சில திரிக்கப்பட்டும், சில கற்பனையாகவும் உள்ளன. இருந்தபொழுதிலும் இந் நூல்களிரண்டும் அசோகர் வரலாற்றினை அறிய இன்றியமையாதன.

இந்தியாவில் மட்டுமன்றி நேபாளம், திபேத், சீனு முதலிய நாடுகளிலும் அசோகரைப்பற்றிப் பிற்காலத்தில் நூல்கள் எழுதப்பெற்றன. ஆனுல், அவை பெரும்பாலும் பரம்பரைக் கதைகளாகும். இருப்பினும் அவற்றை முற்றிலும் பயனற்ற கற்பனை எனத் தள்ளிவிட முடியாது. அத்தகைய நூல்களில் குறிப்பிடத்தக்கவை **திவ்வியாவதானம்**, **அசோகாவதானம்** முதலியவையாம். தாரநாதன் எழுதிய திபேத்திய வரலாறும் மௌரியர்களைப்பற்றிய சில அரிய செய்திகளைக் கூறுகின்றது.

சந்திரகுப்த மௌரியர் காலத்தில் கௌடில்யரால் இயற்றப் பட்ட அர்த்தசாஸ்திரம் அசோகர் ஆட்சிமுறையை அறிய மிகவும் உதவியாக உள்ளது. அர்த்தசாஸ்திரத்தின் முதற்பகுதி அரசன், அமைச்சர் குழு, அரசாங்கத்தின் பல்வேறு துறைகள் முதலிய வற்றினையும்; இரண்டாம் பகுதி பொருளியல் (சிவில்), குற்ற வியல் (கிரிமினல்) சட்டங்களையும், மூன்ரும் பகுதி பன்னுட்டுச் சட்டம், அரசியல் சூழ்ச்சி, போர் முதலியவற்றைப்பற்றியும் கூறுகின்றது. அசோகர் காலத்து ஆட்சி முறை, பொருளாதார, சமூகநிலை முதலியவற்றை அறிந்து கொள்வதற்கும் அவருடைய கல்வெட்டுகளைப் புரிந்து கொள்வதற்கும் அர்த்தசாஸ்திரம் இன்றியமையாதது. அதைப் போன்றதே மெகஸ்தனீஸ் எழுதிய இண்டிகாவும். அதில் அர்த்த சாஸ்திரத்தில் காணப்படாத சில அரிய செய்திகள் உள்ளன. ஆனுல், அந் நூல் முழுவதும் இல்லாதது ஒரு பெருங் குறையாகும். தவிர, மெகஸ்தனீஸ் யார் எதைச் சொன்னுலும் நம்பக்கூடியவன் என்பது அவன் நூலிலிருந்து தெரிகின்றது.

இவை தவிர மௌரியர்கள் காலத்தில் வெளியிடப்பட்ட செம்பு, வெள்ளி நாணயங்களும், வடமேற்கு இந்தியாவிலும் கங்கைச் சமவெளியிலும் நடைபெற்ற புதைபொருளாராய்ச்சி களும், சாரநாத், சாஞ்சி, நந்தன்கார், தௌலி, கால்சி, ராம் பூர்வா போன்ற இடங்களில் காணப்படும் கலைச் சின்னங்களும் அசோகர் வரலாற்றை அறியப் பெரிதும் பயன்படுகின்றன.

பகுதி II

# 1. அசோகரின் இளமைப் பருவம்

அசோகரது தந்தையான பிந்துசாரருக்குப் பதினறு மனேவியர் இருந்தனரென்றும், அவர்கள் மூலம் அவருக்கு நூற்றியொரு பிள்ளேகள் பிறந்தார்கள் என்றும், அசோகரின் தாயான தம்மா அல்லது தர்மா பட்டத்தரசியாகத் திகழ்ந்தா ளென்றும் தீபவம்சமும் மகாவம்சமும் கூறுகின்றன. அசோகா வதானம் அசோகருடைய தாயைப்பற்றிக் கூறுங்கால் அவள் பெயர் சுபத்திராங்கி என்றும், அவள் சம்பா நகர அந்தணன் ஒருவனின் மகளென்றும், தொடக்கத்தில் பிந்துசாரர் அவளேப் புறக்கணித்ததாகவும், பின்னர் அன்பு காட்டியதாகவும் அதனுல் தனக்குப் பிறந்த முதல் மகனே அவள் 'அசோகா' (துக்க மற்றவன்) என்றழைத்ததாகவும், அடுத்துப் பிறந்த மகனே விடாசோகா (துக்கமறுத்தவன்) என்று பெயரிட்டதாகவும் கூறுகின்றது. திவ்வியாவதானமும் ஏறக்குறைய அதே செய்தி யைத்தான் கூறுகின்றது. அசோகர் தாயின் பெயர் ஜனபத கல்யாணி என்றும் அவள் அசோகரை ஈன்றெடுக்கும் முன்பு ஆஜீவக முனிவர் ஒருவரால் வாழ்த்தப்பட்டாள் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

தவிர, அசோகரின் தாய் செல்யூகஸ் நிகேடரின் குலத்தில் தோன்றியவளா என்ற ஐயம் சிலருக்கு ஏற்பட்டுள்ளது. சந்திர குப்த மௌரியர் காலத்திலிருந்து அசோகர் காலம்வரை மௌரிய மன்னர்களுக்கும் கிரேக்க மன்னர்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்தது. ஆனல், செல்யூகஸ் நிகேடரின் மகளேத் திருமணம் செய்து கொண்டது சந்திரகுப்தரா அல்லது அவர் மகன் பிந்துசாரரா என்பது இதுவரையில் தெளிவடையவில்லே. அசோகருடைய கல்வெட்டுகளில் அவர் தாய் கிரேக்கக் குலத்தைச் சேர்ந்தவள் என்பதற்கு எத்தகைய குறிப்புமில்லே. மேற்கூறிய வேறு ஆதாரங்களே ஆராயுங்கால் அசோகரின் தாய்க்கும் செல்யூகசின் வம்சத்திற்கும் தொடர்பில்லே என்ற கருத்தே வலுப்பெறுகின்றது.

அசோகர் பிறந்த நாளோ, ஆண்டோ நமக்குத் தெரிய வில்லை. அவருடைய கல்வெட்டுக்களில் பூசம் (திஷ்யம்) புனர்பூசம் (புனர்வசு) முதலிய இரண்டு நட்சத்திரங்களுக்கும் சிறப்பளிக்கப் பட்டுள்ளது. அந் நாட்களில் விலங்குகளுக்குச் சூடுபோடுதலும் காயடித்தலும் சட்ட விரோதமாக்கப் பட்டன.[1] மேற்கூறிய இரண்டு நட்சத்திரங்களில் பூசத்திற்கு அசோகர் தனிச்சிறப்பு அளித்திருந்தது கலிங்கக் கல்வெட்டு களிலிருந்து புலனாகின்றது. அதிகாரிகளுக்கு வழி காட்டியாக இருந்த தம்முடைய கலிங்க ஆணைகளை அவர்கள் ஒவ்வொரு பூச நாளன்றும் படிக்க வேண்டுமென அசோகர் கூறுகின்றார். இதை அடிப்படையாகக் கொண்டுதான் D.R. பண்டார்க்கார் அசோகர் பூச நட்சத்திரத்தில் பிறந்திருக்கலாமெனக் கருது கிறார்.[2]

பிந்து சாரருக்கு நூற்றியொரு பிள்ளைகள் இருந்தனர் என்று மகாவம்சம் குறிப்பிட்டுள்ளதை முன்பே பார்த்தோம்: இது முழுதும் உண்மையெனக் கொள்வதற்கில்லை. இருப்பினும் பல மனைவியரைப் பெற்றிருந்த பிந்துசாரருக்கு ஏராளமான பிள்ளை கள் இருக்கக்கூடிய சாத்தியக் கூறையும் மறுப்பதற்கில்லை. பர்மிய அரசன் ஒருவன் நூற்றிருபத்திரண்டு பிள்ளைகளைப் பெற்றிருந்தான் என்று பேராசிரியர் சத்திய நாதய்யர் கூறுவது ஈண்டு நினைவு கூரத் தக்கது. அசோகர் கல்வெட்டுகளில் அவர் உடன் பிறந்தோரின் குடும்பங்களைப் பற்றிய சில பொதுக் குறிப்புகள் உள்ளன. சுமணன் என்பவன் அசோகருடைய தமையன் என்பது மகாவம்சத்திலிருந்து தெரிகிறது. அவனுக் குச் சுசீமன் என்ற வேறு பெயரும் இருந்தது.[3] திசா அல்லது திஷ்யா என்பவன் அசோகருடைய தம்பி; வேறு தாய் வழியில் தோன்றியவன். இவன் ஒருவனைத்தான் அசோகர் கொல்லா மல் விட்டுவைத்தார் என்று மகாவம்சம் கூறுகிறது. திவ்வியா வதானம் இவனை வீடாசோகா என்றும் விகடாசோகா என்றும் அழைக்கின்றது. சீன நூல்களில் இவன் சுதத்தன் என்றும் சுகத்ரன் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளான். இலங்கைக்குப் புத்த சமயத்தைப் பரப்புவதற்குச் சென்ற மகேந்திரன் அசோகர் தம்பி என்றும் அவனுக்கு வீடாசோகா, விகடாசோகா என்று வேறு பெயர்கள் உண்டு என்றும் கி. பி. ஏழாம் நூற்றாண்டில்

1 கற்றூண் ஆணை V,

2 D. R. Bhandarkar, Asoka, pp. 10-11

3 Romila Thapar op. cit., p. 25

இந்தியாவிற்கு வந்த சீன யாத்திரிகன் ஹியூன் சாங் கூறு கின்றுன். தேரகாதை விளக்கத்தில் வீடாசோகனும், திஷ்ய னும் அசோகருடைய வெவ்வேறு சகோதரர்கள் என்று குறிப் பிடப்பட்டுள்ளது.

அசோகர் இளமைப் பருவத்தில் அழகற்றவராய் இருந்தா ரென்றும் அதனுல் தம் தந்தையால் விரும்பப்படவில்லே என்றும் பழங்கதைகள் கூறுகின்றன.[1] அது எவ்வாருயினும் அவர் திறமைசாலியாக விளங்கினுர் என்பது அவருக்கு அளிக்கப்பட்ட கடமையிலிருந்து தெரிகிறது. பிந்துசாரர் ஆட் சியில் தட்சசீலத்தில் உயர் அதிகாரிகளின் கொடுமைகளால் சினங்கொண்ட மக்கள் அரசாங்கத்திற்கு எதிராகக் கலகம் செய்ததாகவும் அதை அடக்குவதற்காகப் பேரரசர் தம் மகன் அசோகரை அங்கு அனுப்பிவைத்ததாகவும், அசோகர் மிக எளிதாக அதை அடக்கி, அமைதியை நிலேநாட்டி மக்களுடைய நம்பிக்கைக்கு உரியவரானுர் என்றும் அசோகாவதானம் கூறு கின்றது. இதே போன்ற ஒரு கதை குணுளனேப் பற்றியும் உண்டு. ஆனுல்,அதன் வரலாற்றுண்மை நமக்குப் புலப்படவில்லே, அசோகர் தட்சசீல மாகாணத் தலேவராகச் சிறிது காலமாவது இருந்திருக்க வேண்டுமென்பது தட்சசீலத்தில் கண்டு பிடிக்கப் பட்டுள்ள ஒரு கல்வெட்டால் தெரிகின்றது. அக் கல்வெட்டில் அசோகருடைய விருதான 'பிரியதர்சி' குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், அவர் ஆதரவால் ஓர் அதிகாரி உயர் நிலே எய்தியதாகக் கூறப்பட்டுள்ளது.[2]

அசோகர் தட்சசீலத்தில் எவ்வளவு காலம் இருந்தார் என்பது தெரியவில்லே. அதன் பின் உச்சயினி மாகாணத் தலேவராக உயர்த்தப் பட்டார். அங்கு இருந்தபொழுது அசோகர் விதிசா நகர வணிகன் ஒருவனின் மகளான 'தேவி' என்பவளிடம் காதல் கொண்டதாகவும் அதன் விளேவாக அவர்களுக்கு மகேந்திரன், சங்கமித்திரை என்ற இரு குழந்தை கள் பிறந்ததாகவும் தீபவம்சம் கூறுகின்றது. மகாபோதிவம்சம் என்ற மற்ருெரு சிங்கள நூலில் அசோகரின் காதலியான தேவி, விதிசாமகாதேவி என்றும் சாக்கியானி என்றும் சாக்கிய குமாரி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளார். ஆனுல், புத்தர் பிறந்த சாக்கியக் குலத்திற்கும் இவளுக்கும் தொடர்பு இருந்ததாகத் தெரியவில்லே. அசோகர் சாக்கியகுமாரியை முறைப்படி திருமணம் செய்துகொண்டதாகவும் தெரியவில்லே. அவள்

[1] Romila Thapar op-cit. p. 21.
[2] Ibid p. 22

அவரது பட்டத்தரசியாகத் திகழவில்லை என்பது, பிற சான்றுகளிலிருந்து புலனாகின்றது. அசோகர் பௌத்த மதத்தில் கொண்ட ஈடுபாட்டிற்கும் சாக்கியகுமாரிக்கும் ஏதாவது தொடர்புண்டா என்பதனைப் பின்னர் நோக்குவோம்.

# 2. அசோகர் பட்டத்திற்கு வருதல்

அசோகர் அரச பதவியை அடைந்தது பற்றி பௌத்த நூல்கள் பல கதைகளைக் கூறுகின்றன. சிங்கள பௌத்த நூலான **வம்சத்தபகாசினி** இது பற்றிப் பின்வரும் கதையைக் கூறுகின்றது. அசோகருடைய தாயான தம்மா கருவுற்றிருக்கும் போது சூரியன்மீதும் சந்திரன்மீதும் நடக்கவேண்டுமென்றும், நட்சத்திரங்களுடன் விளையாட வேண்டுமென்றும், காடுகளைப் புசிக்கவேண்டுமென்றும் கூறினாள். தம்மா ஆஜீவிக சமயத்தைச் சேர்ந்தவளாதலின் அம் மதத் தலைவர் ஒருவரை அழைத்துவந்து அவள் வாக்கின் பொருளை அறிய முதியோர் முயன்றனர். அவர் கூறிய விளக்கமாவது, சூரியன்மீதும் சந்திரன்மீதும் நடக்க விரும்பியது கருவுற்றிருக்கும் தம்மாவின் பிள்ளை நாடு முழுவதையும் வென்று ஆட்சி செய்வான் என்பதைக் குறிக்குமென்றும் மற்ற விருப்பங்கள் அப் பிள்ளை தாம் விரும்பாத உடன் பிறந்தாரைக் கொல்வான் என்பதைக் காட்டுவதாகும் என்றும் மேலும், அசோகர் தொண்ணூற்றாறு சமயப் பிரிவுகளையும் ஒழித்து பௌத்த சமயத்தில் ஈடுபாடு கொள்வார் என்றும் அவர் கூறினாராம். மேற்கூறிய பௌத்த நூல் அசோகர் அரியணையை அடைவதற்காகத் தம் உடன் பிறந்தோரில் ஒருவனைத் தவிர எஞ்சிய தொண்ணூற்றொன்பது பேரையும் கொன்றுவிட்டார் என்றும் உரைக்கின்றது.[1]

திவ்வியாவதானம் கூறும் கதையாவது பிங்களவத்சன் என்ற ஆஜீவிக முனிவன் பிந்துசாரர் உயிருடன் இருக்கும் பொழுதே அவர் பிள்ளைகளில் ஆற்றல் மிக்கவர் அசோகர் என்றும், அவரே பிந்துசாரருக்குப் பின் அரியணையை அடைவார் என்றும் மெய்யுணர்வால் கூறினான். இருப்பினும் பிந்துசாரர் இறக்கும் தருவாயில் தமது மூத்த மகன் சுசீமனை அரியணையில் அமர்த்த விரும்பினார். ஆனால், அமைச்சர்கள் அசோகரையே அரசனாக்கினர். அசோகர் தம் தந்தையின் முக்கிய அமைச்சனான இராதகுப்தனின் ஆதரவைப் பெற்றிருந்தார்.

[1] **Romila Thapar, op. cit., p. 26.**

அசோகர் தம் உடன் பிறந்தோர் அறுவரைக் கொன்று அரியணையை அடைந்ததாகத் திபேத்திய லாமா தாரநாதன் கூறுகின்றான். தீபவம்சமும் மகாவம்சமும் அசோகர் தொண்ணூற்றொன்பது சகோதரர்களைக் கொன்றதாகக் குறிப்பிடுகின்றன.

இவை யாவற்றையும் நோக்குங்கால் அசோகர் பிந்துசாரரின் மூத்த மகன் அல்லர் என்பதும், அவர் அரியணையை அடைவதற்கு அவர் உடன் பிறந்தோரிடமிருந்து எதிர்ப்பு இருந்தது என்பதும் அவர்களைக் கொன்று அசோகர் அரசனானார் என்பதும், அவர் பட்டத்திற்கு வந்தபின் நான்காண்டுகள் வரை முடிசூட்டிக்கொள்ள முடியாதிருந்ததற்குக் காரணம் அவர் உடன் பிறந்தோரிடம் போரிட்டுக் கொண்டிருந்ததே என்பதும் நன்கு புலப்படுகின்றன. ஆனால், அசோகர் தம் உடன் பிறந்தோர் தொண்ணூற்றொன்பதின்மரைக் கொன்றாரா என்பது ஐயத்திற்குரிய செய்தியாகும். அசோகர் தமது ஐந்தாவது கற்பாறை ஆணையில் தம் சகோதரர்களின் குடும்பங்களைக் குறிப்பிடுவதால், அவர் உடன் பிறந்தோரில் ஒருவனைத் தவிர அனைவரையும் கொன்றார் என்ற செய்தி கற்பனை என்று தான் தோன்றுகிறது.[1] ஐந்தாவது கற்பாறையாணை (Rock Edict V) அசோகரின் சகோதரர்களைக் குறிப்பிடவில்லை, அவர்களுடைய குடும்பங்களையே குறிப்பிடுகின்றது என்ற கருத்தை ரோமிலா தாபர் மறுக்கின்றார். ஆனால், அரியணைக்காக நடந்த போரில் சுசீமன் உட்படச் சில சகோதரர்களை அசோகர் கொன்றிருக்கலாம். அதனைப் பௌத்த நூல்கள் மிகைப்படுத்திக் கூறுகின்றன. அசோகர் பௌத்த மதத்தில் சேருவதற்குமுன் கொடியவராக இருந்தார்; அம் மதத்தில் சேர்ந்தபின் சான்றோராக மாறிவிட்டார் என்பதனைச் சொல்வதற்காக இச்செய்தியை அவை மிகைப் படுத்துகின்றன போலும். அசோகர் இயற்கையாகவே அரசுரிமையைப் பெற்றிருக்கவில்லை என்பது பல சான்றுகளிலிருந்தும் புலப்படுகின்றது. அசோகர் பட்டத்திற்கு வருமுன் உச்சயினி மாகாணத் தலைவராக இருந்தாரா, அல்லது தட்சசீல மாகாணத் தலைவராக இருந்தாரா, என்பதைப் பற்றி முரண்பாடான செய்திகள் உள்ளன.

அசோகர் கி. மு. 269-ல் முடிசூட்டிக் கொண்டிருக்கலாம் என்பதனை முன்பே பார்த்தோம். எனவே, அரியணைக்காக நடந்த போர் ஏறக்குறைய நான்காண்டுகள் நடந்திருக்க வேண்டும் என்று கொள்ளலாம்.

1 ஐந்தாவது கற்பாறை ஆணை (Rcck Edict V)

# 3. அசோகருடைய சகோதரர்களும் மனைவியரும்

அரியணைக்காக நடந்த போருக்குப்பின் அசோகர் உயிருடன் இருந்த தம்முடைய தம்பி திசாவை நடத்திய விதம் பற்றி மகாவம்சம் பின்வரும் செய்தியைக் கூறுகின்றது. ஆரம்பத்தில் திசா வெகு ஆடம்பரமான வாழ்க்கையை நடத்திக் கொண்டு மகிழ்ச்சியுடன் இருந்து வந்தான். மரண பயத்தைப் பற்றி பௌத்த மதம் கூறிவந்தது அவனுக்குப் புரியவே இல்லை. இது பிடிக்காமல் அசோகர் அவனுக்கு ஒரு பாடம் கற்பிக்க எண்ணி அவனைச் சில நாட்கள் அரியணையில் அமர்த்தி, பின்னர் அரியணையைக் கவர முயன்றதாக ஒரு குற்றத்தைச் சாட்டி ஏழு நாட்களுக்குப் பின் உயிரை இழக்கும்படி தண்டித்து விட்டார். அடுத்த ஏழு நாட்களுக்குள் திசா தன்னுடைய பழைய வாழ்க்கையை மறந்துவிட்டுத் துறவறம் பூண்டு அருகனானான். இதைக் கண்டு மகிழ்ந்த அசோகர் தம் தம்பியைத் துணைவேந்தனாக்கினார். ஆனால், திசா தன்னுடைய துறவு நெறியிலேயே சென்றுவிட்டான். சமயத்தில் கொண்ட ஈடுபாட்டினால் ஏகவிகாரிகன் என்றும் அழைக்கப் பட்டான். இச்செய்தி ஓரளவாவது உண்மையாக இருக்கும் என்றுதான் தெரிகிறது.

தேரகாதை விளக்கத்தில் (Theragatha Commentary) இக் கதை வேறுவிதமாய்க் கூறப்பட்டுள்ளது. அதில் அசோக ருடைய தம்பியின் பெயர் வீடாசோகன் என்று கூறப் பட்டுள்ளது. அரச குடும்பத்தில் மகிழ்ச்சியாக வாழ்ந்துவந்த வீடாசோகன் ஒரு நாள் தன் தலையில் நரையைக் கண்டதும் முதுமை அணுகுவதை உணர்ந்து அக் கவலையில் துறவுபூண்டு ஒரு மடத்தில் வசித்துவந்தான். பின் அருக நிலையை அடைந்துவிட்டான். இதைப் போன்ற கதைகள் பிற பௌத்த நூல்களிலும் உள்ளன. பாகியானும், யுவான் சுவாங்கும் இது பற்றிக் கூறுவதாவது:- அசோகருக்கு மகேந்திரன் என்ற ஒரு தம்பி இருந்தான்; அவன் நெறியற்ற முறையில் வாழ்ந்து வந்ததைக் கண்டு பொறுக்க முடியாமல் அசோகர் அவனைக் கண்டிக்கவே, மகேந்திரன் தன் தமையனிடம் மன்னிப்பைப் பெற்றுக்கொண்டு, துறவியாகி, ஓர் இருண்ட குகையில் வாழ்ந்துவந்தான். திருந்திய தன் தம்பி மகேந்திரனை, அசோகர் திரும்பவும் அரண்மனையில் வந்து வசிக்கும்படி அழைத்தார். ஆனால், தனிமையை விரும்பிய மகேந்திரன்

அதற்கு இணங்கவில்லை. அதன் பேரில் அசோகர் தம் தம்பி தனித்திருந்தாலும் அருகே இருக்கவேண்டுமென்று பாடலி புரத்தில் ஒரு குன்றினை அமைத்து ஆங்கு அவர் இருந்து வரும்படி செய்தார்.

**அசோகாவதானத்தில்** பின்வரும் கதை கூறப்பட்டுள்ளது. ஒருநாள் அசோகர், பாடலிபுரத்துப் பௌத்த மடங்களில் இருந்த நிற்கிரந்தர்கள் அனைவரும் மத விரோதிகள் என்று கூறி, அவர்களைக் கொன்றுவிடும்படி ஆணையிட்டார். பௌத்த மடத்தில் அச்சமயம் இருந்த அசோகர் தம்பியும் நிற்கிரந்தன் எனத் தவருகக் கருதப்பட்டுக் கொல்லப்பட்டார். செய்தியைக் கேட்டதும் அசோகர் தம் தவறினை உணர்ந்து ஆணையை நீக்கி விட்டார் (நிற்கிரந்தர் என்று அழைக்கப்பட்டவர்கள் சமணர்களே). இக் கதை அசோகருடைய குணத்திற்குச் சிறிதும் பொருத்தமற்றது என்பதனை அவருடைய ஆணைகளைப் படிப்போர் எவரும் எளிதாக உணரலாம். பௌத்த மதத்தில் அசோகர் கொண்ட ஈடுபாட்டினை உணர்த்துவதற்காகக் கூறப்பட்ட செய்தியாக இதைக் கொள்ளவேண்டுமே தவிர உண்மையெனக் கொள்வதற்கில்லை.

அசோகருக்குப் பல மனைவியர் இருந்தனர் என்பது அவரது கல்வெட்டுகளிலிருந்தும் பிற சான்றுகளிலிருந்தும் தெரிகின்றது. அசந்திமித்தா அல்லது அசந்திமித்ரா என் பவள் நீண்ட நாள் அசோகருடைய பட்டத்தரசியாக விளங் கினளென மகாவம்சம் கூறுகின்றது. திவரனின் தாயான காருவாகி அசோகரின் இரண்டாவது அரசியாகத் திகழ்ந்தாள் என்பது அலகாபாத்தில் காணப்படும் அரசியின் ஆணையிலிருந்து **(The Queen's Edict)** புலப்படுகின்றது. காருவாகியும் திஷ்ய ரக்ஷிதாவும் (திசரக்கா) ஒருவரே என்றும், காருவாகி அசந்திமித்ரா இறந்தபின் பட்டத்தரசியானளென்றும் அப் பொழுது திஷ்யரக்ஷிதா என்ற புதுப்பெயரைச் சூட்டிக் கொண்டாளென்றும் ரோமிலா தாபர் கூறுகின்றார். காருவாகி தன்னுடைய கணவனைப் போன்று அறச்செயல்களில் ஆர்வ முடையவள் என்பது மேற்கூறிய அரசியின் ஆணையிலிருந்து அறிகிறோம். பௌத்த நூல்கள் திஷ்யரக்ஷிதாவைப் பற்றிக் கூறுவதிலிருந்து அவள் கொடியவளென்பதும் காமாந்தகாரி என்பதும் புலப்படுகின்றன. அவளைப் பற்றிய பிற செய்திகளைப் பின்னர்க் காண்போம். **திவ்வியாவதானத்தில்** அசோகரின் மற்றொரு அரசியான பத்மாவதி குறிப்பிடப்பட்டுள்ளார். இவளுடைய மகன்தான் குணளன். குணளனைத் தவிர,

அசோகருக்கு வேறு புதல்வர்களும் இருந்தனர். அவர்களைப் பற்றிப் பின்னர்க் காண்போம்.

# 4. அசோகர் ஆட்சியின் தொடக்கம்

அசோகர் ஒவ்வோர் ஆண்டும் தாம் முடிசூட்டிக் கொண்ட நாளில் சிறையிலிருந்து கைதிகளை விடுவித்து வந்தார் என்பதை அவருடைய ஏழாவது கற்றூண் ஆணையிலிருந்து அறிகிறோம்.

இனி, அசோகர் முதலில் மிகக் கொடியவராகவும், காமாந்தகாரராகவும் இருந்தமையால் சண்டாசோகா என்றும் காமாசோகா என்றும் மக்களால் அழைக்கப்பட்டார் எனவும் பின்னர் பௌத்த சமயத்தில் சேர்ந்து தம் நற்பணியால் தூயவராகியதால் 'தர்மாசோகா' (தம்மாசோகா) என்று போற்றப்பட்டதாகவும் பௌத்த நூல்கள் கூறுகின்றன. இது பற்றிக் கூறப்படும் கதைகள் பின்வருமாறு: (1) ஒரு சமயம் அசோகருடைய உவளகப் பெண்டிர் அவர் அழகற்றவர் என்று சொல்லியதால் அவர்கள் ஐந்நூற்றுவரையும் அவரே உயிருடன் எரித்துவிட்டார். இதனைக் கண்ட அமைச்சர் இராதகுப்தர் அரசரே இம்மாதிரி செய்யக்கூடாது என்றும், தண்டனைகளை நிறைவேற்றத் தனி அதிகாரிகள் இருக்கவேண்டுமென்றும் கூறினார். அதன் பின் அசோகர் ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்து அங்கு மக்களைச் சித்திரவதைச் செய்யத் தகுந்த கருவிகளையும் மனிதர்களையும் வைத்திருந்தார். அவ்விடத்தை யாவரும் மண்ணுலக நரகமென அழைத்து வந்தனர். பாகியான் இக் கதையைக் கூறுவதுடன், அசோகர், அங்கு அடிக்கடிசென்று சித்திரவதைகளை மேற்பார்வையிட்டதாகவும் குறிப்பிடுகிறான். கி. பி. ஏழாம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்த யுவான்சுவாங் அசோகருடைய நரகம் இருந்த இடத்தைக் காட்டிய தூண் ஒன்றினைத் தான் பார்த்ததாகவும் குறிப்பிட்டுள்ளான்.

திபேத்திய அறிஞனான தாரநாதன் அசோகர் ஆரம்பத்தில் முறையற்ற சுகபோகத்தில் ஆழ்ந்திருந்தமையால் 'காமாசோகா' என்றழைக்கப்பட்டதாகவும், பின்னர்ப் பல கொடுமைகள் இழைத்தமையால் 'சண்டாசோகா' என்றழைக்கப்பட்டதாகவும், கடைசியாகப்பௌத்த சமயத்தினைத் தழுவியதால் மேம்பட்டு 'தர்மாசோகா' என்றழைக்கப்பட்டதாகவும் கூறுகிறான். இன்னொரு கதையின்படி அசோகர் ஒரு பௌத்த

பிக்குவைச் சித்திரவதை செய்ததாகவும் ஆனால், அத் துறவி தன்னிலை மாறாதிருந்ததாகவும் அதனைக் கண்ட அசோகர் பௌத்த சமயத்தின் பெருமையை உணர்ந்து அதைப் பின்பற்றியதாகவும் கூறப்படுகின்றது.[1]

அசோகரிடம் வேட்டையாடுதல், புலால் உண்ணல், மது அருந்துதல், கேளிக்கைகளில் ஈடுபடுதல் முதலிய பழக்கங்கள் இருந்தன என்பது உண்மையே. அவருடைய கல்வெட்டுகளே இவற்றை நேரடியாகவும் மறைமுகமாகவும் குறிப்பிடுகின்றன. ஆனால், 'சண்டாசோகா' 'காமாசோகா' என்றழைக்கப் படக்கூடிய அளவிற்கு அவர் கொடியவராக இருந்தார் என்று கூறுவதற்கில்லை. பௌத்த நூல்கள் பௌத்த சமயத்தின் சிறப்பினை உணர்த்துவதற்காக, அதாவது விலங்கினை ஒத்த ஒருவனை அச்சமயம் சான்றோனாக்க இயலும் என்பதனை எடுத்துக்காட்ட, இவ்வாறு அசோகரிடம் இல்லாத குறைகள் இருந்ததாகவும், இருந்த குறைகளை மிகைப்படுத்தியும் கூறுகின்றன போலும்.

# 5. கலிங்கப் போர்

அசோகர் முடிசூட்டிக் கொண்டபின் எட்டு ஆண்டுகள் வரை போர் எதுவுமின்றி அமைதியாக ஆட்சி புரிந்ததாகத் தெரிகிறது. அடுத்த ஆண்டில் அவர் கலிங்கத்தின்மீது படையெடுத்தார். கலிங்கம் என்பது கிழக்குக் கடற்கரையில் கோதாவரியாற்றிற்கும் மகாநதிக்கும் இடையே இருந்த நாடாகும். அக்காலத்தில் அது மகதப் பேரரசிற்கு உட்படாமல் தனித்திருந்தது. அப்பொழுது அந் நாட்டை ஆண்ட அரசன் யார் என்பது தெரியவில்லை. அசோகருடைய மண்ணாசையே கலிங்கப் போருக்குக் காரணம். அசோகருடைய பெரும்படையைக் கண்டு கலிங்க வீரர் மருட்சி அடையவில்லை. கலிங்கப் படை மிகக் கடுமையாகப் போரிட்டது என்பதை அசோகருடைய கல்வெட்டே நன்கு புலப்படுத்துகின்றது. ஒன்றரை இலட்சம் கலிங்க வீரர்கள் சிறைபிடிக்கப்பட்டனர். ஒரு இலட்சம் கலிங்க வீரர்கள் போரில் கொல்லப்பட்டனர். இவை தவிர இலட்சக் கணக்கான கலிங்க மக்கள் போரினால் உயிரிழந்தனர். போர்க்களத்தில் இரத்த ஆறு ஓடியது. இறுதியில் கலிங்கப் படை தோற்றது. கலிங்கம் மகதப்பேரரசின் ஒரு பகுதியாயிற்று. போர்க் களத்தில் அசோகர் கண்ட காட்சி அவரது மனப் போக்கினை மாற்றிவிட்டது. உயிரிழந்தோர், உயிருக்கு ஊசலா

[1] Romila Thapar, op. Cit., pp. 28 & 29.

டிக்கொண்டிருந்தவர்கள், உறுப்புகளை இழந்தோர், உற்றுரையும் உறவினரையும் இழந்து களத்தில் புலம்பிக் கொண்டிருந்தோர் இவர்களை எல்லாம் பார்த்ததும் அசோகர் மனத்தில் திடீரென்று மாறுதல் ஒன்று ஏற்பட்டது. போரினால் பிறருக்கு ஏற்படும் துன்பங்களை நன்குணர்ந்த அவர் இனி போர் புரியவே கூடாது என்ற முடிவிற்கு வந்தார். கலிங்கப் போரே அசோகரின் முதல்போரும் இறுதிப்போரும் ஆகும். அப் போருக்குப் பின் அசோகருடைய போக்கில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டன. கொல்லாமைக் கோட்பாட்டைத் தம்முயிர்நாடியாகக் கொண்டார். போரில்காணும் வெற்றியை முற்றிலும் மறந்தார். எஞ்சிய தம் வாழ்நாள் முழுதும் தர்மத்தின் வெற்றிக்காக அயராது பாடுபட்டார்.

இவ்வாறு அசோகரிடம் ஏற்பட்ட மாறுதலே அவர் பௌத்த சமயத்தைப் பின்பற்றியதற்கும் பின்னர் அதைப் பரப்புவதற்கும் காரணமாக அமைந்தது. பௌத்த சமயத்தால் அசோகருக்கும், அசோகரால் பௌத்த சமயத்திற்கும் சீரும் சிறப்பும் ஏற்பட்டன.

பிந்துசாரர், அஜாத சத்ரு காலத்திலிருந்து மகதப்பேரரசு தொடர்ந்து வளர்ச்சியடைந்து வந்தது. ஆனால், அசோகருடைய கலிங்கப்போர் அவ் வளர்ச்சிக்கு ஒரு வரம்பு கட்டியது. அதன்பின் மகதப் பேரரசு பெருகவே இல்லை. அசோகர் பிற நாடுகளிடம் கடைப்பிடித்த அமைதிக் கொள்கைக்கும் கலிங்கப் போரே காரணமாம். சுருங்கக் கூறின் கலிங்கப்போர் அசோகரின் வாழ்க்கையில் ஒரு முக்கியத் திருப்பமாய் அமைந்தது. இப் போரினைப் பற்றி மகாவம்சமும் தீபவம்சமும் எதுவும் கூறாதது வியப்பிற்குரியதே.

# 6. பௌத்த சமயத்தைத் தழுவுதல்

அசோகர் பௌத்த சமயத்தைப் பின்பற்றினார் என்பதை அவருடைய கல்வெட்டுகளிலிருந்து ஐயமற அறிகிறோம். அவர் பௌத்த சமயத்தில் சேர்வதற்கு முன்னர் வைதீக இந்துச் சமயத்தைப் பின்பற்றியிருக்க வேண்டுமென்பது அவருடைய முதலாவது, ஏழாவது கற்பாறை ஆணைகளிலிருந்தும் மகாவம்சத்திலிருந்தும் தெரிகிறது. அசோகர் சமண, ஆஜீவிக மதங்களை அவர் தம் வாழ்நாள் முழுதும் போற்றியது உண்மையே. ஆனால், ஆரம்பத்தில் அவர் அம் மதங்களைப் பின்பற்றினார் என்று கருதுவதற்குத் தக்க சான்றுகள் இல்லை.[1]

1 விவரத்திற்கு நான்காவது அதிகாரத்தைப் பார்க்கவும்.

நிற்க, அசோகர் எப்பொழுது பௌத்த சமயத்தினைப் பின்பற்றத் தொடங்கினர், யாரால் மதமாற்றம் செய்யப் பட்டார் என்பவற்றைப் பற்றி அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு உள்ளது. எக்கெர்மான்ட் (Eggermont) என்னும் அறிஞர் அசோகர் தாம் முடி சூட்டிக்கொண்ட ஏழாவது ஆண்டில் பௌத்த சமயத்தைப் பின்பற்றி யிருக்கலாம் என்று கருதுகிருர். இதற்கு ஆதாரமாக அவர் கொள்வது சிங்கள, திபெத்திய பௌத்த நூல்கள் ஆகும். அசோகருடைய தமையனை சுமணன் கொல்லப்பட்டபின் கருவுற்றிருந்த அவன் மனைவி ஆண் மகவு ஒன்றினை ஈன்றெடுத்ததாகவும், நிக்ரோதன் என்ற அவ்வரசிளங்குமரன் தனது ஏழாவது ஆண்டில் பௌத்தத் துறவியாகி, பின்னர்த் தன் சிற்றப்பாவிற்குப் பௌத்தமதத்தைப் போதித்ததாகவும் மகாவம்சமும் தீபவம்சமும் கூறுகின்றன. திபெத்திய அறிஞனை தாரநாதன் அசோகரின் அணிகலன்களை நாகர்கள் எனப்படும் கடல்வாழ் ஆவிகள் கவர்ந்து சென்றதாகவும், அசோகர் தம் ஆன்மீக முயற்சியால் புண்ணியமடைந்து புதிய வலிமையுடன் அவைகளை வென்றதாகவும் கூறுவது, அசோகருக்கும் கலிங்கர்களுக்கும் சச்சரவு இருந்தது என்பதையும், அசோகர் பௌத்த சமயத்தைப் பின்பற்றியதால் புதிய வலிமையுற்ருர் என்பதையும், இறுதியில் கலிங்கத்தை வென்ருர் என்பதையும் குறிப்பதாகுமென அறிஞர் எக்கெர்மான்ட் கருதுகிருர். சுருங்கக் கூறின் இவ்வறிஞர் கலிங்கப் போருக்கு முன்பே அசோகர் பௌத்த சமயத்தைத் தழுவினர் எனக் கருதுகின்ருர். ஆனல், ரோமிலா தாபர் இவ்விரு செய்திகளிலும் உண்மையில்லை என்றே கருதுகின்ருர்.[1]

திவ்வியாவதானத்தில் அசோகர் பௌத்த சமயத்தைத் தழுவியது பற்றிப் பின்வரும் கதை கூறப்படுகின்றது. பாடலிபுத்திரத்தில் அசோகர் ஒரு சிறைக் கூடத்தை ஏற்படுத்தியிருந்தார். அதற்கு அதிகாரியாக கிரிகா என்பவன் நியமிக்கப்பட்டிருந்தான். அச் சிறைக்கூடத்தில் வைக்கப்பட்டிருந்தவர்கள் மிகவும் கடுமையாகச் சித்திரவதை செய்யப்பட்டார்கள். ஒரு சமயம் சமுத்திரன் என்ற பௌத்தத் துறவி அங்குச் சிறை வைக்கப்பட்டான். அவன் சிராவஸ்தி நகரில் சிறிது காலம் வணிகனுக இருந்து பௌத்த பிக்குவாக மாறியவன். சிறையில் சித்திரவதை செய்யப்பட்டபொழுது அவன் சிறிதுகூட பாதிக்கப்படாததைக் கண்ணுற்ற அதிகாரிகள் அரசரிடம் பிக்குவின் வியத்தகு சக்தியைக் கூறினர். அதைக்கேட்ட அசோகர் அப்

[1] op. cit., pp. 34—36.

பிக்குவைச் சென்று பார்த்தார். அவர் செய்த அற்புதங்களைக் கண்டு வியந்த அசோகர் பௌத்த சமயத்தைத் தழுவினார்.

மதமாற்றம் பற்றி இத்தகைய கதைகள் எல்லாவிடங்களிலும் உண்டு. எனவே, இக் கதையில் எந்த அளவிற்கு உண்மையுள்ளதென்று கூறுவதற்கில்லை. சீன யாத்திரிகன் யுவான் சுவாங்கும் இக் கதையைக் கூறுகின்றான். அசோகாவதானத்திலும் பிற பௌத்த நூல்களிலும் மேற்கூறிய இரு கதைகளும் வேறுவிதத்தில் கூறப்பட்டுள்ளன.

மேலே கூறிய நிக்ரோதன் கதையையும் முதலாவது சிறிய கற்பாறை ஆணையையும் (Minor Rock Edict I) பதின்மூன்றாவது கற்பாறை ஆணையையும் (Rock Edick XIII) ஆதாரமாகக் கொண்டு அசோகர் கலிங்கப் போருக்கு முன்பே கி. மு. 265ஆம் ஆண்டிலேயே பௌத்த சமயத்தைப் பின்பற்றத் தொடங்கிவிட்டதாகவும் கலிங்கப் போருக்குப்பின்னர்ப் பௌத்த சங்கத்துடன் நெருங்கிய தொடர்புகொண்டு அம் மதத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டதாகவும் பேராசிரியர் R. K. முகர்ஜி கூறுகிறார்.[1] ஆனால், முதலாவது சிறிய கற்பாறை ஆணை கி. மு. 257ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டிருக்க வேண்டுமென பல அறிஞர்கள் கருதுவதால்[2] இக் கருத்தை ஏற்றுக்கொள்வதற்கில்லை. மேலும், பதின்மூன்றாவது கற்பாறை ஆணையை நன்கு ஆராயும்பொழுது, கலிங்கப் போருக்குப் பின்பே அசோகருக்குப் பௌத்த சமயத்தில் ஈடுபாடு ஏற்பட்டதென்பது தெளிவாகப் புலப்படுகின்றது.

டாக்டர் J. F. பிளீட் (Dr. Fleet) என்பவர் முதலாவது சிறிய கற்பாறை ஆணையில் குறிப்பிட்டுள்ள எண் 256-ஐ புத்தர் பரிநிர்வாணமடைந்த ஆண்டு எனக்கருதி அசோகர் தம்முடைய 38-வது ஆட்சியாண்டில் பதவியைத் துறந்து பௌத்த பிக்குவானார் என்றும் அந்த ஆண்டில்தான் அக் கல்வெட்டு வெளியிடப் பட்டதென்றும் கூறுகிறார்.[3] முன்னர்ப் பார்த்த முகர்ஜியின் கருத்திற்குக் கூறிய ஆட்சேபம் இதற்கும் பொருந்தும். மேலும், அசோகரின் வரலாற்றை ஆராய்ந்த பெரும்பாலான அறிஞர்கள் இக் கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

1 Asoka (1962) p. 18 Also pp. 107—115.

2 Prof. Sathianathaier op. cit., p. 124, Romila Thapar op. cit., p. 40 Vincent A. Smith - Asoka - p. 145.

3 J. R. A. S. 1909, p. 981.

பேராசிரியர் D. R. பண்டார்க்கார் அசோகர் தமது எட்டாவது ஆட்சியாண்டிலேயே பௌத்த சமயத்தைத் தழுவிய தாகக் கூறுகிறார்.[1] ஆனால், அவருடைய மத மாற்றத்திற்குக் கலிங்கப் போர் காரணமில்லை என்று அப் பேராசிரியர் கருது கிறார்.[2]

அசோகர் பௌத்த மதத்தைப் பின்பற்றத் தொடங்கிய காலத்திற்கும் கலிங்கப் போருக்கும் நெருங்கிய தொடர்புண்டு என்றும் ஆனால் அவர் தம்மாட்சியில் எந்த ஆண்டில் அம் மதத்தைத்தழுவினார் என்று கூறுவது அவ்வளவு எளிதல்ல எனவும் ரோமிலா தாபர் கூறுகிறார்.[3]

பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார் அசோகர் தாம் முடிசூட்டிக்கொண்ட பத்தாவது ஆண்டின் இறுதியில் பௌத்த சமயத்மைத தழுவியதாகவும், அப்பொழுதுதான் அவர் போதிமரத்தைத் தரிசிக்கச் சென்றதாகவும், அம் மத மாற்றத் திற்குக் கலிங்கப் போர்தான் காரணமென்றும் கூறுகிறார்.[4]

வின்சென்ட் A. ஸ்மித்தும்[5] பேராசிரியர் சத்திய நாதய்யரும்[6] அசோகர் கலிங்கப்போரினால் மனம்மாறிப் பௌத்த சமயத்தைப் பின்பற்றத் தொடங்கியதாகவும், அது நிகழ்ந்தது அசோகருடைய ஒன்பதாவது ஆட்சி ஆண்டிலென்றும் (கி. மு. 261) கூறு கின்றனர்.[7] இக் கருத்தே இருக்கக் கூடிய சான்றுகளுக்கு மிகவும் பொருத்தமாய் உள்ளது.

தொடக்கத்தில் அசோகர் உபாசகராக அதாவது, சாதாரண பௌத்தராகவே இருந்தார். போரைக் கைவிட்டு விட்டார். ஆனால், பிற பௌத்தமதக் கோட்பாடுகளில் அசோகர் அதிக ஈடுபாடு கொள்ளவில்லை. இரண்டரை ஆண்டுகளுக்குப் பின் அசோகர் பௌத்த சங்கத்துடன் நெருங்கிய தொடர்பு கொள்ளலானார். இல்லறத்தில் இருந்தாலும் துறவியைப் போன்று வாழ்ந்து வந்தார். அந்நிலையைப் பிக்குகடிக

[1] Asoka—The Carmichael Lectures, 1923. p. 76.
[2] Ibid, p. 77.
[3] Romila Thapar op. Cit, pp. 32-36.
[4] Age of the Nandas and Mauryas p. 211.
[5] op. cit. p. 24.
[6] op. cit. p. 130.
[7] அசோகர் தம்மாட்சியில் நடந்த நிகழ்ச்சிகளை முடிந்த (Expired years) ஆண்டுகளில்தான் குறிப்பிடுகிறார். உதாரணமாகக் கலிங்கப்போர் நடந்த காலத்தைக் கூறும்பொழுது தாம் முடிசூட்டிக்கொண்ட எட்டு ஆண்டு களுக்குப்பின் அது நடந்ததாகக் குறிப்பிடுகிறார். அதிலிருந்து அப் போர் அவர் ஒன்பதாவது ஆட்சியாண்டில் நடந்ததென்பதை நாம் அறிகிறோம்.

அல்லது பிக்கு நிலை (Monk Buddhist) என்று பலவாறு கூறுவர். பிக்குகடிகன் என்பவன் பிக்குவைப் போன்று மடத்திலும் வாழ்பவன்; ஆனால் பிக்கு அல்லன். பௌத்த மதத்தில் அதற்கிடமிருந்தது. ஏழாம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்த சீன யாத்திரிகன் இட்சிங் துறவு நிலையில் காட்சியளித்த அசோகர் சிலை ஒன்றைப் பார்த்ததாகக் கூறுகின்றான். சீனாவில் கி.பி. 6ஆம் நூற்றாண்டில் லியாங் வமிசத்தைச் சேர்ந்த 'காவோட்சு வூடி' (Kao-tsuWu-ti alias Hsiao-yen) அசோகரைப் போன்று துறவியாக வாழ்ந்த ஓர் அரசன் என ஸ்மித் கூறுவது ஈண்டு கவனிக்கத் தக்கது. அசோகருக்கும் அச் சீன மன்னனுக்கும் இருந்த வேறுபாடு யாதெனில், அசோகர் தம் அரச கடமைகளைக் கடைசிவரை செவ்வனே செய்துவந்தார். ஆனால், 'வூடி' என்ற அச் சீன அரசன் அதனைப் புறக்கணித்து விட்டான். சமண சமயத்திலும் இப்படி அசோகரைப் போன்று சிலர் இருந்தனர். பன்னிரண்டாம் நூற்றாண்டில் குஜராத்தை ஆண்ட குமாரபாலன் என்ற மன்னன் அசோகரைப் போன்று வாழ்ந்து, ஆண்டான் என்றும், சமண சங்கத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தான் என்றும் ஸ்மித் எடுத்துக் காட்டுகின்றார்.[1] மேலும், இதுபற்றி பர்மாவிலும் இலங்கையிலும் இன்றுவரை நிலவிவரும் ஒரு வழக்கத்தினை ஸ்மித் நமக்கு நினைவூட்டுகிறார்.[2] இவ்விரு நாடுகளிலும் பௌத்த சங்கத்தில் சேரும் ஒருவர் கடைசி வரை துறவியாக இருக்கவேண்டுமென்பது கட்டாயமில்லை. சிறிது காலம் துறவியாக வாழ்ந்து விட்டு மீண்டும் இல்லத்திற்கு வரலாம். சமீப காலத்தில் பர்மாவின் தலைமை அமைச்சராக இருந்த தக்கின் நூ என்பவர் சிலகாலம் பௌத்த மடம் ஒன்றில் துறவியாக வாழ்ந்து விட்டு இல்லத்திற்குத் திரும்ப வந்துவிட்டார். எனவே, அசோகர் துறவியாகவும், அரசராகவும் வாழ்ந்து வந்தார் என்பது வியப்பிற்குரிய செய்தி இல்லை.

# 7. அசோகர் ஆட்சியின் முக்கிய நிகழ்ச்சிகள்

கி. மு. 259-ல் அசோகர் அரசர்களுக்குரிய பொழுது போக்கான வேட்டையாடுதலைக் கைவிட்டார். தவிர, அரண்மனையில் புலாலுக்காகப் பல ஆயிரக்கணக்கான விலங்குகள் கொல்லப்

[1] Asoka, pp. 37 & 38.

[2] Ibid, p. 38.

பட்டு வந்ததை நிறுத்தி, மூன்றுக்குமேல் கொல்லக் கூடாது என்று ஆணையிட்டார்.[1] மேலும், அதையும் எதிர்காலத்தில் விட்டு விடப் போவதாகவும் அறிவித்தார். அவ்வாறே இரண்டாண்டுகள் கழித்துப் புலால் உணவை அறவே கைவிட்டார். அடுத்தாற் போல் விலங்குகளைப் பலியிடும் வேள்விகளையும், கொண்டாட்டங் களையும் பாடலிபுத்திரத்தில் நடத்தக்கூடாதென ஆணையிட்டார்.

கி. மு. 259-ல் அசோகர் தமது புனித யாத்திரையைத் தொடங்கினர். முதலில் புத்தர் பெருமான் தவம் செய்து ஞானோதயம் அடைந்த புத்த கயாவிற்குச் சென்று போதி மரத் தைத் தரிசித்து வந்தார். அடுத்தாற்போல் பௌத்தசமயத்தைப் பரப்ப அசோகர் சமயப் பரப்புக் குழுவினரைத் தம் நாட் டில் பல இடங்களுக்கும் அயல் நாடுகளுக்கும் அனுப்பிவைத் தார். கி. மு. 256-ல் அசோகர் தம் தர்மத்தைப் பரப்புவதற்கும் முறை வழங்குவதைச் சீர்படுத்தவும் தர்ம மகாமாத்திரர்கள் என்ற தனி அதிகாரிகளை நியமித்தார். மேலும், தம் தர்மத்தை மக்கள் நன்கு அறிந்து நல்வாழ்வு நடத்தும் பொருட்டு அதனை விளக்கிக் கல்லில் வரையத் தொடங்கினர். அசோகரது பதின்மூன்று பதினன்காம் ஆட்சியாண்டுகளில் அவரது கற்பாறை ஆணைகளும், சிறிய கற்பாறை ஆணை களும் (Rock Edicts and Minor Rock Edicts) வெளியிடப்பட் டன. அதன் பின் கற்பாறை ஆணை எதுவும் வெளியிடப்பட வில்லை என்று தெரிகிறது.

கி. மு. 255-ல் அசோகர் மீண்டும் புனித யாத்திரையில் ஈடுபட்டார். அப்பொழுது பஸ்தி மாவட்டத்திற்கு வடக்கே நேபாள தராய் பிரதேசத்தில் நிக்லீவா கிராமத்தருகே இருந்த கோனகமான (கனகமுனி) புத்த ஸ்தூபியை விரிவுபடுத் தினர். ஆறு ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் அந்த ஸ்தூபியை விரிவுபடுத்தினர் என்றும் அறிகிறோம்.[2] மீண்டும் தமது இருபத்தொன்றாவது ஆட்சியாண்டில் அசோகர் ஒரு நீண்ட யாத்திரை செய்தார். இதுபற்றி அசோகாவதானமும் சில அரிய செய்திகளைக் கூறுகின்றது. இந்த யாத்திரையில் அசோகர் தமது குரு உபகுப்தரை அழைத்துக்கொண்டு புத்தர் பெருமான் பிறந்த லும்பினி தோட்டத்திற்குச் (Lumbini garden) சென்று தரிசித்து, கற்றூண் ஒன்று நிறுவி அதில் ‘இது சாக்

[1] அம் மூன்று விலங்குகளில் இரண்டு மயில்க்ள், ஒன்று கருப்புமான. கருப்புமானை நாள்தோறும் கொல்லுவதில்லை யென்றும் அசோகர் கூறுகிறர்.

[2] நிக்லீவா கல்வெட்டு.

கிய முனி புத்தர் பிறந்த இடம்' என்ற குறிப்பினையும் பொறிக்கச் செய்தார். அடுத்துப் புத்தர் ஞானோதயம் அடைந்த புத்த கயாவிற்கும், பிற பௌத்த தலங்களான சாரநாத், சிராவஸ்தி, குசிநகரம் முதலிய இடங்களுக்கும் சென்று வந்தார். குசிநகரம் புத்தர் பரிநிர்வாணமடைந்த ஊர். மேலும், அசோகர் இந்த யாத்திரையில் கோணாகமன ஸ்தூபியையும், ஆனந்தா ஸ்தூபியையும், வக்குல ஸ்தூபியையும் தரிசித்து வந்ததாகத் தெரிகிறது.[1]

இந் நிகழ்ச்சிக்குச் சற்று முன்னரோ பின்னரோ அசோகர் தம் மகன் மகேந்திரனை இலங்கைக்கு அனுப்பியிருத்தல் வேண்டும்.[2] மூன்றாவது பௌத்த மகாநாடு பாடலிபுத்திரத்தில் கூடும் முன்பே அசோகர் இலங்கையுடன் தொடர்பு கொண்டிருந்தார் என்பதனை இரண்டாவது, பதின்மூன்றாவது கற்பாறை ஆணைகளில் காணப்படும் குறிப்புகளிலிருந்து அறியப்படுகின்றது.[3] மகாவம்சத்திலும் தீபவம்சத்திலும் காணப்படும் செய்திகள் இதனை ஒட்டியே உள்ளன. மகாவம்சத்தில் அசோகரும் இலங்கை மன்னனான தேவநாம்பிரிய திசாவும் நீண்ட நாளைய நண்பர்களென்றும், ஒரு சமயம் இலங்கை மன்னன் அசோகருக்குச் சில அணிகலன்களை அன்பளிப்பாக அனுப்ப விரும்பியதாகவும் கூறப்படுகின்றது. தீபவம்சத்தில் இலங்கை வேந்தன் திசா அரியணை ஏறியதும் அசோகருக்கு ஒரு தூதுக்குழுவை அனுப்பியதாகவும், அது பாடலிபுத்திரத்தில் ஐந்து வாரங்கள்வரை தங்கியிருந்ததாகவும், பின்னர் இலங்கைக்குத் திரும்பியபொழுது அசோகர் இலங்கை மன்னனுக்கு அன்பளிப்புகளை அனுப்பியதுடன் அவனைப் பௌத்த சமயத்தில் சேரும்படி கோரியதாகவும், அதன்படியே இலங்கை வேந்தன் செய்ததாகவும், அதன்பின் மகேந்திரனின் சமயப் பிரசாரக் குழு அத் தீவிற்கு வந்ததாகவும், இலங்கை அரசியைப் பௌத்த சமயத்தில் சேர்ப்பதற்காக அடுத்தாற்போல் சங்கமித்திரை

[1] Smith-op, cit ,/p. 40.

[2] மகேந்திரன் அசோகருக்குச் சாக்கிய குமாரி மூலம் பிறந்த மகன் என்று தீபவம்சம் கூறுகிறது. ஆனால், பாகியானும் யுவான் சுவாங்கும் மகேந்திரன் அசோகரின் தம்பி என்று கூறுகின்றனர். தீபவம்சத்தின் கூற்றே உண்மையெனப்படுகின்றது. ரோமிலா தாபர் இக் கருத்தைக் கொண்டுள்ளார்—op. cit., p, 46.

[3] மேற் கூறிய இரு கல்வெட்டுகளிலும் குறிப்பிடப்பட்டுள்ள தாம்பபர்ணி என்பது இலங்கையே—See R. K. Mookerji, Asoka. p. 132 Fn. 2. Contra—V. A. Smith - Asoka. p. 162.

(மகேந்திரனின் தங்கை) இலங்கைக்கு வந்ததாகவும், அச்சமயத்தில் போதி மரத்தின் கிளை ஒன்றினையும் கொண்டுவந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.[1] மகாவம்சத்திலும் தீபவம்சத்திலும் கூறப்படும் இச் செய்திகளைப் பெரும்பாலான வரலாற்று ஆசிரியர் உண்மையென்றே கருதுகின்றனர்.[2] சங்கமித்திரையின் மகன் சுமணன் (அசோகருடைய தமையனுக்கும் சுமணன் என்ற பெயர் இருந்தது.) இலங்கைக்குப் புத்தரின் புனித சாம்பலைக் கொண்டுசென்று ஒரு ஸ்தூபியை அமைத்து அதில் வைத்துப் போற்றியதாகவும் கூறப்படுகிறது.[3] அஜந்தா ஓவியம் ஒன்று அசோகர் இலங்கைக்குச் சமயப்பரப்புக் குழுவினரை அனுப்புவதுபோல் அமைந்துள்ளதாம்.[4]

அசோகருடைய வரலாற்றில் அடுத்து நிகழ்ந்த முக்கிய நிகழ்ச்சி கற்றூண் ஆணைகளை (Pillar Edicts) வெளியிட்டது. அவருடைய ஏழு கற்றூண் ஆணைகளும் அவரது இருபத்தேழு, இருபத்தெட்டாம் ஆட்சியாண்டுகளில் வெளியிடப்பட்டன. இக் கற்றூண்களின் கலைச் சிறப்பினைப் பின்னர்க் காண்போம்.

ஏறத்தாழ கி. மு. 240-ல் அசோகர் பாடலிபுத்திரத்தில் ஒரு பௌத்த மகாநாட்டைக் கூட்டினார். இது மூன்றாவது பௌத்த மகாநாடு என வரலாற்றில் அழைக்கப்படுகிறது. முதல் மகாநாடு புத்தர் பரிநிர்வாணமடைந்த பின் இராஜகிரகத்தில் கூடியது. ஏறத்தாழ ஒரு நூற்றாண்டிற்குப் பின்னர் இரண்டாவது பௌத்த மகாநாடு வைசாலியில் கூடியது. பாடலிபுத்திரத்தில் அசோகரால் கூட்டப்பட்ட மகாநாடு ஒரு (பௌத்த) பொது மாநாடு அல்லவென்று கருதுவோர் பலர்.[5] இம் மகாநாடு அசோகர் ஆதரவில் நடைபெற்றதா என்பதைப்பற்றி ரோமிலா தாபர் ஐயப்படுகிறார்.[6] வட இந்திய, திபெத்திய பௌத்த நூல்கள் இந்த மாநாட்டினைப் பற்றி மௌனமாய் இருப்பது உண்மையே. இருப்பினும், சிங்கள பௌத்த நூல்களான தீபவம்சமும் மகாவம்சமும் பாடலிபுத்திர மகாநாட்டைப் பற்றி

[1] Romila Thapar-op. cit., pp. 46 and 47:

[2] Prof. K. A. Nilakanta Sastri—Age of the Nandas and Mauryas (1952) pp. 218 and 219; V. A. Smith op. cit., p. 45 R. K. Mookerji—op. cit., pp. 35 and 36.

[3] Ibid p. 36.

[4] Ibid.

[5] Prof. Sathianathaier, op. cit., p. 140.
Prof. Nilakanta Sastri, op. cit., p. 301.

[6] op. cit. 45.

விரிவாகக் கூறுவதைக் கற்பனையெனத் தள்ளிவிட முடியாது. (பிற செய்திகளை நான்காவது அதிகாரத்தில் காண்க). அசோகர் சமயப் பொறையுடன் வாழ்ந்தது உண்மையே. அதே சமயத்தில் அவர் பௌத்த சங்கத்தின் நலத்தில் கொண்டிருந்த ஆழ்ந்த ஈடுபாட்டினை எடுத்துக்காட்ட சாரநாத் கல்வெட்டு (Also called the Schism Edict) ஒன்றே போதுமானது. எனவே அசோகருக்கும் இம் மாநாட்டிற்கும் தொடர்பில்லையெனக் கருதுவது தவறே.[1]

இனி அசோகரின் ஏழாவது கற்றூண் ஆணையில்[2] இம் மாநாட்டைப் பற்றிய குறிப்பு எதுவும் காணப்படாமையினால் இது அதன்பின் ஏறத்தாழ கி. மு. 240-ல் நடைபெற்ற நிகழ்ச்சி ஆதல் வேண்டும். சாரநாத் ஆணை அதன்பின் வெளியிடப் பட்டிருத்தல் வேண்டும். பௌத்த சமயக் கோட்பாடுகளில் அக்காலத்தில் நிலவிய குழப்பத்தினை நீக்குதற்கும், பௌத்த சங்கத்தில் கட்டுப்பாட்டினை நிலைநிறுத்தவும் இம் மாநாடு கூட்டப்பட்டதாகச் சிங்கள நூல்கள் கூறுகின்றன. மாநாட்டின் முடிவில் பிற இடங்களில் பௌத்த சமயத்தைப் பரப்புவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இதுபற்றிய விவரங்களைப் பின்னர்ப் பார்ப்போம்.

# 8. அசோகரின் இறுதிக் காலம்

இதன்பின் அசோகரின் வரலாற்றில் என்ன முக்கிய நிகழ்ச்சி நடைபெற்றது என்பது தெரியவில்லை. வாழ்க்கையின் இறுதியில் அசோகர் தாம் கொண்டிருந்த அதிகாரத்தையும் செல்வாக்கை யும் இழக்கத் தொடங்கினர் என்று பௌத்த நூல்கள் கூறு கின்றன. மகாவம்சம் இதுபற்றிக் கூறுவதாவது: அசோகரின் இருபத்தொன்பதாம் ஆட்சியாண்டில் அவருடைய பட்டத்தரசி அசந்திமித்ரா இறந்தாள். நான்காண்டுகளுக்குப்பின் அசோகர் திஷ்யரக்ஷிதாவைப் பட்டத்தரசியாக்கினர். புதிய பட்டத்தரசி மன்னர் போதி மரத்திடம் கொண்ட பற்றினைக் கண்டு பொறுமையுற்று அம் மரத்தை விஷமுள் ஒன்றினல் குத்தி, பட்டுப்போகும்படி செய்தாள். இதனல் பெரிதும் கவலையுற்ற அசோகர் எப்படியோ முயற்சிசெய்து போதி மரம் முழுதும் அழியாமல் காத்துவிட்டார். பின்னர், தமது முப்பத்தேழாம் ஆட்சியாண்டில் அசோகர் இறந்தார். பட்டத்தரசியின்

[1] Contra, Romila Thapar—op. cit., p. 45.

[2] Pillar Edict VII.

பெயரைக் குறிப்பிடாமலே சீன யாத்திரிகன் பாகியானும் இக்கதையைக் கூறுகின்ருன். இக்கதையில் ஓரளவு வரலாற்று உண்மை உள்ளது. அசந்திமித்ரா போலன்றி, திஷ்யரக்ஷிதா தன் கணவன் பௌத்த சமயத்தில் கொண்டிருந்த ஈடுபாட்டினைக் கண்டு வெறுத்து அதன் காரணமாய்ப் போதி மரத்திற்கு இடையூறு செய்திருக்கவேண்டும். திஷ்யரக்ஷிதா செருக்குமிக்க வளென்பதும் தன்னலம் உடையவளென்பதும், மிக்க செல் வாக்கைப் பெற்றிருந்தாள் என்பதும் அசோகாவதானம் கூறுவ திலிருந்து நன்கு புலனுகின்றது.

அசோகாவதானத்தில் கூறப்படும் கதையாவது: அசோக ருக்கு அரசி பத்மாவதி மூலம் குணாளன் என்ற மகன் இருந் தான். குணாளன் ஓர் அழகன்; அதிலும் அவன் கண்கள் மிகமிக அழகானவை. ஆனுல், அவன் குருடன் ஆவான் என்று யாரோ ஆரூடம் கூறினுர்களாம். அது பலித்துவிட்டது. அசோகருடைய இரண்டாவது பட்டத்தரசியான திஷ்யரக்ஷிதா குணாளன்மீது அடங்கா மோகங்கொண்டாள். ஆனுல், நற்குணமுடைய குணாளன் அதற்கு இசையவில்லை. இந் நிலையில் அசோகர் நோய் வாய்ப்படுகிருர். அவர் நோயை மருத்துவர்களால் குணப்படுத்த இயலவில்லை. நோய் இன்ன தென்றும் அவர்களால் கூறமுடியவில்லை. ஆனுல், திஷ்ய ரக்ஷிதா சாமர்த்தியத்தால் அரசரின் நோயை அறிந்து அதைக் குணப்படுத்துகின்ருள். இதனுல் மகிழ்ச்சியுற்ற மன்னர் அவள் விரும்பியதை அளிப்பதாக ஒரு வரம் தருகின்ருர். அது குணாளனுக்கு ஆபத்தாய் முடிந்தது. தட்சசீலத்தில் திடீரென்று ஒரு கலகம் ஏற்பட்டது. அதனை அடக்க குணாளன் அங்கு அனுப்பப்பட்டான். திஷ்யரக்ஷிதா தட்சசீலத்தில் இருந்த உயர் அதிகாரிகளுக்குக் குணாளனின் கண்களைப் பிடுங்கிவிட்டு அவனைக் கொன்றுவிடுமாறு கடிதம் எழுதி, அக் கடிதத்தின் மேல் அசோகரின் முத்திரையையும் பெற்று அனுப்பி வைத்தாள். அசோகருடைய முத்திரையைப் பெற அவர் அளித்திருந்த வரத்தை அவள் பயன்படுத்தினுளாம். அக் கடிதத்தைக் கண்ட தட்சசீல அதிகாரிகள் வியப்புற்று, குணாளனிடம் கொண்ட அன்பினுல் அவன் கண்களை மட்டும் பிடுங்கிவிட்டு உயிருடன் விட்டுவிடுகிருர்கள். கண்களை இழந்த குணாளன் தன்னருமை மனைவி காஞ்சனமாலாவுடன் அங்கு மிங்குமாய் அலைந்து, கடைசியில் பாடலிபுத்திரம் வருகின்ருன். அங்கு தன் துயரக் கதையை, வீணையை மீட்டிக் கொண்டு தெருவில் பாடி வருகையில் அசோகர் தம் மகனை அடையாளம் கண்டுகொள்கிருர். குணாளன் நடந்த நிகழ்ச்சியைத் தந்தை

யிடம் கூறுகின்றுன். அதைக் கேட்ட அசோகர் திஷ்ய ரக்ஷிதாவை உயிருடன் எரித்து விடுமாறு ஆணையிடுகின்றுர். இக்கதை எவ்வளவு உண்மையானதென்பதை அறிய வேறு சான்றுகள் இல்லை. இருப்பினும் திஷ்யரக்ஷிதா கொடியவ ளென்பதும், குணளன் அவளின் கொடுமைக்கு ஆளானுன் என்பதும் அரசுரிமைக்காக அரச குடும்பத்தில் உட்பூசல் நிகழ்ந்திருக்க வேண்டுமென்பதும் ஓரளவிற்குப் புலப்படு கின்றது.

அசோகரின் இறுதிக் காலத்தைப்பற்றி அசோகாவ தானத்தில் மற்றொரு கதையும் உள்ளது. அசோகர் தம் முதுமைக் காலத்தில் தாம் வைத்திருந்த செல்வமனைத்தையும் குக்குடாராமா பௌத்த மடத்திற்கு அளித்து விட்டார். குணளன் மகன் சம்பிரதி இளவரசுப் பட்டம் பெற்றிருந்தான். சம்பிரதியும் அமைச்சர்களும் அசோகர் பௌத்த மடத்திற்கு அளித்த கொடையை விரும்பவில்லை. மேற்கொண்டு அசோகர் எதையும் கொடுக்காதவாறு பார்த்துக்கொள்ள முயன்றனர். ஒரு நாள் ஒரு பௌத்த துறவி அசோகரிடம் பிச்சை கேட்க வந்தபொழுது அசோகர் ஒன்றும் கொடுக்க இயலாமல் பாதி மாங்காயைக் கொடுத்தனுப்ப நேரிட்டது. இதனுல் மன முடைந்த பேரரசர் விரைவில் இறந்துவிட்டார்.

இக்கதையைக்கொண்டு அசோகர் தம் இறுதிக் காலத்தில் ஆட்சிப் பொறுப்பை மற்றவர்களிடம் விட்டுவிட்டார் என்றோ, தம் செல்வமனைத்தையும் பௌத்த சங்கத்திற்கு அளித்து விட்டார் என்றோ அல்லது அவர் கொள்கைக் கெதிராக அமைச்சர்கள் சூழ்ச்சி செய்தார்களென்றோ கூறுவது சாத்திய மில்லை.[1] இருப்பினும், முதுமையினுல் பேரரசரின் செல்வாக்குப் பெரிதும் மங்கியிருக்கக்கூடிய சாத்தியக்கூற்றை மறுப்பதற் கில்லை. மேலும், அரசுரிமையைப் பற்றிச் சில குழப்பமும் இருந்திருத்தல் வேண்டும். மேற்கூறிய கதைகளை ஆராயுங்கால் நாம் நினைவில் கொள்ளவேண்டியது யாதெனில், அவை பற்பல காலங்களில் பலரால் பலவிதமாய்க் கூறப்பட்டவை என்பதும் பௌத்த நீதியைப் புகட்டுவதே அவற்றின் நோக்கம் என்பது மாகும்.

[1] Contra-Raychaudhuri, The Political History of Ancient India, pp. 363 F. n, and Barua, Asoka and his Inscriptions p. 62.

## பகுதி III

# 1. அசோகருடைய பேரரசின் பரப்பு

அசோகருடைய பேரரசின் எல்லைகளை அவர் கல்வெட்டுகள் காணப்படும் இடங்களிலிருந்தும், அவை கூறக்கூடிய செய்திகளிலிருந்தும், அவர் கட்டிய கட்டடங்கள், பௌத்த சமயச் சின்னங்கள் முதலியவற்றிலிருந்தும் அவர் முன்னோர்களின் வரலாற்றிலிருந்தும் அறிகிறோம். அசோகருடைய கல்வெட்டுகள் பின்வரும் இடங்களில் காணப்படுகின்றன.

(1) ஷாபாஸ்காரி (பெஷாவர் அருகே).

(2) மான்சேரா (பெஷாவர் அருகில்).

(3) ஷாரிகுனா (காண்டகார் அருகே, ஆப்கானிஸ்தானம்).

(4) தட்சசீலம் (பஞ்சாபில்).

(5) தோப்ரா (அம்பாலா அருகே; பிரோஸ் துக்ளக் காலத்தில் இக் கல்வெட்டு டில்லிக்குக் கொண்டுவரப்பட்டது).

(6) மீரத் (இதுவும் அப்படியே டில்லிக்குக் கொண்டு வரப்பட்டது).

(7) கால்சி (டேராடூன் அருகே).

(8) சாரநாத் (காசி அருகே).

(9) கௌசாம்பி (இக்கல்வெட்டு பின்னர் அலகாபாத்திற்குக் கொண்டுவரப்பட்டது).

(10) அரவ்ரா (சுனார் அருகே, உத்திரப்பிரதேசம்).

(11) நிக்லீவா (நேபாள தராய் பிரதேசம்).

(12) ரும்மிந்தெய் (நேபாளம்).

(13) லௌரியா அரராஜ் (பீகாரில்).

(14) லௌரியா நந்தன்கார் (பீகாரில்).

(15) ராம்பூர்வா (பீகாரில்).

(16) சகஸ்ராம் (பீகாரில்).

(17) பராபர் (பீகாரில்).

(18) ரூபநாத் (ஜபல்பூர் அருகே, மத்தியப் பிரதேசம்).

(19) சாஞ்சி (போபால் அருகே).

(20) தௌலி (புவனேஸ்வரம் அருகே, பூரி மாவட்டம்).

(21) ஜௌகதா (கஞ்சம் மாவட்டம்).

(22) மாஸ்கி (ஆந்திரப் பிரதேசம்).

(23) அமராவதி (ஆந்திரப் பிரதேசம்).

(24) எற்றக்குடி (ஆந்திரப் பிரதேசம்).

(25) காவிமாத் (மைசூர்).

(26) பால்கீகுண்டு (மைசூர்).

(27) சித்தபுரா (மைசூர் சித்தல் துர்க்கம் மாவட்டம்).

(28) ஜடிங்க ராமேஸ்வரம் (மைசூர் சித்தல் துர்க்கம் மாவட்டம்.)

(29) பிரம்மகிரி (மைசூர் சித்தல் துர்க்கம் மாவட்டம்).

(30) சொபாரா (பம்பாய் மாகாணத்தில், தாணு மாவட்டத்தில் உள்ளது).

(31) கிர்நார் (கத்தியவார் தீபகற்பத்தில் ஜுனுகாத் அருகே உள்ளது).

(32) பெய்ராட் (இராஜபுதனம்).

(33) பாப்ரூ (இராஜபுதனம்).

இவ்விடங்கள் யாவும் அசோகருடைய ஆட்சியில் இருந்தவை என்பதிலிருந்து அவர் பேரரசின் எல்லைகளை ஒருவாறு அறியலாம். நிற்க, பேரரசின் தெற்கு எல்லையைப் பற்றிக் கருத்து வேறுபாடு உள்ளது. அது 12° வட அட்சரேகையை ஒட்டி அமைந்திருத்தல் வேண்டுமெனப் பேராசிரியர் சத்திய நாதய்யர் கருதுகிறார்.[1] அதாவது சிரவணபெல்கோலாவிலிருந்து (மைசூர்) கடலூருக்கு (தெ. ஆற்காடு மாவட்டம், தமிழ்நாடு) ஒரு கோடு வரைந்தால் அதற்கு வடக்கே உள்ள பகுதி மகதப் பேரரசில் சேர்ந்திருந்தது என்பதாகும். ஆனால், இக் கருத்திற்கான காரணம் கூறப்படவில்லை. அசோகருடைய கல்வெட்டு எதுவும் தொண்டை மண்டலத்தில் இதுவரை காணப்படவில்லை. மேலும், அவருடைய கல்வெட்டுகளில் உள்ள செய்திகளைப் பார்க்குமிடத்து சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் தனித்திருந்து ஆண்டதாகவே தெரிகிறது. இருப்பினும், கடலூருக்குப் பாடலிபுத்திரம் என்ற பெயர் இருப்பதும், சேலம் மாவட்டத்தின் ஒரு பகுதி பண்டைக் காலத்தில் மகதை மண்டலம் என்று வழங்கப்பட்டிருப்பதும், அசோகரைத் தம் முன்னோர்களில் ஒருவராக ஆரம்ப காலப் பல்லவர் தம் செப்பேடுகளில் குறிப்பிட்டிருப்பதும் அறிஞர்களின் கவனத்திற்குரிய செய்திகளாம். மேலும், கி. மு. மூன்றாம் நூற்றாண்டிலேயே தமிழ் நாட்டிற்குப் பௌத்த சமயம் வந்துவிட்டதென்பதையும், காஞ்சி மாநகர் பௌத்தர்களுக்கு முக்கிய இடமாகப் பல நூற்றாண்டுகள் விளங்கியதென்பதையும் நாம் நினைவில் கொள்ளுதல் வேண்டும்.

நிற்க, பாரசீகம் முதல் சிரியா வரையுள்ள மேற்காசியப் பிரதேசத்தை ஆண்ட கிரேக்க மன்னர் ஆன்டியோகசை அசோகர் தம் பக்கத்து நாட்டு அரசராகக் குறிப்பிடுவதிலிருந்து அசோகருடைய பேரரசு மேற்கே பாரசீக எல்லை வரை பரவி யிருந்ததாகக் கொள்ளலாம். செல்யூகஸ் நிகேடரிடமிருந்து சந்திரகுப்தர் பெற்ற பிரதேசங்கள் அசோகர் காலத்திலும் தொடர்ந்து மகதப் பேரரசின் பகுதியாக விளங்கின. இக்கருத்தை அவர் கல்வெட்டுகளும் உறுதி செய்கின்றன. மேலும், வடமேற்கு இந்தியாவில் இருந்த காந்தாரர், காம்போஜர், யவனர் முதலியோர் அசோகர் ஆட்சியின் கீழ் இருந்தனரென்பதை அவருடைய கல்வெட்டுகள் தெளிவாகக் கூறுகின்றன.

[1] op. cit. page 169 Map

இவை தவிர, அசோகருடைய பேரரசின் எல்லைகளை அறிய அவர் காலத்தில் எழுப்பப்பட்ட கட்டடங்களும் உதவி புரிகின்றன. ஆப்கானிஸ்தானத்தில் ஷாரிகுனு கல்வெட்டுத் தவிர, கபிசா நகரில் நூறு அடி உயரமுள்ள ஒரு கல் ஸ்தூபியும், முந்நூறடி உயரமுள்ளதும் முன்னதைவிட மிகவும் வனப்பானதுமான மற்ருெரு ஸ்தூபி நங்ரகாரிலும், ஸ்வாட் பள்ளத் தாக்கில் வேறு பௌத்தச் சின்னங்களும் அசோகரால் எழுப்பப் பெற்றன என்று சீன யாத்திரிகன் ஹியூன் சாங் கூறுகின்ருன்.[1] எனவே ஆப்கானிஸ்தானம் அசோகர் ஆட்சியின்கீழ் இருந் திருத்தல் வேண்டும். காஷ்மீரத்து அசோகர் ஒரு புதிய தலைநகரையும் ஐந்நூறு பௌத்த மடங்களையும் கட்டியதாகக் கூறும் வழிவழிச் செய்திகளை இராஜதரங்கிணியின் ஆசிரியரான கல்ஹணன் குறிப்பிடுகின்ருர். இது காஷ்மீரம் மௌரியர் ஆட்சியிலிருந்ததைத் தெளிவாக்குகின்றது. நேபாளத்தில் அசோகர் யாத்திரை செய்யச் சென்றபொழுது தம் மகள் சாருமதியையும், மருமகன் தேவபாலனையும் அழைத்துச் சென்றதாகவும் தம் யாத்திரையின் நினைவாக ஆங்கு (காட்மாண்டு அருகே) தேவபட்டணம் என்ற ஒரு புதிய நகரை ஏற்படுத்தியதாகவும் அந் நகர் அருகே அவர் மகள் ஒரு பௌத்த மடத்தைக் கட்டியதாகவும், அவர் மருமகன் தேவபாலனும் வேறு மடத்தைக் கட்ட முயன்று அது முடிவதற்குள் இறந்துபோனதாகவும் கூறப்படும் வழிவழிக் கதைகள் உள்ளன. அவற்றை உண்மையே என்று V. A. ஸ்மித்தும் பிறரும் கருதுகின்றனர்.[2] இச்செய்தியை உறுதி செய்யக் கூடிய அளவிற்கு அங்கு இன்றும் அக்காலக் கட்டடங்கள் உள்ளன.[3]

வங்காளத்தில் தாம்ரலிப்தியிலும் வேறு பல இடங்களிலும் அசோகரால் கட்டப்பட்ட ஸ்தூபிகளைப் பற்றி ஹியூன் சாங் தன் நூலில் குறிப்பிட்டுள்ளான். கிழக்கே வங்கம் முழுவதும் அசோகராட்சியில் இருந்திருக்க வேண்டும். கத்தியவார் தீபகற்பமும் சௌராஷ்டிரமும் அசோகரின் கீழ் இருந்ததை ருத்ரதாமனின் கிர்நார் கல்வெட்டு நன்கு புலப்ப டுத்துகின்றது தெற்கே கலிங்கத்தை அசோகர் வென்று ஆண்டதை அவர் கல்வெட்டுகள் கூறுகின்றன. மைசூரில் காணப்படும் கல் வெட்டுகள் அங்கு மௌரியர் ஆட்சி பரவியிருந்ததைத் தெள்ளத் தெளிவாகக் காட்டுகின்றன. சுருங்கக் கூறுமிடத்து அசோகர்

1 Smith op. cit., p. 76
2 Smith op. cit., p. 78
3 Ibid


அசோகனுடைய
பேரரசு
காம்போஜர்
காந்தாரர்
மான்சேரா
தட்சசீலம்
யவனர்கள்
குமமிந்தெய்
குசிநகரம்
ராம்பூர்வா
லௌரியா நந்தன்கார்
லௌரியா அரராஜ்
காலசி
தோப்ரா
மீரட்
டெல்லி
நிக்லீவா
சிராவஸ்தி
பெய்ராட்
பாப்ரு
சாரநாத்
பாடலிபுத்திரம்
சகஸ்ராம்
பராபர்
புத்தகயா
ரூபநாத்
சாஞ்சி
கிர்நார்
போஜகர்
சொபாரா
கலிங்கம்
தௌலி
ஜௌகதா
ஆந்திரர்
பால்கிகுண்டு
கவிமாதா
சித்தபுரம்
பிரம்மகிரி
ஜதிங்கராமேஸ்வரம்
மாஸ்கி
மந்தகிரி
எற்றகுடி
புலிந்தர்
சோழர்
பாடலிபுத்திரம்
அநுராதபுரம்
தாம்பபன்னி
அரபிக்
கடல்
வங்காள
விரிகுடா
இந்தியப்
பெருங்கடல்
பேரரசின் எல்லை
பேராசிரியர் சத்தியநாத
ஐயர் கூறும் தென்எல்லை

தம் பாட்டனும் தந்தையும் ஆண்ட பேரரசைச் சிறிதுகூட இழக்காமல் அதை ஓரளவு விரிவுபடுத்தினர். அசோகர் காலத்து மௌரியப் பேரரசு பரப்பில் ரோமப் பேரரசையும் ஆங்கிலேயர் ஆண்ட இந்தியாவையும் விடப் பெரியதாய் இருந்ததெனப் பேராசிரியர் சத்தியநாதய்யர் கூறுவது கவனிக்கத் தக்கது.[1]

# 2. அசோகரின் வெளிநாட்டுக் கொள்கை

அசோகர் தம் ஆட்சியின் தொடக்கத்தில் போரில் விருப்பமுடையவராகவும் பிற நாடுகளை வெல்ல வேண்டுமென்ற அவா உடையவராகவும் இருந்தார்; தம்முடைய தந்தை, ப்பாட்டன் முதலியோரைப் போன்று பெரும் படையையும் வைத்திருந்தார். கலிங்கப் போருக்குக் காரணமே அசோகருடைய மண்ணாசையே. அக்காலத்தில் இந்து மன்னர்கள் பெரும்பாலோர் அவ்வாறுதான் இருந்தார்கள். சில வேள்விகளைச் செய்ய வேண்டுமானல் போர் செய்துதான் ஆக வேண்டும். சான்றாக, ஓர் இந்து மன்னன் அசுவமேத யாகம் அல்லது அதுபோன்ற வேறு வேள்வி செய்ய வேண்டுமானல் பிறவேந்தர்களை வென்று தன்னுடைய தலைமையை அவர்கள் ஏற்றுக்கொள்ளும்படி செய்ய வேண்டும்; அதில் போர், பெரும்பாலும் தவிர்க்க முடியாமலிருக்கும். எனவே, பிற நாடுகளை வெல்லும் எண்ணம் அக்காலத்தில் தாழ்வாகக் கருதப்படவில்லை. கலிங்கப் போர் நடக்கும்வரை அசோகர் தம்முடைய தந்தையையும் பாட்டனையும் போலவே இருந்தார்.

கலிங்கப் போரில் ஏற்பட்ட ஏராளமான உயிர்ச் சேதத்தைக் கண்ட அசோகர் மனம்மாறி இனிமேல் போர் புரிவதே இல்லையென உறுதி கொண்டார். அவ்வாறே தம்முடைய எஞ்சிய வாழ்நாள் முழுவதும் போர் செய்யாமலே ஆண்டு வந்தார். வலிமையற்ற மன்னன் ஒருவன் போரை விட்டு விடுகிறேன் என்று கூறுவதில் பொருளில்லை. வலிமை மிக்க மன்னன் அவ்வாறு செய்தால் அது வியக்கத்தக்கது. அதிலும் ஒரு பெரும்போரில் வெற்றி பெற்றபின் போரை விடுவதென்பது எளிதல்ல. அவ்வாறு ஓர் அரசன் செய்தான் என்றல் அவன் மிக மிக அரிய செயலைப் புரிந்தவன் ஆவான். அசோகர்

[1] op. cit , p. 132.

அத்தகையவரே. அவ்விதத்தில் அவர் இணையற்றவர் என்று **H. G.** வெல்ஸ் **(Wells)** கூறுவது சாலவும் பொருந்தும். பண்டைய எகிப்தில் அக்நாடன் என்ற மன்னன் அசோகரைப் போன்று போரை விட்டு அமைதிக் கொள்கையைக் கடைப்பிடித்தான். ஆனல், அவன் அசோகரைப் போன்று போரில் விருப்பமுடையவனுகவோ, அல்லது வல்லவனுகவோ இருக்கவில்லை. எனவே, அசோகர் போரை விடுத்தது அது ஒரு பெருந்தீங்கு என்பதற்காகவே.

இனி, அசோகர் போரை விட்டு அமைதிக் கொள்கையைக் கடைப்பிடித்தபொழுதிலும் தம் பெருங்கடல் போன்ற படையைக் குறைக்கவோ கலைக்கவோ முற்படவில்லை. வென்ற கலிங்கத்தையும் தோற்ற மன்னனிடம் திருப்பிக் கொடுக்கவுமில்லை. எந்த உள்நாட்டு நிலையையும் சமாளிக்கவும், அயலவர் படையெடுப்பிலிருந்து தம் மக்களைப் பாது காக்கவும் அசோகர் தம் பெரும் படையைத் தொடர்ந்து வைத்திருந்தார். தம்மைப் போன்று தம் அண்டை நாடுகளின் மன்னர் அமைதிக் கொள்கையைப் பின்பற்றவில்லை என்பதை அசோகர் புறக்கணிக்கவில்லை. எல்லா உயிரினங்களின் நலத்தையும் மகிழ்ச்சியையும் விரும்பிய அசோகர் அதே குறிக்கோளுடன் பிற நாடுகளிடம் தொடர்பு கொண்டார். அவர் அயல் நாட்டுக் கொள்கை எல்லோருக்கும் பயனுடையதாக அமைந்திருந்தது. தம் மக்களைப் போன்று பிற நாட்டு மக்களும் தர்மத்தின் வழியே சென்று மேன்மையுறுவதற்காக அசோகர் சமயப்பரப்புக் குழுவினரைச் சேர, சோழ, பாண்டிய நாடுகளுக்கும், சத்தியபுத்திரர் நாட்டிற்கும், இலங்கைக்கும், மற்றும் கிரேக்க நாடுகளான சிரியா, எகிப்து, மாசிடோனியா, எபிரஸ், சிரெனி முதலியவற்றிற்கும் அனுப்பி வைத்தார். அந்நாடுகளிலும் தம் நாட்டிலும் மாந்தருக்கும் விலங்குகளுக்கும் நோய்களைக் குணப்படுத்தப் பல நற்பணிகளைப் புரிந்தார். மருந்திற்குப் பயன்படும் மூலிகைகள், பழங்கள், வேர்கள் முதலியவற்றை இருக்கக்கூடிய இடங்களிலிருந்து, இல்லாத இடங்களுக்குக் கொண்டு சென்று நட்டு வளர்த்துவர அசோகர் ஏற்பாடு செய்தார்.[1] மேலும், தம் தர்மத்தை எல்லா நாட்டினரும் பின்பற்றுவதாக அசோகர் கூறுவதில் ஓரளவேனும் உண்மை இருத்தல் வேண்டும்.

இனி, புத்தர் இறந்தபின் 250 ஆண்டுகள் கழிந்து, கி. மு. 236-ல் அசோகர் இந்தியாவிற்கு வடக்கே இருந்த

[1] இரண்டாவது கற்பாறை ஆணை

கோடான் (Khotan) நாட்டிற்குச் சென்று வந்ததாக திபேத்திய வழிவழிச் செய்தி கூறுகின்றது. மேலும், அசோகர் காலத்தில் இந்தியர்களாலும் சீனர்களாலும் அந்த இராச்சியம் ஏற்படுத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது. ஹியூன் சாங்கும் அச் செய்தியைக் குறிப்பிடுகிருன். அசோகர் கோடானுக்குச் சென்ற செய்தி உண்மையாகப் படவில்லை. ஆனல், அவர் சமயப் பரப்புக் குழுவினரை அங்கு அனுப்பியிருக்கக் கூடிய சாத்தியக்கூற்றை மறுப்பதற்கில்லை.[1] அவ்வாருயின், அது அவர் ஆட்சியின் இறுதியில் நிகழ்ந்திருக்கலாம்.

சுருங்கக்கூறின், அசோகர் பிற நாடுகளிடத்தில் அமைதிக் கொள்கையைப் பின்பற்றியதுடன் அது பயனுடையதாக இருக்கும்படியும் செய்தார். தம் நாட்டு மக்களின் நலத்திலும் மகிழ்ச்சியிலும் எவ்வளவு ஈடுபாடு கொண்டாரோ, அந்த அளவிற்குப் பிற நாட்டு மக்களிடத்திலும் ஈடுபாடு கொண்டிருந்தார். அதே சமயம் பிற நாட்டினரால் தம் மக்களுக்கு எத்தகைய இடையூறும் ஏற்படாதிருக்க, தக்க படையினையும் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத் தகுந்தது.

# 3. அசோகரின் ஆட்சி முறை

அசோகர் பௌத்த சமயத்தில் சேர்ந்து அதில் மிகுந்த ஈடுபாடு கொண்டு துறவியைப் போன்று வாழ்ந்தபோதிலும் தம்முடைய அரச கடமைகளைச் சிறிதுகூட மறக்கவேயில்லை. இன்னும் சொன்னல், அவர் மற்றெந்த இந்தியப் பேரரசர்களையும் விடத் தம் மக்களை நன்முறையில் ஆட்சி புரிவதில் ஆர்வம் கொண்டிருந்தார். சமயத் துறையில் எவ்வளவு சிறப்புற்றிருந்தாரோ, அந்த அளவிற்கு ஆட்சித் துறையிலும் புகழையடைந்தார்.

அசோகருடைய ஆட்சியைப் பற்றி அறிந்துகொள்ள நமக்குப் பெரிதும் உதவுவன அவருடைய கல்வெட்டுகளே. அவருடைய நிருவாக அமைப்பைப் பற்றி நாம் நன்கு அறிய கௌடில்யரின் அர்த்தசாஸ்திரமும், மெகஸ்தனிசின் இண்டிகாவும் இன்றியமையாதன. அவர் பௌத்த சமயத்தில் சேர்ந்தபின் தம் தர்மக் கோட்பாட்டிற்கேற்ப நிருவாகத்தில் சில முக்கிய மாறுதல்களைச் செய்தார். அவை தவிர, மற்ற விதத்தில் அவருடைய நிருவாக அமைப்பு அவர் முன்னேர்

1 Romila Thapar, op. cit, p. 131

களுடையதைப் போன்றே இருந்திருத்தல் வேண்டும்.[1] இனி, மௌரியர்களின் அரசியலமைப்பு கூட்டாட்சி அமைப்பு (Federal Costitution) என்று சிலர் கூறுவர்.[2] ஆனால், அதற்குச் சான்று கிடையாது. அர்த்தசாஸ்திரமும் அசோகரின் கல்வெட்டு களும் சுய நிர்வாக உரிமை பெற்றிருந்த யவனர்கள், காம்போ ஜர்கள் முதலானவர்களைக் குறிப்பிடுகின்றன. ஆனால், இக்கூட்டத் தினர் அனைவரும் பேரரசின் அரசியல் கட்டுப்பாட்டிற்குட்பட்டே வாழ்ந்தனர்; தனி அரசியல் உரிமைகள் எதையும் அவர்கள் பெற்றிருக்கவில்லை. மேலும், எல்லைப்புறத்தில் அதிகாரிகளாக இருந்த மகாமாத்திரர்கள் இவர்களைக் கண்காணித்து வந்தனர்.

மௌரியர்களின் அரசியலமைப்பு முடியரசேயாகும். அக் காலத்தில் இந்தியாவில் சில குடியரசுகளும் இருந்தன. ஆனால், அவை தம் செல்வாக்கை இழந்து மறைந்து போகும் நிலையில் இருந்தன. முடியாட்சியின் செல்வாக்கு உச்சத்தில் இருந்தது. அர்த்தசாஸ்திரம் முடியாட்சிக்கே பெருமை அளிக்கின்றது. அரச பதவி தெய்வீகமானது என்று கருதப்பட்டது. அசோகர் தம்மைக் கடவுளர் விரும்புபவர் ('தேவாநாம்பியா') என்று அழைத்துக் கொண்டதில் வியப்பொன்றும் இல்லை.

மௌரியர் முடியாட்சி பரம்பரையானது. மன்னர்கள் வரம்பற்ற அதிகாரங்களைப் பெற்றிருந்தனர். அவர்கள் சொல் வதுதான் சட்டம். அவர்கள் எதை வேண்டுமானாலும் செய்ய லாம். அவர்களே நாட்டின் தலையாய நீதிபதிகள். சுருங்கக் கூறின், அவர்களின் அதிகாரங்களுக்குச் சட்டபூர்வமான கட்டுப்பாடுகள் எதுவும் கிடையாது. ஆனால், அவர்கள் மற்ற இந்திய மன்னர்களைப் போல சாஸ்திரங்களைப் பின்பற்றித் தர்மத்தை நிலைநிறுத்த வேண்டும் என்ற பொது நியதி இருந்தது. அதிலுங்கூட, மன்னர்கள் சாஸ்திரத்தை விட நியா யத்தையே கவனிக்க வேண்டுமென கௌடில்யர் கூறுவது நோக்கத்தக்கது. அத்தகைய சூழ்நிலையில் அசோகர் தம் மக்களின் வாழ்க்கை முறையைத் திருத்த விரும்பியது வியப் பிற்குரியதன்று. மௌரியர் அரசியலமைப்பில் மத்திய அர சாங்கத்திற்கே மிகுதியான அதிகாரங்கள் இருந்தன. மாகாண அரசாங்கங்கள் மத்திய அரசாங்கத்தின் விருப்பப்படியே நடந்து வந்தன. இவ்வாறு, மத்திய அரசாங்கத்தில் அதி காரங்கள் குவிந்திருந்தமை மன்னர்களை நிருவாகத்தில் உயிர் நாடியாக்கியது.

[1] Smith, op. cit,, pp. 82&83
[2] V. R. Dikshitar, Mauryan Polity, p. 78

மன்னனுக்கு அதிகாரங்கள் மிகுதியாக இருந்தது போல பொறுப்புகளும் அதிகமாக இருந்தன. அர்த்தசாஸ்திரம் மன்னனின் கடமைகளை நன்கு வலியுறுத்துகின்றது. மன்னன் நாள்தோறும் திட்டமிட்டுப் பணிபுரிய வேண்டுமென்றும் தன்னைக் கண்டு குறையைக் கூற வந்த மக்களைக் காத்திருக்கும் படி செய்யக்கூடாதென்றும், அவர்களின் முறையீட்டைப் பிறரிடம் கூறிச் செல்லும்படி சொல்லிப் பொறுப்பைக் கழிக்கக் கூடாதென்றும், தானே நேரில் முக்கிய அலுவல்களையும் மெலிந்தோரின் குறைகளையும் கவனிக்க வேண்டுமென்றும், அவசரப் பணியை உடனே செய்ய வேண்டுமென்றும், ஒத்திப் போடக் கூடாதென்றும், பணியாற்ற எப்பொழுதும் தயாராக இருக்கவேண்டுமென்றும், எதையும் செவ்வனே செயல்புரிய வேண்டுமென்றும், எல்லோரையும் சமமாகப் பொருட்படுத்த வேண்டுமென்றும் அர்த்தசாஸ்திரம் கூறுகிறது.[1] மேலும், அந் நூல் அரசன் தன் மக்களின் மகிழ்ச்சியையே தன் மகிழ்ச்சியாகக் கருதவேண்டுமென்றும், அவர்களின் நலத்தையே தன்னுடைய நலமெனப் போற்ற வேண்டுமென்றும், தனக்கு விருப்பமானதையே நல்லதெனக் கருதாமல் அவர்களுக்கு விருப்பமானதையே நல்லதெனக் கருதவேண்டுமென்றும் கூறுகிறது.[2] அசோகர் அர்த்தசாஸ்திரத்தைப் பயின்றாரா, இல்லையா என்பது நமக்குத் தெரிய வழி இல்லை. ஆனால், அதில் கூறியுள்ளதைவிட ஒரு படி அதிகமாகவே நடந்து காட்டினார்.

அசோகர் தம்முடைய அரச பதவியைப் பற்றி மிக மேலான எண்ணம் கொண்டிருந்தார். தம் குடிகளுக்குத் தாம் தந்தையைப் போலிருப்பதாகவும் தம்முடைய அதிகாரிகளும் அவ்வாறே தங்களைக் கருதிக் குடிகளின் நலத்திற்காகவும் மகிழ்ச்சிக்காகவும் பாடுபட வேண்டுமென்றும் விரும்பினார். மேலும், அசோகர் தம் குடிகள் எல்லாப் பேறுகளையும் அடைய வேண்டுமென்றும், எல்லாவிதத்திலும் முன்னேற வேண்டுமென்றும் விரும்பினார். இவை பற்றி அவர் கல்வெட்டுகள் கூறுவதாவது :- ''எல்லா மாந்தரும் என்னுடைய குழந்தைகளே.'' ''என்னுடைய குழந்தைகளுக்கு எவ்வாறு இம்மையிலும் மறுமையிலும் எல்லாவித வளங்களும் (பேறுகளும்) மகிழ்ச்சியும் ஏற்படவேண்டுமென விரும்புகின்றேனோ அவ்வாறே எல்லா மாந்தருக்கும் கிட்ட வேண்டுமென விரும்புகின்றேன்.''.....................நீங்கள், இம்மக்கள் என்னி

1 Book I Chap. 19
2 Ibid

டத்தில் நம்பிக்கை கொள்ளும்படி செய்வதுடன், ''அரசன் நமக்குத் தந்தையைப் போல; அவன் எப்படித் தன்னை விரும்புகிருனே அவ்விதமே நம்மையும் விரும்புகிருன், நாம் அரசனுக்கு அவன் குழந்தைகள் போல என்ற உண்மையையும் உணர வைத்தல் வேண்டும்..................அம்மாதிரி செய்வதன் மூலம் நீங்கள் விண்ணுலகை அடைவதுடன் எனக்கும் உங்கள் கடனைக் கழிப்பீர்கள்''.[1]

''என்னுடைய கருத்துக்கள் எதுவாயினும் அவைகளைத் தக்க வழியில் நடைமுறையில் பயனளிக்குமாறு பின்பற்றப் படுவதையே நான் விரும்புகிறேன்.........................நீங்கள் பல்லாயிரக்கணக்கான மக்களின் ஆட்சிப் பொறுப்பினைப் பெற்றிருப்பது நல்லவர்களின் அன்பைப் பெறுதற்கே.............. ''எல்லா மாந்தரும் என் குழந்தைகளே''........................ இருந்தாலும், இவ்வுண்மையின் முழுப் பொருளையும் நீங்கள் உணரவில்லை ........................................................ நிருவாகத்தில் ஒருவன் சிறைப்படுவதோ அல்லது சித்திரவதைக்காளாவதோ நிகழ்கின்றது. காரணமின்றி ஒருவன் அவ்வாறு சிறையில் வைக்கப்பட்டாலும் சித்திரவதைக்காளாகி இறக்க நேரிடினும் அதனுல் வேறுபலர் பெருந்துயரடைகின்றனர். அம்மாதிரி வழக்கில் நீங்கள் முறை வழங்க வேண்டும் ............................................................ இப்பொருளின் அடிப்படையாக இருப்பது விடா முயற்சியும் பொறுமையுமே. நிருவாகத்தில் செயற்படாதிருக்கும் ஒருவன் முன்னேற இயலாது; இருந்தாலும் ஒருவன் முன்னேற முயல வேண்டும், முன்னேற வேண்டும், தொடர்ந்து முன்னேற வேண்டும்....................இவற்றை (அரசனின் கட்டளைகளை) நிறைவேற்ருது இருத்தல் பெருந்துன்பத்தை விளைவிக்கும். (இதில்) தவறுபவன் விண்ணுலகையோ அரசனுதரவையோ பெற இயலாது......................என் கட்டளைகளை நிறைவேற்றுவதன் மூலம் நீங்கள் விண்ணுலகையும் அடையலாம்; என்னுடைய கடனையும் கழிப்பீர்கள்.''[2]

தம்முடைய அதிகாரங்களையும் பொறுப்புகளையும் நன்குணர்ந்த அசோகர் தம் குடிகள் எல்லா விதத்திலும் மேன்மையுற்று மகிழ்ச்சியுடன் இருக்க இடையருது பாடுபட்டார்; தம்முடைய அதிகாரிகளும் அவ்வாறே பாடுபடவேண்டுமென

[1] முதலாவது கலிங்க ஆணை; புதிதாக வெல்லப்பட்ட கலிங்கத்தின் எல்லையிலிருந்து தம் அதிகாரிகளுக்கு விடுக்கப்பட்ட ஆணை.

[2] இரண்டாவது கலிங்க ஆணை.

வற்புறுத்தினர். ஆருவது கற்பாறை ஆணையில், தாம் பணி புரியும் விதம் பற்றிப் பின்வருமாறு கூறுகின்ருர்:-

''இதற்கு முன் நீண்ட காலமாகவே (அரசாங்க) வேலை எல்லா நேரத்திலும் தொடர்ந்து நடைபெறுவதில்லை; (அதே போன்று) செய்திகளும் (அரசாங்கத்திற்கு) வருவதுமில்லை. எனவே, இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறேன். நான் உணவு உட்கொள்ளும் பொழுதும் உவளகத்தில் (அரண்மனையில்) உள்ளறையில் (தனியே) இருக்கும்பொழுதும் சமய போதனை நடக்குமிடத்திலிருந்தாலும் (அரண்மனை) பூங்காவிலிருந்தாலும் — எங்கிருந்தாலும் செய்திகளைத் தெரிவிப்பதற்கென நியமிக்கப்பட்டுள்ளவர்கள் என்னிடம் மக்களைப் பற்றிய தகவல்களைத் தெரிவிக்க வேண்டும்.

எல்லாவிடங்களிலும் நான் மக்களைப் பற்றிய அலுவல் களைக் கவனிக்கின்றேன். மேலும், எதிர்பாராமல் நான் வாய் மொழியாக ஆணையிடுங்கால், அது ஒரு தானத்தைப் பற்றி யிருந்தாலும் அல்லது ஓர் அரசறிக்கையைப் பற்றியிருந்தாலும் அல்லது மகாமாத்திரர்களுக்கு அவசரப் பணி எதையாவது அளித்து, அதுபற்றி அமைச்சர் குழுவில் விவாதமோ வேறு ஆலோசனையோ நடக்குமானலும், சிறிதுகூடக் கால தாமதமின்றி எல்லாவிடத்திலும் எல்லா நேரத்திலும் எனக்கு செய்தி தெரிவிக்கப்படவேண்டும்.

ஏனென்ருல், நான் முயற்சியிலும் பணி புரிவதிலும் எப்பொழுதுமே மனநிறைவற்றே இருக்கின்றேன். எல்லா மக்களின் நலத்திற்காக நான் கட்டாயம் பாடுபடவேண்டும்; அதற்கு அடிப்படையானவை சக்தியும் பணி புரிதலுமே. இவ் வுலகத்தோரின் நலத்திற்காகப் பாடுபடுதலைவிட உயர்ந்த கடமை எதுவுமில்லை. நான் பாடுபடல் எவ்வளவாயினும், அது எதற்கு? உயிரினங்களுக்கு நான் பட்டுள்ள கடமையை முடிக்கவே; அதனல் சிலரையாவது இகவாழ்வில் மகிழ்ச்சி யுடன் வாழவும் பின்னர் (இறந்த பின் அவர்கள்) விண்ணுலகு அடையவும் செய்கிறேன்.'' இதைவிட, ஒரு மன்னனிடம் மக்கள் எதை எதிர்பார்க்க முடியும்? அல்லது மன்னனே மக்களுக்கு எதைச் செய்யக் கூடும்?

அசோகர் தம்முடைய அதிகாரிகளும் தம்மைப் போலவே பணிபுரிய வேண்டுமென விரும்பினர் என்பதை அவர் கல் வெட்டுகள் நன்கு உணர்த்துகின்றன. முதலாவது கற்றூண்

ஆணை அது பற்றிக் கூறுவதாவது : ''என்னுடைய பிரதிநிதிகளும் — அவர்கள் பெருந் தரத்தினராயினும், சிறு தரத்தினராயினும், அல்லது நடுத் தரத்தினராயினும் — என்னுடைய போதனைப்படி ஒழுகுகின்றனர்; பிறரையும் அவ்வாறே நடத்திச் செல்லுகின்றனர் — உறுதியிலா மக்களை நல்வழியில் நடத்திச் செல்லுதல் வேண்டும். அதே போன்று எல்லைப்புற மகாமாத்திரர்களும்'' (நடக்கின்றனர்). அதே செய்தியைப் பற்றி நான்காவது கற்றூண் ஆணை மேற்கொண்டு கூறுவதாவது: ''பல்லாயிரக்கணக்கான மக்களை ஆட்சி செய்வதற்காக அமர்த்தப்பட்டுள்ள எனது இராஜுகர்கள் (மாகாணத் தலைவர்கள்) தங்கள் கடமைகளை அச்சமின்றியும் நம்பிக்கையுடனும் நிறைவேற்றவும், மக்களுக்கு நலத்தையும் மகிழ்ச்சியையும் அளிப்பதுடன் (பிற) உதவிகள் புரியவும், அவர்களுக்கு (இராஜுகர்களுக்குத்) தீர்ப்பளிப்பதிலும் தண்டனைகள் வழங்குவதிலும் உரிமை (அல்லது சுதந்திரம்) வழங்கியுள்ளேன்.

அவர்கள் (இராஜுகர்கள்) (மக்களின்) இன்ப துன்பங்களின் காரணங்களைக் கண்டறிந்து, தர்மத்தில் ஈடுபாடுடையவர்களுடன் நாட்டு மக்களுக்கு அறவுரை புகட்டுவார்கள். அதனால் மக்கள் இம்மையிலும் மறுமையிலும் வேண்டியதை அடையலாம் ........................................................................எப்படி ஒருவன் தனது குழந்தையைத் திறமை மிக்க (அல்லது அநுபவமுள்ள) செவிலியிடம் ஒப்படைத்துவிட்டு, அவள் அக்குழந்தையை மகிழ்ச்சியுடன்இருக்கப் பார்த்துக்கொள்வாள் என்று நம்பிக்கையுடன் இருக்கின்றானோ, அவ்விதமே எனது இராஜுகர்களும் நாட்டு மக்களின் நலத்திற்காகவும் மகிழ்ச்சிக்காகவுமே என்னால் அமர்த்தப்பட்டுள்ளனர்.''

நிருவாகத்தில் அரசனுக்கு உதவிபுரிய அமைச்சர் குழு (Ministerial Council) இருந்தது. அமைச்சர் குழுவின் முக்கியத்துவம், அது பணி புரியும் விதம், அமைச்சர்களைத் தேர்ந்தெடுத்தல், அவர்கள் பணிபுரிதலைக் கண்காணித்தல், ஒற்றர் மூலம் அவர்களின் நேர்மையை அறிதல் முதலியன பற்றி அர்த்த சாஸ்திரம் விரிவாகக் கூறுகின்றது.[1] அசோகர் தமது அமைச்சர் குழுவினை மூன்றாவது ஆறாவது கற்பாறை ஆணைகளில் குறிப்பிட்டுள்ளார்.[2] பொதுவாக, மௌரியர் அமைச்சர் குழுவின் உறுப்

[1] Book I Chapters VII to X & XV

[2] பரிஷத் என்று அக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது, இது மந்திரி பரிஷத் அல்லது அமைச்சர் குழுவேயாகும்.

பினர்களுக்கு எண் வரம்பு கிடையாது. தேவைக்கேற்பக் கூடுதலாகவும் குறைவாகவும் அவர்கள் இருந்தனர். அதே போன்று அமைச்சர்களுக்கெனத் தனி அதிகாரங்களும் கிடையா. அரசன் விரும்பினுல் அமைச்சர் குழுவின் உறுப்பினர்கள் அனைவரையுமாவது அல்லது சிலரையாவது அல்லது ஓரிருவரையாவது எது பற்றியும் கலந்து ஆலோசிக்கலாம்; அதே போன்று, அவர்களே முடிவு எடுக்கும்படி எதையும் அவர்களிடம் ஒப்படைக்கலாம். இருந்தாலும், எதிலும் எப்படியும் முடிவு செய்வதற்கு அரசன் அதிகாரங்களைக் கொண்டிருந்தான். அர்த்த சாஸ்திரத்தில், புரோகிதருக்கும் பிரதம மந்திரிக்கும் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. ஆனுல், அசோகருடைய கல்வெட்டுகள் எவற்றிலும் இவர்கள் குறிப்பிடப்படவில்லை. அவர் காலத்தில் பிரதம மந்திரியின் நிலையில் மாற்றம் எதுவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஆனுல், புரோகிதர்கள் தங்கள் செல்வாக்கினை இழந்திருத்தல் வேண்டும்.

நிற்க, அரசனுடனும் அமைச்சர் குழுவுடனும் நேரடித் தொடர்பு கொண்டு நிருவாகத்தில் பலவகையான பணிகளைப் புரிந்து வந்த மகாமாத்திரர்கள் எனப்படும் உயர் அதிகாரிகள் பலவிடங்களில் இருந்து வந்தனர். அரசன் அவர்களுக்கு நேரடியாகப் பணியிடுவதும் உண்டு என்பது ஆருவது கற்பாறை ஆணையிலிருந்து நன்கு புலப்படுகின்றது. கி. மு. 256-ல் அசோகர் தர்மமகாமாத்திரர்களை நியமித்தார். அதற்குமுன் அத்தகைய அதிகாரிகள் இல்லை என்பதை அவர் கல்வெட்டு கூறுகின்றது (ஐந்தாவது கற்பாறை ஆணை). இவர்களுடைய முக்கிய பணி அசோகரின் தர்மத்தைப் போதிப்பதும் முறை வழங்குவதில் தண்டனைகளை மறு பரிசீலனை செய்வதும் ஆகும். மகாமாத்திரர்களில் பல வகையினர் இருந்ததையும் அவர்களின் பணிகளையும் பிறகு காண்போம்.

மகாமாத்திரர்கள், தர்மமகாமாத்திரர்கள் தவிர, புருஷர்கள் (புலுசானி) எனப்படும் அரசனுடைய பிரதிநிதிகள் அரசனுக்கு நிருவாகத்தில் பலவிதத்திலும் உதவி புரிந்து வந்தனர். இவர்கள் இக்காலப் பொது நல உறவு அதிகாரிகளைப் (Public Relation officers) போன்றவர்கள். இவர்களில் மூவகை உண்டு என்பது முதலாவது கற்றூண் ஆணையால் அறியப்படுகின்றது. இவர்கள் அரசனின் கொள்கைகளையும் ஆணைகளையும் மக்களுக்கும் பிற அலுவலர்களுக்கும் விளக்கியதுடன் மக்களின் கருத்தையும் அரசனுக்குத் தெரிவித்து வந்தனர். உயர் பிரிவைச் சேர்ந்த

பிரதிநிதிகள் தவறிழைக்கும் உயர் அதிகாரிகளைத் திருத்தும் உரிமை பெற்றிருந்தனர் என்பது நான்காவது கற்றூண் ஆணையால் புலப்படுகின்றது.

மற்றும், பிரதி வேதகர்கள் (பதி வேதகர்கள்) எனப்படும் அதிகாரிகளும் அரசனுடன் நேரடித் தொடர்பு கொண்டிருந்தனர். இவர்களின் பணி, நாட்டில் எல்லா இடங்களிலும் செய்திகளைச் சேகரிப்பதும் அவற்றைச் சிறிதுகூடக் கால தாமதம் இல்லாமல் உடனுக்குடன் அரசனுக்கு அனுப்பி வைப்பதும் ஆகும். அமைச்சர் குழுவின் முடிவைக்கூட அவ்விதமே இவர்கள் அரசனுக்கு அறிவித்து வந்தனர். அரசன் எங்கிருந்தாலும், எந்த நேரத்திலும் இவர்கள் தங்கள் பணியைச் செய்ய வேண்டும். இது அசோகரின் கட்டளை. இவர்களுக்கும் ஒற்றர்களுக்கும் வேறுபாடு உண்டு. இவர்களை மக்கள் அறிய முடியும்; ஆனால், ஒற்றர்களை அவ்விதம் அறிய இயலாது. இத்தகைய அதிகாரிகள் பண்டைய பாரசீகப் பேரரசில் இருந்தனர் என்பது ஈண்டு கவனிக்கத் தக்கது.[1]

பேரரசின் அலுவல்களைக் கவனிக்க மத்திய அரசாங்கத்தில் பல துறைகள் (Departments) இருந்தன.[2] பொன், பொற்கொல்லர்கள், கிடங்குகள், வாணிகம், காடுகளிலிருந்து கிடைக்கக் கூடியவை, ஆயுதங்கள், நிறுத்தலளவு, நீட்டலளவு, சுங்கம், நெசவு, உழவுத் தொழில், மது, கால்நடைகள்வெட்டுமிடம், கணிகைகள் (பொது மாதர்), கப்பல்கள், பசுக்கள், குதிரைகள், யானைகள், இரதங்கள், காலாட்படை, பயண அனுமதி, நகர நிருவாகம் முதலியவற்றைக் கவனிக்கத் தனித்தனி துறைகள் இருந்ததாக அர்த்த சாஸ்திரத்திலிருந்து தெரிகிறது. இத் துறைகளின் தலைவர்கள் அத்தியட்சகர்கள் (Superitendents) என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் கண்காணிப்பவர்களே ஆவர். இவர்களுக்கு உதவியாகச் சில குழுக்களும் (Committees) உதவி அதிகாரிகளும் இருந்தனர்.[3]

மற்றும், அரசாங்க வருவாய், செலவு, சேமிப்பு, பொது மராமத்துப் பணிகள், செய்திப் போக்கு வரவு முதலியவற்றைக் கவனிக்கத் தனி உயர் அதிகாரிகள் இருந்தனர். அரசாங்கத்திற்கு வருமானம் பயிர் நிலம், மேய்ச்சல் நிலம், காடுகள்,

1 **Romila Thapar op. cit., p. 110.**

2 அர்த்த சாஸ்திரத்தில் ஒரு பகுதி முழுதும் இவற்றைப்பற்றியே உள்ளது. **(Book II)**

3 **Romila Thapar, op. cit., p. 100.**

சுரங்கங்கள், நகரங்கள், ஏற்றுமதி இறக்குமதி வரிகள், உள் நாட்டுச் சுங்கம், தண்டத் தொகை, தனி வரிகள், மற்றும் தொழிலாளர், கலைஞர், வணிகர், சூதாடுவோர், கணிகைகள், பயணம் செய்வோர் முதலியோருக்கான அனுமதிக் கட்டணம் முதலியவற்றிலிருந்து கிடைத்து வந்தது. நில வரி, பாசன வசதிக்கேற்ப, விளைவில் நான்கில் ஒரு பகுதி அல்லது மூன்றில் ஒரு பகுதி வசூலிக்கப்பட்டது. முக்கிய செலவினங்கள்: அரசன், அரச குடும்பத்தினர், அரசாங்கத்தில் பணிபுரிவோரின் ஊதியம், கட்டடங்கள் கட்டுதல், சாலைகளைப் பராமரித்தல், கிணறுகள் வெட்டல், சத்திரங்களை அமைத்தல், பாசன வசதிகளைச்செய்தல், படையைப் பராமரித்தல், சமயப் பணிக்காகும் செலவு முதலியனவாம். அசோகர் பௌத்த சங்கத்திற்கு அளித்த தானம் பிற மதத்தினரிடையேயும் அரசாங்க ஊழியரிடையேயும் குறையை ஏற்படுத்தியிருக்கக் கூடுமென ரோமிலாதாபர் கருதுகின்றார்.[1]

வரி வசூல் அனைத்தையும் கவனிக்க வருவாய் மேலதிகாரி (Collector-General) ஒருவர் இருந்தார். அவர் வருமானத்தையும் செலவுகளையும் மேற்பார்வையிட்டும் ஒழுங்குபடுத்தியும் வந்ததுடன் அரசாங்கத் தலைமைக் கணக்கர் அளிக்கும் கணக்குகளையும் மேற்பார்வையிட்டார். தலைமை கணக்கருக்கு உதவிபுரியப் பல அலுவலர்கள் (கார்ணிகர்கள்) இருந்தனர். அரசாங்கக் கணக்குகள் தக்க முறையில் தணிக்கை செய்யப்பட்டு வந்தன. வருவாய் மேலதிகாரியின் கீழ் குடிக் கணக்கு எடுப்போர் நிரந்தரமாய்ப் பணிபுரிந்து வந்தனர். அரசாங்க வருவாயைக் காப்பாக வைத்திருப்பதும் பட்டுவாடா செய்வதும் கருவூல மேலதிகாரியின் (Treasurer-General) பொறுப்பாகும். அரசாங்கப் பணத்தை மோசடி செய்வோர் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர்.

மௌரியர்களின் படை மிகப் பெரியது என்பது மேல் நாட்டினரின் குறிப்புகளிலிருந்து அறியப்படுகின்றது.[2] போரை விட்டு விட்டுப் பௌத்த சமயத்தைத் தழுவிய பிறகும் அசோகர் தம் முன்னோர்களைப் போன்று பெரும் படையை வைத்திருந்தார். தம் படையைக் கலைத்ததாக எங்கும் குறிப்பிடவில்லை. அப்படிச் செய்திருந்தால் கட்டாயம் அதனைத் தம் கல்வெட்டுகளில் குறிப்பிட்டிருப்பார். அரசின் ஆறு அங்கங்களில் ஒன்றான படை இல்லாமல் ஆட்சி இல்லை என்பதை அசோகர் உணர்ந்தது

1 ibid p. 100.
2 ibid p. 119.

போற்றற்குரியது. மௌரியரின் படை நிர்வாகத்தைப் பற்றிக் கௌடில்யரும் மெகஸ்தனிசும் தங்கள் நூல்களில் விரிவாகக் கூறியுள்ளனர். ஆனால், ஒருவர் கூறுவது இன்னொருவர் நூலில் இல்லை. சான்றாகப் படைத் தளபதியைப் பற்றிக் கௌடில்யர் கூறுவது மெகஸ்தனிசின் நூலில் காணப்படவில்லை. அதே போன்று மெகஸ்தனிஸ் கூறும் படை நிருவாகப் பெருங்குழுவைப் பற்றிய செய்தி அர்த்த சாஸ்திரத்தில் இல்லை.

படை நிருவாகம் பற்றி மெகஸ்தனிஸ் கூறுவதாவது: 30 பேரைக் கொண்ட ஒரு பெருங்குழு எல்லாவற்றிற்கும் பொறுப்பாக இருந்தது. அப்பெருங்குழு ஐந்து உறுப்பினரைக் கொண்ட ஆறு சிறு குழுக்களாகப் பிரிந்து அவற்றில் ஐந்து காலாட்படை, குதிரைப் படை, யானைப் படை, தேர்ப் படை, கப்பற் படை, முதலியவற்றையும், மற்றது போர் வீரர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள், வாகனங்கள், தளவாடங்கள் முதலியவற்றையும் தனித்தனியே கவனித்து வந்தன. அரசாங்கமே படைக்கு வேண்டிய ஆயுதங்களைத் தயாரித்தது. போர்க் காலம் தவிர மற்ற நேரத்தில் போர் வீரர்களின் ஆயுதங்கள் படை அலுவலகத்தில்தான் இருக்க வேண்டும். போர் வீரர்களுக்குச் சம்பளம் அளிக்கப்பட்டதேயன்றி நிலமான்யம் கிடையாது.

பேரரசு பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவற்றில் தொலைவிலுள்ள மாகாணங்கள் அரசப் பிரதிநிதிகளின் கீழ் இருந்தன.[1] அவ்வரசப் பிரதிநிதிகள் பெரும்பாலும் அரச குமாரர்களாகவோ (குமாரர்கள்) அல்லது அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவோ (ஆரிய புத்திரர்கள்) இருந்தனர். அசோகருடைய கல்வெட்டுகள் நான்கு அரசப் பிரதிநிதிகளின் மாகாணங்களைக் குறிப்பிடுகின்றன. அவையாவன: 1. தட்சசீலத்தைத் தலைநகராகக் கொண்ட வட மாகாணம், 2. உச்சயினியைத் தலைநகரமாகக் கொண்ட மேற்கு மாகாணம், 3. தொசாலீயைத் தலைநகராகக் கொண்ட கிழக்கு மாகாணம், 4. சுவர்ணகிரியைத் தலைநகராகக் கொண்ட தென் மாகாணம் ஆகியவை. அசோகர் பட்டத்திற்கு வரும்முன் தட்சீலத்திலும் உச்சயினியிலும் அரசப் பிரதிநிதியாக இருந்தார் என்பதையும், அவர் தமையன் சுசீமன் கொஞ்ச காலம் தட்சீலத்தில் அரச பிரதிநிதியாக இருந்தான் என்பதையும், அசோகரின் மகன் குணாளன் அதே இடத்தில் தன் தந்தையின் காலத்தில் அரசப் பிரதிநிதியாக இருந்தான் என்பதையும் முன்பே பார்த்தோம். அரச குடும்பத்

[1] R. K. Mookerji. op. Cit., p. 51.

தைச் சேராத, துஷாஸ்பா என்ற கிரேக்கன் ஒருவன் அசோகர் காலத்தில் மேற்கு இந்தியாவில் கிர்நார் (Girnar) பகுதியில் அரசப் பிரதிநிதியாக இருந்தான் என்றும் அறிகிறோம். அரச குமாரர்கள் மாகாணத் தலைவராக இருந்ததில் நன்மையும் இருந்தது; தீமையும் இருந்தது. அரச பிரதிநிதியாய் இருந்த வாய்ப்பில் அவர்கள் அரிய நிருவாக அநுபவத்தைப் பெற்றனர்; ஆற்றலையும் வளர்த்துக் கொண்டனர். அதே சமயம் அவர்கள் அரசனுக்கெதிராக மாறக் கூடிய வாய்ப்பும் இருந்தது. மேலும், அதிகாரத்தை அநுபவித்தவர்கள் பலர் அரியணைக்காகத் தங்கள் உடன் பிறந்தோரிடம் போட்டியிட்டனர்; போர் செய்தனர்; உடன் பிறந்தோரைக் கொல்லவும் வழி செய்தார்கள். அசோகர் பட்டத்திற்கு வந்ததே அத்தகைய சூழ்நிலையில்தான். பிற்காலத்தில் முகலாயப் பேரரசில் இது சர்வசாதாரணமாக இருந்தது.

நிற்க, அசோகருடைய ஆட்சியில் இருந்த ஆப்கானிய மாகாணம் அவருடைய கல்வெட்டுகளில் குறிப்பிடப்படவில்லை. ஆனால், ஆப்கானிஸ்தானத்தில் காண்டகார் அருகே அவருடைய கல்வெட்டு ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.[1] பேரரசின் மத்திய மாகாணத்தைப் பற்றியும் செய்திகள் இல்லை. அதன் தலைவர்கள் (கவர்னர்கள்) அரசரின் நேரடிக் கட்டுப்பாட்டிற் குட்பட்டு இருந்தனர் போலும்.

இனி, அரசப் பிரதிநிதிகள் மாகாண ஆட்சியில் முழு அதிகாரத்தையும் பெற்றிருந்ததாகக் கூற முடியாது. மாகாண அமைச்சர்களும் (மகாமாத்திரர்கள்) அதிகாரிகளும் அரசரிடம் நேர் தொடர்பு கொண்டிருந்தனர் என்பது கல்வெட்டுச் சான்றிலும் பிற சான்றுகளாலும் அறியப்படுகின்றது.[2] இலாஜுவாசநிகர்கள் என்போர் அரசனிடமிருந்து நேராகச் செய்திகளைப் பெறும் மகாமாத்திரர்கள் என்று R. K. முகர்ஜி கருதுகின்றார்.[3]

நிற்க, இராஜுகர்கள் என்போர் சாதாரண மாகாணத் தலைவர்கள். இவர்களைப் பற்றி அசோகருடைய கல்வெட்டுகளில் சில செய்திகள் உள்ளன. இவர்கள் பல்லாயிரக்கணக்கான மக்களின் ஆட்சிப் பொறுப்பைப் பெற்றிருந்தனர். அரசர்

[1] கல்வெட்டுப் பகுதியைப் பார்க்க.

[2] முதலாவது சிறிய கற்பாறை ஆணை, கலிங்க ஆணைகள்; அசோகாவதானத்தில் கூறப்பட்டுள்ள குணாளன் கதை ஆகியவை இக்கருத்தை வலியுறுத்துகின்றன.

[3] op. Cit., p. 52.

இவர்களுக்கு விடுத்த ஆணையில், இவர்கள் குடிகளின் இன்ப துன்பங்களுக்கான காரணங்களை அறிந்து அவர்களின் நலத்திற்காகவும் மகிழ்ச்சிக்காகவும் பாடுபட வேண்டுமென்றும், அச்சமின்றியும் நம்பிக்கையுடனும் தங்கள் பணியைச் செய்யும் பொருட்டு முறை வழங்குவதில் இவர்களுக்குத் தாம் முழு அதிகாரம் அளித்திருப்பதாகவும், ஒரு செவிலி தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட குழந்தையைக் கண்ணும் கருத்துமாய் பார்த்துக் கொள்வது போன்று இவர்களும் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட குடிகளைப் பேணிக் காத்தல் வேண்டுமென்றும் கூறுகிறார்.[1] V. A. ஸ்மித்தும் R. K. முகர்ஜியும் இராஜுகர்கள் மாகாணத் தலைவர்கள் (கவர்னர்கள்) என்றே கருதுகின்றனர். ஆனால், D. R. பண்டார்க்காரும், ரோமிலாதாபரும் இராஜுகர்கள் நாட்டுப் புறத்து வருவாய் (ரெவின்யூ) அதிகாரிகளென்றும் அசோகர் ஆட்சியின் இறுதிக் காலத்தில் முறை வழங்கும் அதிகாரத்தினைப் பெற்றிருந்தனரென்றும், பிரதேசிகர்களுக்குக் கீழ்ப் பட்டவர்களென்றும் கூறுகின்றனர். மேலும், இராஜுகா என்ற பெயர் 'இரஜ்ஜுகாஹகா' (நிலமளக்கும் அதிகாரி) என்பதிலிருந்து வந்தது என்றும் அது (பௌத்த) ஜாதகக் கதைகளில் காணப்படுகிறதென்றும் அவ்வறிஞர்கள் கூறுகின்றனர் ஆனால், V. A. ஸ்மித் 'ராஜுகா' என்ற பெயர் இராஜா என்பதிலிருந்து தோன்றியதாகக் கருதுகிறார். மேலும், இராஜுகர்கள் எளிய நாட்டுப்புற வருவாய் அல்லது முறை வழங்கும் அதிகாரிகளென்றால் அவர்களுக்கெனத் தனியாக அசோகர் நல்லாட்சியைப் பற்றி அறிவுரை கூறவேண்டிய அவசியமென்ன? அவர்களுக்கு மேலும் கீழும் பல அதிகாரிகள் இருந்தனர். ஆனால், அவர்களுக்குத் தனியாக அத்தகைய அறிவுரை கூறவில்லையே? இராஜுகர்களைப் பல்லாயிரக்கணக்கான மக்களின் ஆட்சிப் பொறுப்பினைக் கொண்டுள்ளதாகக் கூறக் காரணமென்ன? இராஜுகர்களுக்கு மேற்பட்டவர்கள் என்று அவ்வறிஞர்கள் கருதும் பிரதேசிகர்களை அசோகர் அவ்வாறு கூறவில்லையே? செவிலியிடம் குழந்தையை ஒப்படைத்த தந்தையைப் போலத் தம் மக்களை இராஜுகர்களிடம் தாம் ஒப்படைத்திருப்பதாக அசோகர் கூறுவதன் பொருள் என்ன? பிரதேசிகர்களைப் பற்றி அவர் அவ்வாறு கூறவில்லையே, ஏன்? மேலும், இராஜுகர்கள் மக்களின் இன்ப துன்பங்களுக்கான காரணங்களை அறிந்து மக்களின் நலத்திற்காகவும் மகிழ்ச்சிக்காகவும் பாடுபட வேண்டுமெனக் கூறுவதுபோல் பிரதேசிகர்களைப் பற்றி அசோகர்

[1] நான்காவது கற்பாறை ஆணை.

[2] Smith op. Cit., p. 203. R. K. Mookerji op. Cit., p. 53 D. R. Bhandarkar op. Cit., pp. 56 & 57; Romila Thapar op. Cit.pp. 106-108.

கூறாதது ஏன்?[1] தவிர, இராஜுகர்கள் எளிய அதிகாரிகளாக இருந்திருந்தால் அசோகர் அவர்களுக்கு முறை வழங்கும் பணியில் சுதந்திரம் அளித்திருப்பாரா? அளித்திருக்கமாட்டார். அப்படி அளிப்பதும் நல்லாட்சிக்கு ஏற்றதன்று.

நிற்க, அசோகர் தமது மூன்றாவது கற்பாறை ஆணையில், இராஜுகரை, யுக்தர்களுக்கும் பிரதேசிகருக்கும் இடையே குறிப்பிட்டிருப்பதை எடுத்துக் காட்டி இராஜுகர்கள் பிரதேசிகர்களுக்கு அடுத்த நிலையில் இருந்ததாக ரோமிலா தாபர் கூறுகிறார்.[2] ஆனால், அச்சான்று போதுமானது என்று கருதுவதற்கில்லை.

அசோகர் தம் ஆட்சியின் இருபத்தேழாம் ஆண்டு இராஜுகர்களுக்குத் தீர்ப்பளிப்பதிலும் தண்டனை வழங்குவதிலும் சுதந்திரம் அளித்திருப்பதாக அவருடைய நான்காவது கற்றூண் ஆணை கூறுகின்றது. மேலும், அதே ஆணை மரண தண்டனையை மறுபரிசீலனை செய்ய இராஜுகர்களுக்கு உரிமை அளித்திருப்பதையும் கூறுகின்றது. இவற்றை ஆராயுமிடத்து அதற்கு முன் முறைவழங்குவதில் இராஜுகர்களின் அதிகாரம் ஒரு வரம்புக்குட்பட்டிருந்தது என்பதும், அவ் வரம்பினை அசோகர் தம் 27ஆம் ஆண்டில் நீக்கி விட்டார் என்பதும் விளங்குகின்றது. மேலும், மரண தண்டனையை இராஜுகர்கள் மறு பரிசீலனை செய்யலாம் என்பதிலிருந்து அவர்கள் எளிய அதிகாரிகள் அல்லர் என்பதில் மாகாணத் தலைவர்களாய் இருந்திருக்கவேண்டுமென்பதும் நன்கு புலனாகின்றன. எனவே, மேற்கூறியவற்றை நோக்க தாபரின் கருத்து பொருத்தமற்றது என்பது எளிதில் விளங்கும்.

இனி, அசோகர் தம் மூன்றாவது கற்பாறை ஆணையில் யுக்தர்கள், இராஜுகர்கள், பிரதேசிகர்கள் முதலானோர் ஐந்தாண்டிற்கொரு முறை, ஒருவரையடுத்து ஒருவர், தர்மத்தைப் பரப்புவதற்கும் பிற அலுவல் காரணமாகவும் மாறிச் செல்லுதல் (transfer) வேண்டும் என்று கூறுகிறார். ஜெயஸ்வாலும், V. A. ஸ்மித்தும் ஐந்தாண்டிற்கொரு முறை ஒருவரையடுத்து ஒருவர் மாறிச் செல்லுதல் என்பதை அலுவலர் மாற்றம் (transfer of officials) என்று கூறுகின்றனர்.[3] இதுவே பொருத்தமான விளக்கம் என்பது இரண்டாவது கலிங்க ஆணையை ஆழ்ந்து நோக்கின் புலனாகும். ஆனால், இதனை அலுவல்

[1] நான்காவது கற்றூண் ஆணையை ஆராய்க.
[2] op Cit , p. 106.
[3] Smith, op. Cit., p. 164.

பயணம் (official tour) என்று D. R. பண்டார்க்கார், R. K. முகர்ஜி, ரோமிலா தாபர் முதலியோர் விளக்கம் கூறுகின்றனர்.[1] ஐந்தாண்டிற்கு ஒரு முறைதான், அதுவும் இத்தகைய அதிகாரிகள் தங்கள் பகுதியில் அலுவல் பயணம் செய்யலாம் என்பது சிறிதும் நம்பக் கூடியதாகவோ, பொருத்தமாகவோ தோன்றவில்லை. அதிகாரிகள் எப்பொழுதும் பணியாற்ற வேண்டும் என்று எண்ணிய அசோகர் அவர்களின் அலுவல் பயணத்தை இந்த அளவிற்கு மட்டுப்படுத்துவாரா? மேலும், அதிகாரிகள் மக்களிடையே தர்மத்தை வளர்க்க வேண்டுமென விரும்பிய அசோகர் அவர்களை ஐந்தாண்டிற்கு ஒரு முறைதான் பயணம் செய்யலாம் என்று கூறுவாரா? உண்மை யாதெனில், ஐந்தாண்டிற்கு ஒரு முறை அதிகாரிகள் இடமாற்றம் செய்யப் பட்டார்கள். இர்ண்டாவது கலிங்க ஆணையின் சான்று இதனை வலியுறுத்துகின்றது.[2] மூன்றாண்டிற்கு ஒரு முறை அதிகாரிகளை மாற்றுவதும் இருந்தது என்பது கலிங்க ஆணையால் அறியப் படுகின்றது.[3]

பிரதேசிகர்கள் மாவட்ட அதிகாரிகள் ஆவர். இவர் களுடைய பணி தங்கள் மாவட்டங்களில் வரி வசூலை மேற் பார்வையிடுதலும், நகரங்களிலும் நாட்டுப் புறங்களிலும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைபெறச் செய்வதுமாம்.[4] மேலும், இவர்களுக்கு முறை வழங்கும் பணியும் இருந்ததெனத் தெரிகின்றது.[5] தவிர அர்த்த சாஸ்திரத்தில் குறிப்பிட்டுள்ள பிரதெஷ்டிரிகர்களும் இவர்களும் ஒன்றே எனக் கருதப்படுவதால்[6] இவர்களின் தகுதியும் ஊதியமும் உயர்ந்ததாகவே இருக்க வேண்டும். பேராசிரியர் சத்தியநாதய்யர் இராஜுகர்களும் மகாமாத்திரர்கள் என்று பொதுவாக அழைக்கப்பட்டிருக்கலாம் என்று கருதுகின்றார்.[7] 'பிரதேசிக மகாமாத்திரர்கள்' என்ற பெயர் இக்கருத்தை வலியுறுத்துகின்றது.[8]

[1] கல்வெட்டு அதிகாரத்தைக் காண்க.

[2] கலிங்க ஆணையின் கடைப்பகுதியைப் பார்க்க.

[3] Vide, Smith, op. Cit., p. 164.

[4] *Ibid* op. Cit., p. 164; Romaila Thapar op. Cit , p. 106.

[5] D. R. Bhandarkar op. Cit., p. 54; Romila Thapar op. Cit., p. 106.

[6] *Ibid*.

[7] *Ibid.*, p. 117.

[8] See R. K. Mookerji, op. Cit., p. 53.

நிற்க, மகாமாத்திரர்களைப் பற்றி முன்பே குறிப்பிட்டோம். அவர்கள் இக்காலத்திய இந்திய நிருவாகப் பணித்துறை அதிகாரிகளைப் (I.A.S. officers) போன்றவர்கள். மௌரியர் ஆட்சியில் இவர்கள் தொடக்கத்திலிருந்தே பணி புரிந்து வந்தனர் என்பது அர்த்த சாஸ்திரத்தால் அறியப்படுகின்றது. பெருந்தர அதிகாரிகளான இவர்கள் அசோகர் காலத்தில் பல வித பணிகளைப் புரிந்தனர் என்பது அவரது கல்வெட்டுகளால் அறிகிறோம். அந்த மகாமாத்திரர்கள் என்போர் நாட்டின் எல்லைப் புறத்தில் வாழ்ந்த, குறிப்பாக நாகரிகமற்ற மக்களை நிருவாகம் செய்தோர் ஆவர். அவர்களின் பணி அம் மக்களிடையே தர்மத்தைப் பரப்புதலும், அவர்கள் அரசரிடம் நம்பிக்கை கொண்டு அடங்கி வாழும்படி செய்தலுமாம். 'இதிஜக' மகா மாத்திரர்கள் உவளகப் பெண்டிரின் அலுவல்களைக் கவனித்து வந்த உயர் அதிகாரிகள். இவர்கள் பெண்டிர் பற்றிய பிற துறைகளில் பணியாற்றியதால் 'ஸ்திரி அத்தியட்சக' மகாமாத்திரர்கள் என்றும் அழைக்கப்பட்டனர்.[1] தர்ம மகாமாத்திரர்கள் தர்மத்தைப் பரப்புவதற்காக அசோகரால் நியமிக்கப்பட்டவர்கள். இவர்கள் அப் பணியுடன் முறை வழங்குவதிலும் பங்கு கொண்டனர். குற்றவாளிகளின் முதுமை, குடும்ப நிலை, குற்றம் செய்ததற்கான நோக்கம், குற்றம் செய்வதற்கு மற்றவர்களின் தூண்டுதல் முதலியவற்றை நன்கு கவனித்துக் குற்றங்களின் தண்டனைகளைக் குறைக்கும் அதிகாரங்களைப் பெற்றிருந்தனர் என்பது ஐந்தாவது கற்பாறை ஆணையால் அறியப்படுகின்றது. வேறு பல பணிகளையும் இவர்கள் புரிந்து வந்தனர் என்பதை அதே கல்வெட்டால் அறிகிறோம். நகரங்களில் முறை வழங்கி வந்த மகாமாத்திரர்கள் ஒரு வகையினர். இவர்கள் நகர விவகார மகாமாத்திரர்கள் என்று அழைக்கப்பட்டனர்.[2] மகா மாத்திரர்களைப் பௌத்த சங்கத்தின் அலுவல்களைக் கவனிக்கவும் அசோகர் பயன்படுத்தியது சாஞ்சி ஆணையிலிருந்து தெரிகிறது.

யுக்தர்கள் எனப்படுவோர் உதவி அலுவலாளர்கள் (Sudordinate officials). இவர்கள் இராஜுகர்கள், பிரதேசிகர்கள் முதலியவர்களின் கீழ்ப் பணிபுரிந்தவர்கள். மத்திய அரசாங்கத்திற்குப் பல விடங்களிலிருந்தும் நிருவாகம் பற்றிய செய்திகளை யுக்தர்கள் அனுப்பி வந்தனர். மேலும், இவர்கள் மத்திய அரசாங்கத்தில் கணக்குத் துறையில் பணியாற்றி வந்தனர்; அமைச்சர் குழுவின் கட்டளைகளை நிறைவேற்றுவதிலும் உதவி புரிந்து

[1] R. K. Mookerji, op. cit., p. 56.

[2] ibid p. 120 Fn 2.

வந்தனர்.[1] நிற்க, யுக்தர்கள் மாவட்ட அதிகாரிகளென்றும் அவர்கள் அரசனுடைய சொத்தைக் கவனித்து வந்தவர்களென்றும் D. R. பண்டார்க்கர் கூறுகின்றார்.[2] ஆனால், அசோகருடைய கல்வெட்டுகளில் அத்தகைய செய்தி கிடையாது. அர்த்த சாஸ்திரத்தில் யுக்தர்களும் உபயுக்தர்களும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பிரதேசிகர்களுக்கு அடுத்த நிலையில் இருந்த அதிகாரிகள் ஸ்தானிகர்களும் கோபர்களும் ஆவர். இவர்கள் வட்டார அதிகாரிகள். கோபன் (Gopa) என்பவன் பல கிராமங்களை மேற்பார்வையிட்டு வந்தான். தன் எல்லைக்குட்பட்ட கிராமங்களில் வாழும் மக்களைப் பற்றிய செய்திகள் அனைத்தையும் அவன் அறிந்திருத்தல் வேண்டும். ஸ்தானிகன் (Sthanika) என்பவன் வரி வசூலை மேற்பார்வையிட்டு வந்தவன்; பிரதேசிகரின் நேரடிக் கட்டுப்பாட்டிற்குட்பட்டிருந்தவன். அவனது அதிகார வரம்பு கோபர்களுடைய அதிகார வரம்பைவிட அதிகமெனவும் கருதப்படுகிறது. கிராமம் கிராமணி என்பவனின் கீழ் இருந்தது. கிராமங்களில் பஞ்சாயத்துகள் இருந்தன. கிராமணியும் பஞ்சாயத்தினரும் கிராம நிருவாகத்திற்குப் பொறுப்பானவர்கள் ஆவர்.[3]

நகர ஆட்சியைப் பற்றிய பெரும்பாலான செய்திகளை மெகஸ்தனிசின் நூலிலிருந்தே அறிகிறோம். அச் செய்திகள் யாவும் பாடலிபுரத்தைப்பற்றியவையே. முப்பதுபேர் அடங்கிய ஒரு பெருங்குழு தலைநகரின் நிருவாகத்திற்குப் பொறுப்பாக இருந்தது. அது ஐந்தைந்து உறுப்பினரைக் கொண்ட ஆறு வாரியங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. முதல் வாரியம் தொழில்களைக் கவனித்து வந்தது. இரண்டாவது வாரியம் நகருக்கு வரும் அயலவர்களைக் கவனித்து வந்தது. அவர்களுக்குத் தங்க இடமளிப்பதும், வெளியே சென்றால் பாதுகாப்பு அளிப்பதும், நோயுற்றால் மருத்துவ உதவி புரிவதும், இறந்துபோனால் புதைப்பதும், இறந்தவர்களின் உடைமைகளை உரியோருக்கு அளிப்பதும் இவ் வாரியத்தின் பணியாகும். தவிர, அவர்கள் அரசாங்கத்திற்கு எதிரான செயல்களில் ஈடுபடுகிறார்களா என்பதையும் இது கண்காணித்து வந்தது. மூன்றாவது வாரியம் இறந்தோர், பிறந்தோரின் விவரங்களைச் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டது. நான்காவது வாரியம் நிறுத்தலளவு, நீட்டலளவு முதலிய அளவைகளைக் கண்காணித்து வந்ததுடன் விற்பனைக்குள்ள பொருள்களுக்கு

1 **Romila Thapar, op. cit., p. 109.**

2 **op. cit., p. 53.**

3 **See R. Sathianathaier op. cit., p. 117; Romila Thapar op. cit. p. 109.**

அடையாளம் இட்டுவந்தது. வணிகர்களின் வரி ஏய்ப்பைத் தடுக்க இது செய்யப்பட்டது. ஐந்தாவது வாரியம் விற்பனைக் குன்ள பொருள்களின் தரத்தைக் கண்காணித்தது. பழைய பொருள்கள் புதியவற்றுடன் கலவாமல் இருக்கும்படி கண் காணித்தல் அதன் பொறுப்பாகும். மேலும், வரிவிதிப்பை யொட்டிப் பொருள்கள் நாட்டில் உற்பத்தியானவைகளா அல்லது வெளியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதா என்பதும் கவனிக்கப்பட்டது. ஆறுவது வாரியம் விற்பனை வரியை வசூல் செய்தது. விற்பனைவரி பொருளின் விலையில் பத்தில் ஒரு பங்காகும்.

அர்த்த சாஸ்திரத்தில் இச்செய்தி காணப்படவில்லை. அந் நூலில் நகர நிர்வாகத்திற்குத் தலையாய அதிகாரியாக நகரகா என்பவர் இருந்ததாகவும் அவருக்கு உதவியாகக் கோபர்களும் இருந்ததாகவும் கூறப்படுகிறது.[1] அசோகருடைய கல்வெட்டில் (இரண்டாவது கலிங்க ஆணை) நகரங்களில் முறை வழங்கும் மகாமாத்திரர்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர். ஆனல், இவை யாவும் மெகஸ்தனிசின் நூலில் காணப்படவில்லை. எனவே, எது உண்மை என்று ஐயம் ஏற்படலாம். இரண்டுமே உண்மை யெனக் கொள்ளலாம். கௌடில்யர் கூறுததை மெகஸ்தனில் கூறுகிறுர். அதே போன்று மெகஸ்தனிஸ் குறிப்பிடாதது அர்த்த சாஸ்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இருவர்களுமே பாடலி புரத்தில் நீண்டநாள் வாழ்ந்தவர்கள் என்பதைக் கவனிக்கு மிடத்து அவர்கள் கூறுவது கற்பனையாக இருக்க முடியாது. மற்றும், மெகஸ்தனிஸ் கூறும் நகர வாரியங்கள் மத்திய அரசாங் கத்தின் பல துறைகளிலுமுள்ள கண்காணிப்பர்களையும் அவர் களின் உதவியாளர்களையும் கொண்ட குழுக்களே என்பது பொருத்தமான விளக்கமாய்த் தோன்றுகிறது. மெகஸ்தனிஸ் கூறும் நிருவாக அமைப்பு பாடலிபுரத்திற்கு மட்டுமே பொருந் தும், பிற நகரங்களுக்கு அல்ல என்பது ரோமிலா தாபரின் கருத்து.[2] ஆனல், V. A. ஸ்மித்தும் வேறுபல வரலாற்றறிஞர் களும் அத்தகைய அமைப்பு பிற நகரங்களிலும் இருந்திருக்கலா மெனக் கூறுகின்றுர்கள்.[3]

முறைவழங்குதல் அல்லது நீதிபரிபாலனத்தில் அசோகர் மிக்க கவனம் செலுத்தினர் என்பது அவரது கல்வெட்டுகளால் நன்கு அறியப்படுகின்றது. அவர் பௌத்த சமயத்தைப்

[1] R. K. Mookerji, op. cit., p. 120 Fn. 2.
[2] op. cit., p. 114.
[3] Smith, op. cit., p. 88.

பின் பற்றியபொழுதிலும் கொடுமை மிக்க பழைய குற்றவியல் சட்டங்கள் அப்படியே இருந்துவந்தன. குற்றம் சுமத்தப் பட்டோர் சித்திரவதைக் காளாவதோ அல்லது மரண தண்டனை பெறுவதோ மறையவில்லை. ஆனல், சட்டத்தின் கொடுமையை முடிந்த அளவிற்குக் குறைப்பதற்கு அசோகர் பெரும் முயற்சி செய்தார். அவரது பதினன்காம் ஆட்சியாண்டில், தர்மமகா மாத்திரர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்களின் முக்கிய பணி களில் ஒன்று முறை வழங்குவதில் பங்குகொண்டு குற்றவாளி களின் முதுமை, குடும்ப நிலை, குற்றம் புரிந்ததற்கான நோக்கம், பிறரின் தூண்டுதல் முதலியவற்றை ஆராய்ந்து அவர்களின் சிறைத் தண்டனை, கொலைத் தண்டனை, தண்டம் (அபராதத் தொகை) முதலியவற்றைக் குறைப்பதும், சிறையினின்று விடு விப்பதும் ஆகும்.[1] இதனல் எந்த அளவிற்குப் பயன் ஏற்பட்டது என்பதை நம்மால் கூற இயலவில்லை. ஆனல், இத்தகைய ஏற்பாட்டினல் முறை வழங்குவதில் பொதுவானதொரு குழப்பம் ஏற்பட்டிருக்க வேண்டும். அதனல்தான் அசோகர் தம் இருபத் தேழாம் ஆட்சியாண்டில் இராஜுகர்களுக்கு விடுத்த கட்டளை யில், நீதிமன்ற நடைமுறையிலும் (Judicial procedure) தண்டனை கள் வழங்குவதிலும் ஒரே வகை இருப்பது விரும்பக் கூடியதென்று கூறுகிருர்.[2] அந்த ஆண்டில் அசோகர் மரண தண்டனை பெற் றுள்ள கைதிகளுக்குச் சில சலுகைகளை அளித்தார். அவர்களுக்கு மூன்று நாள் அவகாசம் அளிக்கப்பட்டது. அதற்குள் அவர்களின் உறவினர்கள் தண்டனையை மறு ஆய்வு செய்ய இராஜுகர்களிடம் ஏற்பாடு செய்யலாம். அப்படி ஏற்பாடு செய்ய யாரும் இல்லா விடில் குற்றவாளிகள் தங்கள் மறுமையின் நலத்திற்காக ஜபமிட லாம் அல்லது நோன்பிருக்கலாம். நாட்டின் எல்லா இடங்களி லும் இம்முறை பின்பற்றப்பட்டது.[3]

குற்றமற்ருேர் தண்டனைக்காளாகக் கூடாது என்பதற்காக அசோகர் தம்மால் இயன்ற அளவிற்கு முயன்ருர். தொசலீ நகர மகாமாத்திரர்களுக்கு விடுத்த கட்டளையில், அசோகர் பின்வருமாறு கூறுகின்ருர்: ''நிருவாகத்தில் ஒருவன் சிறைப் படுவதோ அல்லது சித்திரவதைக்காளாவதோ நிகழ்கின்றது. காரணமின்றி ஒருவன் அவ்வாறு சிறையில் வைக்கப்பட்டாலும், [சித்திரவதைக்காளாகி] இறக்க நேரிடினும் அதனல் பலர்

1 ஐந்தாவது கற்றூண் ஆணை.

2 நான்காவது கற்றூண் ஆணை.

3 நான்காவது கற்றூண் ஆணை.

பெருந்துயரடைகின்றனர். அம்மாதிரி வழக்கில் நீங்கள் முறை வழங்க விரும்பவேண்டும்.''[1]

மேலும், அசோகர் தம் அதிகாரிகள் தங்கள் கடமைகளை அச்சமின்றியும் நம்பிக்கையுடனும் அமைதியாகவும் நிறைவேற்ற அவர்களுக்குத் தீர்ப்பளிப்பதிலும் தண்டனைகள் வழங்குவதிலும் தக்க சுதந்திரத்தைத் தாம் அளித்திருப்பதாக நான்காவது கற்றூண் ஆணையில் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது. ஆனால், அச் சுதந்திரம் ஒரு வரம்புக்குட்பட்டதென்பதையும் அதே ஆணையில் எடுத்துக் காட்டுவது அவர் ஆட்சித் திறமைக்கு ஒரு சான்றாகும். மரண தண்டனையை அசோகர் விரும்பாவிடினும் நிருவாகத்தில் அதன் அவசியத்தை அவர் உணர்ந்தது கவனிக்கத்தக்கது.

ஏழாவது கற்றூண் ஆணை அசோகரின் இருபத்தெட்டாம் ஆட்சியாண்டில் வெளியிடப்பட்டது. அதில் அவர் தம் மக்களுக்கு அதுவரை புரிந்த நற்செயல்களை விவரித்துக் கூறுகிறார். தாம் செய்த அறங்களைக் கூறும்பொழுது—நிழல் தரும் மரங்களைச் சாலைகளில் வைத்தது, கிணறுகளை வழி நெடுக வெட்டியது, விடுதிகளைக் கட்டியது, தண்ணீர்ப் பந்தல்களை வைத்தது—அவற்றைச் செய்ததற்குக் காரணம் மக்கள் தர்மத்தின் வழி நடக்கவேண்டும் என்பதற்காகவே என்று கூறுவதுடன் அவர்களும் தம்மைப்போல அத்தகைய அறங்களைப் புரியவேண்டும் என்றும் வற்புறுத்துகிறார். மேலும், தர்மத்தின் வழியே நடப்பதால் மக்களுக்கு என்னென்ன நன்மைகள் ஏற்படும் என்று விளக்குவதுடன் அசோகர் தம் பிள்ளைகளும் தம்வழியினரும் தம்மைப் பின்பற்றி நடக்கவேண்டுமென்றும் வற்புறுத்துகின்றார்.

மேற்கூறியவற்றால், அசோகர் தம் மக்களின் இம்மை, மறுமை நலத்திற்காகவும் மகிழ்ச்சிக்காகவும் இடையறாது நீண்ட காலம் பாடுபட்டதுடன் அறச்செயலில் அவர்களுக்கு ஓர் எடுத்துக் காட்டாகவும் விளங்கினார் என்பது அறியப்படுகின்றது. இதுபற்றி **H. G.** வெல்ஸ் என்ற வரலாற்றாசிரியர் கூறுவதாவது: ''அசோகர் மாந்தரின் உண்மையான தேவைகளுக்காக இருபத்தெட்டு ஆண்டுகள் நிதானமாகப் பாடுபட்டார்''. இக் கூற்றினை விளக்கும்பொழுது பேராசிரியர் சத்தியநாதய்யர் மாந்தரின் உண்மையான தேவைகள் அமைதி, உணவு, நோய் தீர்க்கும் மருந்து, உண்மையான சமய ஆறுதல், நல்லாட்சி, பண்பாடு முதலிய

1 இரண்டாவது கலிங்க ஆணை.

வைகளே என்று குறிப்பிடுகின்முர்.[1] இவை அனைத்திற்காக அசோகர் செய்த பெருமுயற்சியை அவரது கல்வெட்டுகள் நன்கு புலப்படுத்துகின்றன.

ஏறத்தாழ ஒரு தலைமுறை அசோகரின் ஆட்சியில் போர் முரசின் முழக்கமே இல்லை; எங்கும் தர்மத்தின் முழக்கமே இருந்தது; அரசரும் அவரிடம் பணிபுரிவோரும் தர்மத்தை மக்களுக்குப் போதித்தலைக் கடமையாகக் கருதினர்; எல்லா உயிரினங்களின் மகிழ்ச்சிக்காகப் பாடுபட்டனர். சுருங்கக் கூறுமிடத்து, கலிங்கப் போருக்குப்பின் அசோகர் தாம் போற்றிய தர்ம வெற்றியை (தர்ம விஜயம் எனக் கல்வெட்டில் அழைக்கப்பட்டது) அடையத் தம் நாட்டிலும் பிற நாடுகளிலும் அயராது முயன்முர்; இறுதியில் அதைத் தாம் அடைந்ததையும் ஒரு கல்வெட்டில் (ஏழாவது கற்றூண் ஆணை) குறிப்பிடுகிமுர்.

1 op. cit., p. 139.

## பகுதி IV

# 1. அசோகரின் சமயம்

அசோகருடைய சமயத்தைப் பற்றி ஆராயுங்கால் அவர் முன்னோர்களின் சமய மரபினை அறிந்திருத்தல் அவசியமாகும். அசோகருடைய பாட்டனாரான சந்திரகுப்தர் சமண மதத்தைத் தழுவிய செய்தியை முன்பு பார்த்தோம். அசோகருடைய தந்தை பிந்துசாரர் தம்முடை தந்தையின் மதத்தைப் பின் பற்றியதாகத் தெரியவில்லை. அவர் இந்து சமயத்தைப் பின் பற்றியிருக்கவேண்டுமென்பது பொதுவான கருத்து. அது எவ்வாறாயினும் அவர் தம் தந்தை பின்பற்றிய சமயத்தை வெறுத்திருக்கமாட்டார் என்பது துணிவு. பிந்துசாரர் ஆஜீவகர்களைப் போற்றினார் என்பது திவ்வியாவதானத்தால் அறியப்படுகின்றது. நிற்க, அவர் அறிஞர்கள் எச்சமயத்தினராயினும் அவர்களைப் போற்றும் இயல்பினர் என்பது அவர் சிரியாவின் மன்னன் ஆன்டியோகசிடம் ஒரு கிரேக்கப் பேராசிரியனை அனுப்பும்படி கோரியதிலிருந்து புலப்படுகின்றது. அசோகருடைய தாயான சுபத்தராங்கி அந்தண குலத்தில் பிறந்தவள் என்று அசோகாவதானம் கூறுகின்றது. அவள் அஜீவக சமயத்தைச் சேர்ந்தவள் என்று ஒரு சிங்கள பௌத்த நூல் குறிப்பிடுகின்றது.[1]

செல்யூகஸ் நிகேடருடன் மௌரியர்கள் திருமண உறவு கொண்டதைப் பற்றி முன்பே குறிப்பிட்டோம். அதுபற்றிய விவரம் முழுவதும் நமக்குத் தெளிவாகத் தெரியவில்லை. இருப்பினும் அம் மண உறவால் மௌரியர்கள், குறிப்பாக அசோகர், கிரேக்கர்களின் சமயத்தைப் பற்றி அறிய வாய்ப்புகள் ஏற்பட்டன என்பது திண்ணம். அசோகருடைய காதலியும், மகேந்திரன், சங்கமித்திரை முதலியோரின் தாயுமான விதிசா மகாதேவி (தேவி என்றும் சாக்கியானி என்றும், சாக்கிய குமாரி என்றும் அழைக்கப்பட்டவள்) பௌத்த சமயத்தைப் பின்பற்றியவள் என்று சிங்கள நூல்கள் கூறுகின்றன.[2] முதலில்

[1] Romila Thapar, op. Cit., p. 26.
[2] Ibid p., 23.

அசோகர் தம் தந்தையைப் போன்று இந்து சமயத்தையே பின்பற்றினர் என்பதும் பின்னரே பௌத்த சமயத்தைத் தழுவினர் என்பதும் அவர் கல்வெட்டுகளால் நன்கு அறியப் படுகின்றது.

மேற்கூறியவற்றிலிருந்து அசோகருடைய குடும்பத் தினரிடையே குறுகிய சமயப்பற்று இல்லை என்பதும் அவர்கள் எல்லாச் சமயங்களையும் அறிந்துகொள்ளும் வாய்ப்புகளைப் பெற்றிருந்ததுடன் அவற்றைப் போற்றும் பரந்த உள்ளத் தினராய் விளங்கினர் என்பதும் தெளிவாகின்றன.

அசோகர் முதலில் எந்தச் சமயத்தைப் பின்பற்றினர் என்பதுபற்றி அறிஞர்களிடையே சிறிது கருத்து வேறுபாடு உள்ளது. சிலர் அவர் சமணர்களையும் ஆஜீவகர்களையும் ஆதரித்ததைக் காரணமாகக்கொண்டு சமண சமயத்தை முதலில் பின்பற்றியிருக்கக்கூடும் என்று கூறுகின்றனர். ஆனல், முதலாவது கற்பாறை ஆணையில் அசோகர் ஒரு காலத்தில் புலாலுக்காக அரண்மனையில் தாம் ஆயிரக்கணக்கான விலங்கு களைக் கொன்று வந்ததையும், குடிப்பதையும் ஆடலையும் பாடலை யும் கொண்ட கொண்டாட்டங்களை அனுமதித்ததையும், எட்டாவது கற்பாறை ஆணையில், பொழுதுபோக்கிற்காக ஒரு காலத்தில் வேட்டையாடியதாகக் கூறுவதையும் பார்க்குமிடத்து அவர் முதலில் சமணராக இருந்திருக்க முடியாதென்பது தெளிவு. மேலும் மகாவம்சம் போன்ற பல பௌத்த நூல்கள் கூறும் செய்திகள் இக்கருத்திற்குச் சிறிதுகூட அடிப்படை இல்லை என் பதையே உறுதி செய்கின்றன. மாருக, இவை யாவும் அவர் முதலில் வைதீக இந்து சமயத்தைப் பின்பற்றியதையே காட்டு கின்றன.

ஒரு காலத்தில், அசோகருடைய கல்வெட்டுகளில் பெரும் பாலானவை கண்டுபிடிக்கப்படுமுன், அவர் கலிங்கப் போருக்குப் பின் கடைப்பிடித்த சமயம் பௌத்த சமயமா அல்லது சமண சமயமா என்ற ஐயம் இருந்தது. ஆனல், ஒன்றன்பின் ஒன்ருகப் பல கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டபொழுது இந்த ஐயத் திற்கு இடமே இல்லாமல் போய்விட்டது. அசோகர் பௌத்த சமயத்தைச் சேர்ந்தவர் என்பதை முதலாவது சிறிய கற்பாறை ஆணையும் பாப்ரூ ஆணையும் தெளிவாகக் கூறுகின்றன.[1] முதலாவது சிறிய கற்பாறை ஆணையில் அசோகர் தாம் இரண்டரை ஆண்டுகள் உபாசகராக இருந்ததாகவும் பிறகு

[1] கல்வெட்டு அதிகாரத்தைப் பார்க்க.

சங்கத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டதாகவும் கூறுகிறார். இவ்வாணையின் மாஸ்கி நகலில், அசோகர் தம்மைச் சாக்கிய உபாசகர் என்றும் குறிப்பிடுகிறார். உபாசகன் என்றால் இல்லறத்தில் வாழும் பௌத்தன் என்பது பொருள். எல்லாப் பௌத்தர்களும் திரிசரணத்தில்—புத்தர், தர்மம், சங்கம் முதலியவற்றில் அடைக்கலமாதல்-, தங்களுக்குள்ள நம்பிக்கையைக் கூற வேண்டும். பௌத்த சங்கத்திற்கு விடுத்த பாப்ரு ஆணையில், அசோகர் அவ்வாறு கூறுகின்றார். மேலும் அவ்வாணையில் புத்த பகவான் (புனிதர்) எதைச் சொன்னாலும் நன்றாகவே சொல்லியுள்ளதாகக் கூறுகிறார். தவிர, பௌத்த தர்மத்தை நல்ல தர்மம் என்று அழைப்பதுடன், இல்லறத்திலும் துறவறத்திலும் வாழும் எல்லாப் பௌத்தர்களும் பயில்வதற்கும் தியானிப்பதற்கும் ஏற்ற பௌத்த வேதத்தின் ஏழு பகுதிகளை எடுத்துக் காட்டுகிறார்.[1] எட்டாவது கற்பாறை ஆணையில், அசோகர் தமது பத்தாவது ஆட்சியாண்டில் புத்தகயைக்குப் புனிதயாத்திரை சென்றதைப் பற்றிக் குறிப்பிடுகிறார். நிக்லீவா கல்வெட்டில் அசோகர் கோணுகமன (கனகமுனி) புத்த ஸ்தூபிக்கு யாத்திரை சென்றதையும் அந்த ஸ்தூபியை விரிவு படுத்தியதையும் கூறுகிறார்; ஆறு ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் அந்த ஸ்தூபியை விரிவு படுத்தினார். பின்னர், அசோகர் கபிலவாஸ்து, புத்தகயை, சாரநாத், சிராவஸ்தி, குசி நகரம் முதலிய பிற பௌத்த தலங்களுக்கும் யாத்திரை சென்றார். அசோகர் சமண, இந்து தலங்களுக்கு இம்மாதிரி யாத்திரை செய்ததாகக் கூறமுடியாது.

முதலாவது கற்பாறை ஆணையில், அசோகர் வேள்விகளுக்காக விலங்குகளைக் கொல்லுதலைத் தடை செய்த செய்தி கூறப்பட்டுள்ளது. ஐந்தாவது கற்றூண் ஆணையில், சில விலங்குகளை எந்தச் சந்தர்ப்பத்திலும் கொல்லக்கூடாதென்றும், வேறு சில விலங்குகளை ஒரு குறிப்பிட்ட வயதுவரை கொல்லக் கூடாதென்றும், சில நாட்கள் மீன் பிடிப்பதோ விற்பதோ கூடாதென்றும், அதேபோல் சில நாட்களில் விலங்குகளுக்குக் காயடிப்பதும் சூடுபோடுவதும் கூடாதென்றும் விரிவான விதிகளை அசோகர் அறிவிக்கின்றார். ஒன்பதாவது கற்பாறை ஆணையில், அசோகர் பயனற்ற சடங்குகள் செய்வதைக் கடுமையாகக் கண்டித்திருப்பதைக் காண்கிறோம், அசோகர் வைதீக இந்து சமயத்தைப் பின்பற்றியிருந்தால் இவற்றை எல்லாம் செய்திருப்பாரா?

1 அடுத்த பகுதியில் காண்க.

அசோகர் தர்மமகாமாத்திரர்களை நியமித்ததும், அவர்களைத் தம் (பௌத்த) தர்மத்தைத் தம் நாட்டிலும் பிற நாடுகளிலும் போதிக்கச் செய்ததும், அவர்கள் உதவியுடன் பௌத்த சங்கத்தினை ஒழுங்குபடுத்த முயன்றதும், மூன்றாவது பௌத்த மகா நாட்டை அவர் பாடலிபுரத்தில் நடத்தியதும் பௌத்த சமயத்தில் அவருக்கிருந்த ஆர்வத்தையும் தெளிவாகக் காட்டுகின்றன. அந்த அளவிற்கு அவர் பிற சமயங்களில் அக்கறை காட்டவில்லை.

அதே போன்று, அசோகர் பௌத்த சங்கத்தின் நலனில் ஈடுபாடு கொண்டிருந்தார். அது பிளவுபடாமலிருப்பதற்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்தார். சங்கத்தின் கட்டுப்பாட்டை மீறிய துறவிகளை அதிலிருந்து நீக்கவும் தயங்கவில்லை என்பதைச் சிறிய கற்றூண் ஆணைகள் தெரிவிக்கின்றன.

கல்வெட்டுச் சான்றுகள் தவிர, திவ்வியாவதானம், அசோகாவதானம், மகாவம்சம், தீபவம்சம் போன்ற பௌத்த நூல்களின் சான்றும் மேற்கூறிய கருத்தையே வலியுறுத்துகின்றது. அசோகர் 84,000 பௌத்த ஸ்தூபிகளைப் பலவிடங்களில் கட்டியது உண்மை என்பதை ஹியூன்சாங்கின் குறிப்புகளிலிருந்து அறிகிறோம்.

மேலும் அசோகர் பௌத்த சின்னங்களான வெள்ளையானை, காளை, குதிரை, சிங்கம் முதலியவற்றைத் தமது கற்றூண்களில் அமைத்ததையும், கற்பாறைகளில் வரைந்ததையும் R.K. முகர்ஜி சுட்டிக் காட்டுகின்றார்.[1] அதே அறிஞர் அசோகர் தர்மத்தைப் பற்றித் தாம் வெளியிட்ட ஆணைகளைப் புத்தருக்கு அர்ப்பணிக்க விரும்பியிருக்க வேண்டுமென்றும் கூறுகிறார்.[2]

இவை யாவற்றையும் நோக்க, அசோகர் பௌத்தரே என்பது விளங்கும். எனினும், நிர்வாணம் (Nirvana), நான்கு உண்மைகள் (Four truths) அட்டசீல நெறி (Eight-fold path) போன்ற பௌத்த சமயத்தின் அடிப்படைச் சித்தாந்தங்களை அசோகர் தம் கல்வெட்டுகளில் குறிப்பிடாததுடன் கடவுள் தம் மக்களுடன் கூடிவாழ்வதாகக் கூறுவதையும் (முதலாவது சிறிய கற்பாறை ஆணை) பல இடங்களில் தம் தர்மத்தின் குறிக்கோளாக விண்ணுலகைக் கூறியிருப்பதைக் காரணமாகக்

[1] Op. cit., pp. 61 & 62.

[2] Ibid.

கொண்டு சிலர் அசோகர் பௌத்தர் அல்லர் என்றும் கூறுவர்,[1] ஆனால், அசோகர் பாப்ரு ஆணையில், 'புத்தர் எதைச் சொன்னாலும் நன்றாகவே சொல்லியுள்ளார்' என்று கூறுவதில் பௌத்த சமயக் கோட்பாடுகள் எல்லாமே அடங்கும். சான்றாக, அவ்வாணையில் எல்லாப் பௌத்தர்களின் சிந்தனைக்கென அசோகர் குறிப்பிட்டுள்ள பௌத்த வேதத்தின் பகுதிகளான முனிகாதையும் மொனியசூதேயும் உலகப் பற்றற்று நிர்வாணத்தை அடையத் தனிமையில் தியானத்திலிருக்கும் முனிவரைப் பற்றிய தன்றோ?[2] அலிய வசானியும் அத்தகையதே. எனவே, பௌத்த சித்தாந்தங்களை அசோகர் குறிப்பிடவே இல்லை என்று கூறமுடியாது. ஆனால், அசோகர் தம் மக்களுக்கு அதைப் (பௌத்த சித்தாந்தங்களை) போதிக்கவில்லை. இல்லறத்தில் வாழும் பௌத்தர்களுக்கு என்ன தர்மமோ அதையே போதித்தார். புத்தரே இல்லறத்தோருக்குத் தமது சமயத்தைப் போதிக்கும் பொழுது அவர்கள் தாம் கூறும் நெறிப்படி வாழ்ந்தால் விண்ணுலகையும் அடையலாம் தேவர்களாகவும் பிறக்கலாம் என்று கூறினார். விண்ணுலகக் குறிக்கோள் பௌத்த சமயத்திற்குப் புதியதன்று. பௌத்த நூலான விமானவத்துவில் இதுபற்றிக் கூறப்பட்டுள்ளது.

## 2. அசோகருடைய தர்மம்

அசோகருடைய தர்மம் பௌத்த தர்மமா, இந்து தர்மமா, சமண தர்மமா அல்லது பொது தர்மமா என்பதை அறிய அவர் கல்வெட்டுகளில் தர்மம் என்று கூறியுள்ளவற்றை ஆராய வேண்டும். அவையாவன ;-

1. ஆன்மீகத் துறையில் முயற்சியின் பெருமை.
2. தந்தை தாய் சொற்கேட்டல்.
3. ஆசிரியருக்குப் பணிதலும் மதிப்பளித்தலும் தொண்டு புரிதலும்.
4. எப்பொழுதும் எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் காட்டுதலும் கொல்லாதிருத்தலும்.

[1] V. R. Ramachandra Dhikhidar, Professor K. V. Rangaswamy Aiyangar Commemoration Vol. p. 29.

[2] R. K. Mookerji, op. cit., p. 67.

5. புலால் உணவை நீக்குதலும் விலங்குகளைப் பலியிடா திருத்தலும்.

6. உண்மையைப் பேசுதல்.

7. நண்பர்களுக்கும் பழக்கமானவர்களுக்கும் உறவினர் களுக்கும் அந்தணர்களுக்கும் துறவிகளுக்கும் உதவுதல்.

8. அடிமைகளையும், வேலையாட்களையும், ஏழைகளையும், துன்பமுற்றோரையும், மற்றவர்களையும் நன்முறையில் நடத்துதல்.

9. தற்சோதனை, தீவிர முயற்சி இவற்றின் நன்மை.

10. புலனடக்கம், மனத்தூய்மை, நன்றி, தர்மத்தில் உறுதி யான ஈடுபாடு, இவற்றின் பயன்.

11. சொந்த மதத்தைப் பின்பற்றல்; எல்லா மதங்களையும் போற்றல்; காரணமின்றித் தன் மதத்தைப் புகழ்தலும் பிற மதங்களைப் பழிப்பதும் கூடாது; சமயப்பொறை யுடைமை.

12. சிறுகச் செலவிடலும் சிறுகச் சேமித்தலும்.

13. கொண்டாட்டங்களையும், பயனற்ற சடங்குகளையும் நீக்கல்; தர்மச் சடங்குகளைச் செய்தல்.

14. மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் மருத்துவ ஏற்பாடுகள் செய்தலும் பயணிகளுக்கு நலம் புரிதலும்.

15. பாவத்தை நினைத்து அஞ்சுதல்.

16. முரட்டுத்தனம், கொடுமை, சினம், செருக்கு, பொறாமை முதலியவை இல்லாதிருத்தல்.

17. தர்ம யாத்திரை செய்தல்.

18. அரசன் குடிகளைத் தன் குழந்தைகளாகக் கருதுதல்; அரசனின் பணியாற்றும் பொறுப்பு; தர்ம வெற்றியின் பெருமை.

19. தர்ம தானம்.

சிறிய கற்பாறை ஆணைகள், கற்பாறை ஆணைகள், கற்றூண் ஆணைகள், சிறிய கற்றூண் ஆணைகள் முதலியவற்றில் பிற கல் வெட்டுகளிலும் காணப்படும் இவற்றை ஓரளவிற்கு வகைப்படுத் தித் தொகுத்து அளித்துள்ளோம். இவற்றில் பெரும்பாலான கோட்பாடுகள் எளிதில் விளங்கக்கூடியவை. சிலவற்றிற்கு விளக்கம் வேண்டும். தர்மச்சடங்குகள் என்பவை அடிமைகளை யும் வேலையாட்களையும் அன்புடன் நடத்துவதும் ஆசிரியருக்கு மதிப்பளித்தலும், எல்லா உயிர்களிடத்தும் இரக்க காட்டுதலும், துறவிகளுக்கும் அந்தணர்களுக்கும் உதவுதலும், மற்றும் அது போன்றவையுமே.[1] தர்மயாத்திரையாவது தர்மத்தின் பொருட்டுப் பயணம் செய்வது. அதில், துறவிகளையும் அந்தணர் களையும் தரிசித்துத் தானமளிப்பதும், பொற்பரிசுகளுடன் முதியோரைக் காணலும், நாட்டுப்புற மக்களைப் பார்ப்பதும், அவர்களுக்குத் தர்மத்தைப் போதிப்பதும், தர்மத்தைப்பற்றிய அவர்களின் வினாக்களுக்குப் பதிலளிப்பதும் முறையாம்.[2] தர்மதானம் என்பது, தர்மத்தை அல்லது தர்மக்கோட்பாடுகளைப் பிறருக்குப் போதிப்பதும் அதன்படி அவர்களை நடக்கச்செய்வது மாம்.[3] தர்ம வெற்றி (தர்ம விஜயம்) என்பது, பிறர் தர்மத்தைப் பின்பற்றும்படி செய்வதில் வெற்றி பெறல் அல்லது தர்மத்தைப் பரப்புவதில் வெற்றியடைதல்.[4] தர்ம குணங்களாவன:- தாய் தந்தை சொற் கேட்டலும், ஆசிரியருக்கு அடிபணிதலும், எல்லா உயிர்களிடத்திலும் அன்பு காட்டுதலும், உண்மையைப் பேசுதலும் ஆகும்.[5]

மேற்கூறிய கோட்பாடுகளைக்கொண்ட அசோகரின் தர்மம் ஒரு நன்னெறி விதிமுறையேயன்றிச் சமய முறையன்று என்றும் அது எல்லாச் சமயங்களின் சாரம் என்றும் R. K. முகர்ஜி கருது கிறார்.[6] அசோகரின் தர்மம் உயர்ந்த குறிக்கோளினையும் நற் பழக்கங்களையும் கொண்ட, நடைமுறைக்கேற்ற, ஒரு வாழ்க்கை முறையே என்றும், அதனுடைய சிறப்பான கோட்பாடுகள் கொல்லாமையும், குடும்ப, சமூக நல்லுறவுகளைப் போற்றுதலும் ஆகுமென்றும், அது பௌத்த சமய தர்மமாக இருக்கும் பட்சத் தில் அசோகர் அதை வெளிப்படையாகவே கூறியிருப்பா

1 ஒன்பதாவது கற்பாறை ஆணை

2 எட்டாவது கற்பாறை ஆணை

3 அதுவே

4 பதின்மூன்றுவது கற்பாறை ஆணை

5 எற்றகுடி சிறிய கற்பாறை ஆணை; இரண்டாவது சிறிய கற்பாறை ஆணை.

6 Op. Cit., p. 69.

றென்றும் ரோமிலா தாபர் விளம்புகிருர்.[1] பேராசிரியர் K. A. நீலகண்ட சாஸ்திரியார் இதுபற்றிக் கூறுவதாவது: அசோகரின் தர்மம் செயல்முறைக்கேற்ற ஒரு சமூக நன்னெறியே, அது எந்தச் சமயத்தையும், சாத்திரங்களையும் சார்ந்ததல்ல என்பதே.[2] மெக்பெயில் என்னும் அறிஞர் அசோகரின் தர்மம் ஓர் எளிய ஆன்மீக நெறியென்றும் அதனை அசோகர் தம் குடிகள் எச்சமயத்தினராயினும் எல்லோரும் பின்பற்ற வேண்டுமென விரும்பினர் என்றும் கூறுகிருர்.[3] டாக்டர் பிளீட் என்னும் அறிஞர் கற்பாறை, கற்றூண் ஆணைகளில் கூறப்பட்டுள்ள தர்மம் (அதாவது அசோகரின் தர்மம்) பௌத்த தர்மம் அல்லவென்றும், அது அரச தர்மமே (Raja Dharma) அதாவது அரசர்களுக்குரிய கடமைகளே என்றும் கருதுகின்ருர்.[4] டாக்டர் ஸ்மித் இதுபற்றிக் கூறுவதாவது: அசோகருடைய தர்மத்தில் தனிச் சிறப்பான அம்சம் எதுவுமில்லை. அதனுடைய கோட்பாடுகள் எல்லா இந்தியச் சமயங்களுக்கும் பொதுவானவையே...........அதற்கும் இந்து தர்மத்திற்கும் உள்ள வேறுபாடெல்லாம் அது பௌத்த சமயத்தின் அடிப்படை நன்னெறிக் கருத்தைக் கொண்டிருப்பதே...... ....................அசோகர் விண்ணுலகைக் குறிக்கோளாகக் கொண்டது பௌத்த சமயத் தத்துவத்திற்கு முரண்பாடானதே ....................அசோகர் நிர்வாணக் குறிக்கோளைச் சொல்ல எதிர்பாத்திருக்கலாம். ஆனல், அதைச் சொல்லவில்லை......... அசோகர் பௌத்த புனித நூல்களை நன்கு பயின்றவர்............ அவருடைய ஆணைகளில் பௌத்த நூல்களில் காணப்படும் சொற்களும் சொற்ருெடர்களும் ஏராளமாய் உள்ளன........... பாப்ரு ஆணையில் கூறப்பட்டுள்ள பிரமாணம் பிற ஆணைகளிலும் கண்டுகொள்ள முடிகின்றது. பௌத்தமல்லாத அசோகரின் கல்வெட்டுகள் பராபர் குகைகளை ஆஜீவகர்களுக்கு அர்ப்பணித்ததைக் கூறுபவையே.[5] செனர்ட் என்னும் பிரெஞ்சு அறிஞர் அசோகருடைய போதனைக்கும் பௌத்த வேதமான தம்மபாதத்திற்கும் தொடர்பு உண்டு என்றும் அசோகருடைய கல்வெட்டுகள் அக்காலத்தில் இருந்த பௌத்த சமயத்தை முற்றிலும் காட்டுகின்றன என்றும் கருதுகின்ருர்.[6]

[1] op. cit., pp. 149, 180 & 181.

[2] Age of tho Nandas and Mauryas p. 240.

[3] Asoka, p. 48.

[4] Quoted in Bhandarkar's Asoka p. 116.

[5] Asoka pp, 29 to 32, 59, 60.

[6] Vide Bhandarkar op: cit., p. 118.

D. R. பண்டர்க்கார் இதுபற்றிக் கூறுவதாவது : அசோகர் காலத்தில் பௌத்த சமயத்தில் துறவிகளுக்கென ஒரு தர்மமும் இல்லறத்தோருக்கென மற்ெருரு தர்மமும் இருந்தன. அசோகரின் தர்மம் இல்லறத்தோருக்கு உரியது. அதற்கும் பௌத்த இல்லற தர்மத்திற்கும் உள்ள தொடர்பை அறிய, பௌத்த வேதத்தில் இல்லறத்தோருக்குரிய பகுதிகளை அறிய வேண்டும். இல்லறத்தில் வாழும் பௌத்தர்களுக்கு நீக நிகாயத்தில் உள்ள சிகாலொ வாத-சுத்த (மஜ்ஜிம்மா நிகாயம்) மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. அதில், இல்லறத்தோருக்கு உரிய கடமைகள் எல்லாம் கூறப்பட்டுள்ளதாகப் புத்தகோஷரே கூறுகிருர். அது கூறுவதுபோல் ஒருவன் நடந்தால் மேன்மையுறுவானேயன்றித் தாழ்வுறமாட்டான். அச்'சுத்தா'வில் புத்தர் சிகாலனுக்கு, அசோகர் கூறும் பின்வரும் கடமைகளை, வலியுறுத்தியுள்ளார் : தந்தை தாய் சொற்கேட்டல், ஆசிரியரிடம் பணிவு, நண்பர்கள், பழகியவர்கள், உறவினர்கள் முதலியோருக்கு உதவுதலும் அவர்களை நன்முறையில் நடத்துதலும், அதே போன்று அந்தணர்களிடமும் துறவிகளிடமும் நடந்துகொள்ளல், அடிமைகளையும் பணியாட்களையும் நன்முறையில் நடத்துதல் முதலியன.[1] இவற்றை சமண ஆஜீவக சமயங்களும் போற்றுகின்றன. இருப்பினும், இவற்றில் பெரும்பாலானவை ஒருங்கே இல்லறத்திலுள்ள பௌத்தர்களுக்கான சிகாலொவாத-சுத்தாவில் காணப்படுவது முக்கியமானது. அசோகரின் தர்மத்திற்கு அடிப்படையாகவும் மூலமாகவும் இருப்பது இல்லறத்தோருக்கான பௌத்த தர்மமே என்ற முடிவு தவிர்க்கமுடியாதது. இக்கருத்திற்கு மேற்கொண்டு ஏதாவது சான்று வேண்டின் அதை 'சுத்த-நிபாத'த்தில் உள்ள 'மகாமங்கள-சுத்தா'வில் காணலாம். அதில் கூறப்பட்டுள்ள கடமைகள் இல்லறத்தோருக்கான மேலான சடங்குகளாகக் (மங்களா) கூறப்படுகிறது. ஒன்பதாவது கற்பாறை ஆணையில், அசோகர் தர்மத்தைப்பின்பற்றி நடப்பதே மிகவும் பயனுள்ள சடங்கு என்று கூறுகிருர். மகாமங்கள-சுத்தாவில் தலையாய சடங்குகளாகக் கூறப்படுபவை தந்தை தாயைப் பேணுதலும், மனைவியையும் குழந்தையையும் பாதுகாத்தலும், உறவினர்களை ஆதரிப்பதும், பாவம் செய்யாதிருப்பதும், துறவிகளிடம் பழகுதலும், தக்க காலங்களில் சமயப் பேச்சுகளைப் பேசுதலும் ஆகும். ஒன்பதாவது கற்பாறை ஆணையில், அசோகர் கூறும் தர்மச் சடங்குகளில் பெரும்பாலானவை இதில் அடங்கியுள்ளன. மேலும், அசோகர் கூறும்

[1] மூன்ருவது கற்பாறை ஆணையைப் பார்க்க.

'தர்மதானம், கூடத்[1] தம்மபதத்தில் காணப்படுகிறது. தர்ம தானமே எல்லாத்தானங்களையும்விடச் சிறந்தது என்று அது கூறுகின்றது.

அசோகர் இல்லறத்தில் இருந்தவர்; அவர் தம் தர்மத்தை இல்லறத்தோருக்கே போதித்தார் என்ற உண்மையினை உணர்ந்தால், அவர் பௌத்த சித்தாந்தங்களான நிர்வாணம், எண்வகைநெறி முதலியவற்றைத் தம் ஆணைகளில் குறிப்பிடாததன் காரணமும், தர்மத்தைப் பின்பற்றி நடந்தால் விண்ணுலகப்பேறு உண்டென்று கூறுவதன் காரணமும் எளிதில் விளங்கும். வாழ்க்கையில் சான்றோராக உள்ளவர் இறப்பிற்குப்பின் விண்ணுலகில் அடையக்கூடிய பேறுகளைப் பற்றிப் பௌத்த நூலான 'விமானவத்து'வில் விவரிக்கப்பட்டுள்ளது. சான்றோராக உள்ளவர் விண்ணுலகில் தேவனாய்ப் பிறப்பார்; தேவர் உலகில் விமானத்தைப்போன்று விரும்பினால் நகரக்கூடியதும் பல தூண்களையுடையதுமான அரண்மனையையும், வெள்ளையானையையும் பெற்றிருப்பார்; ஒளிவீசும் தோற்றத்தினராய் விளங்குவார் என்றெல்லாம் அது கூறுகின்றது. இத்தகைய தேவர் உலகப்பேறுகளைத் தம் மக்களுக்குக் காட்சிகளாக அசோகர் காட்டியதாக நான்காவது கற்பாறை ஆணை கூறுகின்றது. அசோகரின் தர்மம் பௌத்தர்களின் இல்லற தர்மமே என்று கூறுவதற்கு இது ஒரு தெளிவான சான்றே.

அசோகர் அறப்பணிகளில் பெரிதும் ஆர்வங்கொண்டிருந்தார். தம்மைப் போன்று தம் மக்களும் அறப்பணிகள் புரிய வேண்டுமென வற்புறுத்தினார். ஏழாவது கற்றூண் ஆணையில், அவர் பயணிகளுக்குச் செய்த அறப்பணிகளை விவரிக்கின்றார். அதைப் படிக்கும்பொழுது பௌத்த வேதத்தில் சம்யுத்த நிகாயத்தில் கூறப்பட்டுள்ளது நினைவிற்கு வருகிறது. அதில் பழமரங்களை நடுவோரும், தோப்புகள் ஏற்படுத்துவோரும், சாலைகள் அமைப்போரும், கிணறுகள் வெட்டுவிப்போரும், தண்ணீர்ப் பந்தல்கள் வைப்போரும், தங்குமிடங்கள் அளிப்போரும் விண்ணுலகிற்குச் செல்வார்கள் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

பாப்ரு ஆணையில் அசோகர் குறிப்பிட்டுள்ள பௌத்த நூல்கள் பௌத்த வேதத்தில் இன்னின்னவையென அறியப்பட்டுள்ளது.

**1. வினய சமுகசே = 'துவட்டக சுத்தா'வாக இருக்கக் கூடும்.**

[1] பதினொன்றாவது கற்பாறை ஆணை

2. அலிய வசானி = அரியவம்சா (அங்குத்தர நிகாயத்தில் உள்ளது.)

3. அனுகத-பயானி = அனுகத பயானி (அதுவே).

4. முனிகதா = முனிசுத்த ('சுத்த-நிபாத'ம்).

5. மோனியசூதெ = நாலக சுத்த ( ,, )

6. உபதிச பசினே = சாரிபுத்த-சுத்த (மஜ்ஜிம்ம நிகாய'ம்).

7. லாகுலொவாத = இராகுலொவாத சுத்த ( ,, )

தவிர, பன்னிரண்டாவது கற்பாறை ஆணையில் விவரிக்கப்பட்டுள்ள சமயப் பொறையுடைமை கூட 'சுத்த நிபாத'த்தில் கூறப்பட்டுள்ள கோட்பாட்டின் விளக்கமே.

அசோகரின் கல்வெட்டுகளில் காணப்படும் சில சமண வேத (ஆச்சாரங்க சுத்த) சொற்களும் பாவத்தினைச் செய்யத் தூண்டும் குணங்களைப் பற்றி அவர் கொண்டிருந்த கோட்பாடும் அவர் சமண சமயத்தை நன்கு அறிந்திருந்ததுடன் அதன் சில கோட்பாடுகளையும் பின்பற்றத் தயங்கவில்லை என்பதைக் காட்டுகின்றன.

இருப்பினும், அசோகர் போதித்த நன்னெறிக் கோட்பாடுகள் பௌத்த வேதத்தில் 'சிகாலொவாத சுத்தா'வில் கூறப்பட்ட அளவிற்கு வேறு எந்த இந்திய சமயத்திலும் கிடையாது. எனவே, அசோகரின் தர்மம் பௌத்தர்களின் இல்லற தர்மமே என்பது தவிர்க்க முடியாத முடிபாம்.[1]

பண்டார்க்காரின் கருத்தை ஏற்கும் பேராசிரியர் சத்திய நாதய்யர் இது பற்றி மேலும் கூறுவதாவது: முதலாவது சிறிய கற்பாறை ஆணையில் தொடர்ந்த ஆன்மீக முயற்சியின் பெருமையையும் பயனையும் அசோகர் வலியுறுத்துகின்றார். அக் கோட்பாடு தம்மபதத்தில் காணப்படுகின்றது. இரண்டாவது சிறிய கற்பாறை ஆணையில் அசோகர் விளக்கியுள்ள தர்மம் (தந்தை தாய்க்குத் தொண்டு, அஹிம்சையைப் பின்பற்றல், உண்மையைப் பேசுதல், ஆசிரியருக்கு மரியாதை காட்டல், உறவினர்களை நன்முறையில் நடத்துதல்) உபநிஷத்துகள் கூறுவதை (உண்மையைப் பேசுதல், தர்மத்தைப் பின்பற்றல், தந்தை,

[1] D. R. பண்டார்க்காரின் இக்கருத்துகள் அவரது நூல் Asoka என்பதிலிருந்து (Chaps, 4. 5 & 6) இங்கு தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

தாய், ஆசிரியர், விருந்தினர் முதலியோரைக் கடவுளாகப் போற்றல்) ஒத்துள்ளது. இருந்தாலும் 'சிகாலோ வாத-சுத்தா'வில் காணப்படும் தர்மமே இன்னும் ஒற்றுமையுடன் காணப்படுகின்றது. பாப்ரு ஆணையில், அசோகர் புத்தரைப்பற்றிக் கூறியுள்ளதும். (புத்தர் எதைச் சொன்னாலும் நன்றாகவே சொல்லியிருக்கின்றார், என்றுரைத்தது), தர்மத்தைப்பற்றிக் கூறியுள்ளதும் (பௌத்த தர்மத்தை 'நல்ல தர்மம்' என்றதும் உண்மையான தர்மம் என்றும் நிலவட்டும், என்றதும்), அங்குத்தர நிகாய'த்தில் காணப்படுகின்றன. நிதானம், நீதி, அன்பு, விடாமுயற்சி, பொறுமை, பணிபுரிதல் முதலியவற்றை வலியுறுத்தும் கலிங்க ஆணைகளில், அர்த்தசாஸ்திரத்தின் சாயலைக் காண்கிறோம். அரசக் கடமைகளைக் கூறும் ஆறாவது கற்பாறை ஆணையிலும் அதனையே காண்கிறோம். ஆனால், அர்த்தசாஸ்திரம் ஒரு நாட்டு நலனையே குறிக்கோளாகக் கொண்டது. மாறாக, அசோகரின் தர்மம் உலகில் உள்ள எல்லா உயிர்களின் நலனையும் குறிக்கோளாகக்கொண்டது (சர்வலோஹித), அர்த்தசாஸ்திரத்திலும் தர்மவிஜயம் கூறப்பட்டுள்ளது. ஆனால், பதின்மூன்றாவது கற்பாறை ஆணையில் அசோகர் தர்மவிஜயத்திற்கு முற்றிலும் புதிய ஒரு முக்கியத்தை அளிக்கின்றார். அதனைச் சரியான வரலாற்றுச் சூழ்நிலையில் வைத்துக் காணுமிடத்து அதன் பௌத்த சமய இயல்பினைத் தெளிவாக அறியலாம்........................ அசோகரின் தர்மம் பௌத்த வேதத்திற்குப் பெரிதும் கடப்பாடுடையது.

நிற்க, பாப்ரு ஆணையில் நல்ல தர்மம் என்று அசோகர் கூறுவது பௌத்த தர்மமே, அவர் தர்மம் இந்து தர்மமும் அல்ல; சமணதர்மமும் அல்ல. வேள்விகளைத் தடை செய்கின்ற, உலகியல் சடங்குகளைப் புறக்கணிக்கின்ற, சாதிகளை மதியாத, ஒரு தர்மத்தை இந்து தர்மமென எவ்வாறு கூறமுடியும்? அஹிம்சைக் கோட்பாட்டை விதிவிலக்கின்றிப் பின்பற்றுவது சமணதர்மம். ஆனால், அசோகர் அதை அந்த அளவிற்குப் பின்பற்றவில்லை என்பதை அவருடையகல்வெட்டுகளிலிருந்துஅறியலாம். பௌத்த சமயத்தைத் தழுவிய பின்னரும் அசோகர் சில ஆண்டுகள் வரை புலால் உணவைக் கைவிடவில்லை. முறை வழங்குவதில் சித்திரவதையும், மரண தண்டனையும் தொடர்ந்து நடைமுறையில் இருந்து வந்தன. அசோகருடைய ஐந்தாவது கற்றூண் ஆணையில், எல்லா விலங்குகளுக்கும் பாதுகாப்பு அளிக்கப்படவில்லை; சிலவற்றைத்தான் எப்பொழுதும் கொல்லக்.

[1] Op. cit., pp. 122-124

கூடாது; பிற விலங்குகளைச் சில குறிப்பிட்ட நாட்களில் மட்டுமே கொல்லக் கூடாது என்ற நிலை இருந்தது. அதைப் போன்றே விலங்குகளுக்குக் காயடிப்பதும் சூடுபோடுவதும் ஆகும். மேலும், அசோகர் புத்தரையும் பௌத்த மதத்தையும் போற்றிப்புகழ்ந்த அளவிற்கு மகாவீரரையும் சமண தர்மத்தையும் போற்றவில்லை என்பதும் இங்கே நோக்கற்பாலது. எனவே, அசோகருடைய தர்மம் சமண தர்மமாக இருக்கமுடியாது.

அசோகரின் தர்மம் பௌத்த தர்மமே என்பது பேராசிரியர்கள் பண்டார்க்காரும் சத்திய நாதய்யரும் கூறுவதிலிருந்து நன்கு விளங்கும். இதில் நாம் கவனிக்க வேண்டியது யாதெனில், அசோகர் எவரையும் தமது சமயத்தைப் பின்பற்றும்படி வற்புறுத்தவில்லை. மாறாக, அவரே ஆறாவது கற்றூண் ஆணையில் ஒவ்வொருவரும் தமது சொந்த மதத்தைப் பின் பற்றுவதே மிக முக்கியமானது என்ற கருத்தைத் தெரிவிக்கின்றார். இருந்தாலும், எல்லாச் சமயத்தினரும் சில அடிப்படை நன்னெறிகளைப் பின்பற்ற வேண்டுமென விரும்பினார். அந்த நன்னெறிகளில் பல பௌத்த நன்னெறிகளே. போரையும், வேட்டையாடலையும், புலால் உணவையும், வேள்விகளையும், சமூகச் சடங்குகளையும் கைவிடக் கோரும் அசோகரின் தர்மத்தைப் பொது தர்மமாகக் கொள்வதற்கில்லை; அக்காலத்தோரும் அப்படி எண்ணியிருக்க மாட்டார்கள் என்பது திண்ணம்.

நிற்க, அசோகருடைய தர்மத்தில் மனித சமூகத்திற்குப் பொதுவான நன்னெறிகள் உள்ளன. ஆனால், அக்காரணத்தினால் மட்டும் அதை, ஒரு பொது நன்னெறி விதிமுறையே, சமயமுறை அன்று என்று கூற முடியாது. அவருடைய தர்மம் அப்படியிருக்கும் பட்சத்தில் பௌத்த நூல்களில் அசோகர் அத்துணைச் சிறப்பைப் பெற்றிருக்க மாட்டார். மேலும், அவருடைய தர்மம் எளிய பௌத்த இல்லற தர்மமாக இருந்த காரணத்தால்தான் அவர் அதைப் பௌத்த தர்மம் என்று குறிப்பிடவில்லை போலும்!

# 3. அசோகர் பௌத்த சமயத்திற்கு ஆற்றிய தொண்டுகள்

சென்ற அதிகாரத்தில் அசோகர் பௌத்தர் என்பதையும் அவர் போதித்த தர்மம் பௌத்தர்களின் இல்லற தர்மமே என்ப

தையும் கண்டோம். இனி, அத்தர்மத்தை எந்தெந்த வழிகளில் அசோகர் பரப்பினர் என்பதை ஆராய்வோம். தர்மத்தின் வெற்றியைத் தலையாய வெற்றியாகக் கருதிய அசோகர் அதனைத் தம் நாட்டிலும் பிறநாடுகளிலும் அடையப் பலவழிகளைப் பின் பற்றினர். அதில் ஒன்று சமயப் பரப்புக் குழுவினரை அமர்த்தியது. இவர்கள் மௌரியப் பேரரசில் எல்லாவிடங்களிலும்—குறிப்பாக யவனர்கள், காம்போஜர்கள், காந்தாரர்கள், நாப பந்திகள், போஜர்கள், இராஷ்டிரிகர்கள், பிட்னிகர்கள், ஆந்திரர்கள், புலிந்தர்கள் முதலியோர் வாழ்ந்த இடங்களிலும் அப் பெருவேந்தரின் தர்மத்தைப் பரப்பும் பணியில் ஈடுபட்டனர் என்பதை ஐந்தாவது, பதின்மூன்ருவது கற்பாறை ஆணைகளிலிருந்து அறிகிறோம். மேலும், அசோகர் இவர்களைத் தெற்கே சேர, சோழ, பாண்டியர் நாடுகளுக்கும் சத்திய புத்திரர் நாட்டிற்கும் இலங்கைக்கும், மேற்கே சிரியா (பாரசீகம் உட்பட்டது), எகிப்து, மாசிடோனியா, சிரெனி, எபிரஸ் முதலிய நாடுகளுக்கும் பதின்மூன்ருவது கற்பாறை ஆணைகளிலிருந்து தெரிகிறது. இரண்டாவது கற்பாறை ஆணையில், அசோகர் மேற்கூறிய எல்லா நாடுகளிலும் தம் நாட்டிலும் மாந்தருக்கும் விலங்குகளுக்கும் நோய் தீர்க்கும் ஏற்பாடுகளை, தாம் செய்தது பற்றிக் குறிப்பிடுகின்ருர். இதற்கு முன்பே மௌரியர்களுக்கும் கிரேக்க நாடுகளுக்கும் நெருங்கிய அரசியல் தொடர்பு இருந்தது. அசோகர் இத்தகைய பணிபுரிய மிக்க பயனுடையதாக இருந்திருக்குமென்பதில் ஐயமில்லை. இலங்கைக்கு அசோகரின் மகன் மகேந்திரனும் மகள் சங்கமித்திரையும் சமயப் பணியாற்றச் சென்றனர் என்பதை முன்பே பார்த்தோம். இச் சமயப்பரப்புக் குழுக்களெல்லாம் அசோகர் பௌத்த சமயத்தைத் தழுவிய சில ஆண்டுகளுக்குள்ளேயே அனுப்பப்பட்டிருத்தல் வேண்டும் என்பது கற்பாறை ஆணைகளிலிருந்து அறியப்படுகின்றது.

இவை தவிர, பௌத்த சங்கம் சமயப் பரப்புக் குழுவினரைப் பல இடங்களுக்கு அனுப்பிய செய்தியை மகா வம்சமும் தீபவம்சமும் கூறுகின்றன. அதில், இலங்கையும் சுவர்ணபூமியும் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனல், கிரேக்க நாடுகளைப்பற்றி எக் குறிப்பும் கிடையாது. சுவர்ணபூமி சுவர்ணகிரியா அல்லது பர்மாவா (பெகுப் பிரதேசம்) என்பதுபற்றி அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு உள்ளது. சுவர்ணபூமி அசோகரின் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படவில்லை. இச் சமயப் பரப்புக் குழுக்கள் அசோகர் ஆட்சியின் இறுதிக் காலத்தில் அனுப்பப்பட்டன எனக் கூறலாம்.

இனி, இம்முயற்சியின் விளைவினை ஆராயுமிடத்துப் பதின் மூன்றுவது கற்பாறை ஆணையில், அசோகர் தம் நாட்டிலும் மேற்கூறிய நாடுகளிலுந்தாம் தர்மத்தின் வெற்றியை அடைந்ததாகக் கூறுகிருர். மேலும், தம்முடைய தூதுவர்கள் செல்லாத நாடுகளிலும் மக்கள் தம்முடைய தர்ம போதனையையும் கட்டளைகளையும் கேள்வியுற்றுத் தர்மத்தைப் பின்பற்றி வருவதாகவும் அதே ஆணையில் குறிப்பிடுகிருர். ஆனல், மேற்கு ஆசியாவிலும் கிரேக்க நாடுகளிலும் பௌத்த சமயம் பரவியிருந்ததற்கான சான்று எதுவும் கிடையாது. எனவே, அசோகரின் மதிப்பீடு மிகையானதென்றே கூறவேண்டும். இருப்பினும், அசோகர் முயற்சி முற்றிலும் வீணுகவில்லை. மேற்கு ஆசியாவிலும் எகிப்திலும் பௌத்த சமயம் பரவாவிடினும் பௌத்த சமயக் கருத்துகள் ஆங்காங்குப் பரவியிருந்தன என்று அறிஞர்கள் கருதுகின்றனர். சான்ருக, பாவச் செயல்களை ஒப்புக்கொள்ளல், நோன்பிருத்தல், சமயத் தலைவர்களின் பிரம்மசரியம் வழிபாட்டில் ஜபமாலையைப் பயன்படுத்துதல் முதலியவற்றைக் கிறித்துவர்கள் பௌத்த சமயத்திலிருந்து கொண்டதாக அறியப்படுகின்றது.[1] மேலும், இயேசுநாதர் காலத்திற்கு முன்பு இருந்த எசெனியர் (The Essenes), தெரப்புயூடியர் (The Therapeutae) முதலிய யூத (Jewish) சமயப் பிரிவினர் தங்கள் வாழ்க்கை முறையிலும், கோட்பாட்டிலும் ஓரளவு துறவுநெறியிலும் பௌத்த சமயத்திற்குக் கடமைப் பட்டிருந்ததாகத் தெரிகிறது.[2] எனவே, அசோகர் மேற்கூறிய நாடுகளில் செய்த முயற்சி முழுதும் வீணுகவில்லை என்றே கூறவேண்டும். இந்தியாவிலும் ஆப்கானிஸ்தானத்திலும் அசோகரின் முயற்சி நல்ல பயனை அளித்திருக்க வேண்டும் என்பது பௌத்த சமயச் சின்னங்களிலிருந்தும் கல்வெட்டுகளிலிருந்தும் அறியப்படுகின்றது.

அசோகர் தமது தர்மத்தைப் பரப்ப மற்ருெரு வழியையும் கடைப்பிடித்தார். அது அவர் வெளியிட்ட ஆணைகளே (Edicts). அவர் எத்தனை ஆணைகளை வெளியிட்டார் என்பது தெரியவில்லை. இருப்பினும், இதுவரை முப்பத்தாறுக்கு மேற்பட்ட ஆணைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றின் பிரதிகள் (Copies) பல இடங்களில் உள்ளன. அவர் ஆணைகளில் பல, மக்களுக்கு அறவுரை கூறுபவை; சில, அவர் கட்டளைகளைத் தெரிவிப்பவை. அவை யாவும் பேரரசில் பல இடங்களில் கற்பாறைகளிலும் செதுக்கப்பட்டுள்ளன. தமது ஆணைகளை அசோகர் பின்வருமாறு

[1] **D. R. Bhandarkar, op. cit., p. 163.**

[2] **Ibid p. 165.**

கூறுகிறார்: ''மாந்தர் தர்மத்தின் வழிநடப்பார்கள், தர்மம் என்றும் நிலவட்டும். தர்மத்தின் போதனையைப் பின்பற்றுவோர் நன்றாக வாழ்வார்கள் என்ற நோக்கத்திற்காகவே தர்மத்தின் இவ் வேதத்தை (தம்மலிபியை) வரையச் செய்துள்ளேன்.'' பதினான்காவது கற்பாறை ஆணையில், அசோகர் அதுபற்றி மேலும் கூறுவது: ''சில சொற்கள் மீண்டும் மீண்டும் கூறப்பட்டுள்ளன. அதற்குக் காரணம் யாதெனில் தர்மத்தில் (நான்) கொண்டுள்ள பற்றும் மக்கள் அதன்படி நடப்பார்கள் என்ற நம்பிக்கையுமே.'' மேலும், அசோகர் ஏழாவது கற்றூண் ஆணையில் கூறுவதாவது: ''என்னுடைய பிள்ளைகளும் என் வழியினரும் இதன்படியே (தர்மத்தின்படியே) நடப்பார்கள்; அவ்வாறு நடந்து, இம்மை மறுமைப் பயன்களைப் பெறலாம் என்ற நோக்கத்திற்காகவே இது வரையப்பட்டுள்ளது.''

இனி, தம் ஆணைகளில் அசோகர் வலியுறுத்தும் கோட்பாடுகளைப் பார்ப்போம். முதலாவதாக, தம் குடிகள் எந்தச் சமயத்தைப் பின்பற்றினாலும் சில அடிப்படை நன்னெறிகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென அசோகர் வற்புறுத்துகிறார். அவை யாவன: தந்தைதாய் சொற்கேட்டல், அஹிம்சையைப் பின்பற்றல், உண்மையைப் பேசுதல், ஆசிரியருக்கு அடிபணிதல், உறவினர்களை நன்முறையில் நடத்துதல் முதலியன.[1] மூன்றாவது கற்பாறை ஆணையில், இத்துடன் அந்தணர்களுக்கும் துறவிகளுக்கும் உதவுதல் சேர்க்கப்பட்டுள்ளது. அசோகரின் இந்நெறி சாதியையோ, முழு முதற்கடவுட் கோட்பாட்டையோ அடிப்படையாகக் கொண்டதன்று. எல்லாச் சமயத்தினரின் மேன்மைக்காகவுமே இதனை வற்புறுத்துகின்றார். அஹிம்சையைப் போற்றுவது அவரது பௌத்த சமய ஈடுபாட்டினைக் காட்டுகின்றது.

இரண்டாவதாக, அசோகர் சமயப் பொறையை வற்புறுத்துகின்றார். எல்லாக் குடிகளையும் தம் குழந்தைகளாகக் கருதிய அசோகர் எல்லாச் சமயங்களும் இருக்கவேண்டும். எல்லாச் சமயங்களையும் போற்றவேண்டும், எந்தச் சமயத்தையும் காரணமின்றித் தூற்றவோ போற்றவோ கூடாதெனக் கூறுவது அவரது உயர்ந்த பண்பாட்டைக் காட்டுகின்றது. வரம்பற்ற அதிகாரங்களைக் கொண்டிருந்த அப் பெருவேந்தர் தம் மக்கள் எவரையும் தம் சமயத்தில் சேரும்படி வற்புறுத்தாதது போற்றுதற்குரியதே. தமது ஆணைகளில் அசோகர் வலியுறுத்தும் இன்னொரு கோட்பாடு எல்லா உயிரினங்களின் மகிழ்ச்சியுமாகும். உயிரினங்களுக்கு ஊறு செய்யாததுடன் அவை இன்புற்றிருக்கச் செய்வதும் தர்ம

1 இரண்டாவது சிறிய கற்பாறை ஆணை.

மாகும். அதற்காக அசோகர் தாம் வகுத்த விதிகளையும் செய்த அறப்பணிகளையும் ஐந்தாவது ஏழாவது கற்றூண் ஆணைகளில் விரித்துரைக்கின்றார். தம்மைப் போல் மற்றவர்களும் அறப் பணிகள் செய்யவேண்டுமென அசோகர் வலியுறுத்துகின்றார். அவ்வாறு செய்தால் மாந்தரிடையே இரக்கம், ஈகை, உண்மை, தூய்மை, சாந்தம், புனிதத்தன்மை முதலியவை பெருகும் என்று அசோகர் கூறுகின்றார்.[1]

அசோகர் தம் தர்மத்தைப் பரப்ப அரசாங்க அதிகாரிகளை நன்கு பயன்படுத்தினர் என்பதை அவர் கல்வெட்டுகளிலிருந்து அறிகிறோம். தர்மத்தைப் பரப்புவது எல்லா அதிகாரிகளின் கடமை என்பதும் அதன்பொருட்டு அவர்கள் ஐந்தாண்டிற்கு ஒரு முறை இடம் மாறிச் செல்லுதலும் (Transfer) உண்டு என்பதும் மூன்றாவது கற்பாறை ஆணையால் அறியப்படுகின்றது. எற்றகுடி சிறிய கற்பாறை ஆணையின் கடைப்பகுதி இதுபற்றி அரசர் விடுக்கும் கட்டளைகளை இராஜுகர்களுக்கு அதிகார பூர்வமாக அனுப்பவேண்டுமென்று (அதாவது மகாமாத்திரர்கள் மூலமாக) கூறுவதுடன் இராஜுகர்கள் அவற்றை நாட்டுப்புற மக்களுக்கும் இராஷ்டிரிகர்களுக்கும் அக்கட்டளைகளைப் பிறப்பிக்க வேண்டு மெனக் கூறுகின்றது. மேலும், மகாமாத்திரர்கள் அக்கட்டளை களைப் பல்வகை மக்கட்கும் நேரடியாக விடுக்கும் அதிகாரம் பெற்றிருந்தனர் என்பதும் அதிலிருந்து தெரிகிறது. கி. மு. 256-இல் அசோகர் தர்ம மகாமாத்திரர்களை நியமித்ததையும் அவர்கள் செய்த பல்வகைப் பணிகளையும் முந்திய அதிகாரங்களில் கண்டோம். அரசரின் தர்மத்தைப் பரப்புவதிலும், அதனை எவரும் மீறாது இருக்கும்படி கண்காணிப்பதிலும், அரச குடும் பத்தினரும் மற்றவர்களும் புரியும் அறங்களிலும் முறை வழங்கு வதிலும் இவர்கள் அரிய பணியாற்றினர். மேலும், இவர்கள் எல்லாவகை மக்களிடையேயும் எல்லாச் சமயத்தினரிடையேயும் பணியாற்றியதை ஏழாவது கற்றூண் ஆணை குறிப்பிடுகின்றது. அரண்மனைகூட இவர்களின் கண்காணிப்பினின்று விலக்குபெற வில்லை என்பது நோக்கற்பாலது. அசோகர் தர்மப் பணிக்காகப் பெண் அதிகாரிகளைப் பெற்றிருந்தது பன்னிரண்டாவது கற்பாறை ஆணையால் அறியப்படுகின்றது. பௌத்த சங்கத்தின் அலுவல்களை மகாமாத்திரர்கள் கவனித்து வந்ததைச் சிறிய கற்றூண் ஆணைகளிலிருந்து (சாரநாத், கௌசாம்பி, சாஞ்சி ஆணைகள்) அறிகின்றோம்.

[1] ஏழாவது கற்றூண் ஆணை.

அசோகர் பௌத்த சமயத்தைத் தழுவியபின் இரண்டரை ஆண்டுகள்வரை உபாசகராக இருந்ததையும் பின்னர்ப் பௌத்த சங்கத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டதையும் முதலாவது சிறிய கற்பாறை ஆணையிலிருந்து அறிகிறோம். பௌத்த தர்மத்தைப் பரப்புவதில் பௌத்த சங்கத்தின் அவசியத்தை நன்குணர்ந்த அசோகர் அது பிளவுபடாமலும் வலிமையுடனும் இருக்கவேண்டுமெனப் பெரிதும் பாடுபட்டார். அசோகர் காலத்திற்கு முன்பே பௌத்த சங்க உறுப்பினர்களில் பல்வகைப் பிரிவுகள் இருந்ததைப் பௌத்த நூல்களே கூறுகின்றன. அத்தகைய பிரிவுகளால் சங்கம் வலிமையை இழக்கக் கூடாது என்பதே அசோகர் கவலை.

நிற்க, அசோகர் காலத்தில் பாடலிபுத்திரத்தில் கூடிய பௌத்த மாநாட்டைப்பற்றிய செய்தி இந்திய பௌத்த நூல்களில் குறிப்பிடப்படவில்லை. அதைப்பற்றிய பழைமையான செய்தி சிங்கள நூலான தீபவம்சத்தில்தான் காணப்படுகின்றது. அது கூறும் செய்தியாவது: அசோகருடைய தானங்களால் பௌத்த சங்கத்தின் செல்வ வளம் பெருகியது. மற்ற சமயத்தினர் வறுமையுற்றனர். எனவே, அசோகரால் புறக்கணிக்கப்பட்ட ஆஜீவர்களும் அவர்களைப் போன்ற பிற சமயத்தினரும் மொத்தம் அறுபதினாயிரம்பேர் மஞ்சள் உடை உடுத்திக்கொண்டு பாடலிபுரத்திலிருந்த அசோகாராம மடத்தில் பௌத்தபிக்குகளுடன் அவர்களைப் போன்று வாழ்ந்து வரலாயினர். எனினும், அவர்கள் தங்களது பழைய கோட்பாடுகளைப் பௌத்த சமயக் கோட்பாடுகள் என்று கூறிக்கொண்டு போதனை செய்துவந்தனர். மேலும், அவர்கள் பௌத்த துறவறக் கட்டுப்பாட்டிற்கு அடங்காமல் இருந்துவந்ததால் பெருங் குழப்பம் ஏற்பட்டது. இப்படிப்பட்ட நிலை ஏழாண்டுகள் வரை நீடித்தது. கடைசியாக அசோகர் இப் பிரச்சினையைத் தீர்க்கத் தனிமையில் வாழ்ந்துவந்த புனிதர் மொக்கலித்த திசாவின் உதவியை நாடினர். அவரது தலைமையின்கீழ்ப் பாடலிபுத்திரத்தில் ஒரு பௌத்த மாநாடு கூடியது. அதில் தவறான கோட்பாடுகளைப் பரப்பிக்கொண்டு பௌத்த மடங்களில் வாழ்ந்து வந்தவர்கள் பௌத்த சங்கத்திலிருந்து நீக்கப்பட்டார்கள். மேலும், நீக்கப்பட்ட துறவிகள் வெள்ளுடையையே உடுக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. மாநாட்டில் தேரவாதியர் (*Theravadins*) கையோங்கியது. அவர்களுடைய கோட்பாடுகளே பௌத்த சமயக் கோட்பாடுகளென அறிவிக்கப்பட்டது. மாபெரும் தேராவான திசா கதாவத்துவை (*Kathavatthu*)—அபிதம்மத்தைச் சேர்ந்தது-இயற்றினர். இம் மகாநாடு ஒன்பது

மாதங்கள்வரை நடைபெற்றது. மிகவும் சிறப்புற்ற ஆயிரம் அருகத்துகள் இதில் கலந்துகொண்டனர். அசோகர் ஆதரவில் நடைபெற்ற இம் மாநாடு புத்தர் இறந்த 236ஆம் ஆண்டில் நடைபெற்றதாகத் தீபவம்சம் உரைக்கின்றது. இது அசோகரின் 17ஆவது ஆட்சி யாண்டில் நடைபெற்றதாக மகாவம்சம் கூறுகின்றது.

மகாநாட்டின் முடிவில் தர்மத்தைப் பரப்பத் தேரர்களைப் பல நாடுகளுக்கும் அனுப்பத் தீர்மானிக்கப்பட்டது. அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட தேரர்களும் அவர்கள் செல்லவேண்டிய நாடுகளும் பின்வருமாறு அறிவிக்கப்பட்டன :

1. மஜ்ஜந்திகா—காஷ்மீரமும் காந்தாரமும்.

2. மகாதேவா—மகிஷமண்டலம் (மைசூர்).

3. ரக்ஷிதா—வனவாசி (வடகன்னட மாவட்டம்).

4. யொன (யவன) தர்மரக்ஷிதா—அப்பிராந்தகா (பம்பாயின் வட கடற்கரை).

5. மகா தர்மரக்ஷிதா—மகாரட்டா.

6. மகா ரக்ஷிதா—யவன நாடு (வடமேற்கு இந்தியாவில் இருந்த கிரேக்கப் பகுதிகள்).

7. மஜ்ஜிமர—இமாலய நாடு.

8. சொண, உத்தர—சுவர்ணபூமி.

9. மகேந்திராவும் மற்றநால்வரும் }—இலங்கை.

இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள சிலரின் பெயர்கள் சாஞ்சியிலும் அதன் அருகேயும் கண்டுபிடிக்கப்பட்ட அஸ்தி பேழைகளில் *(Relic caskets)* காணப்படுகின்றன என்பது கவனிக்கத் தக்கது.[1] தீபவம்சத்தில் காணப்படும் சில முக்கியச் செய்திகள் அசோகரின் கல்வெட்டுகளால் உறுதிப்படுகின்றன. சான்றுகப் பௌத்த மடங்களில் மாற்றுக் கோட்பாடுகளைக் கொண்டிருந்தோரினால் பிளவு ஏற்படக்கூடிய அபாயம் இருந்ததையும்,

[1] **K. A. Nilakanta Sastri, Age of the Nandas and Mauryas, pp. 216.**

அதனால் அசோகர் அவர்களைப் பௌத்த சங்கத்திலிருந்து நீக்கியதுடன் வெள்ளுடை உடுக்கும்படியும் வெளியே தனித்து வாழும்படியும் கட்டளையிட்டதைச் சாஞ்சி, சாரநாத், கௌசாம்பீ சிறிய கற்றூண் ஆணைகள் அறிவிக்கின்றன. அசோகர் இதற்கான தம் கட்டளையை மகா மாத்திரர்களுக்கு விடுத்தது நோக்கற்பாலது.

இனிப் பாடலிபுத்திரத்தில் நடைபெற்ற பௌத்த மாநாடு அசோகருடைய ஏழாவது கற்றூண் ஆணையில் (இந்த ஆணை கி. மு. 242-ல் வெளியிடப்பட்டது) குறிப்பிடாததால் அது அசோகருடைய ஆட்சியின் இறுதியில் நடைபெற்றிருக்க வேண்டுமென அறிஞர்கள் கருதுகின்றனர்.[1] கி. மு. 240-ல் பாடலிபுத்திர மாநாடு நடைபெற்றிருக்கலாமெனப் பேராசிரியர் சத்தியநாதய்யர் கருதுகின்றார்.[2] எனவே, தீபவம்சமும் மகாவம்சமும் கூறும் தேதிகள் உண்மையானவை என்று கூறுவதற்கில்லை. அலகாபாத் கற்றூணில் கௌசாம்பி ஆணை உள்ள இடமும் இக் கருத்தை வலியுறுத்துகின்றது.[3] அசோகருக்கும் இம் மாநாட்டிற்கும் தொடர்பில்லை என்று கூறுவது நம்பக்கூடியதாக இல்லை.[4] இம் மாநாடு பௌத்தர்களின் பொது மகாநாடு அன்று என்று பேராசிரியர் சத்தியநாதய்யர் கூறுவது கவனிக்கத் தக்கது.[5]

அசோகர் தம் தர்மத்தைப் பின்பற்றுவதில் பிறருக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினர். அசோகருடைய பெருமை யாதெனில் தாம் சொல்லியதைச் செய்வது. சொல்லொன்று, செயலொன்றாக அவர் இல்லை; தமக்கு எது முடியுமோ அதையே பிறருக்குப் போதித்தார்; தாம் போதித்ததைத் தனிப்பட்ட வாழ்வில் செயற்படுத்தியும் வந்தார். நாடுகளைப் பிடிப்பதற்கான போரைக் கைவிட்டார்; அதிலிருந்து தர்மத்தின் வெற்றிக்காக அயராது பாடுபட்டார்; வேட்டையாடும் பொழுதுபோக்கைக் கைவிட்டார்; புனித யாத்திரைகளை மேற்கொண்டார்; பாடலிபுரத்தில் விலங்குகளைக் கொன்று செய்யும் வேள்விகளைத் தடைசெய்தார்; அத்தகைய கொண்டாட்டங்களையும் நிறுத்தினர்; அரண்மனையில் விருந்திற்காக ஆயிரக்கணக்கான விலங்குகளைக் கொன்றுவந்ததை மூன்றாக

[1] Ibid, p. 216.
[2] Op. cit,. p. 140.
[3] Romila Thapar, op. cit., p. 44.
[4] Contra, Ibid, p. 45.
[5] Op. cit., p. 140.

முதலில் குறைத்தார்; பிறகு இரண்டாண்டுகளில் அதையும் நிறுத்திவிட்டார். இச் செய்தி முழுவதையும் அப்படியே கல் வெட்டில் அவர் தெரிவிக்கும் வாய்மையே வாய்மை. உயிரினங்கள் உயிருள்ளவற்றை உண்ணக்கூடாதென ஐந்தாவது கற்றூண் ஆணையில் அவர் வேண்டிக்கொள்கிறார். மாந்தருக்கும் விலங்குகளுக்கும் தம் நாட்டிலும் பிற நாடுகளிலும் தாம் செய்த மருத்துவ ஏற்பாட்டினை இரண்டாவது கற்பாறை ஆணையில் அசோகர் தெரிவிக்கின்றார். விலங்கினங்களுக்கு அசோகர் செய்த நன்மையைப் போன்று வேறு எந்த அரசரும் செய்ததில்லை; கிளி, வாத்து, குரங்கு போன்ற பல உயிரினங்களை எந்தச் சந்தர்ப்பத்திலும் கொல்லக் கூடாதென்றும், பால் குடிக்கும் சில இளம் விலங்குகளைக் கொல்லக் கூடாதென்றும், மீன்களைச் சில குறிப்பிட்ட நாட்களில் பிடிப்பதும் விற்பதும் கூடாதென்றும், அதேபோல் விலங்குகளுக்குக் காயடிப்பதும் சூடு போடுவதும் சில குறிப்பிட்ட நாட்களில் கூடாதென்றும் நாடு முழுவதற்கும் அசோகர் கட்டளை பிறப்பித்த விவரத்தை ஐந்தாவது கற்றூண் ஆணை அறிவிக்கின்றது. அதே ஆணையில், எறும்பு போன்ற சிறிய உயிரினங்கள் உள்ள உமியைத் தீயில் இடக்கூடாதென அசோகர் கூறுவது கொல்லாமைக் கோட் பாட்டில் அவர் கொண்டிருந்த பேரார்வத்தைக் காட்டு கின்றது. ஏழாவது கற்றூண் ஆணையில் அசோகர் பயணிகளுக் காகத் தாம் நிழல்தரும் மரங்களை நட்டதையும், மாந்தோப்பு களை அமைத்ததையும், கிணறுகள் வெட்டியதையும், தங்கும் விடுதிகள் கட்டியதையும், தண்ணீர்ப்பந்தல்கள் வைத்த தையும் கூறுவதுடன் தம்மைப்போன்று தம் குடிகளும் அத் தகைய அறங்களைப் புரியுமாறு வேண்டிக்கொள்கிறார். மேலும், தம்மைப் போன்றே தம் பிள்ளைகளும், அவர்களின் வழியினரும் தர்மத்தின் வெற்றிக்காகப் பாடுபடவேண்டுமென அசோகர் கல்வெட்டுகளில் பல இடங்களில் கூறுவது அவர் தர்மத்தில் கொண்டிருந்த ஆழ்ந்த ஈடுபாட்டினையும் அது என்றும் நிலவ வேண்டும் என்ற அவரது பேராவலையும் எடுத்துக் காட்டு கின்றது.

இவ்வாறு அசோகர் செய்த பெருமுயற்சியால் பௌத்த சமயம் இந்தியா, இலங்கை, ஆப்கானிஸ்தானம் முதலிய நாடு களில் துரிதமாக வளர்ச்சியடைந்தது. இதற்குமுன் வட இந்தி யாவில் சில பாகங்களில் இருந்துவந்த பௌத்த சமயம் ஒரு உலக மதமாக வளரத் தலைப்பட்டது. சில நாடுகளில் பௌத்த சமயம் பரவாவிடினும் அச் சமயக் கோட்பாடுகள் பிறமதத்

தினரின் கவனத்தை ஈர்த்தன; கிறித்துவ சமயக் கோட்பாடுகள் எந்த அளவிற்குப் பௌத்தக் கோட்பாடுகளுடன் சார்புடையன என்பதனை முன்பே கண்டோம். பௌத்த சமயத்திற்கு ஆற்றிய தொண்டுகளால் அசோகரின் புகழ் ஓங்கியது. பௌத்த சமயத்தில் புத்தருக்கு அடுத்த இடத்தை அசோகர் அடைந்தார். அசோகருடைய தர்மம் பௌத்த தர்மமாக இல்லாவிடில் அவர் இப் புகழைப் பெற்றிருக்க மாட்டார்.

நிற்க, ரோமிலா தாபரைப் போன்ற அறிஞர்கள் சிலர் அசோகர் பௌத்த சமயத்தைப் பின்பற்றியதற்கு அரசியல் காரணம் உண்டென்று கூறுவது தவறான கருத்தாகும். அரசியல் காரணங்களுக்காக அசோகர் ஒரு சமயத்தைப் பின்பற்ற வேண்டுமென நேரிட்டிருந்தால், அவர் பௌத்த சமயத்தைப் பின்பற்றி யிருக்கமாட்டார். இந்து சமயத்தையே பின்பற்றியிருப்பார். ஏனெனில், அக்காலத்தில் பௌத்த சமயம் பெரும்பான்மையான மக்களின் சமயமாக இல்லை. மாறாக, அசோகர் காலத்திலும் அவருக்குப் பிறகும் இந்து சமயமே பெரும்பான்மையான மக்களின் சமயமாக விளங்கியது. பெரும்பான்மை மக்களின் அரசியல் ஆதரவை அசோகர் தேடியிருந்தால், அவர் இந்து சமயத்தையே பின்பற்றியிருப்பார். எனவே, அசோகர் பௌத்த சமயத்தைப் பின்பற்றியதற்கான காரணம், அச் சமயக் கோட்பாடுகளை அவர் விரும்பியதே. 'புத்தர் எதைச் சொன்னாலும் நன்றாகவே சொல்லியுள்ளார்' என்ற அசோகர் வாக்கு அதனைப் புலப்படுத்துகின்றது.[1] மற்றும் பௌத்த சமயமும் மௌரியப் பேரரசும் அழிவதற்கு அசோகரே காரணம் என்று சிலர் கூறுகின்றனர். அதற்குத் தரும் விளக்கமாவது—அசோகரது நன்கொடைகளால் பௌத்த சங்கம் செயலற்றுப்போயிற்று. சங்கத்தின் உறுப்பினர்கள் தங்கள் சமயத்தைப் போதிப்பதிலும் பரப்புவதிலும் ஊக்கமின்றி மடங்களில் வீணாகப் பொழுதைக் கழித்ததால் அச் சமயம் கவனிப்பாரற்று அழியத் தலைப்பட்டது. அவ்வாறே அசோகரின் கொல்லாமைக் கொள்கையாலும், அமைதிக் கொள்கையாலும் இந்தியர்களுக்குப் போரில் இருந்த ஆர்வமும் திறமையும் குறைந்தன; அதனால் மௌரியப் பேரரசு படைவலிமையை இழந்து காலப்போக்கில் அழியத் தொடங்கியது என்பதே. இன்னும் சிலர் அசோகருடைய சமயக்கொள்கை இந்தியாவிற்கே தீங்கிழைத்தது என்று பொதுப்படையாகவும் கூறுகின்றனர். ஆனால், இவை யாவும் ஆதாரமற்ற கருத்துகளே. எப்படி என்றால், அசோகர் முயற்சியால் பௌத்த சங்க

1 பார்க்க ஆணை.

மும் சமயமும் வளர்ந்து வந்தனவேயன்றி மெலிவுறவில்லை. அதற்குப் பல நூற்றாண்டுகள் கழித்தே, பௌத்த சமயம் அழி வுறத் தொடங்கியது. அதற்கும் அசோகருடைய நன்கொடை களுக்கும் தொடர்பில்லை. அடுத்து, அசோகர் போதித்த தர்மம் பௌத்த இல்லற தர்மமே. சமணர்களைப் போன்று தீவிர கொல்லாமைக் கோட்பாட்டை அவர் பின்பற்றவில்லை. மேலும், பௌத்த சமயத்தைத் தழுவியதால் அவர் அரச கடமைகளை மறந்துவிடவில்லை. போரைக் கைவிட்டாரே யன்றித் தமது பெரும்படையைச் சிறிதுகூடக் குறைக்கவில்லை. மௌரியர்களின் படைவலிமை அவர் காலத்திலும் தொடர்ந்து இருந்திருக்கவேண்டும். மேலும், அசோகருடைய கொள்கையை அவருக்குப்பின் வந்தோர் தொடர்ந்து கடைப்பிடித்ததாகவும் தெரியவில்லை. எனவே, அசோகருடைய வழியினரின் ஆற்றலின்மையே மௌரியப் பேரரசு அழியக் காரணமாக இருந்ததே தவிர அசோகருடைய கொள்கை அன்று. ஆனால், அசோகருடைய கொள்கை வைதீக மக்களிடையே அதிருப் தியை ஏற்படுத்தியிருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால், அது மௌரியப் பேரரசு அழிவதற்கேற்ற அளவிற்கு வளர்ந்தது என்று கூறமுடியாது. அசோகருக்குப் பிறகும் நீண்டகாலம் வரை இந்தியா போர்முறையில் சிறப்புற்றே இருந்தது. எனவே, அசோகருடைய கொள்கையால் மௌரியப் பேரரசிற்கோ, இந்தியாவிற்கோ தீங்கு ஏற்பட்டதெனக் கூறுவதற்கில்லை.

# 4. அசோகரும் பிற சமயத்தினரும்

பண்புடைய மக்களுக்கு அழகு சமயத்துறையில் பொறை யுடனிருத்தலே, என்பது அறிஞர்களின் கருத்து. இந்தியாவில் பண்டைக் காலத்திலேயே மக்கள் அவ்வாறு இருந்ததை வரலாறு புலப்படுத்துகின்றது. சமயத்துறையில் மாற்றுக் கோட்பாடுகளைக் கொண்டிருந்த தலைவர்களை மக்கள் மதித்துப் போற்றினரேயன்றி ஊறு எதையும் புரியவில்லை. கௌதம புத்தர், மகாவீரர், கபீர், நானக், நாமதேவர் முதலியோர் புரட்சிகரமான கோட்பாடுகளைப் போதித்தார்கள். இருப்பினும், சாக்ரடீசுக்கோ, இயேசுநாதருக்கோ, முகமதுநபிக்கோ, அல்லது ஐரோப்பாவில் பிராட்டெஸ்டென்டு தலைவர்களுக்கோ விளைந்த கதி இத் தலைவர்களுக்கு ஏற்படவில்லை என்பது நோக்கற்பாலது. சமயத்துறையில் பல தலைவர்களை அவர்கள் காலத்திலேயே, அவர்கள் இடங்களில் போற்றிய பெருமை இந்தியர்களுக்கு உண்டு. இந்திய மன்னர்களும் இம் மரபை

ஒட்டியே ஆண்டு வந்தனர். சமயப் பூசல்கள் இந்தியாவில் இருந்தன; பிற சமயத்தினரைத் துன்புறுத்திய வேந்தர்களும் இருந்தனர். ஆனால், அத்தகையோர் மிக அரிதாகவே இருந்தனர். ஒரிருவரைத் தவிர ஏனைய இந்திய மன்னர்கள் பரந்த நோக்குடன் எல்லாச் சமயத்தினரையும் போற்றி வந்துள்ளனர்.

அசோகரும் இம் மரபினைப் பின்பற்றினார். புத்தரைப் போன்று அவரும் எல்லா மாந்தரையும் தம் குழந்தைகளெனக் கருதினார்.[1] ஆறாவது கற்றூண் ஆணையில் தாம் எல்லாச் சமயத்தினரையும் போற்றி வருவதாக அசோகர் அறிவிக்கின்றார். அதே சமயம், ஒருவன் தனது சொந்த மதத்தைப் பின்பற்றுவதே மிக முக்கியமானது என்ற கருத்தையும் தெரிவிக்கின்றார். மேலும், அந்தணர்களையும் துறவிகளையும் ஆதரிப்பதை அசோகர் ஒரு நன்னெறிக் கோட்பாடாகவே கருதினார். அதை மீண்டும் மீண்டும் தம் ஆணைகளில் குறிப்பிடுகிறார். அவர் பௌத்தர்களைப் பெருமளவில் ஆதரித்தது உண்மைதான்; ஆனால், அதே சமயம் அந்தணர்களையும், சமணர்களையும் ஆஜீவகர்களையும் ஆதரிக்கத் தவறவில்லை. ஆஜீவகர்களுக்கு அவர் குகைகள் அமைத்துக் கொடுத்ததைப்பற்றி மூன்று கல்வெட்டுகள் கூறுகின்றன.

அசோகருடைய பன்னிரண்டாவது கற்பாறை ஆணை சமயப் பொறைக்கு ஓர் இலக்கணம்போல் உள்ளது. அதில் அவர் கூறுவதாவது: 'கடவுளர் விரும்பும் மன்னன் எல்லாச் சமயங்களிலும் தலையாய கோட்பாடுகள் வளர்ச்சியுறுவதையே பெரிதும் போற்றுகின்றான்; தானத்தையும் (பிற)புற வழிபாட்டையும் அவ்வளவிற்குப் பொருட்படுத்தவில்லை. தலையாய (சமயக்) கோட்பாடுகள் பல உருவில் வளர்ச்சியுறுகின்றன. அதற்கு அடிப்படையாக இருப்பது நாவடக்கமே. அதாவது, ஒரு மனிதன் காரணமின்றித் தனது சமயத்தைப் போற்றவும் கூடாது; பிறர் சமயத்தைத் தூற்றவும் கூடாது. பிறர் சமயத்தைக் குறைத்துக் கூறுவது தெளிவான காரணங்களுக்காக மட்டுமே இருக்கவேண்டும்; ஏனெனில், ஒரு காரணத்தாலோ அல்லது மற்றொரு காரணத்தாலோ எல்லா மக்களின் சமயங்களும் போற்றுதற்குரியவையே.

இவ்விதம் நடப்பதன்மூலம் ஒருவன் தன் சமயத்தைப் பெருமைப்படுத்துகிறான்; அதே சமயம் பிறரின் சமயங்களுக்கும் தொண்டு புரிகின்றான். அவ்வாறின்றி, மாறி நடப்பதன்மூலம்

[1] V. A. Smith, op. cit., p. 193.

ஒருவன் தன் சமயத்திற்குத் தீங்கிழைக்கின்றான்; பிறர் சமயங்களுக்கும் ஊறு செய்கின்றான். ஏனெனில், எவனொருவன் தன் சமயத்தின்பால் கொண்ட பற்றினால் மட்டும் அதன் பெருமையை உயர்த்த எண்ணங்கொண்டு அதனைப் போற்றிப் பிற சமயங்களைத் தூற்றுகின்றானோ, அவன் உண்மையிலேயே தன் நடத்தையினால் தன் சமயத்திற்கே மிகமிகக் கொடிய ஊறு புரிகின்றான்.

ஆகவே, இசைவு (Concord) அல்லது ஒத்திருத்தல் மிகவும் போற்றற்குரியது. ஏனெனில், அதனால் பிறர் தர்மத்தைக் (சமயத்தை) கேட்கலாம், மனப்பூர்வமாகக்கேட்கலாம். எல்லாச் சமயத்தினரும் அதிக மத போதனையைக் கேட்கவேண்டும்; தேர்ந்த கோட்பாடுகளைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பது தான் கடவுளர் விரும்பும் மன்னனின் விருப்பம்.

இந்தக் காரணங்களுக்காகவே எல்லாச் சமயத்தினருக்கும் அவர்கள் யாவராயினும், 'கடவுளர் விரும்பும் மன்னன் எல்லாச் சமயங்களையும் போற்றுகிறான்; எல்லாச் சமயங்களிலும் தலையாய கோட்பாடுகள் வளர்ச்சியுறுவதையே பெரிதும் போற்றுகின்றான்; தானத்தையும் புற வழிபாட்டையும் அவ்வளவிற்குப் பொருட்படுத்தவில்லை என்பதைத் தெரிவிக்கவேண்டும்.'

இதிலிருந்து அசோகர் எல்லாச் சமயங்களையும் போற்றினார் என்பதையும், எல்லாச் சமயங்களிலும் உண்மைகளும் உண்டு குறைகளும் உண்டு என்பதை உணர்ந்திருந்தார் என்பதையும் நன்கு அறிகிறோம். மேலும், ஒருவன் பிற சமயக் கோட்பாடுகளைப்பற்றி விவாதிக்கையில், நாவடக்கத்துடன் விருப்பு வெறுப்பு இன்றியும் இருக்கவேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டுள்ளது. அசோகரது பரந்த உள்ளத்தினையும், முன்னேற்றத்திற்கேற்ற அவர் மனப்பாங்கினையும் எடுத்துக் காட்டுகின்றது. சமயத்தின் பெயரால் கூறப்படும் அல்லது செய்யப்படும் எதனையும் ஏற்றுக்கொள்வது என்பது அசோகரது மனப்பாங்கன்று. 'அக்பரைப்போல் தம் மனச்சான்றிற்கு ஒவ்வாத எதனையும் அசோகர் பொறுத்துக்கொள்ள விரும்பவில்லை.'[1] கொல்லாமைக் கோட்பாட்டை அவர் பின்பற்றியது இதற்கு ஒரு சான்று. இருப்பினும், அதற்காக அவர் பிறர் மனம் புண்படும்படி எதையும் கூறவில்லை. ஒன்பதாவது கற்றூண் ஆணையில், உலகியல் சடங்குகளைப்பற்றிக் கூறும்போது அவற்றைச் செய்யவேண்டியதுதான், இருந்தாலும் அவற்றால்

[1] Prof. R. Sathianathier, op. cit., p. 145.

அதிகப் பயன் ஒன்றுமில்லை, அவற்றைவிட தர்மச் சடங்குகள் செய்வதில் மிக்க பயனுண்டு என்று மிகப் பணிவுடன் உரைக்கின்றார். பிறருக்குக் கூறிய நாவடக்கத்தைத் தாமும் கைக்கொண்டார். சுருங்கச்சொல்லுமிடத்து, அசோகருடைய சமயப் பொறைக் கொள்கை இக்காலத்திற்கும் எக்காலத்திற்கும் பொருந்தக்கூடியது; சமயத்துறையில் அமைதிக்கும் முன்னேற்றத்திற்கும் மிகவும் ஏற்றது என்பது திண்ணம்.

## பகுதி V

# 1. அசோகரின் பெருமை

அசோகருடைய பெருமையைப்பற்றி ஆராயுங்கால், அவர் எத்தன்மையானவர் என்பதை முதலில் அறிதல் இன்றியமையாதது. தொடக்கத்தில் அசோகர் மற்ற அரசகுமாரர்களைப் போலவே இருந்தார். அரியணைக்காகத் தம் உடன் பிறந்தோரிடம் பகைமை பாராட்டவும் அவர்களைக் கொல்லவும் தயங்கவில்லை. ஆனால், பௌத்த நூல்கள் கூறுவதுபோல் அவர் உடன்பிறந்தோர் எல்லோரையும் கொல்லவில்லை என்பதே பெரும்பாலான வரலாற்றாசிரியர்களின் கருத்து. தவிர, காலப் போக்கில் தம் கையோங்கியபொழுது அசோகர் தம் உடன் பிறந்தோரின் குடும்ப நலனில் உண்மையான அக்கறை கொண்டதை ஐந்தாவது கற்பாறை ஆணை உணர்த்துகின்றது. மேலும், ஆறாவது கற்றூண் ஆணையில் அசோகர் தம் சுற்றத்தவர், தம்முடன் நெருங்கிய தொடர்புள்ளோர் முதலியோரின் நலத்திலும் மகிழ்ச்சியிலும் தாம் கொண்டுள்ள ஈடுபாட்டினைக் குறிப்பாகத் தெரிவிக்கின்றார். பௌத்த சமயத்தைச் சாரும்முன் அசோகர் வேட்டையாடுதலிலும், புலால் உண்பதிலும், கேளிக்கைகளிலும் மகிழ்ச்சி கொண்டார். பின் அச் சமயத்தைத் தழுவியபொழுது அவற்றையெல்லாம் விட்டுவிட்டார். புலால் உணவைத் தாம் குறைத்ததுபற்றியும், அறவே நீக்க முடிவு செய்ததுபற்றியும் முதலாவது கற்பாறை ஆணையில் அவர் கூறுவது அவரது அரிய வாய்மையைக் காட்டுகின்றது. தாம் புலால் உணவை அறவே நீக்கவில்லை என்பதை அவர் ஒளிவு மறைவின்றிக் கூறுகிறார். பௌத்த சமயத்தை அசோகர் தழுவியதற்குக் காரணம் அவர் அம் மதக் கோட்பாடுகளில் கொண்ட ஈடுபாடேயாகும்; வேறு தன்னல அரசியல், சமூகக் காரணங்கள் எதுவும் கிடையாது. பௌத்த சமயத்தில் சேர்ந்தபின் அசோகர் தம் வாழ்க்கையையும் ஆட்சியையும் அம் மதக் கோட்பாடுகளுக்கு ஏற்ப ஒழுங்குபடுத்தினர். அசோகரின் சொல்லும் செயலும் ஒன்றாகவே இருந்தன. தாம் பின்பற்றியதையே பிறருக்குப் போதித்தார். பௌத்த தர்மத்தைப் பரப்ப அசோகர் துணிந்து சில புதிய வழிகளைப் பின்பற்றினர். அரசருக்கு வேண்டிய அஞ்சாமை,

அறிவு, ஈகை, இரக்கம் முதலிய குணங்களை அசோகர் எஞ்சாது பெற்றிருந்தார். அவரது கடமையுணர்விற்கு வரம்பில்லை. எங்கிருந்தாலும், எப்பொழுது வேண்டுமானாலும் தம் பணிகளைப் புரிய அசோகர் விருப்பமுடையவராக இருந்தார். போரில் ஈடுபாடு கொண்டிருந்தபோதிலும் அதனால் மக்கள் படுந் துயரைக் கண்டு அதைக் கைவிட அசோகர் தயங்கவில்லை. பின்னர் எந்த நிலையிலும் அவர் போரை நினையாதது அவரது உறுதிப்பாட்டைக் காட்டுகின்றது. போரைக் கைவிட்டாலும் தமது பெரும்படையை அசோகர் தொடர்ந்து வைத்திருந்தது அவரது பொறுப்புணர்ச்சியைக் காட்டுகின்றது. தமது கோட்பாட்டிற்காகத் தம் மக்களின் பாதுகாப்பை அசோகர் புறக்கணிக்கவில்லை என்பது நோக்கத்தக்கது. தாம் தமது சமயத்தைப் பின்பற்றுவதுபோல மற்றவர்களும் தத்தம் சமயத்தைப் பின்பற்றவேண்டும் என்றும் எல்லாச் சமயத் தினரையும் போற்றவேண்டும் என்றும் அசோகர் கூறுவது அவரது பரந்த உள்ளத்தைக் காட்டுகின்றது. தம் குடிகள் அனைவரையும் தம் குழந்தைகளாக அசோகர் கூறுவது அவர் அவர்களிடம் கொண்டிருந்த பேரன்பினுக்கு ஒரு சான்றாகும். மாந்தருக்கு மட்டுமன்றி எல்லா உயிரினங்களின் மகிழ்ச்சிக்காக வும் அசோகர் பாடுபட்டது அவர் ஓர் உண்மையான பௌத்தர் என்பதைக் காட்டுகின்றது. ஒழுக்கம், இரக்கம், ஈகை, பொய்யாமை, தூய்மை முதலியவற்றைத் திரும்பத் திரும்பத் தம் கல்வெட்டுகளில் அசோகர் வலியுறுத்துவது தத்தரை நமக்கு நினைவூட்டுகின்றது. அவரது கல்வெட்டுகளைக் கற்போர் எவரும் மனித இயல்பைப்பற்றிய அவரது ஆழ்ந்த அறிவினை உணராமலிருக்க முடியாது.

இனி, அசோகர் குறைகளற்றவரா என்ற ஐயம் ஏற்படலாம். அவரிடம் சில குறைகள் இருந்தது உண்மையே. மேற்கு நாடுகளில் தம் முயற்சியால் மக்கள் தர்மத்தைப் பின்பற்றி வருவதாகக் கூறுவதும் அண்டை நாடுகளிலெல்லாம் மாந்தருக் கும் விலங்குகளுக்கும் நோய் தீர்க்கும் ஏற்பாடுகளைச் செய்த தாகக் கூறுவதும் அசோகர் தம் சாதனைகளை மிகைப்படுத்தும் இயல்புடையவர் என்பதைக் காட்டுகின்றது. மேலும், தம் முடைய ஆணைகளில் அவர் தம்மைப்பற்றிப் பன்னிப் பன்னிக் கூறுவது தற்பெருமையைக் காட்டுவதாகச் சில அறிஞர்கள் கருது கின்றனர். அது ஓரளவுக்கு உண்மையே. இருந்தாலும், அசோகர் அரசராக மட்டுமின்றிச் சமயத் தலைவராகவும் இருந்தார் என்பதையும் அவர் தம்மைப்போலப் பிறரும் ஆன்மீகத் துறை யில் முயன்றால் முன்னேற முடியும் என்பதை எடுத்துக்காட்டு

வதற்காக அப்படிச் சொல்லியிருக்கலாம் என்பதையும் நாம் நினைவிற் கொள்ளுதல் வேண்டும். பிந்தியதை முதலாவது சிறிய கற்பாறை ஆணையில் அவரே தெளிவாக விளக்குகின்றார்.

இனி, அசோகருடைய சாதனைகளைப் பார்க்குமிடத்து அவர் பௌத்த இல்லற தர்மத்திற்கேற்பத் தம்முடைய வாழ்க்கையை மாற்றிக்கொண்டது ஓர் அருஞ் செயலாகும். அதிலும் வெற்றிக் குப்பின் போரைக் கைவிட்டது மிகவும் சிறப்பானதாம். கலிங்கப் போருக்குமுன் பௌத்த சமயம் சிறுபான்மை மக்களுக் குரியதாக இருந்தது. அதை இந்தியாவிலும் பிற நாடுகளிலும் பரப்பி ஓர் உலகச் சமயமாக்கிய பெருமை அசோகருக்கே உரியது. புனிதர் பால் (St. Paul) கிறித்துவ சமயம் வளர எத்துணைத் தொண்டாற்றினாரோ அத்துணைத் தொண்டுகளை அசோகர் பௌத்த சமயத்திற்குச் செய்துள்ளார். மேலும், அசோகர் எல்லா மக்களுக்கும் ஏற்பப் பௌத்தக் கோட்பாடுகளை எளிமையாக்கியது குறிப்பிடத் தகுந்தது. அசோகருடைய பெரு முயற்சியால் பௌத்த சமயம் வளர்ந்ததேயன்றித் தாழ்வுறவில்லை. அவரது நன்கொடைகளால் பௌத்த சங்கம் செயலற்றுப் போயிற்று என்பது ஆதாரமற்ற குற்றச்சாட்டாகும். காலப்போக்கில் அசோகருடைய சமயம் சாதிகள் மலிந்த இந்தியாவிலிருந்து மறைந்து போனாலும்கூட அவருடைய கோட் பாடுகள், குறிப்பாக, கொல்லாமையும் சமயப்பொறையும், இந்துக் களின் மனப் போக்கில் மாறுதலை ஏற்படுத்தின.[1] மேற்கு நாடு களில் அசோகர் செய்த சமயப் பணி பயனற்றுப் போனதாகக் கூறமுடியாது. யூத சமயப் பிரிவினர் சிலரும், பண்டைய கிறித்துவரும் சில பௌத்தக் கோட்பாடுகளுக்கு இலக்கானதை முன்பே பார்த்தோம். அத்தகைய மாறுதல் இருந்த காரணத் தால்தான் அசோகர் தம் தர்மம் பிற நாடுகளில் பரவியதாகப் பெருமிதத்துடன் கூறுகின்றார்.[2]

நிற்க, அசோகருடைய அமைதிக் கொள்கையால் அவர் மக்களும் பிறநாட்டு மக்களும் நலமுற்றனர். அதனால்தான் அசோகர் தம்பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் அக் கொள்கை யைப் பின்பற்றவேண்டுமென விழைந்தார். இருப்பினும் அசோகர் அமைதிக்கொள்கையைப் பின்பற்றியதால், இந்தியா முழுவதையும் வென்று ஒரே ஆட்சியின்கீழ் கொணர்ந்து அரசியல் ஐக்கியத்தை வளர்க்கக்கூடிய ஓர் அரிய வாய்ப்பை இழந்துவிட்டார், என்று D.R. பண்டர்க்கார் கூறுகிறார். ஆனால்,

[1] Prof. Sathianathaier, op. cit., p. 150.

[2] பதின்மூன்றாவது கற்பாறை ஆணை.

அக்கால நிலையை நோக்க அசோகர் அப்படிச் செய்திருந்தால் கூட அது நீடித்திருக்காது என்பது திண்ணம். அவருடைய பேரரசே அவர் இறந்தபின் என்னவாயிற்று? மௌரியப் பேரரசு அந்த அளவிற்குப் பெருகியதும் மூன்று தலைமுறைவரை செவ்வனே ஆட்சி செய்யப்பட்டதும் வியக்கத்தக்க நிகழ்ச்சி களாம். அப் பேரரசு அசோகருக்குப்பின் வீழ்ச்சியுற்றது வியப்பிற் குரியதன்று. எனவே, அசோகர் இந்தியாவின் அரசியல் ஐக்கியத்தை வலுப்படுத்தக்கூடிய வாய்ப்பை விட்டுவிட்டார் என்று கூறுவதில் பொருளில்லை.[1] அசோகர் அமைதிக் கோட்பாட் டைக் கைவிட்டு, பண்டர்க்கார் கூறுவதுபோல் செய்திருந்தால் கூட, இந்தியாவின் அரசியல் நிலையில் பெரிய மாறுதல் எதுவும் ஏற்பட்டிராது. திக்விஜயத்தைப் போற்றிப் பல நாடுகளையும் வென்ற சமுத்திரகுப்தர் சாதித்தது என்ன?

அசோகர் மற்ற இந்திய மன்னர்களைப் போன்று தம் மக்களின் நலத்திற்காகப் பல நற்செயல்களைப் புரிந்துள்ளார். அசோகருக்கும் மற்ற மன்னர்களுக்கும் இருந்த வேறுபாடு யாதெனில், அசோகர் தம் மக்களின் இம்மை வாழ்வின் நலத்திற்கு மட்டுமின்றி மறுமையின் மகிழ்ச்சிக்கும் பாடு பட்டதே. இதனைப் பல கல்வெட்டுகளில் அவர் திரும்பத் திரும்பப் பெருமையுடன் கூறிக்கொள்கிறார். மேலும், தம் அதிகாரிகளிடமும் இதனை வலியுறுத்துகின்றார். செங்கோலின் பயன் அதிகாரிகளின் திறனையும் குணத்தையும் பொறுத்தது என்பதை நன்குணர்ந்த அசோகர், அதற்கேற்றவாறு செயற் பட்டது போற்றற்குரியதே. அவர் ஆட்சியின் பெருமைக்கு அது ஒரு சிறப்பான காரணமாகும்.

அசோகர் காலத்துக் கலைவளர்ச்சிக்கு அவரது பௌத்த சமயப் பற்று தலையாய காரணமாகும். அசோகரது நீண்ட ஆட்சியில் பாலி மொழி மேன்மையுற்றது. பௌத்த வேதம் அம் மொழியில் எழுதப்பட்டது, பிற பிராகிருத மொழிகளின் வளர்ச் சிக்கும் அசோகர் ஆட்சி ஊக்கமளித்தது. அவர் காலத்தில் புதிய நகரங்களும், எண்ணற்ற பௌத்த ஸ்தூபிகளும் மடங் களும் (விகாரங்கள்) கட்டப்பட்டன. அவரது ஸ்தூபிகள் குன்று களைப்போல் உயரமானவை என்று திவ்வியாவதானம் கூறு கின்றது.[2] அசோகர் அஜீவகர்களுக்கு அளித்த குகைகளின் உட்புறம் முகம் பார்க்கும் கண்ணாடிபோல் வழவழப்பாகவும் பளபளப்புடனும் உள்ளது குறிப்பிடத்தக்கது. அசோகருடைய

[1] Contra, D. R. Bhandarkar, op. cit., p. 245.
[2] R. K. Mookerji, Asokan Inscriptions, p. 57.

கற்றூண்கள் உலோகத்தூண்களோ என்று எளிதில் ஐயுறத்தக்க அளவிற்குக் கடைசல் பிடிக்கப்பட்டிருப்பது இக்கால கல்தச்சர் களுக்கும் அரிய செயலாம். அவற்றின் உச்சியில் காணப்படும் சிற்பங்களின் கம்பீரத் தோற்றத்தையும் கலை நுட்பத்தையும் சர் ஜான் மார்ஷல் போன்ற அறிஞர்கள் பெரிதும் புகழ்கின்றனர். கடினமான பாறைகளில் அத்தகைய தூண்களைச் செதுக்கிய தும், நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்த இடங் களுக்கு அவற்றை எடுத்துச் சென்று நிறுவியதும் உண்மை யிலேயே பெருஞ் சாதனை என்றுதான் கூறவேண்டும்.[1]

நிற்க, அசோகருடைய பெருமையை அவரது உயர்ந்த குறிக்கோள்களில் காண்கிறோம். வெற்றிக்குப் பின் போரை வெறுத்த பெருமை அசோகருக்கே உரியது. 'போரில் புகழ் பெற்ற நெப்போலியன், குப்பைமேட்டில் கொக்கரித்து நிற்கும் சேவலை ஒத்தவன்' என்றும், 'அசோகரோ உலகத்தின்கண் ஆண்டு மாண்ட அரசருள் ஞாயிறு போன்று சிறந்தவர்' என்றும் **H. G.** வெல்ஸ் கூறுவது குறிப்பிடத்தக்கது. போரை விலக்கிய அசோகர், பேரரசின் நலத்தில் தாம் கொண்டிருந்த ஈடுபாட்டைக் குறைய விடவில்லை. மன்னர் தம் குடிகளைத் தம் குழந்தைகளாக எண்ணிக் காத்தல் வேண்டும், அவர் இம்மை மறுமை வாழ்வின் நலத்திற்காகப் பாடுபடவேண்டும் என்ற அசோகர் கருத்து அவரது பெருமைக்கு ஒரு சான்றாகும். சமயப் பணிகளில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தாலும் அசோகர் தமது அரச கடமைகளைச் செவ்வனே புரியத் தவற வில்லை. அவரது சமயப் பொறைக் கோட்பாடு எக்காலத்திற் கும் எல்லா நாட்டிற்கும் பொருந்தக் கூடியதே. எல்லாச் சமயங்களின் வளர்ச்சிக்கும் அக் கோட்பாடு ஏற்றதுதான். ஆனால், தம் மனச்சான்றிற்கும் பகுத்தறிவிற்கும் ஒவ்வாத எதை யும் அசோகர் பொறுத்துக்கொள்ளவில்லை. எல்லா மக்களும் சில அடிப்படை நன்னெறிகளைக் கடைப்பிடிக்க வேண்டு மென்பது அவர் விருப்பமாகும். எல்லா மக்களுக்கும் செயல் முறைக்குத் தக்க ஒரு நன்னெறியை வகுத்தது அசோகரது ஆன்மீகப் பெருமையையும் ஆர்வத்தையும் காட்டுகின்றது. எல்லா உயிரினங்களின் மகிழ்ச்சிக்காகப் பாடுபட்ட அசோகரை 'தர்மராஜா' என்று மிலிந்த பன்கா அழைப்பது சாலவும் பொருந்தும்.

அசோகரைப் பிற பெருவேந்தர்களுடனும் தலைவர்களுட னும் ஒப்பிடும்பொழுது அவர் வாழ்க்கையின் எல்லா அம்சங்களை

[1] பிற விவரங்களை அடுத்த அதிகாரத்தில் காண்க.

யும் நாம் மனத்திற் கொள்ளுதல் அவசியமாகும். அசோகருக்கும் புனிதர் பாலுக்கும் இருந்த ஒற்றுமையை முன்பே குறிப்பிட்டோம். இருவரும் தங்கள் சமயம் வளரப் பெருந் தொண்டாற்றினர். அசோகர் முயற்சியால் பௌத்த சமயம் உலக சமயமாக வளர்ந்தது. அதேபோன்று புனிதர் பாலின் முயற்சியால் கிறித்துவ சமயம் ஐரோப்பாவில் துரிதமாகப் பரவி ஓர் உலக சமயமாயிற்று. ஆனால், புனிதர் பால் அரசராக இருந்தால் என்ன செய்திருப்பார் என்பதை ஊகிப்பதற்கில்லை. அலெக்சாண்டர் மனித இனத்தின் ஒருமைப்பாட்டைப் போற்றி அது வளரப் பல முயற்சிகளைச் செய்தார். அசோகர் மனித குலத்தின் மேம்பாட்டிற்காக முயன்றதுடன் விலங்கினங்களின் மகிழ்ச்சிக்காகவும் பாடுபட்டார். அசோகர் அலெக்சாண்டரைப்போல் போரில் வல்லவரா என்பதை அறியத் தக்க சான்றுகள் இல்லை. அசோகரை அலெக்சாண்டருடனும் ஜூலியஸ் சீசருடனும் ஒப்பிடுவதில் பொருளில்லை. ஏனெனில், அவர்கள் தனிப்பட்ட வாழ்வில் அசோகரைப்போல் குறைகளற்றவராக வாழவில்லை. மேலும், அவர்களின் திறமையும் சாதனைகளும் பிற துறைகளில் இருந்தனவே தவிர அசோகர் முயன்ற துறையில் அல்ல. தனிப்பட்ட வாழ்வில் அசோகருக்கும் மார்க்கஸ் அரீலியசுக்கும் சில ஒற்றுமைகள் காணப்படினும் மார்க்கஸ் அரீலியஸ் கிறித்துவர்களை வருத்தியதுபோல் அசோகர் பிற சமயத்தினரைத் துன்புறுத்தவில்லை. கான்ஸ்டன்டைன் கிறித்துவ சமயத்தில் சேர்ந்ததற்கும் அசோகர் பௌத்த சமயத்தைத் தழுவியதற்கும் வேறுபாடு உண்டு. கான்ஸ்டன்டைன் கிறித்துவ சமயத்தைத் தழுவியபொழுது அச் சமயம் மக்களிடையே மிகுந்த ஆதரவைப் பெற்றிருந்தது. அதனைச் சார்ந்தால் அரசியலில் தமக்கு ஆதரவு பெருகும் என்ற நோக்குடன்தான் அவர் அச்சமயத்தைப் பின்பற்றத் தொடங்கினர். ஆனால், அசோகரோ பௌத்த சமயக் கோட்பாடுகளில் தாம் கொண்ட உண்மையான ஈடுபாட்டின் காரணமாகவே அதனைத் தழுவினர். அவர் பௌத்த சமயத்தில் சேர்ந்தபொழுது அச் சமயம் பெரும்பான்மை மக்களின் சமயமாகத் திகழவில்லை; பின்னரும் அப்படியேதான் இருந்தது. எனவே, அவர் பௌத்த மதத்தில் சேர்ந்ததற்கு வேறு காரணங்கள் கூறமுடியாது. சுருங்கக் கூறுமிடத்து, அசோகரைப் பிற மன்னர்களுடன் ஒப்பிடுவதில் பயனில்லை; ஏனெனில், அவர் பலவிதத்தில் ஒப்பற்றவராக விளங்கினர்.

ஓர் அரசர் தம் குடிகளுக்கு என்ன செய்யவேண்டுமோ அவற்றை எல்லாம் அசோகர் செய்தார். அதற்கு மேலும், அவர்களின் மறுமை வாழ்வின் நலத்திற்கும் பாடுபட்டார். ஒரு

சமயத் தலைவன் தன் சமயத்திற்கு என்ன தொண்டு செய்ய வேண்டுமோ அவற்றையும் அசோகர் செய்தார். சமயத் தலைவராகவும் அரசராகவும் ஒரே சமயத்தில் பணிபுரிதல் எளிதன்று. அம்மாதிரி பணிபுரிந்தோர் மிகச் சிலரே. அவர்களுள் அசோகரே தலையாய சிறப்புடையவர். பௌத்த சமயத்தில் புத்தருக்கு அடுத்த நிலையில் வைத்துப் போற்றப்படுபவர் அசோகரே. இந்திய வரலாற்றில் மட்டுமன்றி, உலக வரலாற்றிலேயே அசோகர் ஒரு தனிச் சிறப்பிடம் பெற்று ஞாயிறுபோல் திகழ்கின்றார்.

## 2. அசோகருடைய வழியினரும் மௌரியப் பேரரசின் வீழ்ச்சியும்

அசோகருக்குப் பின் அரை நூற்றாண்டுக் காலம்வரை மௌரியப் பேரரசு நீடித்தது. ஆனால், அக்காலத்தில் ஆண்ட மன்னர்களைப்பற்றிய தெளிவான செய்திகள் நமக்குக் கிடைக்கவில்லை. புராணங்களும், சமண பௌத்த நூல்களும் வெவ்வேறான செய்திகளைக் கூறுகின்றன. கல்வெட்டுச் சான்று மிகக் குறைவாக உள்ளது. வாயுபுராணமும் பிரம்மாண்ட புராணமும் கூறும் வம்சாவளி மத்ஸ்ய புராணத்தினின்றும் மாறுபட்டுள்ளது. அதேபோன்று மத்ஸ்ய புராணத்தின் வம்சாவளி விஷ்ணு புராணத்தில் உள்ள வம்சாவளியினின்றும் மாறுபட்டுள்ளது. அதேபோன்று, இதுபற்றித் திவ்வியாவதானம் கூறுவது அசோகாவதானம் அளிக்கும் செய்தியினின்றும் மாறுபடுகின்றது. இவை தவிரச் சமண நூல்களும், திபேத்திய வரலாற்றாசிரியர் தாரநாதனும், இராஜதரங்கிணியின் நூலாசிரியரான கல்ஹணனும் வெவ்வேறான செய்திகளை அளிக்கின்றனர். இவற்றை எல்லாம் ஆராய்ந்த அறிஞர்களின் முடிவினைச் சுருக்கமாய்க் காண்போம்.[1]

அசோகருக்குப் பல பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் இருந்தனர். அவர் இறந்தபின் அவருடைய மூத்த மகன் குணாளன் எட்டு ஆண்டுகள் தன் இளைய மகன் சம்பிரதியின் உதவியுடன் ஆண்டதாகக் கூறப்படுகிறது.[2] ஆனால், ரோமிலா தாபர் அசோகருக்குப் பின் அவருடைய பேரனான தசரதன் பட்டத்திற்கு வந்ததாகக் கூறுகிறார்.[3] குணாளனைப்பற்றிப் பௌத்த

[1] Vide, Romila Thapar, op. cit., pp. 182—196.

[2] Prof. R. Sathianathaier, op. cit., p. 152.

[3] Op. cit., p. 16.

நூல்கள் கூறும் கதையை முன்பே பார்த்தோம். அவன் தன் மாற்றுந் தாயினால் கொடுமைப்படுத்தப்பட்ட செய்தி உண்மையாக இருக்குமாயின் அசோகர் அவனிடம் தனி அன்பு காட்டித் தமக்குப் பின் அவனை அரியணையில் அமர்த்த விரும்பியிருத்தல் சாத்தியமே. ஆனால், குணாளனைப்பற்றிய கல்வெட்டுச் சான்று எதுவும் இல்லை.

அடுத்து, குணாளனின் மூத்த மகன் தசரதன் பட்டத்திற்கு வந்தான். இவன் எட்டு ஆண்டுகள் ஆண்டதாகப் புராணங்கள் கூறுகின்றன. புத்தகயைக்கு அருகிலுள்ள நாகார்ஜுன குன்றுகளில் இவனுடைய மூன்று கல்வெட்டுகள் உள்ளன. அதில் இவனுடைய பெயரும் 'தேவானும்பியா' என்ற பட்டமும் காணப்படுகின்றன. அக் கல்வெட்டுகளின் பிராமி எழுத்தும் நடையும் அசோகரது ஏழாவது கற்றூண் ஆணையை ஒத்துள்ளதெனத் தாபர் கருதுகின்றார்.[1] அவற்றில் இம் மன்னன் ஆஜீவகர்களுக்குக் குகைகளை வெட்டிக் கொடுத்த செய்தி கூறப்பட்டுள்ளது. அதைக்கொண்டு இவன் அச் சமயத்தைப் பின்பற்றியவன் என்று கூறுவதற்கில்லை. தன் பாட்டன் அசோகரைப் போல் இவனும் எல்லாச் சமயங்களையும் போற்றும் இயல்பினனாய் இருந்திருக்கலாம். ஆனால், பௌத்த நூல்களில் இவனைப்பற்றிய செய்திகள் இல்லை.

தசரதனுக்குப் பின் சம்பிரதி பட்டத்திற்கு வந்தான். புராணங்கள் இவனைத் தசரதனின் மகனென்று கூறுகின்றன. ஆனால் பௌத்த, சமண நூல்கள் இவனைக் குணாளனின் இளைய மகனாகவே குறிப்பிடுகின்றன. அதுவே உண்மை எனப்படுகின்றது. நிற்க, இவன் ஒன்பது ஆண்டுகள் ஆண்டதாக வாயு, மத்ஸ்ய புராணங்கள் கூறுகின்றன. இவன் சுகஸ்தின் என்ற சமணத் தலைவரால் அச் சமயத்திற்கு மாற்றப்பட்டதாகவும், அதன்பின் இவன் அம் மதத்திற்குப் பெருந்தொண்டாற்றியதாகவும் சமண நூல்களிலிருந்து அறியப்படுகின்றது. இவன் தன் நாட்டிலும் 'ஆரியரல்லாதோர் நாடுகளிலும்' விகாரங்களைக் கட்டியதாகக் கூறப்படுகின்றது.[2] 'ஆரியரல்லாதோர் நாடுகள்' என்பன இந்தியாவிலிருந்த பிற நாடுகள் என்றே பொருள் கொள்ளவேண்டும். ஏனெனில், சமணர் சமயம் இந்தியாவைத் தவிர வேறு நாடுகளில் பரவவில்லை. இன்றேல், இவன் பௌத்த சமயத்தைப் போற்றும் வகையில் இந்தியாவிலோ, இலங்கையிலோ விகாரங்களைக் கட்டியிருக்கலாம். இவன் பாடலிபுத்திரத்

[1] Ibid. p. 186.

[2] Prof. Sathianathaier, op. cit., p. 153,

திலிருந்தும் உச்சயினிலிருந்தும் ஆண்டதாகக் கூறப்படும் செய்தி உண்மையாக இருக்கக்கூடும்.

சம்பிரதியை அடுத்து அவன் மகன் சாலிசுகன் அரியணையை அடைந்தான்.[1] இவன் பதின்மூன்று ஆண்டுகள் ஆண்டதாகக் கூறப்படுகின்றது. இவனைப் பற்றிய செய்திகள் எதுவும் தெரியவில்லை.

நிற்க, அசோகருக்குப் பின் ஜலுகன் என்ற அவர் மகன் பட்டத்துக்கு வந்ததாகவும் அவன் சைவ சமயத்தைப் பின்பற்றியதாகவும், அவனுடைய குரு பல பௌத்தர்களை வாதில் வென்றதாகவும், நாட்டு மக்களைத் துன்புறுத்திய மிலேச்சர்களை அவன் விரட்டியடித்ததாகவும், புதிதாகச் சில அதிகாரிகளை நியமித்ததாகவும் இராஜதரங்கணியில் கல்ஹணன் கூறுகின்றான். மேலும், ஜலுகன் காஷ்மீர், காந்தாரம் முதலிய இரு பகுதிகளையும் ஆண்டதாகத் தெரிகின்றது.[2] இவனைப்பற்றி ரோமிலா தாபர் கூறுவதாவது, அசோகர் இறந்தபின் பேரரசு இரண்டாகப் பங்கிடப்பட்டிருத்தல் வேண்டும்; காஷ்மீர், காந்தாரம் உட்பட்ட மேற்குப் பகுதியைக் குணாளன் ஆட்சி புரிந்திருக்கலாம்; அவனே இராஜதரங்கணியில் குறிப்பிடப்பட்ட ஜலௌகா அல்லது ஜலுகா என்பதாம்.[3] ஜலுகாவும் குணாளனும் ஒருவரே என்று கூறுவதற்குத் தாபர் கூறும் சான்று போதுமானதாகக் கொள்வதற்கில்லை. ஜலுகன் வென்ற மிலேச்சர்கள் பாக்டிரிய நாட்டுக் கிரேக்கர்கள் என்பதும் ஐயத்திற்குரியதே.

இனி, கி. மு. 206-ல் மூன்றாவது ஆன்டியோகஸ் என்ற சிரியா மன்னன் இந்துகூஷ் மலையைக் கடந்து காந்தாரத்தை ஆண்ட மௌரிய மன்னரான சுபாகசேனனுடன் தனது நட்புறவைப் புதுப்பித்துக்கொண்டதாகப் பொலிபியஸ் கூறுகிறான். சுபாகசேனனுக்கும் பாடலிபுத்திரத்தில் ஆண்ட மௌரிய மன்னர்களுக்கும் என்ன உறவு என்பது தெரியவில்லை. இவனுக்கும் ஜலுகனிற்கும் என்ன தொடர்பு என்பதும் விளங்கவில்லை. இருப்பினும், மௌரியர்களுக்கும் சிரியாவின் கிரேக்க மன்னர்களுக்கும் இருந்த நட்புறவு அதுவரை நீடித்திருந்தது என்பது கவனிக்கத்தக்கது.

[1] **Romila Thapar, op, cit., pp. 183 & 196.**
[2] ibid pp. 188—195.
[3] **Op. cit., p. 188.**

இவை ஒருபுறமிருக்க, பாடலிபுத்திரத்தில் சாலிசுகனுக்குப் பின் யார் பட்டத்திற்கு வந்தது என்பது தெரியவில்லை. புராணங்களே வெவ்வேறான செய்திகளைக் கூறுகின்றன. சாலிசுகனுக்குப் பின் தேவவர்மனும் அவனுக்குப் பின் சததன்வனும் பட்டத்திற்கு வந்ததாக ரோமிலா தாபர் கூறுகிறார்.[1] இதை மறுக்கவோ உறுதிப்படுத்தவோ சான்றுகள் இல்லை. தேவவர்மன் ஏழு ஆண்டுகள் ஆண்டதாகவும் அவனை அடுத்து ஆண்ட சததன்வன்[2] எட்டு ஆண்டுகள் ஆண்டதாகவும் வாயு புராணமும் பிரம்மாண்ட புராணமும் கூறுகின்றன.

இவர்களை அடுத்துப் பாடலிபுத்திரத்தில் ஆண்ட மௌரிய மன்னன் பிரகத்ரதனே ஆவான். இவன்தான் மௌரிய வம்சத்தில் இறுதியாக ஆண்ட வேந்தன். அசோகாவதானம் புஷ்யமித்திரனைக் கடைசி மௌரிய மன்னனாகக் குறிப்பிடும் செய்தி தவறானதே. பிரகத்ரதன் ஆற்றலற்றவனாகவும் மக்களிடையே செல்வாக்கில்லாதவனாகவும் இருந்திருத்தல் வேண்டும். பிரகத்ரதன் தன் படையைப் பார்வையிடுகையில் அவனது தளபதி புஷ்யமித்திரன் அவனைக் கொலை செய்ததாகப் பாணபட்டர் கூறுகின்றார். புஷ்யமித்திரன் மௌரிய வம்சத்தை அழித்ததாகப் புராணங்களும் கூறுகின்றன. இது ஏறத்தாழ கி. மு. 188-ல் நிகழ்ந்திருத்தல் வேண்டும். இதன் பின்னரே பாக்டிரிய நாட்டுக் கிரேக்கர்கள் இந்தியாமீது படையெடுத்தனர்.

நிற்க, அசோகர் காலத்திற்குப் பிறகு பேரரசு அழியத் தொடங்கிவிட்டது. முதலில் கலிங்கம், ஆந்திரம், விதர்ப்பம் முதலிய பகுதிகள் பேரரசினின்று பிரிந்து சென்றன, காஷ்மீரமும் காந்தாரமும் மாகாணத் தலைவர்களின்கீழ் சுயேச்சை அடைந்திருத்தல் வேண்டும். இவ்வாறு அரை நூற்றாண்டில் பேரரசு சிதறுண்டு போனதற்கு முக்கியக் காரணம் அசோகருக்குப் பின் வந்த மன்னர்களின் ஆற்றலின்மையே. பரம்பரை முடியாட்சியில் திறமையுள்ளவர்களே எப்பொழுதும் பட்டத்திற்கு வருவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. எந்த அரச வம்சமும் திறமையுள்ளவர்களைமட்டும் கொண்டிருந்ததுமில்லை. ஒரு வமிசத்தில் சில தலைமுறைவரை ஆற்றல்மிக்க அரசர்கள் இருக்கலாம்; பிறகு வரும் மன்னர்கள் எளியவர்களாக இருக்கலாம். வரலாற்றில் பொதுவாக இப்படி இருப்பதையே நாம் காண்கிறோம். தவிர, மன்னர்கள் பல மனைவியரைப் பெற்றிருந்

[1] Op. cit., p. 196.

[2] சத்தனுஸ் என்றும் சில புராணங்களில் அழைக்கப்படுகிறார்.

தால், பல பிள்ளைகளும் பெயரப் பிள்ளைகளும் இருத்தல் இயற்கையே. அத்தகைய நிலையில் அரச குடும்பத்தில் அமைதியோ ஒற்றுமையோ இல்லாதிருத்தல் வியப்பிற்குரிய தன்று; அரியணைக்காகப் போட்டியும் போரும் சில சமயங்களில் தவிர்க்கமுடியாதவை ஆகிவிடும். அசோகர் நிலையும் அத்தகையதே. அசோகருக்குப் பின் வந்த மன்னர்கள் எவரும் நீண்ட காலம் ஆட்சிபுரியவில்லை என்பது அவர்களின் திறமையின்மையையே காட்டுகின்றது. மௌரியர் ஆட்சி முறையில் அரசர் உயிர்நாடியாக விளங்கினார். திறமையற்றவர்கள் பதவிக்கு வந்தால் நிருவாகம் சீர்கெடுவது இயல்பே. அதிகாரிகளை அரசர் கண்காணிக்க முடியாவிடில் அரசாங்கப் பணிகள் எவ்வாறு நன்கு நடைபெறும்? மத்திய அரசாங்கம் செவ்வனே செயல்படாவிடில் மாகாணத் தலைவர்கள் சுயேச்சை அடையவே முயல்வார்கள். அதுவும் செய்திப் போக்குவரத்துச் சாதனங்கள் குறைவாக இருந்த அக்காலத்தில் அது மிக எளிதாகும். அசோகருடைய வழியினர் காலத்தில் பேரரசு அவ்வாறுதான் சிதறுண்டது. மேலும், பொதுவாக மௌரியப் பேரரசைப் போன்ற ஒரு பரந்த பேரரசைத் தேசிய உணர்வில்லாத அக்காலத்தில் செவ்வனே நீண்ட காலம் ஆட்சி புரிவதென்பது மிகவும் கடினமான செயலாம். அதனால்தான் V. A. ஸ்மித், பேராசிரியர் சத்யநாதய்யர் போன்ற வரலாற்றாசிரியர்கள் மௌரியப் பேரரசு வீழ்ச்சியடைந்தது வியப்பிற்குரியதன்று; அது அவ்வளவு காலம் இருந்ததுதான் வியப்பிற்குரியது, என்று கூறுகிறார்கள்.[1]

நிற்க, அசோகருடைய பௌத்த சமயக் கொள்கைக்கும் மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்கும் ஏதேனும் தொடர்புண்டா என்று ஆராயுமிடத்து அவருடைய வேள்வித் தடையும் அகிம்சைக் கோட்பாடும் அதுபற்றிய விதிகளும் வைதீக இந்துக்களிடையே மனக் குறையை ஏற்படுத்தியிருக்கும் என்பது திண்ணம். ஆனால், அது மௌரியர்களுக்கு எதிரான புரட்சியாக உருவெடுக்கும் நிலையில் இல்லை. அசோகருக்குப் பின் வந்த மன்னர்கள் அவருடைய கொள்கையைத் தொடர்ந்து பின்பற்றவில்லை; அப்படிப் பின்பற்றியிருந்தாலும் அசோகரைப் போல் அவர்கள் தீவிரமாய் இருந்திருக்கவும் முடியாது. சம்பிரதி, ஜலுகன் போன்றோர் வேறு சமயங்களைப் பின்பற்றியதைப் பார்த்தோம். கடைசி மன்னன் பிரகத்ரதன் (தீவிர) பௌத்தனு என்பது தெரியவில்லை. இருப்பினும், மௌரிய வம்சத்தைப்

[1] Prop. Sathianathaier, op. cit., p. 153, Smith, op.cit., p. 106.

பதவியிலிருந்து நீக்கிய புஷ்யமித்திரசுங்கனுக்கு வைதீக இந்துக்களின் அதிருப்தி ஊக்கத்தை அளித்திருக்கக் கூடிய சாத்தியக்கூற்றை மறுப்பதற்கில்லை. புஷ்யமித்திரன் பௌத்தர்களை வருத்தியது இங்கே குறிப்பிடத்தக்கது. இதைத்தவிர, அசோகர் அந்தணர்களுக்கெதிராக நடந்து கொண்டார் என்றும் அதனல் பேரரசு நிலைகுலைந்து வலிமையை இழந்ததென்றும் கூறுவதும் தவருகும். அசோகரின் அமைதிக் கொள்கையும் அகிம்சைக் கோட்பாடும் பேரரசின் வலிமையை அழித்ததாகக் கருதுவதும் தவருகும். ஒரு தலைமுறை முழுவதுமே அமைதிக் கோட்பாட்டைப் பின்பற்றினலும் அது ஒரு பேரரசைப் பலவீனப்படுத்த முடியாது எனத் தாபர் கூறுவது இங்குக் கவனிக்கத்தக்கது. வேறு பொருளாதார நெருக்கடியால் பேரரசு அழிந்தது என்று கருதுவதற்கும் தக்க சான்றில்லை. அதேபோன்று, அதிகாரிகளின் கொடுமையால் பேரரசு மெலிவுற்றது என்பதும் தவறு. திவ்வியர்வதானம் கூறுவதுபோல் சில அதிகாரிகள் மக்களைத் துன்புறுத்தியிருக்கலாம். ஆனல், அவனலேயே பேரரசு அழிந்தது என்று கூறுவது தவறேயாகும். சுருங்கக் கூறுமிடத்து, அசோகருக்குப் பின் வந்த மன்னர்களின் ஆற்றலின்மையும் அதிகாரங்கள் ஒரு சிலரிடம் குவிந்திருந்த ஒருமுக ஆட்சி முறையும் (Centralised administration) மௌரியப் பேரரசு அழிய முக்கிய காரணங்களாகும்.

# பகுதி VI

## 1. சமயநிலை

முந்திய அதிகாரத்தில் அசோகருடைய முயற்சியால் பௌத்த சமயம் சீரும் சிறப்பும் பெற்று வளர்ந்த வரலாற்றைப் பார்த்தோம். இப்பொழுது அக்காலத்தில் பிறசமயங்கள் இருந்த நிலையைப் பற்றிக் காண்போம். அசோகரின் நீண்ட ஆட்சியில் வைதீக இந்து சமயத்திற்கு அரசாங்கத்தின் ஆதரவு கிட்ட வில்லை. அரசர்களால் செய்யப்படும் வேள்விகள் நின்று போயின. அரசவையில் புரோகிதனின் செல்வாக்கு மங்கியது. உலகில் சடங்குகளால் பயனில்லை என்று அரசரே போதித்து வந்தார். சாதி முறையில் அமைந்த தர்மத்தை (வர்ணுசிரம தர்மம்) அரசாங்கம் போற்றவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக, அகிம்சைக் கோட்பாட்டைச் செயற்படுத்த அரசாங்கம் சில விதிகளையும் இயற்றியது. இருப்பினும், அசோகர் பிறசமயத் தினரைத் தம் சமயத்தில் சேரும்படி வற்புறுத்தவில்லை. தீவிர இந்துக்களான அந்தணர்களையும் இந்து துறவிகளையும் ஆதரிக்க வேண்டியது எல்லோரின் கடமை என்று அசோகர் போதித்த துடன் அதன்படியே நடந்தும் வந்தார். இந்துக்களையும் தம் மக்களாகவே கருதினுர்; எவ்விதத்திலும் அவர்களைக் கொடுமைப் படுத்தவில்லை. சுருங்கக் கூறின், அசோகர் பௌத்த சமயத்தின் வளர்ச்சிக்காகச் செய்த முயற்சிகள் இந்து சமயத்தை அழிக்கவில்லை. மாருக, அவை இந்துக்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தின என்று கருதலாம். சிவ வழிபாடும் விஷ்ணுவழிபாடும் மக்களிடையே அதிகரித்தன. மெகஸ்தனீஸ் கூறும் டையனீசஸ் (Dionysus) வழிபாடு சிவவழி பாடே ஆகும்.[1] மலைநாட்டு மக்கள் சிவனுக்குத் திருவிழா நடத்திய செய்தியை மெகஸ்தனீஸ் குறிப்பிடுகிருன். அர்த்த சாஸ்திரத்தில் குறிப்பிட்டுள்ள சங்கர்ஷண அடியார்கள் சிவனடியார்களே ஆவர். அவ் வடியார்கள் வேடத்தில் ஒற்றர்கள் செல்லலாமெனச் சாணக்கியர் கூறுகின்ருர். மெகஸ் தனீஸ் குறிப்பிடும் ஹீரக்கிளீஸ் வழிபாடு விஷ்ணு வழிபாடே. திருமாலை வாசுதேவன் என்ற நாமத்தால் அக்கால மக்கள் வழி

1 Prof. R. Sathianathaier, op. p. 156.

பட்டு வந்தனர். அதைப்பற்றிய குறிப்பு பாணினியின் இலக்கணத்தில் காணப்படுகின்றது. மதுராவிலும் இன்னோர் இடத்திலும் வாசுதேவனை வழிபட்ட மக்களைப் பற்றி மெகஸ்தனீஸ் தன்னுடைய நூலில் கூறுகிறான்; விஷ்ணு உருவ வழிபாட்டையும் அவன் குறிப்பிடுகின்றான். கி. மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுகள் வாசுதேவ வழிபாட்டின் வளர்ச்சியைக் காட்டுகின்றன.[1] இவ்வாறு மௌரியர்கள் காலத்தில் சைவமும், வைணவமும் வளரத் தொடங்கியமை இந்து சமயத்திற்கு ஒரு புதிய ஊக்கத்தை அளித்திருக்கவேண்டும். அசோகர் காஷ்மீரத்தில் சிவன் கோயில்களைக் கட்டியதாகவும் அவற்றில் இரண்டு அவர் பெயரால் — அசோகேஸ்வரம் — அழைக்கப்பட்டதாகவும் கல்ஹணன் கூறுகின்றான். கல்ஹணன் மிகவும் பிற்காலத்தில் வாழ்ந்தவன். எனவே, அவன் கூறுவதைச் சிலர் நம்பாமலிருக்கலாம். இருந்தாலும் அவன் இதைக் கற்பனையாகக் கூறியிருக்கமாட்டான் என்பது திண்ணம். அசோகருடைய மகன் ஜலுகன் அல்லது ஜலௌகன் சிவனை வழிபட்டவன் என்பது இங்கு நினைவு கூரத்தக்கது.

அசோகர் காலத்திற்கு முன்பே சமண சமயம் பௌத்த சமயத்தைவிட நன்கு வளர்ந்திருந்தது. அசோகருடைய பாட்டனாரான சந்திரகுப்தர் அச் சமயத்தைத் தழுவிப் பத்திரபாகுடன் சிரவணபெல்கோலாவிற்குச் சென்ற வரலாற்றை முன்பு பார்த்தோம். அச் செய்தி சமண சமயம் தெற்கே பரவியதைக் குறிக்கும் என்பது திண்ணம். நிற்க, மெகஸ்தனீஸ் தன்னுடைய நூலில் ஆடையின்றிப் பிறந்தமேனியில் வாழ்ந்து வந்த மெஞ்ஞானத்தோரைப் பற்றிக் கூறுகிறான். அவர்கள் புலால் உணவையும் தீயினால் சமைக்கப்படும் உணவையும் தொடுவதில்லையாம். காய், கனி, கிழங்குகளையே உண்டு வந்தனராம். மெகஸ்தனீஸ் குறிப்பிடும் அத்தகையோர் சமணரே என்று வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர்.[2] இக் கருத்து உண்மையானால், சந்திரகுப்தர் காலத்தில் சமணர்களிடையே இரு பிரிவுகள் ஏற்பட்டனவென்ற செய்தி உறுதியாகின்றது. கி.மு. மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆடை உடுத்திக் கொள்வது பற்றிச் சமணர்களிடையே பிளவு ஏற்பட்டது. ஆடையில்லாதிருப்பதை ஆதரித்தோர் திகம்பரர் எனப் பட்டனர். ஆடையுடுப்பதை ஆதரித்தவர்கள் ஸ்வேதாம்பரர் என அழைக்கப்பட்டனர். பாடலிபுத்திரத்தில் ஸ்வேதாம்பரர்கள் ஸ்தூலபத்திரர் தலைமையில் கூடிச் சமண வேதத்தை முறைப்

[1] Prof. K. A. Nilakanta Sastri, Age of the Nandas and Mauryas, p.305.
[2] Ibid pp 296—7.

படுத்தினர். ஆனால், திகம்பரர்களின் தலைவர் பத்ரபாகு அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. இவ்வாறு சமணர்களிடையே ஏற்பட்ட பிளவு தொடர்ந்து வளர்ந்து வந்தது. அதனால் சமண சமயம் பரவுவது தடைப்படவில்லை. அசோகர் காலத்தில் சமண சமயம் மகதத்தில் செல்வாக்கை இழக்கத் தொடங்கினாலும் பிற இடங்களில், குறிப்பாக மாளவத்தில், அது விரைவாகப் பரவி யது. சமணர்களிடையே பல பிரிவுகள் வளர்ந்ததும் அச் சமயம் வங்காளத்தில் பரவியதும் கல்பசூத்திரத்திலிருந்து தெரிகின் றது[1]. அசோகரது ஏழாவது கற்றூண் ஆணை தர்ம மகாமாத் திரர்கள் சமணர்களின் (நிற்கிரந்தர்கள்) நலத்தையும் கவனித்து வருவதாகக் கூறுகின்றது. அசோகருடைய பெயரன் சம்பிரதி சமண சமயத்தைப் பின்பற்றியவன் என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது.

அசோகர் ஆஜீவகர்களை ஆதரித்தது பற்றிக் கல்வெட்டுச் சான்று உள்ளது. ஆஜீவகர்கள் சமணரைப் போன்று ஒரு சமயப் பிரிவினர். அவர்கள் சமயத்தை ஏற்படுத்தியது மக்கலி கோசாலர். சமண சமயத்தில் தீர்த்தங்கரர்கள் இருந்ததைப் போல இச் சமயத்திலும் கோசாலருக்கு முன் ஆறு சமயத்தலை வர்கள் இருந்ததாகக் கூறப்படுகின்றது. கோசாலர், புத்தர், மகாவீரர் முதலிய மூவரும் ஒரே காலத்தில் வாழ்ந்தவர்கள். கோசாலரின் தந்தை மங்கலி ஒரு படம் காட்டும் நாடோடிப் பாடகன். தாயின் பெயர் பத்தா. இளமையில் தந்தையின் வழியிலே சென்ற கோசாலர் பிறகு மகாவீரரிடம் ஆறு ஆண்டுகள் சீடராக இருந்ததாகச் சமணநூல்கள் கூறுகின்றன. பின்னர் மகாவீரரை விட்டுப்பிரிந்து ஆறு மாதங்கள் கடுமை யான தவமிருந்து கோசாலர் மந்திர சக்தியைப் பெற்றாராம். அதன் பின் புத்தர் மகாவீரரைப் போல் தம்முடைய கோட் பாடுகளை மக்களுக்குப் போதித்து வந்தார். இவரது முக்கிய சீடர், திசாசரர் என்பவர் ஆவர். கோசாலருக்கும் மகா வீரருக்கும் அடிக்கடி சர்ச்சை ஏற்பட்டது. புத்தருடன் கூடக் கோசாலருக்கு நட்பு இல்லை. கடைசியாக மகாவீரருடன் ஏற்பட்ட மோதலில் அவர் கோசாலரைச் சபித்துவிட்டார். கோசாலரும் மகாவீரரைச் சபித்துவிட்டார். இருந்தாலும், துன்பமுற்றது கோசாலரே. அதன் பின் அவர் நோயுற்று இறந்துவிட்டார். புத்தர் பரிநிர்வாணம் அடைந்த மூன்றாண்டிற்குப் பின் கோசாலர் இறந்தார்.

ஆஜீவகா என்ற சொல் ஆஜீவா என்பதிலிருந்து ஏற்பட்ட தெனக் கூறப்படுகிறது; உயிருள்ளவரை விரதங்களைப் பின்

[1] Ibid, p. 298.

பற்றுபவன் என்பது இதன் பொருளாகும்; ஒரு குறிப்பிட்ட பிரிவினர் (துறவிகளாயினும் இல்லறத்தோராயினும்) நடத்தும் வாழ்க்கை முறையினையும் அச் சொல் குறிக்குமென்பர். ஆஜீவக சமயத்தில் சேர விரும்புவோர் சில சோதனைகளுக்கு உட்பட வேண்டும். அவையான: நெருப்புக் கட்டியைப் பிடித்தல், கழுத்துவரை ஓரிடத்தில் புதைக்கப்பட்டிருத்தல், தலைமயிரை வலியப் பிய்த்தெடுத்தல் முதலியனவாம். ஆஜீவகத் துறவிகள் ஆடையின்றி வாழ்ந்து வந்தனர். கோசாலருக்கும் மகாவீரருக்கும் முன்பே பிறந்தமேனியில் வாழ்ந்த துறவிகள் பலர் இருந்தனர். ஆஜீவகத் துறவிகள் பல நிலைகளிலிருந்தும், முள்மீதும் நெருப்பிலும் காட்டிலும் தாழிகளிலும் இருந்து தவம் செய்தனர். தவம் செய்யும் பொழுது உண்ணுமலும், நீர் அருந்தாமலும், அசையாமலும், பேசாமலும் இருந்து வந்தனர். துறவிகள் பிச்சை கேட்பதில் கூட சில வரையறை இருந்தது. ஆஜீவகர்களின் கடைசி விரதமென்பது ஆறு மாதம் பின்பற்ற வேண்டிய மிகக் கடுமையான நோன்பாகும். அதில் உயிர் பிரிந்தால் புண்ணியமாகக் கருதப்பட்டது. ஆஜீவகர்களிடையே அந்தணர்களென்றும் அந்தணரல்லாதோரென்றும் இரு பிரிவுகள் இருந்ததாக D. R. பண்டார்க்கார் கூறுவதற்குத் தக்க சான்றுகளில்லை.[1]

இனி, ஆஜீவகர்களுடைய சமயக் கோட்பாடுகளைக் கவனிக்குமிடத்து அவர்களுக்குக் கடவுள் நம்பிக்கை கிடையாது. சடங்குகளிலும் மனித முயற்சியிலும் கூட நம்பிக்கை இல்லை; கர்மக்கொள்கையில் ஓரளவே நம்பிக்கை கொண்டிருந்தனர்; எல்லாம் இயற்கையின் நியதிப்படியே நடப்பதாகக் கூறினர். அவர்களின் மற்ற கோட்பாடுகளாவன: மனித செயலில் பாவம், புண்ணியம் என்பன இல்லை. அவனவன் விதிப்படியே எல்லாம் நடைபெறுகின்றன. மனித முயற்சியால் எதையும் மாற்ற முடியாது. ஒருவனுக்கு அவன் விதிப்படி பல பிறவிகள் உண்டு. அவற்றிலிருந்து அவன் எத்தகைய ஆன்மீக முயற்சியாலும் தப்ப இயவாது. ஒருவனுடைய வாழ்க்கை முறைக்கும் அவன் அடுத்து எடுக்கும் பிறவிக்கும் தொடர்பில்லை. அவன் விதிப்படிதான் பிறவிகள் இருக்கும். ஒருவன் எத்தனை பிறவிகள் எடுக்கவேண்டுமோ அவற்றை எடுத்தபின் அவனது ஆன்மா விடுதலை பெறும். அத்தகைய விடுதலை அல்லது நிர்வாணத்தை அடையக் கோசாலரின் எண்வகை மகாநிமித்தங்களையும் இரண்டு மார்க்கங்களையும் பின்பற்ற வேண்டும். எண்வகை மகாநிமித்தங்களாவன :- (1) தெய்வீகம், (2) எச்சரிக்கையின்

[1] Contra, Bhandarkar, op. cit., p. 171.

அறிகுறிகள் (3) ஆகாயம் (4) பூமி (5) உடல் (6) ஒலி (7) அம்சங்கள் (8) அடையாளங்கள். இரண்டு மார்க்கங்கள் ஆடலும் பாடலுமே. ஆஜீவகர்களின் நியதிக் கோட்பாடு அவர்களைப் பௌத்த சமண சமயத்தினரிடமிருந்து பிரித்துக் காட்டுகின்றது. அதைப் போன்றதே அவர்களுடைய பிரபஞ்சக் கோட்பாடும்.

ஆஜீவகர்கள் சமணர்களைப் போன்று அகிம்சையில் நம்பிக்கை கொண்டிருந்தனர். அவர்கள் புலால் உண்பதில்லை. அவர்களிடையே சாதிப்பாகுபாடும் கிடையாது. அவர்கள் இருந்த ஊர்களில் அவர்களின் சபை இருந்தது. ஆஜீவக 'செய்யா' என்பது அத்துறவிகளின் மடமாகும்.

ஆஜீவகர்களைப் பிந்துசாரர் போற்றியதை முன்பே குறிப் பிட்டோம். அசோகருடைய எதிர்காலப் பெருமையை அவர் பிறக்கும் முன் அவருடைய தாய்க்குக் கூறியது ஓர் ஆஜீவகத் துறவியே. தமது பன்னிரண்டாம் ஆட்சியாண்டிலும், பத் தொன்பதாவது ஆண்டிலும் அசோகர் ஆஜீவகர்களுக்கு மூன்று குகைகளை வெட்டிக்கொடுத்த செய்தியைப் பராபர் குன்றுகளில் காணப்படும் கல்வெட்டுகள் கூறுகின்றன. அசோகருடைய பெயரனை தசரதரும் அவ்வாறு செய்ததை அங்குள்ள பிற கல் வெட்டுகள் நமக்கு உணர்த்துகின்றன. இலங்கையிலும் இம் மதம் பரவியிருந்ததாகத் தெரிகின்றது.

மௌரியர்களுக்குப் பின் சுங்கர்கள் காலம் வரை ஆஜீவக சமயம் வடஇந்தியாவில நன்னிலையில் இருந்தது. பின்னர் மங்கி மறைந்தது. தென்னிந்தியாவில் அது மௌரியர்கள் காலத்தில் பரவியதாகத் தெரிகின்றது. ஆஜீவகர்களைப் பற்றியசெய்திகள் சிலப்பதிகாரம், மணிமேகலை, நீலகேசி, சிவஞானசித்தியார் முதலிய நூல்களிலும், கல்வெட்டுகளிலும் காணப்படுகின்றன. கி.பி. பதினான்காம் நூற்றாண்டுவரை ஆஜீவக சமயம் தென்னிந் தியாவில் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன.[1]

அசோகருடைய கல்வெட்டுகளில் சிரமணர் என்போர் குறிப்பிடப்பட்டுள்ளனர். அச்சொல் முதலில் பொதுவாகத் துறவி களைக் குறித்தது. பின்னர்க் காலப்போக்கில் பௌத்த துறவிகள் அப் பெயரால் அழைக்கப்பட்டனர்.[2] அசோகர் குறிப்பிடும்

1 ஆஜீவகர்களைப் பற்றிய பிற செய்திகளை டாக்டர் A. L. பாஷம் அவர்கள் எழுதிய 'The Ajivikas' என்ற நூலில் காண்க.

2 K.A. Nilakants Sastri, op. cit. p. 293.

சிரமணர் பல சமயங்களையும் சார்ந்த துறவிகளே யாவர்.[1] மெகஸ்தனீசும் அதே பொருளில்தான் சிரமணர்களைக் குறிப்பிடுகின்றான். சிரமணர்களில் பல பிரிவுகள் இருந்தன. அவர்களில் காட்டில் வாழ்ந்து வந்தவர்கள் அரசர்களால் பெரிதும் போற்றப்பட்டதாக மெகஸ்தனீஸ் கூறியுள்ளான். சிரமணர்களில் சோதிடம் கூறுபவர்களும், மந்திரம் அறிந்தோரும், பெண்டிரும் இருந்ததாக அறியப்படுகின்றது.[2]

## 2. சமூகப் பொருளாதார நிலை

அசோகர் காலத்துச் சமூகப் பொருளாதார நிலையை அறிய அவர் கல்வெட்டுகள் ஓரளவிற்கே உதவுகின்றன. பெரும்பாலான செய்திகளைக் கௌடில்யரின் அர்த்தசாஸ்திரத்திலிருந்தும் மெகஸ்தனீசின் இண்டிகாவிலிருந்தும், பௌத்தநூல்களிலிருந்துமே அறிகின்றோம். அரியன் (Arrian), ஸ்ட்ராபோ (Strabo) முதலியோரின் குறிப்புகளும் ஆங்காங்குப் பயன்படுகின்றன.

அசோகருடைய கல்வெட்டுகளில் சாதியைப் பற்றிய குறிப்பு எதுவும் இல்லை. வேத காலத்தில் இருந்ததை விட மௌரியர்காலத்தில் சாதிப் பிரிவுகளில் அதிகமாக இருந்ததை இண்டிகாவிலிருந்தும் பிறநூல்களிலிருந்தும் அறிகிறோம். மெகஸ்தனீஸ் ஏழுவகை மக்கட் பிரிவுகள் இருந்ததாகத் தன்னுடைய நூலில் கூறுகிறான். அவையாவன : 'மெஞ்ஞானத்தோர்' உழவர்கள், போர்வீரர்கள், ஆடுமாடு மேய்ப்போர், தொழிலாளிகள், ஒற்றர்கள், அமைச்சர்கள்.' அக்கால இந்திய சமூகத்தில் பல சாதிப்பிரிவுகள் இருந்தது உண்மையே. ஆனால், மெகஸ்தனீஸ் கூறுவது போல அப் பிரிவுகள் இல்லை என்றே கூற வேண்டும். இண்டிகாவின் மூலம் முழுவதும் நமக்குக் கிடைக்கவில்லை என்பதையும் அந் நூலின் பகுதிகளை எடுத்தாண்ட பிற ஆசிரியர்கள் மூலமே அதை அறிகின்றோம் என்பதையும் இங்கு நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

மேற்கூறிய மக்கட் பிரிவுகளைப்பற்றிப் பொதுவாக மெகஸ்தனீஸ் சொல்வதாவது: ஒரு சாதியைச் சேர்ந்தோர் மற்றொரு சாதியுடன் மண உறவு கொள்வதில்லை; ஒரு தொழிலைப் புரிவோர் வேறு தொழிலில் ஈடுபடுவதில்லை. ஆனால், மெஞ்-

[1] Contra. D. R. Bhandarkar, op. cit., p. 169.
[2] K. A. Nilakanda Sastri, op. cit., p. 294.

ஞானத்தோருக்கு இதில் விதிவிலக்கு உண்டு, பிற நூல்களும் இச் செய்தியை உறுதிப்படுத்துகின்றன.

மெகஸ்தனீஸ் குறிப்பிடும் மெஞ்ஞானத்தோர் அந்தணர்கள் என்பதே அறிஞர்களின் கருத்து. அந்தணர்கள் சமூகத்தில் மிக மேலானவர்களாகக் கருதப்பட்டார்கள். அவர்களின் பொதுவான பணி வனங்களில் வாழ்ந்து வேதங்களைக் கற்றலும் இளைஞர்கட்கு அவற்றைப் போதித்தலுமாகும். சடங்குகள் அனைத்தையும் அவர்களே செய்து வந்தார்கள். அரசவையில் இருந்த புரோகிதன் அரசரிடத்தில் மிக்க செல்வாக்குப் பெற்றிருந்தான். எல்லா முக்கிய அலுவல்களிலும் அரசர் அவனைக் கலந்தாலோசிக்க வேண்டுமென அர்த்தசாஸ்திரம் வற்புறுத்துகின்றது. ஆனால், அசோகர் காலத்தில் அந்நிலை மாறியிருக்க வேண்டும், அவருடைய கல்வெட்டுகள் எதிலும் புரோகிதரைப் பற்றிய குறிப்பு இல்லை. இருந்தாலும், அவர்தம் ஆணைகள் பல அந்தணர்களைப் போற்றவேண்டுமென வலியுறுத்துகின்றன. துறவிகளையும் அந்தணர்களையும் அசோகர் ஒன்றாகவே மதித்துப் போற்றினார். பொதுவாகச் சமூகத்தில் அந்தணர்கள் சில சலுகைகளைப் பெற்றிருந்தனர். அவர்களுக்கு வரிகள் கிடையா. அவர்கள் உடைமைகளை எந்தச் சந்தர்ப்பத்திலும் பறிமுதல் செய்யக்கூடாது; எக் குற்றத்திற்காகவும் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கக் கூடாது. மிகக் கொடிய குற்றங்களுக்காக அவர்களுக்குச் சூடு போடலாம் அல்லது நாட்டை விட்டு அப்புறப்படுத்தலாம். தவறான சோதிடங்களைக் கூறும். மெஞ் ஞானத்தோர் தங்கள் வாழ்நாள் முழுதும் மௌனமாயிருக்க வேண்டுமென மெகஸ்தனீஸ் கூறுகிறான். மேலும், அவர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் மிக்க சொல்வாக்குப் பெற்றிருந்ததாக மெகஸ்தனீஸ் உரைக்கிறான்.

தத்தர் காலத்தில் க்ஷத்திரியர்கள் அந்தணர்களைப் போன்று உயர்வாக மதிக்கப்பட்டனர். அதன்பின் தாழ்ந்த குலத்தைச் சேர்ந்த நந்தர்களும் மௌரியர்களும் ஆட்சிக்கு வந்து நீண்ட காலம் பதவியில் இருந்ததால் க்ஷத்திரியர்களின் பழைய நிலை அப்படியே இருந்திருக்க முடியாது. பொதுவாகவே சாதி முறை பழைய நிலையில் இல்லை. புதுப் புதுச் சாதிகள் தோன்றி வளர்ந்து வந்தன.

சமூகத்தில் பெண்களின் நிலை ஆண்களுக்கு அடுத்ததாகவே இருந்தது. ஆடவரைப் போன்று பெண்டிர் சுதந்திரமாக இல்லை. இந்து சமயத்தைவிடப் பௌத்த, சமண சமயங்

களில் பெண்களுக்குத் தக்க இடம் அளிக்கப்பட்டது. பௌத்த, சமண சங்கங்களில் பெண்கள் உறுப்பினராக இருந்தனர். பொதுவாகப் பெண்களுக்குத் திருமணம் இன்றியமையாதது என்ற எண்ணம் நிலவியது. மெகஸ்தனீஸ் இந்தியர்கள் பல பெண்களைத் திருமணம் புரிந்து கொண்டதாகக் குறிப்பிடுவது உண்மையே. மணப் பெண்ணிற்குப் பரிசம் போடுவதுண்டு. அர்த்த சாஸ்திரத்தில் எண்வகைத் திருமணங்கள் குறிப்பிடப் பட்டுள்ளன. எல்லாவகைத் திருமணங்களுக்கும் பெற்றோரின் ஒப்புதல் வேண்டும். அப்பொழுதுதான் திருமணம் சமூக முறைப்படி சட்டபூர்வமனதாகும். பெண்களைக் கடத்திச் சென்று திருமணம் செய்துகொள்வதும், மயக்கத்திலோ அல்லது தூக்கத்திலோ தூக்கிச் சென்று திருமணம் செய்துகொள்வதும், காந்தர்வத் திருமணம் செய்துகொள்வதும் உண்டென்பது அர்த்த சாஸ்திரத்தால் அறியப்படுகின்றது.

அக்காலத்தில் பெண்கள் அரசாங்கத்தில் பணி புரிந்ததை அர்த்த சாஸ்திரத்திலிருந்தும் மேல் நாட்டினர் குறிப்புகளி லிருந்தும் அறிகிறோம். அரசனுக்கு மெய்க்காவலர்களாக இருந்தவர்கள் பெண்களே. அவர்கள் எப்பொழுதும் ஆயுதங்கள் தரித்திருந்தனர். அரசன் வேட்டைக்குச் செல்லும்பொழுதுகூட அத்தகைய பெண் காவலர்கள் புடை சூழத்தான் செல்வான். இப் பணிமகளிரில் பலர் பிற நாடுகளிலிருந்து விலைக்கு வாங்கப் பட்டவர்கள் என்று தெரிகிறது. பெண்கள் உளவு பார்க்கும் பணியில் மிகவும் பயன்படுவர் என்பது அர்த்த சரஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளது. அதற்கு ஏற்ற பெண்களையும் அது குறிப்பிடு கின்றது. எல்லா வயதுப் பெண்களும் நெசவுத் தொழிலுக்கு ஏற்றவர்கள் என்பது சாணக்கியரின் கருத்து.

பொதுவாகத் திருமண உறவு பற்றியும் குறிப்பாக மண விலக்கு, கைம்பெண் திருமணம் முதலியவைபற்றியும் அர்த்த சாஸ்திரம் விரிவாகக் கூறுகின்றது. மலடியாக இருந்தாலும் ஆண் பிள்ளையைப் பெறுவிடினும் ஒருவன் தன் மனைவியை விலக்கிவிடலாம். அதைப் போன்று கணவன் மனைவியை விட்டு நீண்ட காலம் விலகியிருந்தாலும், அரசாங்கத்திற்கு எதிரான செயல்களில் ஈடுபட்டாலும், அல்லது மனைவியின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்க இருந்தாலும். சாதியை விட்டு நீக்கப்பட்டிருந்தாலும், அல்லது சக்தியற்றிருப்பினும் அவனை மனைவி விலக்கி விடலாம். கணவனும் மனைவியும் மனமொத்துக் கூட அத்தகைய விலக்கினை ஏற்படுத்திக்கொள்ளலாம். கணவன் வெளி நாடு சென்று திரும்பாவிட்டாலும் துறவு பூண்டாலும்

இறந்தாலும் மனைவி மீண்டும் திருமணம் புரியலாம். ஆனால், அத்தகையோர் கொழுந்தனையே திருமணம் செய்துகொள்ள வேண்டும். கணவன் நீண்ட காலம் ஊரில் இல்லாதபொழுது உறவினர்கள் ஆதரிக்காவிடில் மனைவி மீண்டும் திருமணம் செய்துகொள்ளலாம். மாமனாரின் விருப்பத்திற்கு மாறாகத் திருமணம் புரிந்துகொள்ளும் கைம்பெண் தன் முதல் கணவனும் அவனைச் சேர்ந்தோரும் அளித்த பொருள்களைத் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும். பெண்களைப்பற்றிய பிற செய்திகளைக் கூறும் அர்த்தசாஸ்திரம், உடன்கட்டை ஏறுவதைக் குறிப்பிடவில்லை. ஆனால், மேல் நாட்டினர் அதைக் குறிப்பிடுகின்றனர். அதற்கு அவர்கள் கூறும் காரணம் விந்தையாக உள்ளது. தர்ம சூத்திரங்களைவிட அர்த்தசாஸ்திரம் பெண்களுக்குச் சாதகமாக இருப்பதாகப் பேராசியர் சத்தியநாதய்யர் கூறுவது இங்கே நோக்கத்தக்கது.[1]

மௌரியர்கள் காலத்தில் பரத்தையரை அரசாங்க அதிகாரி ஒருவர் கண்காணித்து வந்தார். அவர்கள் கல்வி, ஆடல், பாடல், ஓவியம், மாலை புனைதல், மணப் பொருள்கள் செய்தல் முதலியவற்றில் தேர்ச்சி பெறுவதற்காக அரசாங்கமே செலவு செய்தது. அதேபோன்று, அவர்களைக் காப்பாற்றும் பொறுப்பும் அரசாங்கத்துடையதே. பதிலாக, அரசாங்கம் அவர்களுக்கு வரி விதித்தது. அவர்களை உளவு பார்ப்பதற்கு அரசாங்கம் பயன்படுத்தியது. முதுமையுற்ற பரத்தையர் அரண்மனையில் வேறு பணியாற்றினர். பரத்தையரின் புதல்வர்கள் நாடகத்தில் பயிற்சி பெற்றனர்.[2]

மெகஸ்தனீசும் அரியனும் இந்தியாவில் அடிமை முறை இல்லை என்று கூறுகின்றனர். ஆனால், இது தவறான கருத்தென்பது பௌத்த நூல்கள், அர்த்த சாஸ்திரம், அசோகரின் கல்வெட்டுகள் முதலியவற்றிலிருந்து அறிகிறோம். அடிமைகளில் பலவகை உண்டு. சிலர் பரம்பரையாக அடிமைகளாய் இருந்தனர்; சிலர் பொருள் கொடுத்து வாங்கப்பட்டவர்கள். சிலர் பரிசாக அளிக்கப்பட்டவர்கள். அவர்கள் எல்லா வேலைகளையும் செய்து வந்தனர். மேல் நாட்டினரைவிட இந்தியர்கள் அடிமைகளிடம் இரக்கம் காட்டினர் என்பது அர்த்த சாஸ்திரத்தாலும் ஜாதகக் கதைகளாலும் அறியப்படுகின்றது. அர்த்த சாஸ்திரத்தில் அவர்களுடைய பாதுகாப்பு பற்றிய பல விதிகள் கூறப்பட்டுள்ளன; ஓர் அடிமையின் பிள்ளைகள் அடிமைகளாக

[1] op. cit , pp. 159.
[2] Ibid p. 160.

இருக்கவேண்டியதில்லை; ஓர் அடிமை தான் ஈட்டிய பொருளை வைத்துக்கொள்ளவும், தன் தந்தை ஈட்டியதைப் பெறவும், தான் ஈட்டியதைப் பிறருக்குக் கொடுக்கவும் உரிமையுண்டு. ஓர் அடிமைப் பெண் தன் தலைவனின் மூலம் குழந்தையைப் பெற்றால் தாயும் குழந்தையும் சுதந்தரமானவர்களாகக் கருதப் படுவார்கள். அசோகருடைய ஆணைகளில்[1] அடிமைகளை நன் முறையில் நடத்தவேண்டுமென்பது மீண்டும் மீண்டும் வலி யுறுத்தப்படுகின்றது. சண்டாளர் போன்ற தீண்டப்படாத மக்களைவிட அடிமைகளின் நிலை மேலானதாக இருந்தது.[2]

இனி, அக்காலத்தில் மௌரியப் பேரரசின் பொருளாதார நிலையைப்பற்றிக் காண்போம். கிராமங்களில் அரசாங்க அதிகாரிகளே நில வரியை நிர்ணயித்தனர். வரி விதிப்பிற்காக நிலங்கள் தர வாரியாகப் பிரிக்கப்பட்டன. அரசாங்கத்திற்குப் போர் வீரர்கள் அளிக்கும் கிராமங்கள் வரி விலக்குப் பெற்றிருந் தன. சில கிராமங்களில் வரிக்குப் பதிலாக அரசாங்கத்திற்கு வேலை செய்யக்கூடிய ஆட்களை அனுப்புவதுண்டு. அதே போன்று வரிகளைத் தானியமாகவும், ஆடு மாடுகளாகவும், அளிக்கும் கிராமங்களும் இருந்தன. பாசன வசதிக்கேற்ப நிலவரி விதிக்கப்பட்டதென்பதை முன்பே பார்த்தோம்.[3] அரசர் விரும்பினால் எந்தக் கிராமத்து நில வரியையும் குறைக்க லாம் என்பதை ரும்மிந்தெய் கல்வெட்டால் அறிகிறோம். மேலும், உழவர்கள் நிலவரி தவிர வேறு வரிகளையும் கட்டி வந்தனர். அரசர் தனியாக நிலங்கள் பெற்றிருந்ததை அர்த்த சாஸ்திரத்தி லிருந்து அறிகிறோம். காடுகள், (ஆடு மாடுகள்) பசுக்கள், உழவுத் தொழில் முதலியவற்றைக் கவனிக்கத் தனி கண்காணிப் பாளர்கள் (Superintendents) இருந்தனர். அசோகரின் கொல்லாமைக் கோட்பாட்டால் மீனவர்களும் வேடர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பர் என்பது திண்ணம். கிராம அலுவல்களைக் கிராமணி என்ற அதிகாரியும் கிராம முதியோர் களும் கவனித்து வந்தனர். மௌரியர்கள் காலத்து உழவர்கள் உழைப்பாளிகளாகவும், அறிவு மிக்கவர்களாகவும், சிக்கன முடையோராகவும், நேர்மையானவர்களாகவும் இருந்ததாக மெகஸ்தனீஸ் கூறுகின்றான். மௌரியப் பேரரசில் பஞ்சம் இல்லையென அவன் கூறுவது தவறான செய்தியாகும். அக் காலத்தில் நிலவிய பஞ்சங்களைப்பற்றிச் சமண நூல்கள் குறிப்பிடு கின்றன.

[1] கற்றூண் VII, ஆணை கற்பாறை ஆணைகள் IX, XI & XIII.

[2] Romila Thaper, pp. 89—92.

[3] மூன்றாவது அதிகாரம்.

[4] Ibid.

மௌரியர்கள் காலத்தில் நகரங்கள் மிகுதியாக இருந்தன. திட்டமிட்டுக் கட்டப்பட்ட நகரங்கள் பல இருந்தன. முக்கிய மான நகரங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. சுகாதாரப் பணிகள் நன்கு கவனிக்கப்பட்டன. தெருக்களில் கழிவு நீர் செல்லும் குழாய்கள் அமைக்கப்பட்டிருந்தன. மரத்தா லான கட்டடங்கள் இருந்தமையால் தீயணைக்கும் ஏற்பாடுகள் நன்முறையில் செய்யப்பட்டிருந்தன. நகரத்தின் அலுவல்களை நகரகர், கோபர், ஸ்தானிகர் முதலிய அதிகாரிகள் கவனித்து வந்தனர்.

மௌரியர்கள் காலத்தில் இருந்த பிற தொழில்கள் சுரங்கங் களிலிருந்து கனிப் பொருள்களை எடுத்தல், நெசவு செய்தல், மதுபானம் தயாரித்தல், கப்பல் கட்டுதல், ஆயுதங்கள் தயாரித்தல், தச்சு வேலை, கருங்கல் வேலை, தோல் வேலை, சாயம் போடல், மட்பாண்டங்கள் செய்தல், சர்க்கரை தயாரிப்பு, எண்ணெய் எடுத்தல் முதலியவையாகும். இவற்றில் முதல் ஐந்தும் முக்கியமானவை. தச்சு வேலையும், கருங்கல் வேலையும் நன்கு வளர்ந்திருந்தன என்பதை அறியத் தக்க சான்றுகள் உள்ளன. தொழில் வினைஞர்களின் குழுக்கள் (guilds) ஆங்காங்கு உள்ள தொழில்களை ஒழுங்குபடுத்தி வந்தன. பொற்கொல்லர்கள், நகை வணிகர்கள், தச்சர்கள், நெசவாளிகள் முதலியோரின் குழுக்கள் (guilds) சிறப்பாகப் பணியாற்றி வந்தன. தொழில் வினைஞர்கள் பிறரை ஏமாற்றினால் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். அதைப் போன்றே தொழில் வினைஞர்களுக்கு யாராவது ஊறு செய்தாலும் அல்லது அவர்களின் பொருள்களைக் கவர்ந்து சென்றாலும் அன்னோர் கடுமையான தண்டனைக்குள்ளாயினர். வேலையின் அளவிற்கும் தரத்திற்கும் ஏற்பக் கூலி என்ற நிர்ணயமும் இருந்தது. ஏமாற்று வேலை செய்யும் தொழிலாளி தொழிற் குழுவில் நீடித் திருக்கமுடியாது.

வாணிகத்தைப் பற்றிப் பல விதிகள் இருந்தன. அவற்றை வணிகக் கண்காணிப்பாளரும் (Superintendent of commerce) கப்பல் கண்காணிப்பாளரும் (Superintendent of Ships) செயற் படுத்தி வந்தனர். வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பண்டங்களின் மதிப்பில் ஐந்தில் ஒரு பகுதி சுங்கவரியாக வசூலிக்கப்பட்டது. அதற்கு மேலும் ஒரு வணிகவரி (Trade tax) இருந்தது. அது சுங்கவரியில் ஐந்தில் ஒரு பகுதி தொகை யாகும். விற்பனையாகும் பண்டங்களுக்கும் வரிவிதிக்கப்பட்டது.

அது பண்டங்களைப் பொறுத்து அவற்றின் மதிப்பில் ஆறில் ஒன்றிலிருந்து இருபத்தைந்தில் ஒன்றுவரை விதிக்கப்பட்டது. பெரும்பாலான பண்டங்களுக்குப் பத்தில் ஒன்று வரியாக வசூலிக்கப்பட்டது. உள்நாட்டில் உற்பத்தியாகும் பொருள் களுக்கும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்பவற்றுக்கும் அடையாளம் இடப்பட்டது. வரி ரொக்கமாக வசூல் செய்யப் பட்டிருத்தல் வேண்டும். பழைய பண்டங்களைப் புதியவற்று டன் கலத்தல் குற்றமாகும். பழைய பண்டங்களை விற்க வேண்டுமானால் வணிகக் கண்காணிப்பரின் முன்னிலையில்தான் விற்கவேண்டும்.

பண்டங்களின் விலைகளையும் அரசாங்கம் கட்டுப்படுத்தி வந்தது. வணிகர்கள் அடையக்கூடிய இலாபம் அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டது. வெளிநாட்டுப் பண்டங்களை விற்பதில் பத்து சதவீத இலாபம் அனுமதிக்கப்பட்டது. உள்நாட்டுச் சரக்குகள் விற்பனையில் அது ஐந்து சதவீதமாக இருந்தது. மேற்கொண்டு இலாபம் அனுமதிக்கப்படுவதுண்டு. ஆனால், அது அரசாங்கத்திற்குத்தான் சேரும். ஒரு பொருளை மதிப்பிட்டு வரி நிர்ணயிக்கப்படுமுன், அதை வாங்குவது குற்றமாகும். அர்த்தசாஸ்திரத்தில் கூறப்படும் இவ் விதிகள் நடைமுறையில் செவ்வனே செயற்பட்டிருக்க இயலாதென ரோமிலா தாபர் கருதுகிறார்.[1]

வரிகொடாமல் ஏமாற்றுவோரின் சரக்குகளை அரசாங்கம் பறிமுதல் செய்தது; அல்லது அவர்களுக்குத் தக்க தண்டம் விதித்தது. ஸ்ட்ராபோ கூறுவதுபோல் அவர்களுக்குக் கொடிய தண்டனை வழங்கப்பட்டதாகத் தெரியவில்லை.[2]

இந்தியாவின் வெளிநாட்டு வாணிகம் மௌரியர்கள் காலத்தில் பெரிதும் வளர்ச்சியடைந்தது. பேரரசின் பரப்பும், மன்னர்களின் ஆட்சித் திறமும், நீண்டகால அமைதியும், கிரேக்க நாடுகளுடன் கொண்ட அரசியல் தொடர்பும், அசோகரின் சமயப் பரப்புப் பணியும் அதற்கு ஊக்கமளித் திருத்தல் வேண்டும். பண்டங்கள் தரைவழியாகவும், ஆற்று வழியாகவும், கடல் வழியாகவும், எடுத்துச் செல்லப்பட்டன. பேரரசின் பல பாகங்களையும் நீண்டசாலைகள் இணைத்தன. அவற்றுள் பாடலிபுரத்திலிருந்து தட்சசீலம்வரை இருந்த சாலை மிக முக்கியமானது. அசோகர் பயணிகளுக்கு (வழிப்போக்கர்

[1] op. cit, pp. 77 and 78.
[2] Ibid.

கள்) செய்த நன்மைகள் உள்நாட்டு வணிகப் பெருக்கத்திற்குத் துணைபுரிந்திருக்கு மென்பது திண்ணம். வட பர்மா, தென்னிந்தியா, மேற்கு நாடுகள் முதலியவற்றுடன் பெருத்த அளவில் வாணிகம் நடைபெற்றது. தங்கம், வெள்ளி, செப்புநாணயங்கள் நடைமுறையில் இருந்தன. பண்டமாற்று ஒலேயும் இருந்ததாக அர்த்த சாஸ்திரம் கூறுகின்றது.[1]

வணிகர் குழுக்கள் நல்ல நிலையில் இருந்தன. அவற்றிற்குச் சில சலுகைகள் அளிக்கப்பட்டிருந்தன. கொடுக்கல் வாங்கலில் 15 சதவீதமாக அரசாங்கம் வட்டி நிர்ணயித்திருந்தது. வாணிகத்தில் அதற்குமேலும் வட்டி வாங்கப்பட்டதெனத் தெரிகிறது.[2] இந்தியர்களுக்குக் கடன் வாங்கத் தெரியாதென மெகஸ்தனீஸ் கூறுவது தவறான கருத்தாகும்.[3]

பொதுவாக, மௌரியர்கள் காலத்தில் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திருந்தது. அந்தணர்களையும் துறவிகளையும் ஆதரிப்பது இல்லறத்தோரின் கடமையாய் இருந்தது. அறச்சாலைகள் எங்கும் இருந்தன. அதே போன்று மாந்தருக்கும் விலங்குகளுக்கும் பிணி தீர்க்கும் ஆதுரசாலைகள் நிறுவப்பட்டிருந்தன. பயணம் புரிவோருக்காக வழிநெடுக நிழல் தரும் மரங்களும், கிணறுகளும், தண்ணீர்ப் பந்தல்களும், தங்குமிடங்களும் அமைக்கப்பட்டிருந்தன. மக்களின் கவனத்தை அறநெறியில் திருப்பப் பெருவேந்தரும் செல்வரும் பல வழிகளில் பாடுபட்டனர். பெண்டிரின் நலத்தையும் அரசாங்கம் புறக்கணிக்கவில்லை. ஏழைகளும் முதியவர்களும் கொடிய தண்டனைக்காளானால் அரசாங்கம் அவர்கள் குடும்பத்திற்கு உதவி செய்தது.

## 3. பண்பாடு: கல்வி, கலைகள்

இவ் வதிகாரத்தில் கல்வி, இலக்கியம், தத்துவம், கட்டடக் கலை, சிற்பக்கலை முதலிய துறைகளில் மௌரியர்கள் காலத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்தைக் காண்போம். மெகஸ்தனீஸ் இந்தியர்களுக்கு எழுதத் தெரியாதென்றும், இந்தியாவில் எழுதப்பட்ட சட்டங்கள் இல்லையென்றும் கூறுவது தவறான கருத்தே. மௌரியர்கள் காலத்திற்குப் பல நூற்றாண்டிற்கு முன்பே எழுதும் முறை இந்தியாவில் இருந்தது. அர்த்தசாஸ்தி

[1] prof. R. Sathianathaier, op. cit., p. 142.
[2] Romilathapar, op. cit., p. 79.
[3] Ibid, pp. 78-79.

ரத்தில் அரசனுடைய ஆணைகளை எப்படி வெளியிடவேண்டும் என்ற விவரம் கூறப்படுவதுடன் அரசாங்கப் பதிவேடுகள் எவ்வாறு காப்பாக ஓர் அறையில் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. அசோகருடைய கல்வெட்டுகளே மெகஸ்தனீசின் கூற்றை மறுக்கப் போதுமான சான்றுகளாகும். அசோகர் காலத்தில் இந்துக்கள் வட மொழியைப் போற்றியது போல் பௌத்தர்களும் சமணர்களும் பிராகிருத மொழிகளை ஆதரித்தனர். அவர்களுடைய வேதங் களும் பிராகிருதத்திலேயே எழுதப்பட்டன. மிகப் பழமையான பிராகிருதமான பாலிமொழி அசோகர் காலத்தில் மேன்மை யுற்றது.

அக் காலத்தில் பரவலாக இருந்த கல்விமுறை குருகுல வாசமே. பிரமச்சரிய விரதம் பூண்டு தக்க ஆசிரியர்களை அண்டிப் பல ஆண்டுகள் கற்பதே மரபாகும். எற்றகுடி சிறிய கற்பாறை ஆணையில், மாணவர்கள் ஆசிரியர்களிடம் நடந்து கொள்ளவேண்டிய முறையைப்பற்றி அசோகர் குறிப்பிடுகிறார். பிற கல்வெட்டுகளில் ஆசிரியர் சொற்படி கேட்டலை அசோகர் திரும்பத் திரும்ப வலியுறுத்துகிறார். அரசகுமாரர்களின் கல்வி யைப்பற்றி அர்த்தசாஸ்திரம் கூறுவதாவது 'சிறார் பருவத்தில் அரிச்சுவடி, கணிதம் இரண்டினையும் பின்னர் வேதங்கள், தத்துவம், பொருளாதாரம், அரசியல், போர்முறை, இதி காசங்கள் முதலியவற்றையும் கற்க வேண்டு'மென்பதாகும். இதிகாசங்களில் தர்மசாஸ்திரங்களும் அர்த்தசாஸ்திரமும் அடங்கும். சாங்கிய தத்துவத்தைக்கூட (Sankha System) அறிய வேண்டுமெனக் கூறப்படுகின்றது. தத்துவ சாஸ்திரத் தின் முழுப்பயனையும் சாணக்கியர் நன்கு உணர்ந்திருந்தார். எல்லா அறிவிற்கும் அது விளக்குப் போன்றிருப்பதாகப் புகல் கின்றார். பொதுவாகக் கல்வியறிவு பரவுவதற்கு இந்து சமயத்தை விட பௌத்த, சமண சமயங்கள் தொண்டாற்றியுள்ளன. மௌரியர்கள் காலத்தில் தட்சசீலப் பல்கலைக்கழகம் மேன்மை யுற்றிருக்க வேண்டும்.

மௌரியர்கள் காலத்து நூல்களில் மிகவும் புகழ்பெற்றது சாணக்கியர் எழுதிய அர்த்தசாஸ்திரமாகும். சூத்திரநடையில் உள்ள அதற்கு நூலாசிரியரே விளக்கவுரையும் அளித்துள்ளார். சாணக்கியருக்கு முன்பும் அரசியலைப்பற்றி நூல்கள் எழுதப் பட்டிருந்தன. அவர் பூர்வாச்சாரியர்களைக் குறிப்பிடுவதிலிருந்து இது புலனாகின்றது. அர்த்தசாஸ்திரத்தின் முதல் பகுதி அரசர், அமைச்சரவை, அரசாங்கத்தின் பல துறைகள் (Departments) முதலியவற்றையும், இரண்டாம் பகுதி சிவில், கிரிமினல் சட்டங்

களையும், மூன்றும் பகுதி பன்னுட்டுச் சட்டங்கள், அரசியல் சூழ்ச்சி, போர் முதலியவற்றையும்பற்றி விரித்துக் கூறுகின்றது. மேலும், அது அரசியல் கோட்பாடுகளை விளக்குவதுடன் நடைமுறை அரசியலையும் நன்கு எடுத்துக் கூறுகின்றது. சாணக்கியருக்குக் கௌடில்யர், விஷ்ணு குப்தர், வாத்சாயனர், திராவிடாச்சாரி என்ற வேறு பெயர்களும் உண்டு. சுருங்கக் கூறுமிடத்து பண்டைய இந்தியர் அரசியலில் கொண்டிருந்த ஆழ்ந்த ஈடுபாட்டிற்கு அர்த்தசாஸ்திரம் ஓர் எடுத்துக் காட்டாகும்.

நிற்க, தர்மசூத்திரங்களில் முன்னர் இயற்றப்பட்டவை நீங்க மற்றவைகள் மௌரியர்கள் காலத்தில்தாம் எழுதப்பட்டன. பிந்துசாரரின் அமைச்சரான சுபந்து என்பவன் வடமொழியில் ஒரு நாடகம் இயற்றியதாக இலக்கிய மரபு செய்தி உள்ளது. இச் சுபந்து வாசவதத்தையை எழுதிய சுபந்துவினின்றும் வேறுபட்டவன். சந்திரகுப்த மௌரியர் காலத்தில் சமண வேதத்தின் ஒரு பகுதி ஏற்பட்டது. அதுபோன்று, அசோகர் காலத்தில் பௌத்த வேதத்தின் பெரும் பகுதி பாடலிபுத்திரத்தில் நடைபெற்ற பௌத்த மாநாட்டின் விளைவாகக் கதாவத்து எழுதப்பட்டதை முன்பே குறிப்பிட்டுள்ளோம். அசோகரின் ஆணைகள் உயர்ந்த ஆன்மீக இலக்கியமென்றால் மிகையாகாது.[1]

இந்துசமயத் தத்துவத்தைப்பற்றி இக்காலத்தில் தோன்றிய நூல்கள் மீமாம்ச சூத்திரங்களும் பிரம்ம (வேதாந்த) சூத்திரங்களுமாகும். மீமாம்ச சூத்திரங்களை இயற்றிய ஜெய்மினி கி. மு. மூன்றும் நூற்றுண்டைச் சேர்ந்தவரென டாக்டர் ஜாகோபி கருதுகின்றார்.[2] ஜெய்மினியும் பிரம்ம சூத்திரங்களின் ஆசிரியரான பாதராயேணனும் ஒரே காலத்தவர். இவ் விருவரும் வேதகால சமயத்தை வரையறுத்துக் கூறியவர்கள். பிரம்ம சூத்திரங்களுக்குச் சங்கரர், இராமானுஜர், மாதவாச்சாரியர், நீலகண்டர் முதலியோர் விளக்கவுரை கூறியிருப்பது ஈண்டு நினைவுகூரத் தக்கதாம். இந்து, சமண, பௌத்த தத்துவங்களைத் தவிர ஆசீவர்களின் தத்துவமும் இக்காலத்தில் வளர்ச்சியுற்றிருந்தது. வைசேஷிகரின் தத்துவ வளர்ச்சிக்குச் சமண சமயம் ஓங்கியது ஒரு காரணமென அறிஞர்கள் கருதுகின்றனர்.[3] அந்தணர்கள் தம் பெண்டிருக்குத் தத்துவத்தைப்பற்றிக் கூறு

1 Vide Prof. R. Sathianathaier, op. cit., p. 161.

2 Ibid. p. 162.

3 Ibid. p. 162.

வதில்லை என்று மெகஸ்தனீஸ் கூறுவது உண்மையெனத் தோன்று கின்றது.

நிற்க, அசோகர் காலத்தில் கணக்கற்ற கட்டடங்கள் கட்டப்பட்டன. அதற்கு முக்கியக் காரணமாக இருந்தது அவர் பௌத்த சமயத்தில் கொண்ட ஈடுபாடேயாகும். அசோகர் காஷ்மீரத்தில் ஸ்ரீநகரையும் 500 பௌத்த மடங்களையும் கட்டிய தாக இராஜதரங்கிணி கூறுகின்றது. கி. பி. ஏழாம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்த ஹியூன்சாங் காஷ்மீரம் முழுவதையுமே அசோகர் பௌத்த மடங்களுக்கு அர்ப்பணித்ததாகக் கூறு கிறார். நேபாளத்தில் அசோகர், புத்தர் பிறந்த இடத்திற்கு யாத்திரை சென்றதன் நினைவாக நான்கு ஸ்தூபிகளும், தேவப் பட்டணம் என்ற நகரமும் அமைக்கப்பட்டனவென்றும், அங்கு அசோகரின் மகள் சாருமதியும் அவள் கணவன் தேவபாலனும் இரண்டு மடங்களைக் கட்டியதாகவும் வழிவழிச் செய்தி உள்ளது. திவ்வியாவதானத்தில் அசோகர் 84,000 ஸ்தூபிகளைக் கட்டிய தாகக் கூறப்படுகின்றது. மகாவம்சத்தில் அசோகரும் அவரு டைய சிற்றரசர்களும் 84,000 பௌத்த விகாரங்களை (மடங்கள்) 84,000 நகரங்களில் கட்டியதாகச் சொல்லப்படுகின்றது. குப்தர்கள் காலத்தில் இந்தியாவிற்கு வந்த பாகியானும் அசோகர் 84,000 பௌத்த ஸ்தூபிகளைக் கட்டியதாகக் கூறுகின்றார். ஹியூன்சாங் தம்முடைய பயணக் குறிப்பில் 80 ஸ்தூபிகளை யும் விகாரங்களையும் குறிப்பிட்டுள்ளார்.[1] இருப்பினும், அசோக ருடைய கல்வெட்டுகளில் அவர் கட்டிய ஸ்தூபிகளையும் விகாரங்களையும் (மடங்களையும்) பற்றிய செய்திகள் அரிதாயுள் ளன. நிக்லீவாவில் உள்ள கல்வெட்டில் அசோகர் அங்கிருந்த கோனாகமன புத்த ஸ்தூபியை இருமுறை விரிவுபடுத்தியதாகக் கூறப்பட்டுள்ளது. பராபர் குன்றுகளில் அசோகர் ஆஜீவிகர் களுக்குக் குகைகள் வெட்டிக் கொடுத்த செய்தியை அங்குள்ள அவர் கல்வெட்டுகள் கூறுகின்றன. இவை தவிர, அவர் கட்டிய ஸ்தூபிகளைப்பற்றி கல்வெட்டுகளில் வேறு செய்தி இல்லை. இருப்பினும், திவ்வியாவதானமும் மகாவம்சமும் கூறு பவை கற்பனை என்று ஒதுக்கிவிடுவதற்கில்லை. பாகியானும் ஹியூன்சாங்கும் இதுபற்றிக் கூறுவதில் ஓரளவேனும் உண்மை யிருத்தல் வேண்டும். புதைபொருள் ஆராய்ச்சியும் இக் கருத் தையே வலியுறுத்துகின்றது. அசோகர் 84,000 ஸ்தூபிகளையும் பௌத்த விகாரங்களையும் கட்டினார் என்பதை உறுதியாகக் கூற இயலாவிடினும், அவர் கணக்கற்ற ஸ்தூபிகளையும் விகா ரங்களையும் கட்டியிருக்கக்கூடும் என்று கொள்வதில் தவறில்லை.

[1] விவரங்களை R. K. முகர்ஜி அளித்துள்ளார்—Op. cit., p. 82.

இனி, ஸ்தூபி என்பது புத்தர் அல்லது பௌத்த முனிவர்களின் ஈமச் சாம்பலையுடைய பேழைகளை வைத்துக் கட்டப்பட்ட வட்டவடிவமான கட்டடமாகும். இது தலைகீழாயுள்ள கிண்ணத்தின் தோற்றத்தை ஒத்தது. புத்தரின் வாழ்க்கையில் முக்கியமான நிகழ்ச்சிகள் நடந்த இடங்களிலும் ஸ்தூபிகள் கட்டப்பட்டன. அசோகர் காலத்தில் செங்கல்லாலும் கருங்கல்லாலும் ஸ்தூபிகள் கட்டப்பட்டன. அவற்றின் உச்சி, தட்டையாகச் சதுர உருவில் இருந்தது. அதன்மேல் ஒன்றன்மேல் ஒன்ருகப் பல வட்டக் கற்றளங்கள் இருந்தன. ஸ்தூபிகளின் அடிப்பீடத்தைச் சுற்றி வேலி போன்று கருங்கல்லால் அமைக்கப்பட்டது. சில இடங்களில் அது அழகிய சிற்ப வேலையுடன் உள்ளது. வேறு சில இடங்களில் எளியதாய் உள்ளது. சில ஸ்தூபிகளின் வாயிற்புறம் நுணுக்கமான சிற்ப வேலைகளைக் கொண்டுள்ளது.

ஆஃப்கானிஸ்தானத்தில் அசோகரால் கட்டப்பட்ட ஸ்தூபிகளை ஹியூன்சாங் பார்த்தகாகத் தமது நூலில் குறிப்பிடுகிருர். அவர் குறிப்படுவதில் ஒன்று கபிசா நகரில் இருந்த நூறடி உயரமுள்ள ஸ்தூபியாகும். அதே போன்ற முந்நூறடி உயரமுள்ளதும் மிக்க வேலைப்பாடு உள்ளதுமான மற்ரெரு ஸ்தூபி ஜலாலாபாத் அருகே உள்ள நங்ரகாரில் இருந்தது. ஸ்வாட் பள்ளத்தாக்கிலும் அத்தகைய பௌத்த சின்னங்கள் இருந்தனவாம்.[1]

பாடலிபுரத்திலிருந்த அசோகாராம பௌத்த மடம் (குக்கூடராம பௌத்த மடம்) அசோகரால் கட்டப்பட்டதாகும். அதில் ஆயிரம் பிக்குகள் தங்கியிருந்ததாக ஹியூன்சாங் கூறுகிருர். நாலந்தாவில் இருந்த பெரிய பௌத்த மடத்தை அசோகர் கட்டியதாகத் திபேத்திய பௌத்த ஆசிரியரான தாரநாதன் கூறுகிருர். அதே இடத்தில் வேறு கட்டடங்களையும் அசோகர் எழுப்பியதாகக் கூறப்படுகிறது.[2]

சாஞ்சி ஸ்தூபியைப்பற்றி V. A. ஸ்மித் கூறுவதாவது: "சாஞ்சியில் உள்ள மூல ஸ்தூபி ஒரு குன்றின்மேல் உள்ளது; செங்கற்களால் கட்டப்பட்டது; ஸ்தூபியின் மேற்புற அடிவிட்டம் 110 அடியாகும்; பீடத்தின் விட்டம் 121 அடி; நன்னிலையில் இருந்தபொழுது ஸ்தூபியின் உயரம் $77\frac{1}{2}$ அடியாக இருந்திருக்குமென நம்பப்படுகிறது. அதனைச் சுற்றி 11 அடி உயரமுள்ள தூண்களையும் பெருங் கற்களையும் கொண்ட கல்வேலி

[1] V. A. Smith, op. cit., p. 76.
[2] Ibid. p. 110.

ஒன்று அமைந்திருந்தது. சிற்ப வேலைப்பாடு மிக்கதும் 34 அடி உயரம் உள்ளதுமான நான்கு வாயில்கள் இருந்தன. இப்பொழுது காணப்படும் ஸ்தூபி அசோகர் காலத்திற்கு ஒரு நூற்றாண்டிற்குப் பிறகு கட்டப்பட்டது. மூல ஸ்தூபி அசோகரால் கட்டப்பட்டதென்பதில் ஐயமில்லை. ஸ்தூபியின் தெற்கு வாயில் அருகே அசோகருடைய கற்றூண் ஒன்று இருந்தது. அதன் உச்சியில் அழகிய மூன்று சிங்கங்களின் சிலையும் இருந்தது. சாஞ்சியில் அசோகருடைய முதலாவது சிறிய கற்றூண் ஆணையின் நகல் ஒன்றும் உள்ளது. அது மூல ஸ்தூபி காலத்தைச் சேர்ந்ததென்றும், மூல ஸ்தூபி அசோகருடைய கடைசிப் பத்தாண்டுக் காலத்தில் கட்டப்பட்டிருத்தல் வேண்டும் என்றும் தெரிகிறது.[1]

1873ஆம் ஆண்டு சர் அலெக்சாண்டர் கன்னிங்ஹாம் என்ற அறிஞர் மத்திய இந்தியாவில் பார்கட் (Bharhut) என்னுமிடத்தில் அசோகர் காலத்திய நடுத்தர ஸ்தூபி ஒன்றைக் கண்டுபிடித்தார். அது செங்கற்களால் கட்டப்பட்டது. அதனுடைய சுற்றுச் சுவர் அல்லது கல்வேலி சிற்ப வேலைப்பாடு மிக்கது. அதில் அசோகர் காலத்து சில கல்வெட்டுகள் உள்ளன. இவை தவிரப் பாடலிபுத்திரம், பெஸ்நகர் முதலிய இடங்களில் காணப்படும் சில ஸ்தூபியின் சின்னங்கள் அசோகர் காலத்தைச் சேர்ந்தவை என்று V. A. ஸ்மித் கருதுகின்றார்.[2]

நிற்க, குப்தர்கள் காலத்தில் பாடலிபுரத்திற்கு வந்த சீன யாத்திரிகர் பாகியான் அசோகருடைய அரண்மனையையும் மண்டபங்களையும் கண்டதாகவும் அவை யாவும் பிரம்மாண்டமானவையாகவும் அழகிய சிற்ப வேலைப்பாடுடையனவாகவும் இருந்தன என்றும், அவற்றை ஆவிகள் கட்டியதாகவும் குறிப்பிட்டுள்ளார். அக் குறிப்பிலிருந்து ஓர் உண்மை நன்கு புலப்படுகின்றது. அதாவது, அசோகருடைய கட்டடங்கள் ஆவிகளால் கட்டப்பட்டனவோ என்று வியக்கத்தக்க அளவில் வனப்பும் பெருமையும் பெற்றிருந்தன என்பதே. கி. பி. ஏழாம் நூற்றாண்டில் பாடலிபுத்திரத்தில் அசோகருடைய கட்டடங்கள் யாவும் அடையாளம் கூற முடியாத அளவில் பாழடைந்திருந்தன என்பது ஹியூன்சாங்கின் குறிப்பிலிருந்து விளங்குகின்றது.

சந்திரகுப்தர் காலத்தில் பாடலிபுரமும் 9 மைல் நீளமும் 1½ மைல் அகலமும் உடையதாய் இருந்ததென்றும், அதைச்சுற்றி

[1] V. A. Smith, op. cit., p. p. 111 - 112.
[2] Cp. cit., p. 114.

600 அடி அகலமுள்ள அகழி ஒன்றும், அதனையடுத்து உட்புறத்தில் 570 கோபுரங்களையும், 64 வாயில்களையும், அம்பு எய்வதற்கான எண்ணற்ற சாளரங்களையும் கொண்ட ஒரு பெரிய மரத்தாலான அரணும் இருந்ததாக மெகஸ்தனீசின் இண்டிகா கூறுகின்றது. பாடலிபுத்திரத்தில் P. C. முகர்ஜியும் டாக்டர் D. B. ஸ்பூனெரும் நடத்திய புதைபொருள் ஆராய்ச்சியின் விளைவாகச் சில அரிய செய்திகள் கிடைத்துள்ளன. அமைப்பில் பண்டைய பாரசீகக் கட்டடங்களை ஒத்த நூற்றுக்கால் மண்டபம் ஒன்றும், அதனருகே 30 அடி நீளமும், 6 அடி அகலமும், $4\frac{1}{2}$ அடி உயரமும் உள்ள ஏழு மரமேடைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றின் மரவேலைத் திறம் மிகவும் முதிர்ச்சியானது.[1] பாடலிபுத்திரத்தின் அருகே உள்ள குமாரகார் கிராமம் அப்பொழுது தலைநகரின் ஒரு பகுதியாக இருந்திருத்தல்வேண்டும். அங்குப் பண்டைய மன்னர்களின் அரண்மனை இருந்ததென்பது வழி வழிச் செய்தி. அது உண்மையாக இருக்கக்கூடும். அக் கிராமத்தின் வடக்கே அசோகருடைய கற்றூண் ஒன்றின் உடைந்த பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அது தவிர அங்குக் காணப்படும் பிற சின்னங்கள் அவ் விடத்தின் சிறப்பினைக் காட்டுகின்றன. பாடலிபுத்திரத்தில் மற்றோர் அரண்மனை இருந்ததாகக் கூறும் டாக்டர் ஸ்மித், தற்பொழுதுள்ள நகரில், ஓரிடத்தில் அசோகருடைய பிரம்மாண்டமான கற்றூண் ஒன்று புதையுண்டிருப்பதையும் தெரிவிக்கின்றார்.[2] அசோகர் காலத்தில் தலைநகரைச் சுற்றி ஒரு மதிற்சுவர் எடுக்கப்பட்டதுடன் அழகிய பல புதிய கட்டடங்களும் கட்டப்பட்டன.[3]

அசோகர் காலத்துச் சிற்பங்களை ஆராயுமிடத்து முதலில் நமக்கு நினைவிற்கு வருவது பார்க்காமிலும் பெஸ்நகரிலும் கண்டுபிடிக்கப்பட்ட இரு சிற்பங்களே. ஒன்று யக்ஷன் உருவில் உள்ளது; மற்றது யக்ஷி வடிவத்தில் இருப்பது. இரண்டிற்கும் உள்ள தனிச் சிறப்பு யாதெனில், அவற்றின் எல்லாப் பக்கங்களும் நன்றாகச் செதுக்கப்பட்டிருப்பதே. அத்தகைய சிற்பங்கள் அக் காலத்தில் அரிது. மேலும், பார்க்காமில் கண்டுபிடிக்கப்பட்ட யக்ஷனுடைய உருவம் பாடலிபுத்திரத்திலும் திதார்கஞ்சிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ள சிற்பங்களைப் பெரிதும் ஒத்துள்ளது. டாக்டர் A. K. குமாரசுவாமி இச் சிற்பங்களை எளிய மக்களின் கலையாகக் கருதுகின்றார்.[4]

1 R. K. Mookerji, op: cit., pp. 96-97.
2 Op. cit., pp. 108—109.
3 Ibid, p. 85.
4 R. K. Mookerji, op. cit., p. 97

கற்றூண்களின் உச்சியில் உள்ள சிங்கங்கள், யானை, காளை, குதிரை, எருது, தர்ம சக்கரம் முதலியவை மௌரியச் சிற்பக் கலையின் வியத்தகு முதிர்ச்சியைக் காட்டுகின்றன. அவற்றின் தோற்றப் பொலிவினையும் செதுக்கப்பட்ட நுட்பத்தையும் காணுமிடத்து இந்தியச் சிற்பங்களிலேயே அவை தலையாய சிறப்புடையன என்றும் பண்டைய உலகின் எப்பாகத்திலும் காணப்படும் சிற்பங்களைவிட மேன்மையானவை என்றும் சர் ஜான் மார்ஷல் கூறுகிறார்.[1] மௌரியச் சிற்பங்களில் பாரசீக, கிரேக்கக் கலைச் சிற்பங்கள். பாரசீகச் சிற்பங்களைவிடக் கலையுணர்வு மிக்கவையே. அவற்றின் பொருளும், கலையுணர்வும், நுட்ப வேலைப்பாடும் இந்தியருக்கே உரியனவாம். தற்பொழுதுள்ள அசோகர் காலத்துச் சின்னங்களில் தலையாய சிறப்புடையன அவரது கற்றூண்களும் அவற்றிலுள்ள சிற்பங்களுமே ஆகும். பாகியான் தம்முடைய குறிப்பில் சிராவஸ்தி, சங்காசியம், குசி நகரத்திலிருந்து வைசாலி செல்லும் வழி, பாடலிபுத்திரம் முதலிய இடங்களில் இருந்த ஆறு கற்றூண்களைக் குறிப்பிடுகின்றார். ஹியூன்சாங் அதைப்போன்ற பதினைந்து தூண்களைப் பற்றிக் கூறுகின்றார். அவை இருந்த இடங்கள் பின்வருமாறு: சங்கிசா (1), சிராவஸ்தி (2,3), கபிலவஸ்து (4), கபிலவஸ்து அருகே (5), லும்பினித்தோட்டம் (6), குசிநகரம் (7-8) சாரநாத் செல்லும் வழி (9), சாரநாத் (10) மகாசாலா (11), வைசாலி (12), பாடலிபுத்திரம் (13&14), இராஜகிரகம் (15). பாகியான் குறிப்பிட்டுள்ள தூண்களில் பெரும்பாலானவற்றை ஹியூன்சாங் பார்த்திருக்க வேண்டும். அசோகருடைய கற்றூண்கள் எல்லாவற்றிலும் கல்வெட்டுகள் இல்லை. கல்வெட்டு உள்ள கற்றூண்கள் தற்பொழுது டில்லி, அலகாபாத், லௌரியா அரராஜ், லௌரியா நந்தன்கார், ராம்பூர்வா[2], சாஞ்சி, சாரநாத், ரும்மிந்தெய், நிக்லீவா முதலிய இடங்களில் காணப்படுகின்றன. அமராவதியிலும் அத்தகைய தூண் இருந்திருக்கக் கூடும்.[3] கௌசாம்பி, பக்ரா, ராம்பூர்வா, சங்கீசா முதலிய இடங்களில் கல்வெட்டு இல்லாத தூண்கள் காணப்படுகின்றன. தற்பொழுதுள்ள கற்றூண்களில் பலவற்றை ஹியூன்சாங் குறிப்பிடவில்லை என்பது கவனிக்கத்தக்கது. நாம் அறிந்தவற்றில் இரண்டு அல்லது மூன்றையே அவர் குறிப்பிட்டுள்ளார். அதுவும், அசோகர் நிறுவிய தூண்கள் என்று அவர் குறிப்பிடாதது வியப்பிற்குரியதே. அவருக்குச் செய்தியைக் கூறிய மக்கள்

[1] Ibid p. 91.

[2] மூன்றும் பீகாரில்.

[3] R. K. Mookerji,—Asokan Inscriptions, Appx. p. 58 c.

அறிந்தது அவ்வளவே. அக் காலத்தில் கற்றூண்களில் செதுக்கப் பட்டுள்ள விஷயத்தைப் படித்துச் சொல்லக்கூடியவர்கள் இருந் திலர் என்பது நினைவுகூரத்தக்கது.

நிற்க, அசோகரின் தூண்கள் ஒவ்வொன்றும் ஒரே கல்லால் ஆனவை. நாற்பது அடியிலிருந்து ஐம்பது அடிவரை உயர முள்ளவை; மிகவும் வழவழப்பாகவும் ஓரளவு பளபளப்புடனும் உள்ளவை; தொலைவிலிருந்து பார்ப்பதற்கு உலோகத் தூண் களோ என்று ஐயுறுமளவிற்கு வழவழப்புடன் அவை காணப்படு கின்றன. இத் தூண்களுக்கான பாறைகள் சுனுரில் (Chunar) வெட்டப்பட்டிருக்க வேண்டுமெனக் கருதப்படுகின்றது.

வைசாலி அருகிலுள்ள பக்ராவில் கல்வெட்டில்லாத ஒரு தூண் உள்ளது. அது அடியிலிருந்து சிறிது சிறிதாக மேலே குவிந்து செல்கின்றது. அதன் அடிப்பாகத்தைத் தாங்கி நிற்கும் கற்பலகை மூன்று படிகளைக் கொண்டுள்ளது. தூணின் மேற் பாகத்தில் மணிமுடி உள்ளது. அதன்மேல் ஒரு சிங்கச் சிலை யைத் தாங்கி நிற்கும் பீடமும் உள்ளது. மணிமுடிக்குக் கீழே இரண்டிடங்களில் உருட்டிச் செதுக்கப்பட்டுள்ளது. இத் தூணின் மொத்த உயரம் ஐம்பதடிக்குக் குறையாமல் இருக்கும். எடை ஐம்பது டன்னுக்குமேல் இருக்கும். வட பீகாரில் மௌரியா நந்தன்காரில் உள்ள கற்றூண் அமைப்பில் பக்ராக் கற்றூணைப் போல உள்ளது. ஆனல். அதைவிடச் சிறியதாக வும் வனப்புடனும் உள்ளது. உயரம் ஏறத்தாழ நாற்பதடி உள் ளது. மணிமுடிக்குமேல் சிங்கச் சிலையைத் தாங்கி நிற்கும் பலகை யின் ஓரத்தில் ஹம்ச தோரணம் உள்ளது. மொத்தத்தில் இது மிக்க வேலைப்பாடுள்ள தூணுகும். அலகாபாத்தில் உள்ள கற்றூணில் மணிமுடிக்குமேல் இருக்கும் பலகையில் ஹம்ச தோரணத்திற்குப் பதிலாகத் தாமரையும் ஒரு கொடிவகையும் மாறி மாறிச் செதுக்கப்பட்டுள்ளன. அதற்குமேல் ஒரு சிங்கச் சிலை இருந்ததாகக் கூறப்படுகின்றது. அதைப் போன்றே ராம் பூர்வாவில் உள்ள தூணின்மீதும் மிக அழகிய சிங்கச் சிலை இருந் தது. தனியாகக் கண்டு எடுக்கப்பட்ட அச் சிங்கச் சிலையின் வேலைப்பாட்டினைச் சர் ஜான் மார்ஷல் பெரிதும் புகழ்கின்றுர்.[1] அதே இடத்தில் கல்வெட்டில்லாத மற்றொரு தூணும் உள்ளது. அதில் நம் கவனத்தைக் கவரக்கூடியன உச்சியில் உள்ள கம்பீர மான காளையின் சிலையும், மணிமுடி தூணின் தண்டுப் பாகத்தில் ஒரு பெரிய செப்புக் கம்பியால்[2] கோக்கப்பட்டிருத்தலுமே.

[1] V. A. Smith, op. cit., p. 119.
[2] இரண்டடிக்கு மேல் உள்ளது.

சங்கிசாவில் உள்ள தூணின் மணிமுடிக்குமேல் பலகையில் பூக்களையுடைய கொடி செதுக்கப்பட்டுள்ளது. அதன்மீது முகமும் வாலும் உடையுண்ட யானையின் சிலை ஒன்று உள்ளது. சாரநாத்தில் உள்ள கற்றூணின் மணிமுடியும் அதற்குமேல் பலகையில் உள்ள தர்ம சக்கரம், யானை, காளை, குதிரை, சிங்கம் முதலியவற்றின் வடிவங்களும், எல்லாவற்றிற்கும் சிகரமாக, கம்பீரமான நான்கு சிங்கங்கள் ஒரே கல்லில் செதுக்கப்பட்டு அமைந்திருப்பதும் அக்காலச் சிற்பத் திறனின் உச்சத்தைக் காட்டுகின்றன. அத் திறன் திடீரென்று தோன்றியதன்று என்பது திண்ணம். சாஞ்சித் தூணின் கலைத் திறமும் ஏறத்தாழ அத்தகையதே.

ஏறத்தாழ முப்பது கற்றூண்களை அசோகர் நிறுவியதாக V. A. ஸ்மித் கூறுகிறார். இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட பத்துத் தூண்களில் ஆறில், முதல் ஆறு கற்றூண் ஆணைகள் செதுக்கப்பட்டுள்ளன. ஏழாவதான டெல்லி தோப்ராத் தூணில்மட்டும் ஏழாவது கற்றூண் ஆணை செதுக்கப்பட்டுள்ளது. இத் தூண்கள் பெரும்பாலும் பெருஞ் சாலைகளிலும் பௌத்தத் தலங்களிலும் உள்ளன. பேரரசின் தொலைப் பகுதியில் கற்றூண்கள் காணப்படவில்லை. நமக்குத் தெரியாத தூண்கள் இன்னும் பல இருத்தல் சாத்தியமே.

மிக நேர்த்தியான பாறைகளில் இத் தூண்களை வனப்புடன் செதுக்கியதும் நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள இடங்களுக்கு அவற்றை எடுத்துச் சென்று நிறுவியதும் மௌரியர்கள் காலச் சிற்பிகள், பொறியியலார் முதலியோரின் அறிவையும் திறமையையும் நன்கு எடுத்துக்காட்டும் சான்றுகளாகும்.[1] சுருங்கக் கூறினால், அது ஒரு பெரும் சாதனையே. இவ் வுண்மையைக் கி. பி. பதினான்காம் நூற்றாண்டில் பிரோஸ் துக்ளக் தோப்ராவிலிருந்து (Topra) டெல்லிக்கு அசோகர் தூணை எடுத்துவந்த விவரத்தை அறிந்தால் எளிதில் விளங்கும். தோப்ராவிலிருந்து தூணைக் கொண்டுவர ஒரு தனி வண்டி செய்யப்பட்டது. அதற்கு 42 சக்கரங்கள் இருந்தன. அவ் வண்டியை மக்கள் இழுப்பதற்காக நீண்ட வலுவான கயிறு ஒவ்வொரு சக்கரத்திலும் கட்டப்பட்டிருந்தது. ஒரு சக்கரத்திற்கு 200 பேர் வீதம் மொத்தம் 8400 மக்கள் வண்டியை டெல்லிக்கு இழுத்துச் சென்றனராம். யமுனையில் ஏராளமான பெரிய படகுகளைப் பயன்படுத்திக் கற்றூணை அக்கரைக்குக் கொண்டு சென்றனர். பின்னர் அதை நடுவதும் பெரும்பாடாகிவிட்டதாம். இச் செய்

[1] Smith, op. cit., p. 120.

தியை அக் காலத்திலிருந்த ஷம்சி சிராஜ் என்ற முஸ்லிம் வரலாற்றாசிரியர் கூறுகிறார்.[1]

இனி, மேற்கூறிய கற்றூண்கள் எல்லாவற்றையும் அசோகர் நிறுவவில்லை; சிலவற்றை அவரது முன்னோர்கள் நிறுவியிருக்க வேண்டும் என்று R. K. முகர்ஜி கூறுகிறார்.[2] இக் கருத்திற்குப் போதிய சான்று இல்லை. இருப்பினும் இதன் சாத்தியக் கூற்றை மறுப்பதற்கில்லை.

அசோகருடைய கற்பாறை ஆணைகள் (Rock Edicts) ஷாரி குனா (காண்டஹார் அருகே உள்ளது, ஷாபாஸ்காரி, மான் சேரா, கால்சி, பெய்ராட் (இராஜஸ்தானம்), சகஸ்ராம் (சசாராம்), ரூபநாத், கிர்நார், சொபாரா, மாஸ்கி, கோப்பால், எற்றகுடி, சித்தபுரா ஜடிங்க ராமேஸ்வரம், பிரம்மகிரி, தௌலி, ஜௌகதா, பாப்ரூ முதலிய இடங்களில் காணப்படுகின்றன.[3] கற்பாறை ஆணைகளில் காணப்படும் கலையம்சம், எழுத்துகள் மிகவும் அழகாக வெட்டப்பட்டுள்ளதேயாகும்.

அசோகர் ஆஜீவிகர்களுக்கு அளித்த குகைகளில் கலை யம்சம் இல்லாவிடினும் மிகக் கடினமான பாறையில் பொறுமையுடன் அந்த அளவிற்குத் திறமையாகச் செதுக்கியதும், அவற்றின் உட்புறம் முகம் பார்க்கும் கண்ணாடிபோல் பளபளப்புடன் தேய்க்கப்பட்டிருப்பதும் இக்காலத்திலும் அரிய சாதனையாகவே கருதப்படும். சுருங்கக் கூறினால், மௌரியர்கள் காலத்தில் கல் தச்சர்களின் திறம் முதிர்ச்சியை எட்டிவிட்டது.[4]

மௌரியர்கள் கால மரவேலையைப்பற்றி அறிந்துகொள்வதற்கான சான்றுகள் யாவும் அழிந்துவிட்டன. இருப்பினும், அக்காலக் கருங்கல் சின்னங்களிலிருந்து தச்சர்களின் திறத்தை ஓரளவிற்கு ஊகித்தறியலாம். கருங்கல் வேலைக்கு மரவேலை மாதிரியாக அமைந்திருந்ததெனக் கலையறிஞர் ஃபெர்குசன் (Fergusson) கூறுவது நோக்கத்தக்கது. மௌரியர்கள் கால அணிகலன்களிலும் அரிய நுட்பமான திறமையையும் கலையம்சத்தையும் காண்கிறோம். குறிப்பாக, கல்நகைகள் வேலைப்பாடு மிக்கவை.

[1] Ibid. pp. 121 - 123.

[2] Asoka, p. 37.

[3] இவ் விடங்களைப்பற்றிய பிற செய்திகளை, 'அசோகருடைய பேரரசின் பரப்பு' என்ற பகுதியில் காண்க.

[4] V. A. Smith—op. cit., p. 136. He says, 'The skill of the Stone cutter may be said to have attained perfection, and to have accomplished tasks which would, perhaps, be found beyond the powers of the twentieth century'.

சர் ஜான் மார்ஷல் மௌரியக் கலையின் பெருமிதத்தையும், அதில் பரந்து நிற்கும் எளிமையையும், அரிய நுட்பத்தையும், தெளிவையும், உயிரூட்டத்தையும் பெரிதும் புகழ்கின்றார். மௌரியச் சிற்ப, கட்டடக் கலைகளில் இரானிய (பாரசீக), கிரேக்கக் கலைச் சாயல்கள் காணப்படுவது உண்மையே. சான்றாக, விலங்கு உருவங்களைத் தாங்கி நிற்கும் மணிமுடி இரானியக் கலையமைப்பைப் பெரிதும் ஒத்துள்ளது. அதேபோன்று பல தூண்களையுடைய மண்டபங்களும். அரசனின் ஆணைகளைக் கல்லில் செதுக்கி வெளியிடும் பழக்கமும்கூட ஈரானியரின் தொடர்பால் ஏற்பட்டதே. ஆணைகளைத் தொடங்குவதில்கூட இரானியச் சாயல் தென்படுகின்றது. அசோகர் தம் ஆணைகளைக் 'கடவுளர் விரும்புபவனும் காட்சிக்கினியவனுமான மன்னன் இவ்வாறு கூறுகிறான்' என்று தொடங்குகிறார். அது முதலாவது தரயஸ்ஸின் ஆணை, 'மன்னன் தரயஸ் இவ்வாறு கூறுகிறார்' என்று தொடங்குவதை ஓரளவு ஒத்துள்ளது. விலங்கு உருவங்களை மணிமுடியில் அமைப்பதிலும் சிலவகை அணிகளிலும் கிரேக்கக் கலைச்சாயல் காணப்படுகின்றது. இருந்தாலும், பண்டைய கிரேக்கர்களைப் போன்று இந்தியர்கள் பிறரிடமிருந்து அறிந்ததைத் தங்களதாக ஆக்கிக்கொள்ளும் ஆற்றல் பெற்றிருந்தனர். மௌரியக் கலைகள் கிரேக்க, இரானியக் கலைகளுக்கு ஓரளவிற்குக் கடமைப்பட்டவைதாம். ஆனால், அவற்றுக்கென ஒரு தனிச் சிறப்பு இருந்ததை மறக்கலாகாது. அத் துறையில் மௌரியர்கள் காலத்திற்கு முன்பே இந்தியாவில் ஒரு மரபு இருந்தது.

# பகுதி VII

# அசோகர் காலத்தில் தென்னிந்தியாவும் இலங்கையும்

அசோகர் காலத்தில் தென்னிந்தியாவும் இலங்கையும் மௌரியப் பேரரசுடன் நெருங்கிய தொடர்புகொண்டிருந்தன. அதற்கு அசோகருடைய சமயப்பணியே முக்கியக் காரணமாகும். அசோகருடைய இரண்டாவது கற்பாறை ஆணையிலும் பதின் மூன்ருவது கற்பாறை ஆணையிலும் தெற்கே இருந்த நாடுகளைப் பற்றியும் இலங்கையைப்பற்றியும் சில குறிப்புகள் உள்ளன. இரண்டாவது கற்பாறை ஆணையில் அசோகர் சேர, சோழ, பாண்டிய நாடுகளிலும், சத்தியபுத்திரர் நாட்டிலும், இலங்கை யிலும் மாந்தருக்கும் விலங்குகளுக்கும் நோய் தீர்க்கும் ஏற்பாடு களைச் செய்ததாகக் குறிப்பிடுகிருர். அதற்கு முன்னரே அவர் சமயப் பரப்புக் குழுவினரை இந் நாடுகளுக்கு அனுப்பிவைத் திருத்தல் திண்ணம். எனவே, மௌரியப் பேரரசிற்கும் இந்நாடு களுக்கும் நெருங்கிய நட்புறவு இருந்திருக்கவேண்டும். அசோகர் காலத்திற்கு முன்பே மௌரியர் தமிழ்நாட்டுடன் தொடர்பு கொண்டிருந்தனர் என்பது சங்க இலக்கியத்திலிருந்தும், அர்த்தசாஸ்திரத்திலிருந்தும் இண்டிகாவிலிருந்தும் அறிகிருேம். மெகஸ்தனீஸ், பாண்டிய நாட்டில் 500 யானைகளையும் 4,000 குதிரைகளையும் 1,30,000 போர் வீரர்களையும் கொண்ட படை இருந்ததையும் முத்து எடுத்ததையும் குறிப்பிடுவதுடன் வேறு பல செய்திகளையும் கூறுகிருன். பாண்டிய நாட்டு முத்தையும் பருத்தித் துணியையும் சாணக்கியன் அர்த்தசாஸ்திரத்தில் புகழ்ந்து கூறுகிருர். மாமூலனுர் என்ற கடைச்சங்கப் புலவர் மௌரியர் தென்திசையில் தடையாயிருந்த மலையை வழிசெய்து வந்து படையெடுத்ததுபற்றியும் அவர்கள் கோசர்களுக்குப் போரில் உதவியது பற்றியும் அகநானூற்றில் குறிப்பிடுகிருர்.

இனி, சத்தியபுத்திரர் நாடு எது என்பதுபற்றி அறிஞர்களி டையே கருத்துவேறுபாடு உள்ளது. கோயமுத்தூர் மாவட் டத்தில் சத்தியமங்கலம் தாலூக்காவை உட்கொண்ட பிரதேசமே

சத்தியபுத்திரர் நாடு என V. A. ஸ்மித் கூறுகிறார்.[1] ஆனால், அந் நாடு தென்கன்னட மாவட்டத்தைக் குறிப்பதாக M. கோவிந்த பாய் கூறுகிறார்.[2] T. பர்ரோவும். K. G. சேஷ அய்யரும் தகடூரைத் தலைநகராகக் கொண்டு கொங்கு நாட்டை ஆண்ட அதியமான்களே சத்தியபுத்திரர் என்று கருதுகின்றனர்.[3] வேறு சிலர் வட மலபார்ப் பகுதியே சத்தியபுத்திரர் வாழ்ந்த நாடு என்று கூறுகின்றனர்.[4] பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியாரும், இராவ் சாகிப் மு. இராகவய்யங்காரும் சங்க நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள கோசர்களே சத்தியபுத்திரர் என்று கூறுகின்றனர்.[5] மௌரியர்களுக்கும் கோசர்களுக்கும் நட்புறவு இருந்த செய்தி மாமூலனாரின் பாட்டிலிருந்து அறியப் படுகின்றது. 'வாய்மொழிக் கோசர்' எனச் சங்கச் செய்யுட்களில் வழங்குந் தொடர் சத்தியபுத்திரர் என்ற சொற்பொருளுடன் தொடர்புடையதாயிருத்தலும் இங்கு நினைத்தற்குரியதாம்.

நிற்க, அசோகர் கல்வெட்டுகளில் தெற்கே இருந்த நாடுகள் குறிப்பிடப்பட்டுள்ளனவேயொழிய அந்நாட்டு மன்னர்களின் பெயர்களைக் குறிப்பிடவில்லை. சங்க நூல்களில் சேர, சோழ, பாண்டிய மன்னர்களைப்பற்றிய குறிப்புகள் உள்ளன. ஆனால், அவர்கள் ஆண்டகாலத்தைப்பற்றியோ அவர்களுடைய உறவுமுறையைப் பற்றியோ தெளிவாக வரையறுத்துக்கூறும் ஆராய்ச்சி தொடங்கப் பெறவில்லை. கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் என்னென்ன நூல்கள் எழுதப்பட்டன என்று கூறுவதும் கடினமாய் உள்ளது. தொல்காப்பியத்தில் பௌத்த, சமண மதங்களைப்பற்றி எக் குறிப்பும் இல்லாததும், பாணினி காலத்திற்குமுன் எழுதப்பட்ட ஐந்திர வியாகரணம் சிறப்பிக்கப்பட்டிருப்பதும் ('ஐ ந் தி ர ம் நிறைந்த தொல்காப்பியன்' என்று போற்றப்பட்டுள்ளது) தொல்காப்பிய விதிக்கு மாறான சொல்வழக்குகள் சங்க நூல்களில் காணப்படுவது அவற்றிற்கு இடையே இருந்த நீண்ட காலத்தைக் காட்டுவதும் தொல்காப்பியம் அசோகர் காலத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இயற்றப்பட்டிருத்தல் வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுகின்றன.[6]

[1] Op. cit., p. 161.
[2] Dr. S. Krishnaswami Aiyangar Commemoration Vol. p. 47.
[3] B. S. O. A. S, Vol XII pt. I p. 475.
[4] Prof Sathianather, op. cit., p. 168 quoted.
[5] Op. cit., p. 251.
[6] For details see K. Vellaivaranan, Tolkappiyam, Book I, pp. 87-172.

இனி, அசோகர் காலத்தைச் சேர்ந்த பிராமி எழுத்தில் எழுதப்பட்டுள்ள சில கல்வெட்டுகள் திருநெல்வேலி, மதுரை மாவட்டங்களில் உள்ள மலைகளில், குறிப்பாகக் கழுகுமலையில், காணப்படுகின்றன. அக் கல்வெட்டுகளின் எழுத்து பிராமியே தவிரத் தொடர் தமிழ்மொழியே. அவை யாவும் இலங்கையில் காணப்படும் அதே காலத்தைச் சேர்ந்த பிராமியக் கல்வெட்டு களைப் பெரிதும் ஒத்துள்ளன.[1] பாண்டிய நாட்டில் உள்ள பிராமிக் கல்வெட்டுகளை ஆராய்ந்த அறிஞர்கள் அவை பௌத்த சமயத்தவர் அளித்த கொடைகளைக் குறிப்பிடுவதாக விளக்கி யுள்ளனர். இச் செய்தி அசோகர் தமிழ்நாட்டில் பௌத்த மதத்தைப் பரப்பியதைக் கூறும் கல்வெட்டு இலக்கியச் சான்று களை உறுதிப்படுத்துவதாய் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், அக் கல்வெட்டுகள் காணப்படும் இடங்களின் பெயர் களும் பௌத்த சமயம் தமிழ்நாட்டில் பரவியிருந்ததைக் காட்டு வதாகக் கொள்ள இடமுண்டு.[2]

நிற்க, மேற்கூறிய கல்வெட்டுகள் பிராமி எழுத்தில் எழுதப் பட்டுள்ளதைக்கொண்டு அப்பொழுது தமிழ் எழுத்து வழக்கத் திற்கு வரவில்லை என்றோ தமிழ் எழுத்துப் பிராமி எழுத்தி லிருந்து வளர்ந்தது என்றோ சொல்வது தவறானதே. தொல் காப்பியத்தில் எழுத்ததிகாரத்தைக் கற்றோர் எவரும் அக்காலத் தில் தமிழ் எழுத்து இல்லையென்று கூற முடியாது.[3] எந்தெந்த எழுத்துகள் புள்ளி பெறுதல் வேண்டும் என்பதைப்பற்றித் தொல்காப்பியர் கூறுவது பிராமி எழுத்திற்குப் பொருந்துமா?[4] மேலும், பிராமி எழுத்தில் உள்ள கல்வெட்டுகள் பௌத்தர் களையோ சமணர்களையோ பற்றிக் கூறுகின்றனவேயன்றி வைதிகச் சமயத்தைப்பற்றிக் கூறக் கூடியவையாக இல்லை என்பதும் நோக்கற்பாலது. அக்காலத் தமிழ் மன்னர் ஒருவர் கூடப் பிராமியில் கல்வெட்டு வெளியிடவில்லை என்பதும் குறிப் பிடத்தக்கது.

ஹியூன்சாங் தமிழ்நாட்டில் அசோகர் கட்டிய இரு பௌத்த ஸ்தூபிகளைத் தாம் பார்த்ததாகக் கூறுவதுடன், அங்கு வேறு பல ஸ்தூபிகளையும் அசோகரும் அவர் மகன் மகேந்திரரும் கட்டிய தாகக் குறிப்பிடுகிறார்.[5] இச் செய்தி அசோகர் காலத்தில்

[1] K. A. Nilakanta Sastri, op. cit., p. 252.
[2] Prop Sathianather, op. cit. p. 169.
[3] Contra, Romila Thapar,. op. cit , p. 132.
[4] For details See K. Vellaivaranam, op. cit., Book II. p. 4.
[5] Romila Thaper, op. cit., p. 133.

தமிழ்நாட்டில் பௌத்த சமயம் பரவியிருந்ததை எடுத்துக் காட்டுகின்றது. மேலும், மகேந்திரன் தமிழ்நாட்டு வழியாக இலங்கைக்குச் சென்றிருக்கக் கூடிய சாத்தியக் கூற்றையும் மறுப்பதற்கில்லை.[1] தமிழ் மன்னர்கள் தங்கள் நாடுகளில் பௌத்த சமயம் பரவியதை அனுமதித்தது மௌரியப் பெருவேந்தன்பால் கொண்ட அச்சத்தால் அன்று. இயல்பாகவே அவர்கள் எல்லாச் சமயங்களையும் போற்றியவர்கள் என்பது சங்க நூல்களிலிருந்தே அறியலாம். அசோகர் போதித்த சமயப் பொறைக்குச் சங்க காலத் தமிழகம் எடுத்துக் காட்டாக விளங்கியது என்பது இங்கே குறிப்பிடத் தகுந்தது.

பொதுவாக, அத்தகைய சமயப் பொறை ஒரு மக்களிடையே காணப்படுவது அவர்கள் பண்பாட்டில் மேம்பட்டவர்கள் என்பதைக் குறிக்குமென்பர் அறிஞர்கள். தமிழ் மன்னர்களும் மக்களும் அத்தகையவராய் அக்காலத்தில் விளங்கினர் என்பதைச் சங்க நூல்களைக் கற்போர் எவரும் தயங்காது கூறுவர். அசோகர் காலத்தை அடுத்துச் சில நூற்றாண்டுகளில் தமிழகம் ரோமப் பேரரசுடன் கடல் வாணிகத் தொடர்பு கொண்டது, அது எந்த அளவிற்கு முன்னேறியிருந்தது என்பதைக் காட்டுகின்றது. கடைச் சங்கக் காலத் தமிழர் நாகரிகத்திற்கும் அசோகர் காலத் தமிழர் நாகரிகத்திற்கும் அதிக வேறுபாடு இருப்பதற்கிடமில்லை.

இனி, அசோகர் கல்வெட்டுகளில் குறிப்பிட்டுள்ள 'தாம்பபர்ணி' அல்லது தாம்பபண்ணி பாண்டிய நாட்டில் ஓடும் தாமிரபர்ணி ஆறு அன்று. ஏனெனில், தாமிரபர்ணியைக் குறிப்பிடும் இரண்டாவது கற்பாறை ஆணையே பாண்டியர் நாட்டையும் தனியே குறிப்பிடுகின்றது. எனவே, தாம்பபர்ணி என்பது ஒரு தனி நாடாக இருத்தல் வேண்டும். கிரேக்கர்கள் இலங்கைத் தீவைத் தாப்புரபேன் (Taprobane) என்று அழைத்தனர்.[2] அதுவும் அசோகர் கல்வெட்டுகள் குறிப்பிடும் தாம்பபர்ணியும் ஒன்றே என்பது அறிஞர் பலரின் கருத்தாகும்.

இலங்கையின் நாகரிக வளர்ச்சி அந் நாடு இந்தியாவுடன் தொடர்புகொண்ட காலத்திலிருந்தே தொடங்கிய தென்றால் மிகையாகாது. ஐந்தாம் நூற்றாண்டில் இந்தியாவிலிருந்து சென்ற விஜயன்[3] என்ற அரச குமாரன் இலங்கையில் நிலையான

[1] Romila Thaper, op. cit., p. 133.
[2] Prof. R. Sathanaahaier. op. cit., p. 151.
[3] வங்கத்திலிருந்ததா மேற்குக் கடற்கரையிலிருந்ததா என்பது தெளிவாகவில்லை.

ஆட்சியை ஏற்படுத்தி அத்தீவின் முன்னேற்றத்திற்கான பலவற்றையும் செய்ததாகச் சிங்கள நூல்கள் கூறுகின்றன. விஜயனுடன் பௌத்தர்களும் அக்காலத்தில் சென்றிருக்கக் கூடுமென ரோமிலாதாபர் கருதுகின்ருர்.[1] அது எவ்வாருயினும், சிங்கள மொழி பாலி மொழியுடன் நெருங்கிய தொடர்புடையதென்பதும், இலங்கையில் பிராமி எழுத்து மிகவும் ஆரம்பத்திலேயே வழக்கி லிருந்ததென்பதும் உண்மையே. இலங்கையின் செல்வ வளத்தைப்பற்றி அர்த்தசாஸ்திரமும் இண்டிகாவும் குறிப்பிடுகின்றன.

இனி, அசோகர் காலத்தில் இலங்கையை ஆண்ட மன்னர் தேவநாம்பிரிய திஸ்ஸா என்பவராம். இவருக்கு முன் ஆண்ட இலங்கை மன்னர்களைப்பற்றிய தக்க செய்திகள் இல்லை. அசோகரும் திஸ்ஸாவும் (கி. மு. 247-207) நெடுநாளைய நண்பர்களென மகாவம்சம் குறிப்பிடுகின்றது. இதையும், அசோகர் தமது இரண்டாவது, பதின்மூன்ருவது கற்பாறை, ஆணைகளில் இலங்கையுடன் தொடர்புகொண்டிருந்ததைக் குறிப்பிடுவதையும் உடன்வைத்து நோக்க, திஸ்ஸா பட்டத்திற்கு வரும் முன்னரே, அதாவது அவர் முன்னவன் முடசிவன் ஆட்சிக்காலத்திலேயே அசோகர் இலங்கையில் பௌத்த சமயத்தைப் பரப்பும் பணியைத் தொடங்கியிருத்தல் வேண்டும் என்பது திண்ணமாகின்றது. நிற்க, தீபவம்சத்தில், திஸ்ஸா அரியணை ஏறியதும், பாடலி புத்திரத்திற்கு ஒரு தூதுக்குழுவை அனுப்பியதும், அசோகர் இலங்கை மன்னனைப் பௌத்த சமயத்தில் சேரும்படி கோரியதும், பின்னர் மகேந்திரன் இலங்கைக்குச் சென்று பௌத்த சமயத்தைப் போதிக்கத் தொடங்கியதும், அடுத்து, சங்கமித்திரை போதி மரக்கிளையை இலங்கையில் நட்டதும், அந்நாட்டு அரசியைப் பௌத்த மதத்திற்கு மாற்றியதும் குறிப்பிடப்பட்டுள்ளன. இவை யாவும் உண்மையென்றே தோன்றுகிறது. அசோகருடைய பெயரன் சுமணன் புத்தரின் புனிதச் சாம்பலை இலங்கைக்கு எடுத்துச் சென்று அங்கு ஒரு ஸ்தூபியை அமைத்து அதில் வைத்து வழிபட்டதாகவும் கூறப்படுகிறது.[2] அசோகர் இலங்கைக்குப் பௌத்த சமயப் பரப்புக் குழுவினரை அனுப்புவதுபோல் அஜந்தாவில் ஓர் ஓவியம் உள்ளதாகவும் சொல்லப்படுகின்றது.[3]

திஸ்ஸா பௌத்த மதத்தைத் தழுவியபின் தம்முடைய தலைநகரான அநுராதபுரத்தில் ஒரு பௌத்த மடத்தையும் புத்த

[1] Op. cit., p. 134.
[2] R. K. Mookerji, Asoka, p. 36.
[3] Ibid.

ரின் எலும்பினை வைத்து ஒரு ஸ்தூபியையும் கட்டினார். அவர் காலத்தில் நடப்பட்ட போதிமரக் கிளை வளர்ந்து உலகத்திலேயே மிகப் பழமையான மரமாய் உள்ளது.[1] திஸ்ஸா காலத்திலிருந்தே இலங்கையில் பௌத்த மதம் நன்கு தழைத்தோங்கியது. ஏராளமான பௌத்த ஸ்தூபிகளும் மடங்களும் கட்டப்பெற்றன. அவற்றின் தோற்றத்தைப் பார்க்கும்பொழுது அவை இந்தியாவில் இருந்ததைப் பார்த்துக் கட்டப்பெற்றவையெனத் தோன்றுகின்றன. கி. மு. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த பிராமிக் கல்வெட்டுகள் இலங்கையில் பல இடங்களில் காணப்படுகின்றன. இலங்கையின் பழமையான நாணயங்கள் அக் கால இந்திய நாணயங்களை ஒத்துள்ளன.[2]

திஸ்ஸாவிற்குப்பின் அவருடைய உடன் பிறந்தானை உத்தியன் பட்டத்திற்கு வந்தான். அவன் காலத்தில் மகேந்திரனும் சங்கமித்திரையும் நிர்வாண மடைந்ததாகவும், அவர்களுடைய புனிதச் சாம்பலை வைத்து ஸ்தூபிகள் எழுப்பப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.[3] இலங்கையில் பௌத்த சமயம் பரவியதால் அந் நாட்டிற்கும் இந்தியாவிற்கும் இருந்ததொடர்பு மேலும் அதிகரித்தது. பௌத்த மத வளர்ச்சி இலங்கையில் கலை வளர்ச்சிக்குப் பேருக்கத்தை அளித்தது. இன்றும் இலங்கையில் பின்பற்றப்படுவது அசோகர் பரப்பிய ஹீனயான பௌத்த மதமே. வேறு எந்த நாட்டையும்விட இலங்கையில்தான் அசோகருடைய தர்ம வெற்றி நிலைத்து இருந்து வருகிறது.

[1] Prof. Sathianathier, op. cit., p. 491.
[2] Prof. K. A. Nilakanta Sastri op. cit., p. 258.
[3] Ibid., p. 259.

பகுதி VIII

# 1. அசோகரின் கல்வெட்டுகள்

அசோகருடைய கல்வெட்டுகளின் சிறப்பினை முன்பே ஓரளவிற்குப் பார்த்தோம். அவை யாவும் அவருடைய ஆணைகள். அவற்றில் காணப்படும் சொற்கள் யாவும் அவருடைய வாக்கே. அவருக்கே உரிய கம்பீர நடையில் அவை யாவும் உள்ளன. பல அறிஞர்கள் இக் கல்வெட்டுகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளனர். அவற்றில் **V. A.** ஸ்மித், **D. R.** பண்டார்க்கார், **R. K.** முகர்ஜி, ரோமிலாதாபர் முதலிய அறிஞர்களின் மொழிபெயர்ப்புகளை அடிப்படையாகக் கொண்டு அக் கல்வெட்டுகளின் தமிழாக்கம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது. தேவைப்படும் இடங்களில் விளக்கக் குறிப்புகளும் சேர்க்கப் பட்டுள்ளன.

## சிறிய கற்பாறை ஆணைகள்
## (Minor Rock Edicts)

### முதலாவது சிறிய கற்பாறை ஆணை

'சுவர்ணகிரியிலிருந்து அரசகுமாரனும் மகாமாத்திரர்களும் (உயர் அதிகாரிகளும்) இசிலாவில் உள்ள அதிகாரிகளுக்குத் தங்கள் வாழ்த்துடன் பின்வரும் தகவலை அனுப்ப வேண்டியது[4]:

கடவுளர் விரும்பும் (தேவாநாம்பியா) மன்னன் இவ்வாறு கூறுகிறான். 'நான் இரண்டரை ஆண்டுகளுக்கு மேலாக ஓர் எளிய பௌத்தனாக இருந்தேன்; ஆனால், அதிக முயற்சி எதுவும் எடுத்துக்கொள்ளவில்லை. ஓர் ஆண்டு இன்னும் சொல்லப் போனால் ஓராண்டிற்கு முன்பே சங்கத்தில் சேர்ந்தேன். அதிலிருந்தே அதிக முயற்சி கொண்டுள்ளேன். இதுவரை, ஜம்புத் தீவில் (இந்தியாவில்) கடவுளருடன் சேர்ந்து வாழாதிருந்த மாந்தர் இப்பொழுது அக் கடவுளருடன் கூடி வாழ்கின்றனர். இது (என்) முயற்சியின் பயனே. இது உயர்ந்தோருக்கு மட்டும் முடியக்கூடியதன்று; எந்த எளியவனுக்கும் முடியும். அம் மாதிரி

அவன் செவ்வனே முயன்றால் விண்ணுலகப் பேரின்பத்தை அடையலாம்.

அந்தக் காரணத்திற்காகவே இவ் வாணையை அறிவிக்கின்றேன்: 'உயர்ந்தோரும் எளியவரும் இக் குறிக்கோளுடன் முயற்சிபுரிதல் வேண்டும்.'

என் அண்டை நாட்டு மக்களும்கூட இப் பாடத்தை அறிதல் வேண்டும். என்றும் இப் பாடத்தை மறவாதிருப்போமாக.

மேலும், இம்மாதிரியான முயற்சி பெருகும். ஆமாம், மிகுதியாகப் பெருகும்; குறைந்தது ஒன்றரை மடங்காவது பெருகும்,

மேலும், இவ் வாணை சமயப் பரப்புக் குழுவினரால் அறிவிக்கப்பட்டுள்ளது—256.'

ரூபநாத் பிரதியில் மேற்கொண்டு காணப்படும் வாசகம்

'இச் செய்தி, வாய்ப்புள்ள இடங்களில் கற்பாறைகளில் பொறிக்கப்பட வேண்டும். மேலும், என் நாட்டில் எங்கெங்குக் கற்றூண்கள் உள்ளனவோ அங்கெல்லாம் அவற்றில் செதுக்குவதற்கு ஏற்பாடுகள் செய்தல் வேண்டும். மேலும், இதிலுள்ளவாறு உங்கள் அதிகார வரம்புக்குட்பட்ட எல்லா இடங்களுக்கும் இதனை அனுப்பிவைக்கவும்,'

குறிப்பு: இது பிரம்மகிரிப் பிரதியின் தமிழாக்கம். அதில் இல்லாத சில வாசகங்கள் ரூபநாத் பிரதியின் கடைப் பகுதியில் காணப்படுகின்றன. அவற்றையும் இதனுடன் சேர்த்துள்ளோம். 'தேவாநாம்பியா' (தேவாநாம்பிரியா) என்ற அசோகரின் பட்டம் 'கடவுளர் விரும்பும்' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. கடவுளர் மாந்தருடன் கூடி வாழ்வதாக அசோகர் கூறுவது அவர் நாட்டில் தர்மம் வளர்ந்ததை எடுத்துக் காட்டவே. அஃதன்றி, அவர் கடவுள்வழிபாட்டைப் போற்றியதாகக் கொள்வதற்கில்லை. இக் கல்வெட்டின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள எண் 256 எதைக் குறிக்கின்றது என்பதுபற்றி அறிஞர்களிடையே கருத்துவேறுபாடு உள்ளது. V. A. ஸ்மித், D. R. பண்டார்க்கார் முதலியோர் 256 சமயப்பரம்புக் குழுவினர் (Missionaries) என்று விளக்கினர்.[1] ஆனால், ரோமிலாதாபர் அஃது அசோகர் பிரயாணம் அல்லது யாத்திரையில் கழிந்த 256 இரவுகள் அல்லது நாள்களைக் குறிக்கும் என்று கூறுகிறார்.[2] R. K. முகர்ஜி அஃது

[1] Smith, op. cit., p. 152; Bhandarkar, op. cit., p. 329.
[2] Op. cit., p. 38.

அரசாங்க ஆண்டின் (official year) நாளைக் குறிக்கலாமெனக் கருதுகின்றார்.[1] மாஸ்கியில் உள்ள இக் கல்வெட்டுப் பிரதியில்தான் அசோகர் என்ற பெயர் காணப்படுகின்றது.

**இரண்டாவது சிறிய கற்பாறை ஆணை**

'கடவுளர் விரும்பும் மன்னன் இவ்வாறு கூறுகிறான்: 'தந்தை தாய் சொற் கேட்டல் வேண்டும். அவ்வாறே எப்பொழுதும் எல்லாவுயிர்களையும் போற்றவேண்டும். உண்மையையே பேசுதல் வேண்டும். தர்மத்தின் இவ் விதிகளைச் செயற்படுத்த வேண்டும். அவ்வண்ணமே ஆசிரியரிடம் மாணவர் பக்தியுடன் இருத்தல் வேண்டும்.'

'இதுதான் தொன்மையான பண்பாடாகும். இஃது ஒருவனின் ஆயுளை நீடிக்கச் செய்யும். எனவே, இதன்படியே மக்கள் நடத்தல் வேண்டும்.'

(செப்) படன் என்ற எழுத்தன் எழுதியது

குறிப்பு: இக் கல்வெட்டுப் பிரம்மகிரியில் முதலாவது சிறிய கற்பாறை ஆணையுடன் தொடர்ச்சியாகச் செதுக்கப்பட்டுள்ளது. எற்றகுடியில் காணப்படும் பிரதியில் மேலும் சில செய்திகள் உள்ளன. அதில் அசோகர் தம்முடைய சமயத்தைப் பரப்ப இராஜுகர், மகாமாத்திரர், ராஷ்டிரிகர் முதலிய அதிகாரிகளின் உதவியைப் பயன்படுத்தியதையும், தம்முடைய போதனைகளை ஆசிரிய அந்தணர்கள் உள்பட எல்லா மக்கட் பிரிவினருக்கும் தெரிவிக்க வேண்டுமெனக் கூறியதையும், மாணவர்கள், கட்டுப் பாட்டுடனும் கல்வியில் முழு ஈடுபாட்டுடனும் முதியோருக்கு அடங்கியும் வாழும்படி ஆசிரியர்கள் பயிற்று விக்கவேண்டுமெனக் கூறியதையும் காண்கிறோம்.[2]

## பாப்ரு ஆணை

(அல்லது இரண்டாவது பெய்ராட் கற்பாறைச் சிற்றாணை)

'காட்சிக்கினிய (பியதசி) மகதநாட்டு மன்னன் (பௌத்த) சங்கத்திற்குத் தனது வணக்கத்தையும், சங்க உறுப்பினருக்கு

[1] Asokan Inscriptions A–Commentary, p. 41.
[2] R. K. Mookerji-Asokan Inscriptions-A Commentary, Appx A. pp. 58 A and B.

உடல் நலமும் செல்வவளமும் பெருகுக என்ற தன் வாழ்த்தையும் தெரிவிக்கின்றான்.'

'புனிதமானவர்களே, புத்தரிடத்திலும், தர்மத்திலும், சங்கத்திலும் நான் கொண்டுள்ள நம்பிக்கையையும் நன்மதிப்பையும் நீவிர் அறிவீர்.

புனிதமானவர்களே, வணக்கத்திற்குரிய புத்தர் எதைச் சொன்னாலும் நன்றாகவே சொல்லியிருக்கிறார்.

இருப்பினும், புனிதமானவர்களே, 'உண்மையான தர்மம் என்றும் நிலவ' என்னளவில் இதனைக் குறிப்பிடவேண்டும்.

புனிதமானவர்களே, தர்மத்தின் இப் போதனைகளையே நான் தேர்ந்தெடுத்துள்ளேன்:

1. ஆன்மீகக் கட்டுப்பாட்டின் பெருமை (வினய சமுகசே).
2. மாமுனிகளின் நன்னடத்தை நெறி (அலிய வசானி).
3, எதிர்காலத் தீங்குகளைப்பற்றிய அச்சங்கள் (அனுகத பயானி).
4, 'முனிவன் யார்' என்ற பாட்டு (மினிகாதா)
5. மௌனத்தைப்பற்றிய சூத்திரம் (மௌனிய சூதே)
6. உபதிஷ்யாவின் வினுக்கள் (உபதிச பசினே)
7. இராகுலனுக்குப் புத்தர் அளித்த அறிவுரை பொய்மையிலிருந்து தொடங்கியது (லாகுலொவாத முசாவாதம் அதிகித்யா).

'புனிதமானவர்களே, இவற்றைப் பிக்குகள், பிக்குணிகள் பலரும் அடிக்கடி (பிறர் சொல்வதைக்) கேட்பதுடன் தியானம் புரிய வேண்டுமென்று விழைகின்றேன். அவ்வண்ணமே இல்லறத்தில் வாழும் பௌத்தர்கள், ஆடவரும் பெண்டிரும் செய்தல் வேண்டும்.

இக் காரணத்திற்காகவே இதனைக் (கல்லில்) வரையச் செய்தேன். மக்கள் என் கருத்தினை அறிவார்களாகுக!'

குறிப்பு : இக் கல்வெட்டு முதலில் பெய்ராட்டில் (இராஜஸ்தானம் இருந்தது. மேஜர் பர்ட் (Major Burt) பாப்ருவில் (பெய்ராட்டிலிருந்து 12 மைல்) தங்கியிருந்தபொழுது இக்

கல்வெட்டுள்ள பாறை அங்குக் கொண்டுவரப்பட்டது. பின்னர், அவ்வூர்ப் பெயராலேயே இக் கல்வெட்டு அல்லது ஆணை வழங்கப்பட்டது. பெய்ராட்டில் அசோகரது முதலாவது சிறிய கற்பாறை ஆணையின் பிரதி ஒன்றும் உள்ளது. மேலும், அவ்விடத்தில் முன்பிருந்த பௌத்தமடத்தில் அசோகர் கொஞ்ச காலம் தங்கியிருக்கக் கூடுமென V. A. ஸ்மித் கருதுகின்றார்.[1] அஃது எவ்வாறாயினும், அசோகர் பௌத்த சமயத்தையே பின்பற்றினார் என்பதை இக் கல்வெட்டு ஐயமறக் காட்டுகின்றது. அக் காரணத்தினால் இஃது ஒரு முக்கியமான அசோகர் கல்வெட்டென்று கூறலாம். பியதசி (பிரியதசி) என்ற சொல் 'காட்சிக் கினியவன்' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இனி 'தர்மத்தின் போதனைக'ளென அசோகர் குறிப்பிட்டுள்ளவை பௌத்த வேதத்தில் இன்னின்னவை என அறிஞர்கள் கூறுவதைக் காண்போம்.

எல்லாப் பௌத்தர்களையும்போல அசோகர் திரிசரணத்தில் தமக்குள்ள நம்பிக்கையை முதலில் அறிவிக்கின்றார். புத்தர் எதைச் சொன்னாலும் அதை நன்கு கூறியுள்ளாரென அசோகர் மொழிவதுகூட அங்குத்தர நிகாயத்திலிருந்து சொல்லியதுதான்.[2] அவ்வண்ணமே 'உண்மையான தர்மம் என்றும் நிலவும்' என்று அசோகர் சொல்வதும் அதே அங்குத்தர நிகாயத்திலிருந்து கூறப்பட்டதே.[3]

அடுத்து, எல்லாப் பௌத்தர்களும் அறியவேண்டியது என அசோகர் கூறும் பௌத்த தர்மப் போதனைகளாவன:

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | வினய சமுகசே | = | காசியில் புத்தர் ஆற்றிய முதல் போதனை-'உதான'த்தில் சாமுகம்சிகா தம்மதெசனா என்று கூறப்படுவது. | |
| 2. | அலிய வசானி | = | அரிய வம்சா, | (அங்குத்தர நிகாயத்தில் உள்ளது) |
| 3. | அனாகத பயானி | = | அனாகத பயானி | ( ,, ,, ) |
| 4. | முனிகாதா | = | முனி சுத்த | (சுத்த-நிபாதம்) |
| 5. | மொனிய சூதெ | = | நாலக சுத்த | ( ,, ,, ) |
| 6. | உபதிச பசினெ | = | சாரிபுத்த-சுத்த | ( ,, ,, ) |
| 7. | லாகுலொவாத | = | இராகுலொ-வாத சுத்த | (மஜ்ஜிம்ம நிகாயம்) |

[1] Op. cit., 155 Fn.
[2] Smith op. cit., p. 156.
[3] Ibid.

இவை யாவும் பௌத்த வேதத்தில் உள்ளவையே. பௌத்த சமயத் தத்துவங்களைக் கூறிவாதிடாது, எளிய மக்களின் வாழ்வை மேன்மையுறச் செய்வதற்கு ஏற்ற பௌத்த வேதப் பகுதிகளை அசோகர் நன்கு பயின்று போற்றியிருப்பது கவனிக்கத்தக்கது. இவற்றின் அடிப்படையில்தான் அசோகர் தம் தர்மக் கோட்பாட்டினைக் கூறியுள்ளார்.

## கற்பாறை ஆணைகள்
## (Rock Edicts)

### முதலாவது கற்பாறை ஆணை

'கடவுளர் விரும்புபவனும் காட்சிக் கினியவனுமானவன் ஆணையின்படி கடமை தர்மத்தின் வேதமான (Scripture) இஃது எழுதப்பட்டுள்ளது.'

'இங்கு (பாடலிபுரத்தில்) எந்த விலங்கையும் பலியிடுதலோ கொண்டாட்டங்கள் நடத்துதலோ கூடாது. ஏனெனில், கொண்டாட்டங்களில் அதிகத் தீங்குள்ளதைக் கடவுளர் விரும்பு பவனும் காட்சிக்கினியவனுமானவன் காண்கின்றான். அதே சமயம், சில கொண்டாட்டங்கள் மிகச்சிறந்தவை என்பதையும் கடவுளர் விரும்புபவனும் காட்சிக்கினியவனுமானவன் அறிவான். இதற்கு முன் கடவுளர் விரும்புபவனும் காட்சிக்கினியவனுமான வன் அடுக்களையில் ஒவ்வொரு நாளும் கறி செய்வதற்குப் பல ஆயிரக்கணக்கான பிராணிகள் கொல்லப்பட்டன. ஆனால், இப்பொழுது, இக் கடமைத் தர்மத்தின் வேகத்தை எழுதிக் கொண்டிருக்கும்பொழுது, நாளொன்றிற்கு மூன்று பிராணிகள் மட்டுமே கொல்லப்படுகின்றன. அவையாவன: இரண்டு மயில் களும் ஒரு கறுப்பு மானும் ஆகும். அதிலும், கறுப்பு மானை நாள் தோறும் கொல்லுவதில்லை. இவைகளும் எதிர்காலத்தில் கொல்லப்படமாட்டா.'

குறிப்பு: 'தம்மலிபி' என்ற கல்வெட்டுச் சொல்லை V.A. ஸ்மித் தர்மத்தின் வேதம் (Scripture) என்று மொழி பெயர்த்துள்ளது பொருத்தமே. ஆனால், R.K. முகர்ஜி அதைச் சமய ஆணை என்று மொழி பெயர்த்துள்ளார். 'சமாஜ' என்ற சொல் கொண்டாட்டம் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. கொண்டாட்டம் சமயச் சார்புள்ளதாகவும், சமயச் சார்பற்ற தாகவும் இருக்கலாம். பௌத்த வேதத்தின் ஒரு பகுதியான தீகநிகாயத்தில் (Digha-Nikaya) ஆடிக் கொண்டும், பாடிக் கொண்டும், கதை சொல்லிக்கொண்டும், பறையறைந்து

கொண்டும், தாளம் போட்டுக்கொண்டும் நடைபெறும் 'சமாஜம்' ஒன்றும், தரமற்ற கூத்துகள், விலங்குகள் சண்டை முதலிய விரும்பத்தகாத காட்சிகளைக் கொண்ட 'சமாஜங்'களும் விவரிக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.[1] அதேபோல மகா பாரதத்தில், சிவ வழிபாடுபற்றிய ஒரு கொண்டாட்டத்தில் ஆடுவதும் பாடுவதும் குடிப்பதும் உண்டென்று கூறப்பட்டுள்ளது. அதே நூலில் சமயச் சார்பற்ற 'சமாஜங்'களைப்பற்றிய வேறு செய்திகளும் காணப்படுகின்றன. இவைகளில் பொது மக்களுக்குப் புலால் விருந்தளிப்பதும், ஆயுதப் போட்டி நடப்பதும், போர்ச் சூழ்ச்சிகளைக் காட்டுவதும் உண்டு. சுயம்வரத்திற்காகவும் இத்தகைய சமாஜம் நடைபெறுவதுண்டு.[2] கலிங்க மன்னன் காரவேலனும், சாதவாகன மன்னன் கௌதமீபுத்திர சாதகர்ணியும் 'உத்சவங்களாலும் சமாஜங்களாலும்' தம் மக்களை மகிழ்வித்ததாக அறிகிறோம்.[3] கௌடில்யரின் அர்த்த சாஸ்திரத்தில் 'சமாஜ'த்தைப் போற்றிக்கூறும் குறிப்பொன்று உள்ளது.[4] அசோகருடைய ஆட்சியின் முற்பகுதியில் மது அருந்துதல், புலால் உண்ணுதல், விலங்குகளைத் துன்புறுத்துதல் முதலியவைகளுக்கு இடமளிக்கும் கொண்டாட்டங்கள் நடைபெற்று வந்தனவென்பதையும், அவற்றை அசோகர் பௌத்த சமயத்தைப் பின்பற்றத் தொடங்கியதும் தடுத்துள்ளார் என்பதையும் இக் கல்வெட்டுப் புலப்படுத்துகின்றது.

அதேபோன்று தம் மக்களுக்குப் புலால் விருந்து அளிப்பதற்காக அரண்மனையில் பல ஆயிரக்கணக்கான விலங்குகளை கொன்று வந்ததையும் அசோகர் நிறுத்தியிட்டார். மகாபாரதக் காலத்திலேயே இத்தகைய விருந்து நடைபெற்று வந்தது என்று தெரிகிறது. இரந்திதேவன் என்ற அரசன் நாள்தோறும் நாலாயிரம் விலங்குகளைக் கொன்று தன் மக்களுக்கு விருந்தளித்ததாக 'வனபர்வம்' கூறுகின்றது.[5]

### இரண்டாவது கற்பாறை ஆணை

'கடவுளர் விரும்புபவனும் காட்சிக்கினியவனுமான மன்னன் நாட்டில் எல்லாவிடங்களிலும், அடுத்துள்ள சோழர், பாண்டியர் சத்தியபுத்திரர், கேரளபுத்திரர் (நாடுகளிலும்) தாம்பபர்ணி

[1] See R. K. Mookerji, Asokan Inscription-Commentary, p. 2.
[2] Ibid.
[3] D. R. Bhandarker, op. cit., p. 20
[4] Ibid.
[5] Ibid.

வரையிலும், கிரேக்க மன்னன் ஆன்டியோகஸ், அவன் அண்டையோர் நாடுகளிலும்—எல்லாவிடங்களிலும் கடவுளர் விரும்புபவனும் காட்சிக்கினியவனுமான மன்னன் இரண்டு முறையில் நோய் தீர்க்கும் ஏற்பாடுகளைச் செய்திருக்கிறான். மனிதர்களுக்கு நோய்தீர்க்கும் ஏற்பாடுகள்; விலங்குகளுக்கு நோய்தீர்க்கும் ஏற்பாடுகள். மருந்து மூலிகைகள்கூட, மனிதர்களுக்கு வேண்டிய மருந்து மூலிகைகளும் விலங்குகளுக்கான மருந்து மூலிகைகளும் எங்கெங்கு இல்லையோ அங்கெல்லாம் வெளியிலிருந்து வரவழைக்கப்பட்டு நடப்பட்டுள்ளன. எங்கெங்கு வேர்களும் பழங்களும் இல்லையோ அங்கெல்லாம் வெளியிலிருந்து கொண்டுவரப்பட்டு நடப்பட்டுள்ளன. சாலைகளிலும் கூட மாந்தர்கள், விலங்குகள் நலத்திற்காகக் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன; மரங்களும் நடப்பட்டுள்ளன.'

குறிப்பு: 'அடுத்துள்ள சோழர், பாண்டியர் நாடுகள்' என்று கூறுவதிலிருந்து அசோகருடைய பேரரசின் தென் எல்லையை அறிகிறோம். அதேபோன்று ஆன்டியோகஸைத் தம் அண்டை நாட்டு மன்னன் என்று குறிப்பிடுவதிலிருந்து அசோகருடைய பேரரசு மேற்குப் பாரசீகம் வரை பரவியிருந்ததாக அறிகிறோம். 'தாம்பபர்ணி' என்பது இலங்கையே; தாமிரபர்ணி ஆறு அன்று.[1] சத்தியபுத்திரர் நாடு கோயம்புத்தூர் மாவட்டத்தில் சத்திய மங்கலம் தாலூக்காவை உட்கொண்ட பிரதேசமென V.A.ஸ்மித்தும்[2] தகடூரைத் தலைநகராகக் கொண்ட அதியமான்கள் நாடென K. G. சேஷ அய்யரும் T. பர்ரோவும்[3], தென் கன்னட மாவட்டத்தை உட்கொண்ட பிரதேசமென M. கோவிந்த பாயும்[4] கோசர்கள் நாடெனப் பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியும்[5] மற்றும் சிலரும், சோழ, பாண்டிய, கேரள நாடுகளுக்கிடையே உள்ள பகுதியெனப் பேராசிரியர் சத்தியநாதய்யரும்[6] வடமலபாரென வேறு சிலரும்[7] கருதுகின்றனர். கோசர்களை 'வாய்மொழிக் கோசர்' என்று சங்க நூல்கள் சிறப்பித்துக் கூறுவது இங்குக் குறிப்பிடத் தகுந்தது.[8]

[1] ஏழாவது அதிகாரத்தில் பார்க்க.

[2] Op. cit. p. 161.

[3] B S. O. A. S. Vol. XII, pt. I, p. 425.

[4] Dr. S. Krishnaswamy Aiyangar Commemoration Vol. p. 47.

[5] Op. cit., p. 251.

[6] Op. cit., p. 168.

[7] Ibid.

[8] ஏழாவது அதிகாரத்தைப் பார்க்க.

**மூன்ருவது கற்பாறை ஆணை**

'கடவுளர் விரும்புபவனும் காட்சிக்கினியவனுமான மன்னன் இவ்வாறு கூறுகிருன்:

'நான் முடிசூட்டிக்கொண்டு பன்னிரண்டு ஆண்டுகள் ஆகியிருந்தபொழுது என்னுல் இவ் வாணை வெளியிடப்பட்டது'.

'என்னுடைய நாட்டில் எல்லாவிடங்களிலும் யுக்தர், இராஜுகர், பிரதேசிகர், ஐந்தாண்டிற் கொருமுறை, ஒருவரை யடுத்து ஒருவர், 'தர்மத்'தைப் பரப்புதற்கும் பிற அலுவல் காரணமாகவும் மாறிச் செல்லுதல் (transfer) வேண்டும்.

'தர்ம'மாவது தந்தை தாய் சொற் கேட்டல் மேலானது; நண்பர்களுக்கும், பழக்கமானவர்களுக்கும், உறவினர்களுக்கும், அந்தணர்களுக்கும், துறவிகளுக்கும் உதவுவது மேலானது; உயிரினங்களைக் கொல்லாதிருத்தல் மேலானது; சிறுகச் செலவு செய்வதும் சிறுகச் சேமிப்பதும் மேலானது.

(அமைச்சர்) குழு இவ் வாணையின் கொள்கையையும், உட்பொருளையும் கணக்குத்துறை (கணநா) அதிகாரிகளுக்குப் புகட்டட்டும்.'

குறிப்பு : யுக்தர் எனப்படுவோர் உதவி அதிகாரிகள்; நடுத்தர அல்லது சிறுதரத்தைச் சேர்ந்தவர்கள். இராஜுகர்கள் மாகாணத் தலைவர்களென (கவர்னர்கள்) ஸ்மித் கூறுவது பொருத்தமே.[1] அவர்கள் கிராமப்புற அதிகாரிகளென ரோமிலா தாபர் கூறுகிருர். பண்டர்க்காரும் அதே கருத்தைக் கொண்டுள்ளதாய்த் தெரிகிறது[3] R. K. முகார்ஜி, ஸமித்தின் கருத்தை ஏற்றுக்கொண்டுள்ளார்.[4] பிரதேசிகர், வரிவசூல் காவல்துறை முதலியவற்றைக் கண்காணித்து வந்த மாவட்ட அதிகாரிகள் என்று ஸ்மித் கருதுகின்ருர். இனி ஐந்தாண்டிற் கொருமுறை அதிகாரிகள் மாறிச் செல்லவேண்டுமென்று குறிப்பிட்டுள்ளது சாதாரண அலுவல் பயணம் (Official tour) அன்று, அலுவல் இட மாற்றமே (transfers). பரிஷத் எனப்படுவது மந்திரி பரிஷத் அல்லது அமைச்சர் குழுவேயாகும்.

1 Op. cit., p. 163.
2 Op. cit., pp. 106-107.
3 Op. cit., p. 56.
4 Asokan Inscrip A-Commentary, tionspii8

நான்காவது கற்பாறை ஆணை

'இதற்குமுன் நீண்ட காலமாக, ஏன், பல நூற்றுண்டுகளாக விலங்குகளை வேள்வியில் பலியிடுவதும் உயிருள்ளவைகளைக் கொல்லுதலும் உறவினரிடம் பண்பின்றி நடந்துகொள்வதும் அந்தணர்களிடமும் துறவிகளிடமும் தகாதவாறு நடந்துகொள்வதும் அதிகரித்துக்கொண்டே வந்துள்ளன.

ஆனல், இப்பொழுது கடவுளர் விரும்புபவனும் காட்சிக்கினியவனுமான மன்னன் 'தர்மத்'தைப் பின்பற்றி நடப்பதால், போர் முரசின் முழக்கம் தர்மத்தின் முழக்கமாகியுள்ளது. மன்னன் (தன் மக்களுக்கு) விமானக் காட்சிகளையும், யானைக் காட்சிகளையும், சொக்கப்பனைக் காட்சிகளையும், இதரத் தெய்வீகக் காட்சிகளையும் வழங்கியுள்ளான். இதற்கு முன் பல நூற்றுண்டுகளாக நடைபெறுதது, இப்பொழுது, இச்சமயம், கடவுளர் விரும்புபவனும் காட்சிக்கினியவனுமான மன்னனின் 'தர்ம' போதனையால் விலங்குகளைப் பலியிடாமலிருப்பதும், உயிருள்ளவைகளைக் கொல்லாதிருப்பதும், உறவினரிடம் பண்புடன் நடந்துகொள்வதும், அந்தணர்களிடமும் துறவிகளிடமும் தக்கவாறு நடந்துகொள்வதும், தந்தை தாய் சொற் கேட்டலும், முதியோர் கூறியவாறு நடப்பதும் அதிகரித்துள்ளது.'

'கடவுளர் விரும்புபவனும் காட்சிக்கினியவனுமான மன்னனின் பிள்ளைகளும், பெயரப் பிள்ளைகளும், கொள்ளுப் பேரர்களும் (great-grandsons) யுகாந்தர காலம் வரை இத் 'தர்மம்' பின்பற்றப்படுவதை வளர்ப்பார்களாகுக. 'தர்மத்திலும்' நன்னெறியிலும் உறுதியாக இருந்து அவர்கள் (பிறருக்கு) தர்மத்தைப் புகட்டுவார்களாகுக. ஏனெனில், செயல்களில் சிறந்தது தர்மத்தைப் புகட்டுவதே. நெறியின்றி வாழ்பவன் 'தர்மத்தை'ப் பின்பற்றுவதற்கில்லை. இது விஷயத்தில் வளர்ச்சியுறுவதும் குறையாமலிருப்பதும் மேலானவையாம்.

இந்த நோக்கத்திற்காக அஃதாவது அவர்கள் (என் சந்ததியினர்) (தர்மத்தின்) வளர்ச்சிக்காக முயல்வார்கள்; குறைய இடங்கொடார் என்பதற்காகவே இஃது எழுதப்பட்டுள்ளது.'

'கடவுளர் விரும்புபவனும் காட்சிக்கினியவனுமான மன்னன் முடிசூட்டிக்கொண்டு பன்னிரண்டு ஆண்டுகள் ஆகியிருந்த பொழுது இஃது எழுதப்பட்டது.'

குறிப்பு - அசோகர், மக்களின் மனத்தைத் தம் அறவழியில் திருப்பச் சமயவிழாக்களை நடத்தினுர் என்பது இக் கல்வெட்டால் நன்கு புலப்படுகிறது.

ஐந்தாவது கற்பாறை ஆணை

'கடவுளர் விரும்புபவனும் காட்சிக்கினியவனுமான மன்னன் இவ்வாறு கூறுகிறான்':

'ஒரு நற்செயல் கடினமானதுதான். நல்லதைச் செய்பவன் கடினமானதொன்றையே செய்கிறான். இப்பொழுது நான் பல நற்செயல்களைப் புரிந்துள்ளேன்.'

என்னுடைய பிள்ளைகளும், பெயரப் பிள்ளைகளும், அவர்களுக்குப் பின்வரும் என் வழியினரும் யுகாந்தர காலம்வரை இவ்வழியிலேயே செல்வார்களானால் நல்லதை அடைவார்கள். ஆனால், இதில் யார் தன் கடமையின் ஒரு பகுதியைப் புறக்கணித்தாலும் கெடுதலுறுவார்கள். உண்மையிலேயே பாவத்தைப் புரிதல் எளிது.

இதற்குமுன் தர்ம மகாமாத்திரர்கள் (கண்டனையாளர்கள்) என்ற அதிகாரிகளே இருந்ததில்லை. நான் முடிசூட்டிக்கொண்டு பதின்மூன்றாண்டுகள் ஆகியிருந்தபொழுது அவர்களை ஏற்படுத்தினேன்.

அவர்கள், தர்மத்தை நிலைநிறுத்தவும் பரப்பவும் தர்மத்தைப் பின்பற்றுவோர் நலத்திற்காகவும், மகிழ்ச்சிக்காகவும், பல்வேறு சமயப் பிரிவினரிடையும், என் மேற்கு எல்லையில் உள்ள யவனர்கள், காம்போஜர்கள், காந்தாரர்கள், இராஷ்டிரிகர்கள், பிட்டினிகர்கள், மற்றச் சமூகத்தினரிடையேயும் பணியாற்றி வருகின்றனர்.

பணியாள்கள், அவர்களின் தலைவர்கள், அந்தணர்கள், செல்வந்தர்கள், உதவியற்றோர்கள், முதியவர்கள் முதலியவர்களிடையே அவர்களின் கவலைகளை நீக்கவும், தர்மத்தைப் பின்பற்றுவோர் தளைகளை நீக்கவும் அவர்கள் (தர்ம மகாமாத்திரர்கள்) பணியாற்றி வருகிறார்கள்.

அவர்கள் (தர்ம மகாமாத்திரர்கள்), குற்றம் புரிந்தவைகளுக்கான காரணங்கள், குழந்தைகள் பற்றிய குடும்பநிலை, தூண்டுதல், முதுமை முதலியவற்றை முறை வழங்குவதில் உணர்ந்து, சிறைத்தண்டனை அடைந்தோர், கொலைத் தண்டனை பெற்றோர் முதலியவர்களின் தண்டனைகளை மாற்றுவதிலும், குறைப்பதிலும், சிறையிலிருந்து விடுவிப்பதிலும் பணிபுரிகின்றனர்.

இங்கும் (பாடலிபுத்திரத்திலும்), மாகாணத் தலைநகரங்களி லும் என்னுடைய சகோதரர்கள், சகோதரிகள், உறவினர்கள் குடும்பங்களில் பெண்டிர் இருக்குமிடங்களிலும் அவர்கள் (தர்ம மகாமாத்திரர்கள்) பணியாற்றுகின்றனர். என் நாட்டில் எல்லா விடங்களிலும் தர்மத்தில் ஈடுபாடுடையவர்களிடையேயும், தர்மத்தின் உறைவிடமாக உள்ளோரிடையேயும், முறைப்படி தர்மம் செய்வோரிடையேயும் அவர்கள் (தர்மமகாமாத்திரர்கள்) பணியாற்றுகின்றனர்.

இந்த நோக்கத்திற்காக அஃதாவது 'தர்மம் என்றும் நிலவட்டும், என் மக்கள் அதன்படியே நடக்கட்டும், என்பதற்காக, தர்மத்தின் இவ் வேதம் எழுதப்பட்டுள்ளது.'

குறிப்பு: யவனர்கள், காம்போஜர்கள், காந்தாரர்கள் முதலியோர் வடமேற்கு இந்தியாவிலும் ஆப்கானிஸ்தானத்தில் கிழக்குப்பகுதியிலும் இருந்தவர்கள். ஆனால், அவர்கள் வாழ்ந்த பிரதேசத்தைத் தனித்தனியே எல்லைகளுடன் குறிப்பிட இயல வில்லை.[1] இருப்பினும், D. R. பண்டார்க்கார் யவனர்கள் வட மேற்கு எல்லைப்புற மாகாணத்தில் கோபனுக்கும் (Kophen) சிந்து நதிக்கும் இடையே உள்ள பகுதியிலும் (பெஷாவர் மாவட்டம்), காம்போஜர்கள் அதே மாகாணத்தில் ஹஸாரா மாவட்டப் பகுதியிலும், காந்தாரர்கள் தட்சசீலத்தைச் சுற்றியுள்ள பகுதி யிலும் வாழ்ந்ததாகக் கூறுகிறார்.[2] இராஷ்டிரிகர்களும் ஒரே சமூகத்தினரென்றும் அவர்கள் பூனாவையும் அதைச் சுற்றியுள்ள மாவட்டங்களையும் கொண்ட பிரதேசத்தில் வாழ்ந்தனரென்றும் அதே அறிஞர் குறிப்பிட்டுள்ளார்.[3] ஆனால், பேராசிரியர் சத்திய நாதய்யர் இராஷ்டிரிகர்கள் மகாராஷ்டிரத்திலும், பிட்னிகர்கள் வடகிழக்கே கோதாவரி நதிதீரத்திலும் வாழ்ந்ததாகக் கருது கின்றார்.[4] ரோமிலாதாபர் பிட்னிகர்கள் மகாராஷ்டிரத்திலும் இராஷ்டிரிகர்கள் பஞ்சாபிலும் இருந்தவர்களெனக் கூறுகிறார்.[5] பேராசிரியர் K. A. நீலகண்ட சாஸ்திரியார் காம்போஜர்கள் பாமீரிலும், இராஷ்டிரிகர்கள் கத்தியவாரிலும் வாழ்ந்தனர் என்று கருதுகின்றார்.[6] வின்செண்ட் ஸ்மித் காம்போஜர்கள் இமயமலையின் மேற்குப்பகுதியிலும், காந்தாரர்கள் வடமேற்குப்

[1] Vide map.
[2] Op. cit., pp. 29-31.
[3] Ibid p. 33.
[4] Op. cit., see the map on p. 169.
[5] Op cit., see the map on p. 124.
[6] Age of the Nandas and Mauryas, pp. 222-223.

புஞ்சாபிலும், யவனர்கள் வடமேற்கு எல்லைப்புற மாகாணத்திலும் இராஷ்டிரிகர்கள் மகாராஷ்டிரத்திலும் வாழ்ந்தவர்கள் என்று கூறுகிருர்.[1]

**ஆருவது கற்பாறை ஆணை**

'கடவுளர் விரும்புபவனும் காட்சிக்கினியவனுமான மன்னன் இவ்வாறு கூறுகிருன்':

'இதற்கு முன் நீண்டகாலமாகவே (அரசாங்க) வேலை எல்லா நேரத்திலும் தொடர்ந்து நடைபெறுவதுமில்லை; (அதேபோன்று) செய்திகளும் (அரசாங்கத்திற்கு) வருவதுமில்லை. எனவே, இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறேன். நான் உணவு உட்கொள்ளும் பொழுதும், உவளகத்தில் இருக்கும்பொழுதும், (அரண்மனையில்) உள்ளறையில் (தனியே) இருக்கும்பொழுதும், மாட்டுக் கொட்டிலில் இருக்கும்பொழுதும், சமயபோதனை நடக்குமிடத்திலிருந்தாலும், (அரண்மனை) பூங்காவிலிருந்தாலும், எங்கிருந்தாலும் செய்திகளைத் தெரிவிப்பதற்கென நியமிக்கப்பட்டுள்ளவர்கள் என்னிடம் மக்களைப்பற்றிய தகவல்களைத் தெரிவிக்க வேண்டும்.

எல்லாவிடங்களிலும் நான் மக்களைப்பற்றிய அலுவல்களைக் கவனிக்கின்றேன். மேலும், எதிர்பாராமல் நான் வாய்மொழியாக ஆணையிடுங்கால் அஃது ஒரு தானத்தைப்பற்றி இருந்தாலும் அல்லது ஓர் அரசறிக்கையைப்பற்றியிருந்தாலும், அல்லது மகாமாத்திரர்களுக்கு அவசரப்பணி எதையாவது அளித்து, அது பற்றி அமைச்சர் குழுவில் விவாதமோ வேறு ஆலோசனையோ நடக்கும் நேரமானுலும் சிறிதுகூடக் காலதாமதமின்றி எல்லாவிடத்திலும் எல்லாநேரத்திலும் எனக்குச் செய்தி தெரிவிக்கப்படவேண்டும்.

ஏனென்ருல், நான் முயற்சியிலும் பணிபுரிவதிலும் எப்பொழுதுமே மனநிறைவற்றே இருக்கின்றேன். எல்லா மக்களின் நலத்திற்காக நான் கட்டாயம் பாடுபடவேண்டும்; அதற்கு அடிப்படையானவை சக்தியும் பணிபுரிதலுமே. அவ்வுலகத்தோரின் நலத்திற்காகப் பாடுபடுதலைவிட உயர்ந்த கடமை எதுவுமில்லை. நான் பாடுபடல் எவ்வளவாயினும், அது எதற்கு? உயிரினங்களுக்கு நான் பட்டுள்ள கடமையை முடிக்கவே; அதனுல் சிலரையாவது இவ்வுலக வாழ்வில் மகிழ்ச்சியுடன்

[1] Opi cit., p. 170.

வாழவும், பின்னர் (இறந்தபின் அவர்கள்) விண்ணுலகு அடைய வும் செய்கிறேன். இந்த நோக்கத்திற்காகவே அஃதாவது தர்மம் என்றும் நிலவட்டும், என்னுடைய பிள்ளைகளும், பெயரப் பிள்ளைகளும், கொட்பேரப் பிள்ளைகளும் இவ் வுலகத்தோரின் நலத்திற்காகப் பாடுபடுவார்கள் என்பதற்காகத் தர்மத்தின் இவ் வேதத்தை வரையச் செய்துள்ளேன். இருந்தாலும், பெருமுயற்சி யின்றி அதைச் செய்வது கடினமே.'

குறிப்பு : அசோகர் அர்த்தசாஸ்திரத்தை அறிந்தவராக இருத்தல் வேண்டும். அதில் கூறப்பட்டுள்ள அரசகடமை களுக்கும் இக் கல்வெட்டில் அசோகர் கூறுவதற்கும் அரிய ஒற்றுமை காணப்படுகின்றது.[1]

ஏழாவது கற்பாறை ஆணை

'கடவுளர் விரும்புபவனும் காட்சிக்கினியவனுமான மன்னன் எல்லாச் சமயத்தினரும் எல்லாவிடங்களிலும் வாழவேண்டு மென்று விரும்புகிறான்; ஏனெனில், அவர்கள் எல்லோருமே புலனடக்கத்தையும் மனத் தூய்மையையும் விரும்புகின்றார்கள். இருந்தாலும், மனிதர் தம் விருப்பங்களிலும் உணர்ச்சிகளிலும் வேறுபடுகின்றனர். அவர்கள் தங்கள் கடமையினை முழுவ தாகவோ ஒரு பகுதியையோ செய்வார்கள். ஒருவன் எவ்வளவு தான் கொடையாளியானாலும் புலனடக்கம், மனத்தூய்மை, நன்றி, (தர்மத்தில்) உறுதியான பக்தி இவைகளைப் பெற்றிரா விடில் கீழானவனே.'

குறிப்பு : இக் கல்வெட்டின் இறுதி வாக்கியத்தை மொழி பெயர்ப்பதில் ஸ்மித்தும் பண்டார்க்காரும் சிறிது கருத்து வேறு பாடு கொண்டுள்ளனர்.

எட்டாவது கற்பாறை ஆணை

'இதற்கு முன்பெல்லாம் கடவுளர் விரும்பும் மன்னர்கள் உல்லாசப் பயணம் செய்வதுண்டு. அத்தகைய பயணங்களில் வேட்டையாடுதலும் பிற பொழுதுபோக்குகளும் நடைபெறுவ துண்டு.

ஆனால், இப்பொழுது கடவுளர் விரும்புபவனும் காட்சிக் கினியவனுமான மன்னன் தான் முடிசூட்டிக்கொண்டு பத்து ஆண்டுகள் ஆகியிருந்தபொழுது போதிமரத்திற்கு (சம்போதி)

[1] Vide V. A. Smith op. cit., pp. 173—174

யாத்திரை சென்ருன். அஃதிலிருந்துதான் தர்மயாத்திரைகள் தொடங்கின. அவற்றில் துறவிகளையும் அந்தணர்களையும் தரிசித்துத் தானமளிப்பதும் பொற்பரிசுகளுடன் முதியோரைக் காணுதலும், கிராம மக்களைப் பார்ப்பதும், (அவர்களுக்கு) தர்மத்தைப் போதிப்பதும், தர்மத்தைப்பற்றிய (அவர்களின்) கேள்விகளுக்குப் பதிலளிப்பதும் வழக்கம். அக் காலத்திலிருந்து கடவுளர் விரும்புபவனும் காட்சிக்கினியவனுமான மன்னன் வேறு எதையும்விட இஃதில் மகிழ்ச்சியடைகிருன்.'

குறிப்பு : புத்த கயாவில் இருந்த போதி மரத்திற்கு அசோகர் யாத்திரை சென்ருர். அங்குதான் புத்தர் ஞானேதய மடைந்தார்.

ஒன்பதாவது கற்பாறை ஆணை

'கடவுளர் விரும்புபவனும் காட்சிக்கினியவனுமான மன்னன் இவ்வாறு கூறுகிருன்':

'மக்கள் பலவிதச் சடங்குகளைச் செய்கின்றனர். நோயுற்ற பொழுதிலும், பிள்ளைகளின் திருமணங்களிலும், பெண்களின் திருமணங்களிலும், குழந்தைகள் பிறந்தசமயங்களிலும், பயணங் களைத் தொடங்கும் பொழுதும் அதேபோன்ற பிற சமயங்களிலும் மக்கள் பல சடங்குகளைச் செய்கின்றனர். ஏன், பெண்டிர் எத்தனையோ விதமான பயனற்ற அற்பச்சடங்குகள் பலவற்றைச் செய்கின்றனர்?'

'சடங்குகள் செய்யவேண்டியுள்ளன. இருந்தாலும், அவ்விதச் சடங்குகளால் பயன் எதுவுமில்லை. ஆனுல், இந்தவித மான சடங்குகள் அஃதாவது, தர்மச்சடங்குகள் நல்ல பயனைத் தருகின்றன. அடிமைகளையும் வேலையாள்களையும் நல்லமுறை யில் நடத்துவதும், ஆசிரியருக்கு மதிப்பளித்தலும், எல்லாவுயிர் களிடத்தும் இரக்கம் காட்டுதலும், துறவிகளுக்கும் அந்தணர் களுக்கும் உதவுதலும் இவ்விதச் சடங்குகளே. இவைகளையும் இவைபோன்ற பிறவற்றையும் தர்மச் சடங்கு என வழங்குவர்.'

''எனவே ஒரு தந்தை, மகன், உடன்பிறந்தான், தலைவன், நண்பன் அல்லது துணைவன் அல்லது அடுத்து வசிப்பவன் 'இது மிகவும் மேலானது, விரும்பியதை அடையும்வரை இந்தச் சடங்கே செய்யப்படவேண்டும்' என்று சொல்லவேண்டும்.''

'இதனை நான் செய்வேன்; ஏனெனில், பிற இவ் வுலகச் சடங்கு பயன்தருமா என்பது ஐயமே; அதனால் விரும்பியதை அடைந்தாலும் அடையலாம்; அடையாமற்போனாலும் போக லாம். எப்படியும் அஃது இம்மைக்கான ஒன்றும். ஆனால், தர்மச் சடங்கு அவ்வாறன்றி இம்மைக்கே உரியதன்று; ஏனெனில், அதனால் இவ் வுலகில் விரும்பியதை அடைய முடியாவிடினும் மறுமையில் நிச்சயமாக அளவற்ற புண்ணியத்தை அடை யலாம். அதனால் (தர்மச் சடங்கினால்) இவ் வுலகில் விரும்பியதை அடைய நேரிடின், பின்னர் இரண்டும், அஃதாவது இவ் வுலகில் விரும்பியதை அடைதலும் மறுமையில் தர்மச் சடங்கால் அளவற்ற புண்ணியத்தை அடைதலும் உறுதி.'

(சில பிரதிகளில் மேலே உள்ள கடைசிப் பகுதிக்குப் பதிலாகப் பின்வரும் வாசகம் காணப்படுகின்றது.)

'தானம் மிக மேலானது' என்று கூறப்படுகின்றது. ஆனால், ''தர்ம' தானம் அல்லது உதவியைப் போன்ற ஒரு தானமோ உதவியோ கிடையாது. எனவே, ஒரு நண்பன், அன்பன், உறவினன் அல்லது துணைவன் அறவுரை கூற வேண்டியது. 'இது செய்யப்படவேண்டியது, இது மிகவும் மேலானது, இதனால் நீ விண்ணுலகை அடைய முடியும்.' (என்பதே). விண்ணுலகை அடைவதைவிட வேறு நல்லதாகச் செய்யக் கூடியதென்ன?''

பத்தாவது கற்பாறை ஆணை

'தன்னுடைய மக்கள் நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் தர்மத்திற்கு அடிபணிந்து அதன்படி நடந்தாலொழியக் கடவுளர் விரும்புபவனும் காட்சிக்கினியவனுமான மன்னன் புகழினாலோ பெருமையினாலோ தனக்குப் பெரும்பயன் ஏற்படும் என்று நம்பவில்லை.'

'கடவுளர் விரும்புபவனும் காட்சிக்கினியவனுமான மன்னன் பாடுபடுவதெல்லாம் மறுமை வாழ்விற்காகவே. அதனால் ஒருவன் ஓர் ஆபத்திலிருந்து விடுபடலாம்; அந்த ஆபத்து தீய ஒழுக்கமே.'

'செல்வர்களாயினும் எளியவர்களாயினும் மக்கள் தங்களு டைய பற்றுகளைவிட்டுக் கடுமையாக முயன்றாலன்றி, அத்தகைய விடுதலையை அடைவது உண்மையிலேயே மிகக் கடினமே.'

## பதினொன்றாவது கற்பாறை ஆணை

'கடவுளர் விரும்புபவனும் காட்சிக்கினியவனுமான மன்னன் இவ்வாறு கூறுகிறான்' :

'தர்ம தானத்தைப்போன்று அஃதாவது தர்மத்துடன் பழகுதல் போன்றோ, தர்மத்தில் பங்கு கொள்ளுதல் போன்றோ தர்மத்துடன் உறவாடல் போன்றோ ஒரு தானம் இல்லை.

அது வேலையாள்களையும், அடிமைகளையும் நன்முறையில் நடத்துதலிலும், தந்தை தாய் சொற்கேட்டலிலும், நண்பர்களுக்கும்—தோழர்களுக்கும்- உறவினர்களுக்கும்- துறவிகளுக்கும் அந்தணர்களுக்கும் உதவுவதிலும், உயிருள்ள பிராணிகளைப் பலியிடாதிருத்தலிலுந்தாம் அடங்கியுள்ளது.'

'இது மிகவும் மேலானது. இது கட்டாயம் செய்யப்பட வேண்டியது' என்று தந்தையும், மகனும், உடன்பிறந்தவனும், தலைவனும், நண்பன் அல்லது தோழனும்—இல்லை—அடுத்து வாழ்பவனும்கூடக் கட்டாயம் சொல்லவேண்டும்.'

'இவ்விதம் நடந்து ஒருவன் இம்மையிலும் பயனை அடைகின்றான்; மறுமையிலும் தர்ம தானத்தால் அளவற்ற புண்ணியத்தைப் பெறுகின்றான்.'

## பன்னிரண்டாவது கற்பாறை ஆணை

'கடவுளர் விரும்புபவனும் காட்சிக்கினியவனுமான மன்னன் தானத்தாலும் பிற முறைகளாலும் எல்லாச் சமயத்தினரையும், அவர்கள் இல்லறத்தோராயினும், துறவிகளாயினும் வழிபடுகின்றான்.

இருந்தாலும், கடவுளர் விரும்பும் மன்னன் எல்லாச் சமயங்களிலும் தலையாய கோட்பாடுகள் வளர்ச்சியுறுவதையே பெரிதும் போற்றுகின்றான்; தானத்தையும் (பிற) புற வழிபாட்டையும் அவ்வளவிற்குப் பொருட்படுத்தவில்லை. தலையாய (சமயக்)கோட்பாடுகள் பல உருவில் வளர்ச்சியுறுகின்றன. அதற்கு அடிப்படையாக இருப்பது நாவடக்கமே. அஃதாவது ஒரு மனிதன் காரணமின்றித் தனது சமயத்தைப் போற்றவும் கூடாது; பிறர் சமயத்தைத் தூற்றவும் கூடாது. பிறர் சமயத்தைக் குறைத்துக் கூறுவது தெளிவான காரணங்களுக்காக மட்டுமே இருக்கவேண்டும்; ஏனெனில், ஒரு காரணத்தினாலோ

அல்லது மற்றொரு காரணத்தினுலோ எல்லா மக்களின் சமயங்களும் போற்றுதற்குரியவையே.'

'இவ்விதம் நடப்பதன்மூலம் ஒருவன் தன் சமயத்தைப் பெருமைப்படுத்துகின்றான்; அதே சமயம் பிறரின் சமயங்களுக்கும் தொண்டு புரிகின்றான். அவ்வாறின்றி, மாறி நடப்பதன்மூலம் ஒருவன் தன் சமயத்திற்குத் தீங்கிழைக்கின்றான்; பிறர் சமயங்களுக்கும் ஊறு செய்கின்றான். ஏனெனில், எவனொருவன் தன் சமயத்தின்பால் கொண்ட பற்றினால்மட்டும் அதன் பெருமையை உயர்த்த எண்ணங்கொண்டு, அதனைப் போற்றிப் பிற சமயங்களைத் தூற்றுகின்றானோ, அவன் உண்மையிலேயே தன் நடத்தையினால் தன் சமயத்திற்கே மிகமிகக் கொடிய ஊறுபுரிகின்றான்.'

'ஆகவே, இசைவு (concord) அல்லது ஒத்திருத்தல் மிகவும் போற்றற்குரியது; ஏனெனில், அதனால் பிறர் தர்மத்தைக் (சமயத்தை) கேட்கலாம், மனப்பூர்வமாகக் கேட்கலாம். எல்லாச் சமயத்தினரும் அதிக மதபோதனையைக் கேட்கவேண்டும்; தேர்ந்த கோட்பாடுகளைப் பெற்றிருத்தல்வேண்டும் என்பது தான் கடவுளர் விரும்பும் மன்னனின் விருப்பம்.'

'இந்தக் காரணங்களுக்காகவே எல்லாச் சமயத்தினருக்கும், அவர்கள் யாவராயினும் கடவுளர் விரும்பும் மன்னன் எல்லாச் சமயங்களையும் போற்றுகிறான்; எல்லாச் சமயங்களிலும் தலையாய கோட்பாடுகள் வளர்ச்சியுறுவதையே பெரிதும் போற்றுகின்றான். தானத்தையும் புறவழிபாட்டையும் அவ்வளவிற்குப் பொருட்படுத்துவதில்லை என்பதனைத் தெரிவிக்கவேண்டும்.'

'இந்த நோக்கத்திற்காகவே தர்ம மகாமாத்திரர்களும், பெண்களைக் கண்காணிப்போரும், மேய்ச்சல் நிலங்களைக் கண்காணிப்போரும், இதர அலுவலாளரும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இதனால் விளையும் பயன் ஒருவனுடைய சமயம் பெருமையடைதலும் தர்மத்தின் ஒளி பெருகுதலுமாம்.'

## பதின்மூன்றாவது கற்பாறை ஆணை

'கடவுளர் விரும்புபவனும் காட்சிக்கினியவனுமான மன்னன் முடிசூட்டிக்கொண்டு எட்டு ஆண்டுகள் ஆகியிருந்தபொழுது கலிங்கம் வெல்லப்பட்டது. ஒன்றரை லட்சம் மக்கள் போர்க்கைதிகளாகக் கொண்டுசெல்லப்பட்டனர்; ஒரு லட்சம்பேர் கொல்லப்பட்டனர்; அதைப்போன்ற பலமடங்கினர் இறந்தனர்.'

'கலிங்கத்தைக் கைப்பற்றியதை அடுத்துக் கடவுளர் விரும்பும் மன்னனின் ஆர்வமிக்க தர்மக்காப்பும் தர்மப்பற்றும் தர்மபோதனையும் தொடங்கியது. அதிலிருந்து கடவுளர் விரும்பும் மன்னன் கலிங்கத்தை வென்றதைப்பற்றிய கழிவிரக்கம் தோன்றியது; ஏனெனில், இதற்கு முன் வெல்லப்படாத ஒரு நாட்டை வெல்லுகையில் மக்கள் (பலர்) கொல்லப்படுவதும், இறப்பதும், கைதிகளாக இழுத்துச் செல்லப்படுவதும் நேரிடுகின்றன. கடவுளர் விரும்பும் மன்னனுக்கு அது வருத்தத்தையும் துயரத்தையும் அளிக்கக்கூடிய செய்தியாம்.'

'கடவுளர் விரும்பும் மன்னன் இன்னும் இதைவிடத் துயரப்படுவதற்கு இன்னொரு காரணமுண்டு. எப்படியென்றால் கலிங்கத்தில் வாழும் அந்தணர்கள், துறவிகள், பிற சமயத்தினர் அல்லது இல்லறத்தோர் இவர்களில் இந்தக் கடமைகளைப் புரிவோருக்கும் அதாவது, தமக்கு மேலுள்ளோர் சொற்படி நடப்போர், தந்தை தாய் சொற்கேட்போர், ஆசிரியர் சொற்படி நடப்போர், முதியவர்கள் சொற்கேட்போர், நண்பர்களையும், பழகியவர்களையும், தோழர்களையும், உறவினர்களையும், அடிமைகளையும், பணியாள்களையும் நன்முறையில் (அல்லது மதிப்புடன்) நடத்துவோர் முதலானோருக்கும் தீங்கு அல்லது இறப்பு அல்லது உற்றாரைப் பிரிந்திருத்தல் நேரிடுகின்றது. இத்தகையோர் (போர்க்காலத்தில்) நன்முறையில் பாதுகாக்கப் பட்டிருப்பினும் அவர்களின் அன்பு (போரிலுங்கூட) குறையாதிருந்தாலும் அவர்களுடைய நண்பர்கள், பழகியவர்கள், தோழர்கள், உறவினர்கள் முதலியவர்களுக்கு (போரில்) ஊறு நேரிடுகிறபொழுது அது அவர்களுக்கும்கூட ஊறுகின்றது. இவ்வாறு எல்லோரும் துன்பத்திற் பங்குகொளல் கடவுளர் விரும்பும் மன்னனுக்குத் துயரத்தை அளிக்கக் கூடிய தொன்றும்.'

['அந்தணர்களும் துறவிகளும் இல்லாத நாடு யவனர் நாட்டைத் தவிர வேறு எதுவுமில்லை. மேலும், எந்த மதத்திலும் நம்பிக்கையில்லா மக்கள் வாழும் நாடும் கிடையாது'—இப் பகுதி கால்சி, கிர்நார் மான்சேராக் கல்வெட்டுப் பிரதிகளில் மட்டும் காணப்படுகின்றது.]

'அதனால் கலிங்கத்தில் கொல்லப்பட்டோர், இறந்தோர், சிறைப்பட்டோர் இவர்களின் எண்ணிக்கையில் நூற்றில் அல்லது ஆயிரத்தில் ஒரு பங்கினராவது இப்பொழுது அத்தகைய துன்பத்தை யடைவாராயின் அது கடவுளர் விரும்பும் மன்னனுக்

குத் துயரத்தை அளிக்கக்கூடிய ஒரு செய்தியாக இருக்கும். மேலும், கடவுளர் விரும்பும் மன்னனுக்கு யாரர்வது தீங்கிழைத்தால் அதையும்கூட அவன் முடிந்த அளவிற்குப் பொறுத்துக் கொள்ள வேண்டியதே. கடவுளர் விரும்பும் மன்னன் தன் நாட்டில் காடுகளில் வசிக்கும் மக்களைக்கூட அன்புடன் நோக்குகின்றான்; அவர்களை நல்ல வழியில் சிந்திக்கும்படியும் முயல்கின்றான். கடவுளர் விரும்பும் மன்னன் கழிவிரக்கமுடைவனுயினும் வலிமைமிக்கவன். ஆகவே, அவர்களுக்குக் கூறுவதாவது அவர்கள் (தம் குற்றங்களுக்காக) வெட்கப்படாவிடில் கொல்லப் படுவார்கள் (அல்லது தண்டனைக்குள்ளாவார்கள்). ஏனெனில், கடவுளர் விரும்பும் மன்னன் உயிருள்ளவை எல்லாவற்றிற்கும் பாதுகாப்பையும் புலனடக்கத்தையும் மன அமைதியையும் மகிழ்ச்சியையுமே விரும்புகின்றான்.'

'கடவுளர் விரும்பும் மன்னன் இதனை, அதாவது தர்ம வெற்றியைத் (தர்ம விஜயத்தை) தலையாய வெற்றியாகக் கருதுகின்றான். இவ் வெற்றியை இங்கும் (தன்நாட்டிலும்) அறுநூறு யோசனை (Yojanas or leagues) வரை அண்டை நாடுகள் எல்லாவற்றிலும், ஆன்டியோகஸ் நாட்டிலும் அதற்கு வடக்கே நான்கிலும் அதாவது டாலமி, ஆன்டிகோனஸ், மகஸ், அலெக்சாண்டர் முதலியோர் நாடுகளிலும் அதேபோன்று தெற்கே சோழர், பாண்டியர் நாடுகளிலும், தாம்ரபர்ணி வரையிலும், இங்கும், அஃதாவது தன் நாட்டில் யவனர்கள், காம்போஜர்கள், நாபகத்தின் நாபபந்திகள், போஜர்கள், பிட்னிகர்கள், ஆந்திரர்கள், புலிந்தர்கள் வாழுமிடங்களிலும் பெற்றுள்ளான். எல்லாவிடத்திலும் அவர்கள் கடவுளர் விரும்பும் மன்னனின் தர்ம போதனையைப் பின்பற்றுகின்றனர். கடவுளர் விரும்பும் மன்னனின் தூதுவர் போகாத இடங்களில்கூட மக்கள் அவனுடைய தர்ம ஆணையையும் தர்ம போதனையையும் கேள்விப்பட்டுத் தர்மத்தைப் பின்பற்றுகின்றனர்; எதிர்காலத்திலும் பின்பற்றுவார்கள்.'

'மேலும், இவ்வாறு எல்லாவிடத்திலும் அடைந்த வெற்றி எங்கும் மகிழ்ச்சியானதாகவே உள்ளது. தர்ம வெற்றிகளில் மகிழ்ச்சி ஏற்படுகின்றது. இருந்தாலும் கடவுளர் விரும்பும் மன்னன் மறுமையைப் பற்றியவைகளே பெரும்பயன் அளிக்கக் கூடியவை என்று கருதுகின்றான்.'

'இந்த நோக்கத்திற்காகவே அதாவது என்னுடைய பிள்ளைகளும் பெயரப் பிள்ளைகளும் யாராலுைம் புதியவெற்றி எதையும் தேட எண்ணக்கூடாது என்பதற்காகத் தர்மத்தின் இவ் வேதம் வரையப்பட்டுள்ளது.'

'மேலும், அவர்கள் எவ்விதமான வெற்றியை அடைந்தாலும் பொறுமையுடனும் சொற்பத் தண்டனையுடனும் மனநிறைவு பெறுதல் வேண்டும். தர்மத்தின்மூலம் அடையும் வெற்றியையே அவர்கள் உண்மையான வெற்றியாகக் கருதவேண்டும். அதுவே இம்மைக்கும் மறுமைக்கும் நல்லது. அவர்களுடைய இன்பமெல்லாம் இம் முயற்சியிலேயே இருப்பதாகுக. அதுவே இம்மைக்கும் மறுமைக்கும் நல்லது.'

[மற்றொரு பிரதியில் மேற்கொண்டு காணப்படும் வாசகம்]

'உலகம் முழுவதற்கும் உண்மையிலேயே மகிழ்ச்சியைக் கொண்டுவரும் இந்த வெள்ளையானை.'

குறிப்பு: கலிங்கநாடு கிழக்குக் கடற்கரையில் மகாநதிக்கும் கோதாவரிக்கும் இடையே உள்ள பிரதேசமாகும். இப்பொழுது ஓரிசா என்றழைக்கப்படுவது; அசோகர் இதைக் கி. மு. 261-ல் வென்றார். தம்முடைய கலிங்க வெற்றியின் விவரத்தைக் கூறும் இக் கல்வெட்டை அசோகர் கலிங்கத்தில் எந்த இடத்திலும் வரையவில்லை எனத் தெரிகின்றது. ஆனால், அவருடைய பிற கல்வெட்டுகளின் பிரதிகள் கலிங்கத்தில் உள்ளன.

அசோகருடைய காலத்தை வரையறுப்பதற்கு உதவக் கூடிய சில அரிய செய்திகள் இக் கல்வெட்டில் காணப்படுகின்றன. சான்றாக, சிரியாவின் மன்னன் இரண்டாவது ஆன்டியோகஸ் (கி.மு. 261—246), எகிப்து மன்னன் இரண்டாவது டாலமி பிலடெல்பஸ் (கி.மு. 285—247), மாசிடோனிய வேந்தன் ஆன்டிகோனஸ் (கி.மு. 276—239), சிரெனி மன்னன் மகஸ் (இந்நாடு எகிப்திற்கு மேற்கேயுள்ளது. இம் மன்னன் எகிப்து வேந்தன் இரண்டாவது டாலமி பிலடெல்பஸின் சகோதரன். இவன் இறந்தது கி.மு. 258-க்கும் 250-க்கும் இடையே), எபிரஸ் நாட்டு அரசன் அலெக்சாண்டர்[1] முதலியோர் அசோகர் காலத்தில் ஆண்ட கிரேக்க மன்னர்கள்.

தாம்ரபர்ணி என்பது இலங்கையே.[2] யவனர்கள் (கிரேக்கர்கள்), காம்போஜர்கள், பிட்னிகர்கள் முதலியோர் வாழ்ந்த இடங்களைப்பற்றி முன்பே (ஐந்தாவது கற்பாறை ஆணையைப்

1 இந்நாடு வடமேற்கு ஆசியாவில் கருங்கடலுக்குத் தெற்கேயிருந்த நாடு; கி. மு. 272—255 இவனது காலம்; சிலர் இம் மன்னன் காரிந்த் நாட்டு அலெக்சாண்டராக இருக்கலாம் என்று கருதுகின்றனர்.

2 Contra, Smith, Op. cit., p. 188.

பற்றிய குறிப்பில்) பார்த்தோம். நாபபந்திகள் வாழ்ந்த நாபகநாடு இமயமலையின் வடமேற்கு அடிவாரத்தில் இருந்ததாக ரோமிலாதாபரும்[1] வடமேற்கு எல்லைப்புற மாகாணத்திற்கும் வடஇந்தியாவின் மேற்குக் கடற்கரைக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் இருந்ததாக D. R. பண்டார்க்காரும்[2] கருதுகின்றனர். அர்த்தசாஸ்திரத்தில் நாபாகநாடு ஒன்று குறிப்பிடப் பட்டுள்ளது. போஜர்கள் பீரார் (அல்லது விதர்ப்ப) பிரதேசத்தில் இருந்ததாக ஸ்மித்தும்[3], மேற்கு இந்தியாவில் இருந்ததாக ஹூல்ஷும்[4], நர்மதையாற்றிற்கும் தபதிநதிக்கும் இடையே உள்ள பகுதியில் வாழ்ந்ததாக ரோமிலாதாபரும்[5], தபதிநதிக்குத் தெற்கேயுள்ள பகுதியில் இருந்ததாகப் பேராசிரியர் சத்திய நாதய்யரும்[6] கருதுகின்றனர். ஆந்திரர்கள் நாடு அப்பொழுது கோதாவரி நதிக்கு வடக்கே இருந்ததாக ரோமிலாதாபரும்[7], கோதாவரி, கிருஷ்ணு நதிகளுக்கு இடையே உள்ள பகுதியில் இருந்ததாகப் பேராசிரியர் சத்தியநாதய்யரும்[8], மத்தியப் பிரதேச மாவட்டங்கள் சிலவற்றையும் ஜெய்ப்பூர், விசாகப் பட்டினம் மாவட்டங்களையும் தெலிங்காணுவையும் கொண்டது என்று D. R. பண்டார்க்காரும்[9] கருதுகின்றனர். புலிந்தர்கள் மத்தியப்பிரதேசத்தின் ஜபல்பூர் மாவட்டத்தில் இருந்ததாகப் பண்டார்க்காரும்[10], விந்திய, சாத்பூரா மலைப்பகுதிகளில் வாழ்ந்ததாக ஸ்மித்தும்[11], மத்திய இந்தியாவில் நர்மதையாற்றிற்குக் கிழக்கேயுள்ள பகுதியில் வாழ்ந்ததாக ரோமிலா தாபரும்[12], தொண்டை மண்டலத்தில் (வடதமிழ்நாடு) வாழ்ந்ததாகப் பேராசிரியர் சத்தியநாதய்யரும்[13] கருதுகின்றனர்.

## பதினுன்காவது கற்பாறை ஆணை

'கடவுளர் விரும்பும் மன்னன் ஆணையின்கீழ் எழுதப் பட்டுள்ள தர்மத்தின் இவ் வேதம், சில சமயங்களில் சுருக்கப் பட்டும், சில சமயங்களில் நடுத்தரமாகவும், வேறு சில சமயங்களில் விரித்தும் (பலவாறு) வரையப்பட்டுள்ளது. எல்லா விடங்களிலும் எல்லாச் செய்திகளும் கூறப்படவில்லை. ஏனெனில்,

[1] Op cit., p. 124 Map.
[2] Op cit., p. 32
[3] Op. cit., p. 188
[4] R. K. Mookerji—Asoka, p. 168 Fn.
[5] Op. cit., p. 124
[6] Op. cit., p. 169 Map.
[7] Op. cit., p. 124
[8] Op. cit., p. 169 Map.
[9] Op. cit., p. 34
[10] Op. cit., p. 35
[11] Op. cit, p 189
[12] Op. cit,, p. 124 Map.
[13] Op. cit., p. 169 Map.

என்னுடைய நாடு மிகப் பெரியது. எவ்வளவோ வரையப்பட்டுள்ளது; இன்னும் எவ்வளவோ வரையப்படவேண்டும்.

மேலும், சில சொற்கள் மீண்டும் மீண்டும் கூறப்பட்டுள்ளன. அதற்குக் காரணம் யாதெனில், தர்மத்தில் (நான்) கொண்டுள்ள பற்றும், (திரும்பத் திரும்பக் கூறினல்) மக்கள் அதன்படி நடப்பார்கள் என்ற நம்பிக்கையுமே ஆகும். எழுதுபவன் தவறிஞலோ, தெளிவாக அறியாததாலோ, சில பகுதிகளை விட்டுவிடுவதாலோ சில சமயங்களில் (இவ் வாணைகள் அல்லது வேதம்) முழுதும் எழுதப்படாமலும் உள்ளன.'

## கலிங்க ஆணைகள்
## (The Kalinga Edicts)

### முதலாவது கலிங்க ஆணை

'கடவுளர் விரும்பும் மன்னன் இவ்வாறு கூறுகிறுன்: சமாப்பாவில் உள்ள மகாமாத்திரர்களுக்குப் பின்வருமாறு அரசன் வாய்மொழியிலே கட்டளையிடப்படவேண்டும்':

'என்னுடைய கருத்துகள் எதுவாயினும் அவை சில (அல்லது தக்க) வழியில் நடைமுறையில் பயனளிக்குமாறு பின்பற்றப்படுவதையே நான் விரும்புகிறேன். இதனை அடைவதற்கான தலையாய வழியாக எனக்குப் படுவது நான் உங்களுக்கு இடும் கட்டளைகளே.'

'எல்லா மாந்தரும் என்னுடைய குழந்தைகளே. என்னுடைய குழந்தைகளுக்கு எவ்வாறு இம்மையிலும் மறுமையலும் எல்லாவித வளங்களும் (பேறுகளும்) மகிழ்ச்சியும் ஏற்பட வேண்டுமென விரும்புகின்றேனே அவ்வாறே எல்லா மாந்தருக்கும் (கிட்ட) வேண்டுமென விரும்புகிறேன்.'

''கட்டுக்கடங்காது எல்லையில் வாழும் கூட்டத்தினர் (tribes) பற்றி அரசன் ஆணை என்ன? (என்று நீங்கள் கேட்பின்) (அதற்குப் பதிலாவது) 'அவர்கள் தன்னைப்பற்றி அச்சம் கொள்ளாதிருப்பதையும், தன்னிடத்தில் நம்பிக்கைகொண்டிருப்பதையும், தன்னிடத்திலிருந்து மகிழ்ச்சியை - துன்பத்தையன்று - அடைவதையுமே அரசன் விரும்புகிறுன்'. மேலும், அவர்கள் இவ்வுண்மையை உணரவேண்டும்; அதாவது, அரசன் நம்மிடத்தில் பொறுமையுடனிருப்பான். எனக்காக (அரசனுக்காக

அவர்கள் தர்மத்தைப் பின்பற்றவேண்டும். அவ்விதத்தில் இம்மையிலும் மறுமையிலும் (வேண்டியதை) அடைய வேண்டும் என்பதாம்.''

'இதற்காகவே நான் உங்களுக்குக் கட்டளையிடுகிறேன். இதன்மூலம் என் கடனைக் கழிப்பதுடன் உங்களுக்கு வழிகாட்டு வதுடன் என் விருப்பத்தையும் அசைவுறுத் தீர்மானத்தையும் வாக்குறுதியையும் தெரிவிக்கிறேன்.'

''நிற்க, நீங்கள் அதன்படி நடந்து உங்கள் கடமைகளைச் செய்தல் வேண்டும். மேலும், நீங்கள் இம் மக்கள் என்னிடத்தில் நம்பிக்கை கொள்ளும்படி செய்வதுடன் 'அரசன் நமக்குத் தந்தையைப் போல, அவன் எப்படித் தன்னை விரும்புகிறானோ அவ்விதமே நம்மையும் விரும்புகின்றான்; நாம் அரசனுக்கு அவன் குழந்தைகள் போல' என்ற உண்மையையும் உணர வைத்தல் வேண்டும்.''

'உங்களுக்குக் கட்டளையிடுவதாலும், என்னுடைய விருப் பத்தையும், அசைவுறுத் தீர்மானத்தையும், வாக்குறுதியையும் அறிவிப்பதாலும் இப் பணிக்கு (பயிற்சியுடைய) உள்ளூர் அலு வலர்களின் உதவி எனக்குக் கிடைக்கும். ஏனெனில், இம் மக்கள் என்னிடத்தில் நம்பிக்கை கொள்வதற்கும் இவர்கள் இம்மையி லும் மறுமையிலும் நலத்தைப் பெறுவதற்கும் வழிசெய்யக் கூடிய நிலையில் நீங்கள் இருக்கின்றீர்கள். அம் மாதிரிச் செய்வதன் மூலம் நீங்கள் விண்ணுலகை அடைவதுடன் என்னையும் என் கடனிலிருந்து விடுவிப்பீர்கள் (அல்லது எனக்கு உங்கள் கடனைக் கழிப்பீர்கள்).'

'இந்த நோக்கத்திற்காகவே அதாவது மகாமாத்திரர்கள் எல்லைவாழ் மக்களின் நம்பிக்கையைப் பெறவும் அவர்கள் தர்மத்தின்வழிச் செல்லவும் இடையறுது முயலவேண்டும் என்ற இரண்டிற்காகவே தர்மத்தின் இவ் வேதம் இங்கு வரையப் பட்டுள்ளது.'

'மேலும், இவ் வேதம் நான்கு மாதங்களுக்கொருமுறை (ஒவ்வொரு) பருவகாலத்தின் தொடக்கத்திலும் பூச நட்சத்திர நாளன்று (பிறருக்காக) படிக்கப்படவேண்டும். இடையேயும் இதனைப் படிக்கலாம். சமயங்களில் ஒருவருக்காகக்கூட இதனைப் படிக்கலாம்.'

'இதன்படி நடந்து நீங்கள் என்னுடைய கட்டளையை நிறை வேற்ற முயலவேண்டும்.'

குறிப்பு : அசோகருடைய பதினொன்று, பன்னிரண்டு, பதின் மூன்ருவது கற்பாறை ஆணைகள் (Rock Edicts) கலிங்க நாட்டில் காணப்படவில்லை. அசோகரே அவற்றை அங்கு வெளியிட விரும்பவில்லைபோலும். அதற்குக் காரணம் அவை அவருடைய கலிங்க வெற்றியைப்பற்றிக் கூறுவதுதான். அவற்றிற்குப் பதிலாகக் கலிங்க ஆணைகள் அல்லது தனியாணைகள் (Separate Edicts) என்று வழங்கப்படும் இவ்வாணையையும் அடுத்துவரும் ஆணையையும் அங்கு வெளியிட்டுள்ளார்.

இந்த ஆணையை (Edict) முதலாவது கலிங்க ஆணையென்றும், அடுத்து வருவதை இரண்டாவது கலிங்க ஆணையென்றும் கூறு கின்ருேம். இதை மாற்றியும் கூறுவதுண்டு.[1]

இவ்விரண்டு ஆணைகளுக்கும் ஒரு தனிச் சிறப்புண்டு. அதாவது அவற்றின் சொற்களெல்லாம் அசோகரால் கூறப்பட்ட வையே. அதை அவரே குறிப்பிடுகின்ருர். இரண்டு ஆணை களையும் மொழிபெயர்ப்பதில் உள்ள ஒரு சிரமம் யாதெனில், படர்க்கையிலும் தன்மையிலும் அடுத்தடுத்து அசோகர் கூறு வதேயாகும்.

இவ்விரண்டு ஆணைகளும் புதிதாக வெல்லப்பட்ட கலிங் கத்தைக் குறிப்பாக அங்கு எல்லையில் வாழும் நாகரிகமற்ற கூட்டத்தினரை ஆட்சிபுரிவதற்கான வழியைக் கூறுபவையே. அரசு மக்களிடத்தில் அன்பையும் அவர்கள் நலத்தில் ஈடுபாட்டை யும் கொண்டிருத்தல் வேண்டும்; அதே சமயம் வலிமையுடைய தாகவும் இருக்கவேண்டும் என்பது அசோகர் கருத்து.

'எல்லா மாந்தரும் என் குழந்தைகளே' என்று புத்தர் கூறியதையே அசோகரும் கூறுகின்ருர்.[2]

ஆண்டிற்கு ஆறு பருவங்களென அர்த்தசாஸ்திரம் கூறு கின்றது. ஆனல், அசோகர் நான்கு மாதங்களைக் கொண்ட மூன்று பருவங்களையே குறிப்பிடுகின்ருர். இன்றும் அம்மாதிரி இந்தியாவில் சில இடங்களில் வழங்கப்படுகின்றது. மேலும், இது பிராம்மண சூத்திரங்கள் கூறுவதை ஒட்டியுள்ளதாகச் சில அறிஞர்கள் கருதுகின்றனர்.[3] தமிழ்நாட்டிலும் ஆண்டை வேனிற்பருவம், கார்ப் பருவம், கூதிர்ப் பருவம் என்று மூன்ருகப் பிரித்திருந்தனர்.

[1] R. K. Mookerji—Asoka, p 120, Dr.D.R. Bandarkar, op cit., p. 325.
[2] V. A. Smith, op. cit., p. 193.
[3] Ibid, p. 194.

**இரண்டாவது கலிங்க ஆணை**

'தொசலீ நகர ஆட்சிப் பொறுப்பைப் பெற்றுள்ள மகாமாத்திரர்களுக்குக் கடவுளர் விரும்பும் மன்னன் வாய்மொழியிலே பின்வருமாறு கட்டளையிடப்பட வேண்டும்':

'என்னுடைய கருத்துகள் எதுவாயினும் அவை சில (அல்லது தக்க) வழியில், நடைமுறையில் பயனளிக்குமாறு பின்பற்றப் படுவதையே நான் விரும்புகிறேன். இதனை அடைவதற்கான தலையாய வழியாக எனக்குப் படுவது, நான் உங்களுக்கு இடும் கட்டளைகளே ஆகும். ஏனெனில், நீங்கள் பல்லாயிரக்கணக்கான மக்களின் ஆட்சிப் பொறுப்பினைப் பெற்றிருப்பது நல்லவர்களின் அன்பைப் பெறுவதற்கே.'

'எல்லா மாந்தரும் என் குழந்தைகளே' என்னுடைய குழந்தைகளுக்கு எவ்வாறு இம்மையிலும் மறுமையிலும் எல்லா வித வளங்களும் (பேறுகளும்) மகிழ்ச்சியும் ஏற்பட வேண்டுமென விரும்புகிறேனோ அவ்வாறே எல்லா மாந்தருக்கும் (கிட்ட) வேண்டுமென விரும்புகிறேன்.'

'இருந்தாலும் இவ் வுண்மையின் முழுப்பொருளையும் நீங்கள் உணரவில்லை. ஏதோ ஒருவர் அறியலாம். அதுவும் ஒரு பகுதியைத்தான்; முழுவதையும் அன்று. ஆகவே, இதனைக் கவனிக்கவும். அரசின் நீதி (அல்லது கொள்கை) நன்கு அமைந்துள்ளது.'

'மேலும், நிருவாகத்தில் ஒருவன் சிறைப்படுவதோ சித்திரவதைக்காளாவதோ நிகழ்கின்றது. காரணமின்றி ஒருவன் அவ்வாறு சிறையில் வைக்கப்பட்டாலும் (சித்திரவதைக்காளாகி) இறக்க நேரிடினும் அதனால் வேறுபலர் பெருந்துயரடைகின்றனர். அம்மாதிரி வழக்கில் நீங்கள் முறைவழங்க விரும்பவேண்டும்.'

'ஆனால், சில இயற்கையான தன்மைகளுடன் (dispositions) வெற்றியை அடைய இயலாது. அவையாவன: பொறாமை, விடாமுயற்சியின்மை, கொடுமை, பொறுமையின்மை, முயற்சியின்மை, சோம்பித்திரிதல், செயற்படாமை. இத் தன்மைகள் உங்களிடம் இல்லாதிருக்கவேண்டுமென நீங்கள் விரும்பவேண்டும். இப் பொருளின் அடிப்படையாக இருப்பது விடாமுயற்சியும் பொறுமையுமே. நிருவாகத்தில் செயற்படாதிருக்கும் ஒருவன் முன்னேற இயலாது. இருந்தாலும் ஒருவன் முன்னேற முயல வேண்டும்! முன்னேற வேண்டும்! தொடர்ந்து முன்னேற வேண்டும்!!'

'அதே முறையில் நீங்கள் உங்கள் கடமையைக் கவனிக்க வேண்டும். எனவே, இதைக் கண்காணிப்போர் (இறுதியில் கூறப் பட்டுள்ள மகாமாத்திரர்) உங்களிடம் கூறவேண்டியதாவது (மன்னனுக்கு) உங்கள் கடனைக் கழித்திடல் வேண்டும். அவை யவையே கடவுளர் விரும்பும் மன்னனின் கட்டளைகள் இவற்றை நிறைவேற்றல் பெரும் பயனைத்தரும். அப்படி நிறைவேற்ருது இருத்தல் பெருந்துன்பத்தை விளைவிக்கும். (இதில்) தவறுபவன் விண்ணுலகையோ அரசனுதரவையோ பெற இயலாது. இக் கடமையைப்பற்றி நான் அதிகமாய்ச் சிந்திப்பது ஏனெனில், இதனுல் இருவிதப் பயன் உண்டு; அதாவது என் கட்டளைகளை நிறைவேற்றுவதன் மூலம் நீங்கள் விண்ணுலகையும் அடையலாம், என்னுடைய கடனையும் கழிப்பீர்கள்.'

'இவ் வேதத்தை ஒவ்வொரு பூச (நட்சத்திர) நாளன்றும் பூச நாள்களுக்கு இடைப்பட்ட காலங்களிலும் படித்துக்காட்டல் வேண்டும்; மேலும், பிற நல்ல சந்தர்ப்பங்களிலும் ஒருவருக் காகக்கூட இதைப் படித்துக்காட்டலாம். அம்மாதிரியான செயலின்மூலம் நீங்கள் என்னுடைய நோக்கங்களை நிறைவேற்ற வேண்டும்.'

'இக் காரணத்திற்காக, அதாவது நகரை நிருவாகம் புரிவோர் (ஆங்கு) காரணமின்றி நகர மக்கள் சிறைப்படுவதோ, சித்திர வதைக்காளாகுவதோ நிகழாதிருக்க எப்பொழுதும் முயல வேண்டும் என்பதற்காக, இவ் வேதம் இங்கு வரையப் பட்டுள்ளது.'

'இக் காரணத்திற்காகவே, தருமத்தையொட்டி ஐந்தாண்டு களுக்கொருமுறை கொடுமையும் வன்முறையும் இல்லாத, நிதானப் போக்குடையோரை (மகாமாத்திரர்கள்) ஒருவர் மாற்றி ஒருவராக அனுப்பிவைப்பேன். அவர்களும் இந் நோக் கத்தை அறிந்து என் கட்டளைப்படி நடப்பார்கள்.'

'உச்சயினியிலிருந்தும் அரசகுமாரன் இதே நோக்கத் திற்காக அலுவலர்களை மூன்ருண்டுகளுக்கு மேற்படாதவாறு அனுப்பிவைப்பான்.'

'அதே மாதிரி தட்சசீலத்திலிருந்தும், அப்படி மகாமாத் திரர்கள் ஒருவர்மாற்றி ஒருவராக மாறிச் செல்லுங்கால், தங்களது வழக்கமான பணியைப் புறக்கணிக்காது இதனையும் கவனிப்பார்கள். இவ்விதம் மன்னனின் கட்டளைகளை நிறை வேற்றுவார்கள்.'

குறிப்பு : சந்திரகுப்தர், பிந்துசாரர் முதலியோர் காலத்தி லிருந்த மௌரியர்களின் கொடுமையான குற்றவியல் சட்டம் அசோகர் காலத்திலும் தொடர்ந்து இருந்தது என்பதும் அதன் கொடுமையை நடைமுறையில் குறைக்கப் பல வழிகளை அவர் கையாண்டார் என்பதும் இக் கல்வெட்டால் புலனாகின்றன.

தட்சசீலமும் உச்சயினியும் தொசலி, சுவர்ணகிரி முதலிய வற்றைப் போன்று மாகாணத் தலைநகரங்களாக இருந்தன. அங்கு அரசப் பிரதிநிதிகளாக இருந்தோர் அரசனுடைய பிள்ளை களும் அரச குடும்பத்தைச் சேர்ந்தோரும் ஆவர்.

ஐந்தாண்டிற்கு ஒரு முறையும் மூன்றாண்டிற்கு ஒரு முறையும் அலுவலர்களை அசோகர் மாற்றியது இக் கல்வெட்டால் நன்கு தெரிகின்றது. அர்த்தசாஸ்திரம் அலுவலர்களை மாற்றம் **(transfer)** செய்வதுபற்றிக் கூறுவதும் இங்கே நோக்கற்பாலது.

## கற்றூண் ஆணைகள்
## (Pillar Edicts)

**முதலாவது கற்றூண் ஆணை**

'கடவுளர் விரும்புபவனும் காட்சிக்கினியவனுமான மன்னன் இவ்வாறு கூறுகிறான்':

'நான் முடிசூட்டிக்கொண்டு இருபத்தாறு ஆண்டுகள் ஆகியிருந்தபொழுது தர்மத்தின் இவ் வேதத்தை வரையச் செய்தேன்.'

'தர்மத்தில் தீவிரப்பற்றும், தீவிரத் தற்சோதனையும், உண்மையான பணிவும், (பாவத்தைப்பற்றிய) பேரச்சமும், தீவிர முயற்சியும் இல்லாமல் இம்மையிலும் மறுமையிலும் (வேண்டியதை) அடைவது கடினமே. இருப்பினும் என்னுடைய கட்டளைகளால் தர்மத்தில் இந்த ஈடுபாடும் பற்றும் ஒவ்வொரு நாளும் வளர்ந்துள்ளன. அவ்வாறே வளர்ந்தும் வரும்.'

'என்னுடைய பிரதிநிதிகளும் — அவர்கள் பெருந்தரத் தினராயினும், சிறுதரத்தினராயினும், நடுத்தரத்தினராயினும்— என்னுடைய போதனைப்படி ஒழுகுகின்றனர்; பிறரையும் அவ்வாறே நடத்திச் செல்லுகின்றனர்—உறுதியிலா மக்களை நல்வழியில் நடத்திச் செல்லுதல் வேண்டும் — அதே போன்று

எல்லைப்புற மகாமாத்திரர்களும் (நடக்கின்றனர்). இதுதான் என் கோட்பாடு: 'தர்மத்தின்மூலம் (உயிர்களை) பாதுகாப்பது, தர்மத்தினையொட்டி (அரசாங்க அலுவல்களை) நடத்துதல், தர்மத்தால் மக்களை மகிழ்விப்பது, தர்மத்தால் (பேரரசை) காப்பது.'

குறிப்பு: இந்த முதலாவது கற்றூண் ஆணை பிற கற்றூண் ஆணைகளுக்கு ஒரு முகவுரை போன்றுள்ளது. இவ் வாணை அலுவலர்களுக்கு மட்டுமன்றி எல்லோருக்கும் உரியதாகத் தோன்றுகிறது. கற்பாறை ஆணைகள் வெளியிடப்பட்டுப் பல ஆண்டுகள் கழிந்தபின் இது வெளியிடப்பட்டது. அசோகர் தம்முடைய கோட்பாடு எதையும் மாற்றிக்கொள்ளாததுடன் கற்பாறை ஆணைகளில் கூறிய பொருளை இங்கே மேலும் வலியுறுத்துகின்றூர்.

இரண்டாவது கற்றூண் ஆணை

'கடவுளர் விரும்புபவனும் காட்சிக்கினியவனுமான மன்னன் இவ்வாறு கூறுகிறுன்':

'தர்மம் மிக மேலானது. ஆனால், தர்மம் என்றால் என்ன? குற்றமின்றியிருத்தலும், பல நற்செயல்களும், இரக்கம், அறம், வாய்மை, தூய்மை முதலியவைகளே தர்மம்.'

'ஆழ்ந்த ஆன்மீக அறிவென்ற பரிசினைப் பலவிதத்தில் நான் அளித்துள்ளேன்; மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும், பறவைகளுக்கும், நீர்வாழ் உயிர்களுக்கும் நான் பலவிதச் சலுகைகளை அளித்துள்ளேன்; உயிர் வரங்கூட (அளித்துள்ளேன்). மேலும் பல நற்செயல்களை நான் புரிந்துள்ளேன்.'

'மாந்தர் தர்மத்தின்வழி நடப்பார்கள், தர்மம் என்றும் நிலவட்டும், தர்மத்தின் போதனையைப் பின்பற்றுவோர் நன்றாக வாழ்வார்கள் என்ற நோக்கத்திற்காகவே தர்மத்தின் இவ் வேதத்தை வரையச் செய்துள்ளேன்.'

மூன்றாவது கற்றூண் ஆணை

'கடவுளர் விரும்புபவனும் காட்சிக்கினியவனுமான மன்னன் இவ்வாறு கூறுகிறுன்':

''ஒருவன் தான் செய்த நல்லதையே காண்கின்றுன். 'இந்த நற்செயலை நானே செய்தேன்' என்றும் கூறுகின்றுன். தான்

செய்த தீச்செயலைக் (பாவத்தை) காண்பதே இல்லை. 'பாவம் எனப்படும் இத் தீச்செயலை செய்தேன்' என்று சொல்வதே இல்லை.''

'இவ்விதமான தற்சோதனை மிகக் கடினமானதுதான்.'

''இருந்தபொழுதிலும் ஒருவன் (தனது) முரட்டுத்தனம், கொடுமை, சினம், செருக்கு, பொறாமை முதலியவற்றால் பாவத்தைப் புரிய நேரிடும் என்பதைக் கவனிக்கவேண்டும். மேலும், 'இவற்றால் தாழ்ச்சியுற மாட்டேன்' என்றும் (தனக்குள்) கூற வேண்டும்.''

'இவ் வழி இம்மையில் எனக்கு நலம் பயக்கக் கூடியது; அவ் வழி எனக்கு மறுமையில் நலம் பயக்கக்கூடியது என்பதை நன்கு கவனித்தல் வேண்டும்.'

**நான்காவது கற்றூண் ஆணை**

'கடவுளர் விரும்புபவனும் காட்சிக்கினியவனுமான மன்னன் இவ்வாறு கூறுகிறான்' :

'நான் முடிசூட்டிக்கொண்டு இருபத்தாறு ஆண்டுகள் ஆகியிருந்தபொழுது தர்மத்தின் இவ் வேதத்தை எழுதச் செய்தேன்.'

'பல்லாயிரக்கணக்கான மக்களை ஆட்சி செய்வதற்காக அமர்த்தப்பட்டுள்ள எனது இராஜுகர்கள் (மாகாணத் தலைவர்கள்) தங்கள் கடமைகளை அச்சமின்றியும் நம்பிக்கையுடனும் நிறைவேற்றவும், மக்களுக்கு நலத்தையும் மகிழ்ச்சியையும் அளிப்பதுடன் (பிற) உதவிகள் புரியவும் அவர்களுக்கு (இராஜுகர்களுக்கு)த் தீர்ப்பளிப்பதிலும் தண்டனைகள் வழங்குவதிலும் உரிமை (சுதந்திரம்) வழங்கியுள்ளேன்.'

'அவர்கள் (இராஜுகர்கள்) (மக்களின்) இன்பதுன்பங்களின் காரணங்களைக் கண்டறிந்து, தர்மத்தில் ஈடுபாடுடையவர்களுடன் நாட்டுமக்களுக்கு அறிவுரை புகட்டுவார்கள். அதனால் மக்கள் இம்மையிலும் மறுமையிலும் வேண்டியதை அடையலாம்.'

'எனது இராஜுகர்கள் பணிபுரிய ஆர்வமுடன் உள்ளனர்; எனது விருப்பத்தை உணர்ந்த பிரதிநிதிகளும் (புருஷர்கள்)

அவ்வாறே உள்ளனர். அவர்கள் (பிரதிநிதிகள்) சில சமயங்களின் (தவறிழைக்கும் இராஜுகர்களுக்கு) அறிவுரை புகட்டுவார்கள். அதனால் இராஜுகர்கள் என் அன்பைப்பெற விருப்பமுடையவராவர்.'

'எப்படி ஒருவன் தனது குழந்தையைத் திறமைமிக்க (அல்லது அனுபவமுள்ள) செவிலியிடம் ஒப்படைத்துவிட்டு, அவள் (அக்) குழந்தை மகிழ்ச்சியுடன் இருக்குமாறு பார்த்துக் கொள்வாள் என்று நம்பிக்கையுடன் இருக்கின்றானோ, அவ்விதமே எனது இராஜுகர்களும் நாட்டுமக்களின் நலத்திற்காகவும் மகிழ்ச்சிக்காகவுமே என்னால் அமர்த்தப்பட்டுள்ளனர். அவர்கள் தங்கள் கடமைகளை அச்சமின்றியும், நம்பிக்கையுடனும், அமைதியாகவும் நிறைவேற்றவே அவர்களுக்குத் தீர்ப்பளிப்பதிலும் தண்டனைகள் வழங்குவதிலும் உரிமை (சுதந்திரம்) வழங்கியுள்ளேன்.'

'நீதிமன்ற நடைமுறையிலும் (Judicial procedure) தண்டனைகள் வழங்குவதிலும் ஒரே வகை இருப்பது விரும்பக்கூடியதென்ற முறையில் இவ் விதியை இப்பொழுதிருந்தே பின்பற்றுகிறேன்.'

'மரணதண்டனை பெற்றுச் சிறையில் உள்ள கைதிகளுக்கு மூன்று நாள் (அவகாசம்) ஒய்வளித்துள்ளேன்.'

(அந்த இடைப்பட்ட காலத்தில்) சில வழக்குகளில் குற்றவாளிகளைக் காப்பாற்ற அவர்களின் உறவினர்கள், தண்டனையை இராஜுகர்கள் மறு ஆய்வு செய்ய (revision) ஏற்பாடு செய்யலாம்; அல்லது அவ்விதம் அவர்களுக்குப் பரிந்துரைக்க யாருமில்லையேல் குற்றவாளிகள் மறுமையின் நலத்திற்காக ஐயமிடலாம் அல்லது நோன்பிருக்கலாம்.'

'என்னுடைய விருப்பம் என்னவென்றால், மரண தண்டனை பெற்றுள்ள குற்றவாளிகளின் வாழ்நாளை மாற்ற முடியாதபடி முடிவு செய்திருந்தாலும், அவர்கள் மறுமையிலாவது நலத்தை அடையலாம் என்பதே. மற்றும் மக்களிடையே தன்னடக்கம், ஈகை முதலான பலவித மேலான பழக்கங்கள் பெருகும்.'

குறிப்பு: இராஜுகர்கள் மாகாணத் தலைவர்கள் என்பதே V. A. ஸ்மித்தின் கருத்து.[1] R. K. முகர்ஜியும் அவ்வாறே கருது

[1] Op. cit., p. 203.

கின்றார்.[2] ஆனால், D. R. பண்டார்க்கார் இராஜுகர்கள் பெருந்தர அதிகாரிகளென்றும் முறை வழங்கல், நிலவரித்துறை அலுவல் முதலிய பணிகளைப் புரிந்தோரென்றும் கருதுகின்றார்.[3] ரோமிலா தாபர் அவர்கள் (இராஜுகர்கள்) நாட்டுப்புற அதிகாரிகளென் றும், பிரதேசிகர்களுக்கு அடுத்த கீழ்நிலையில் இருந்தவர் களென்றும் கூறுகின்றார்.[4] ஸ்மித்தின் கருத்தே பொருத்தமாகப் படுகின்றது[5]. இராஜுகர்களை அர்த்தசாஸ்திரம் குறிப்பிடவில்லை.

புருஷர்கள் (பிரதிநிதிகள்) அரசனிடம் அணுகி இருந்த அதிகாரிகளென்றும், அவர்களில் உயர்ந்தோர் (உகசார்கள்) இராஜுகர்களைவிட உயர்ந்த நிலையில் இருந்தவர்கள் என்றும், புருஷர்கள் பிரதிவேதகர்களை ஒத்தவர்களென்றும் R. K. முகர்ஜி கருதுகின்றார்.[6] ஆனால், D. R. பண்டார்க்கார் அவர்கள் உதவி அதிகாரிகள் (Subordinate officials) என்று கருதுகின்றார்.[7]

ஐந்தாவது கற்றூண் ஆணை

'கடவுளர் விரும்புபவனும் காட்சிக்கினியவனுமான மன்னன் இவ்வாறு கூறுகின்றான்':

'நான் முடிசூட்டிக்கொண்டு இருபத்தாறு ஆண்டுகள் ஆகியிருந்தபொழுது பின்வரும் உயிரினங்கள் கொல்லப்படுவதி லிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன. அவையாவன: கிளிகள், மைனாக்கள், பெருநாரைகள் (அல்லது ஒருவிதச் சிவப்பு நிறப் பறவைகள்), பிராமணி அல்லது சக்கரவாகப் பெண் வாத்துகள், அன்னங்கள் (அல்லது அன்னப்பறவைகள்), நந்திமுகங்கள் (?), கெலாட்டங்கள் (கொக்குகள்?), வௌவால்கள், இராணி எறும் புகள், பெண் ஆமைகள், எலும்பிலா மீன்கள், வெதவெயகங் கள் (?), கங்கபுபுடகங்கள் (கங்கைவாழ்மீன்கள்?), பெருந் தட்டை மீன்கள், ஆற்று ஆமைகள், முள்ளம் பன்றிகள், மர அணில்கள், (பாரசிங்க) ஆண் கலைமான்கள், 'பிராமணி' காளைகள், பல்லிகள் என்று ரோமிலா தாபர்[1] கருதுகிறார். ஓகபிண்டங்கள் (வீட்டிலு றையும் பூனை, சுண்டெலி போன்ற பிராணிகள்) என்று R. K. முகர்ஜியும்,[2] குரங்குகள் என்று V. A. ஸ்மித்தும்[3] கூறு கின்றனர்.) காண்டாமிருகங்கள், சாம்பல் நிறப் புறாக்கள், நீலப்

[2] Asoka, p. 179 Fn.
[3] Op. cit., p 56.
[4] Op. cit., pp. 106-108.
[5] மூன்றாவது அதிகாரத்தைப் பார்க்க.
[6] Op. cit., pp. 177-178
[7] Op. citi, p. 309.

[1] Op. cit, p. 264.
[2] Op. cit., p. 101.
[3] Op. cit., p. 204.

புறுக்கள் முதலியனவும் உண்ணுதற்கோ வேறுவிதத்தில் பயன்படு தற்கோ இல்லாத விலங்குகளும்,

குட்டிகளுடன் உள்ள அல்லது பால் கொடுக்கக்கூடிய பெண் வெள்ளாடுகள், பெண் செம்மறி ஆடுகள், பெண் பன்றிகள் முதலியனவும், ஆறு மாதம் (வயதாகா) ஆகாத அவற்றின் குட்டிகளும் கொல்லப்படுவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன. 'சேவலைக் காயடிப்பதும் கூடாது.

உயிருள்ளவை உள்ள உமியைத் தீயிலிடக்கூடாது. வேண்டுமென்றாவது (சில) விலங்குகளைக் கொல்லவேண்டுமென்பதற்காகவாவது காடுகளுக்குத் தீயிடக்கூடாது.'.

'மாந்தர் உயிருள்ளவைகளை உணவாகக் கொள்ளக் கூடாது'.

'(நான்கு மாதங்களையுடைய) மூன்று பருவங்களின் (seasons) முதல் பௌர்ணமி நாள்களிலும், பூச பௌர்ணமி சமயத்தில் (தை மாத பௌர்ணமி) மூன்று நாள்களிலும் அதாவது முதல் பிறையின் (fortnight) பதினான்கு, பதினைந்தாம் நாள்களிலும் அடுத்த பிறையின் முதல் நாளிலும், ஆண்டு முழுவதும் உள்ள நோன்பு நாள்களிலும் மீன்களைப் பிடிப்பதும் விற்பதும் விலக்கப் பட்டுள்ளது.'

'அதே நாள்களில் யானைகள் வாழும் காடுகளிலும் மீன்கள் உள்ள குட்டைகளிலும் வேறு உயிரினங்களை அழித்தல் கூடாது.'

'ஒவ்வொரு பிறையிலும் எட்டாவது, பதினான்காவது, பதினைந்தாம் நாள்களிலும், பூச, புனர்பூச (நட்சத்திர) நாள் களிலும், மூன்று பருவங்களிலும், பௌர்ணமி நாள்களிலும், திருவிழா நாள்களிலும் காளைகளுக்குக் காயடிப்பதோ ஆண் வெள்ளாடுகள், செம்மறியாடுகள், காட்டுப் பன்றிகள் பிற காயடிக்கக்கூடிய விலங்குகளுக்குக் காயடித்தலோ கூடாது.'

'பூச, புனர்பூச (நட்சத்திர) நாள்களிலும், மூன்று பருவ முதல் பௌர்ணமி நாள்களிலும், அவற்றை அடுத்து வரும் பிறைகளிலும் மாடுகளுக்கும், குதிரைகளுக்கும் சூடுபோடுதல் கூடாது.'

'நான் முடிசூட்டிக்கொண்டு இருபத்தாறு ஆண்டுகள் ஆகியிருந்த காலத்தில் இருபத்தைந்து தடவைகள் சிறையில் இருந்து கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.'

குறிப்பு: இக் கல்வெட்டு அசோகரின் பேரரசு முழுவதிலும் தம் கொல்லாமைக் கோட்பாட்டைச் செயற்படுத்திய விவரத்தைக் கூறுகின்றது. இதில் கூறப்பட்டுள்ள விலங்குகள் சில இன்னதென இன்னமும் அறிஞர்களால் கூறமுடியவில்லை.

மாடுகளுக்கும், குதிரைகளுக்கும் சூடுபோடுவது அக்காலத்திலேயே இருந்தது என்பது இக் கல்வெட்டாலும் அர்த்தசாஸ்திரத்தாலும் அறியப்படுகின்றது. அர்த்த சாஸ்திரத்தில் காணப்படும் பாதுகாக்கப்பட்ட விலங்குகளின் பட்டியலும் அதைப்பற்றி அசோகர் தரும் பட்டியலும் ஒத்துள்ளன என்பது நோக்கற்பாலது. கன்றுகளையும் சிலவகைப் பசுக்களையும் கொல்லக்கூடாதென அர்த்தசாஸ்திரம் கூறுகிறது. அசோகர் தம்முடையஆணைகளில் பசுவதையைப்பற்றிக் குறிப்பிடவே இல்லையென்றும், அவருடைய பாதுகாக்கப்பட்ட விலங்குகளின் பட்டியலில் மாடுகள் சேர்க்கப்படவில்லையென்றும் V. A. ஸ்மித் கூறுவது கவனிக்கத் தக்கது.

கல்வெட்டின் இறுதியில் அசோகர் ஒவ்வோர் ஆண்டும் சிறையிலிருந்து கைதிகளை விடுவித்ததுபற்றிக் குறிப்பிட்டுள்ளார். இது அவரது பிறந்தநாளில் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். கைதிகளை விடுவிக்கக்கூடிய சந்தர்ப்பங்களைப்பற்றிக் குறிப்பிடுகையில் மன்னர் பிறந்தநாளை முதலாவதாக அர்த்தசாஸ்திரம் கூறுவது இங்குக் கவனிக்கத்தக்கது.

ஆறுவது கற்றூண் ஆணை

'கடவுளர் விரும்புபவனும் காட்சிக்கினியவனுமான மன்னன் இவ்வாறு கூறுகிறான்':

'நான் முடிசூட்டிக்கொண்டு பன்னிரண்டு ஆண்டுகள் ஆகியிருந்தபொழுது மனிதகுலத்தின் நலத்திற்காகவும் மகிழ்ச்சிக்காகவும் தர்மத்தின் ஒரு வேதத்தினை எழுதச் செய்தேன். இதனால் மாந்தர் தம் பழைய போக்கினை விட்டுவிட்டுத் தர்மத்தில் பல விதத்திலும் முன்னேற்றம் அடைவர்.'

'இவ்விதம் மனிதகுலத்தின் நலத்தையும் மகிழ்ச்சியையும் குறிக்கோளாகக் கொண்டு நான் உறவினர்களிடத்தில் மட்டுமன்றி அருகேயும் தொலைவிலும் உள்ள எல்லாரிடத்திலும் கவனத்தைச் செலுத்தி வருகிறேன். ஏனெனில், அதில் சிலரையாவது நான் மகிழ்ச்சியடையுமாறு செய்யலாம்; அந்த நோக்குடன்தான் நான் (இந்த) ஏற்பாடுகளைச் செய்கிறேன்.'

'அதேமுறையில் நான் எல்லாச் சமூகத்தினரையும் கவனித்து வருகிறேன்.'

'எல்லாச் சமயத்தினரையும் நான் போற்றுகின்றேன்; ஆனால், பல்வேறு முறைகளில். இருந்தபொழுதிலும் ஒருவன் தனது சொந்த மதத்தைப் பின்பற்றுவதே மிக முக்கியமானது என்பது என் கருத்து.'

'நான் முடிசூட்டிக்கொண்டு இருபத்தாறு ஆண்டுகள் ஆகியிருந்தபொழுது தர்மத்தின் இவ் வேதத்தை எழுதச் செய்தேன்.'

குறிப்பு: நான்காவது, பன்னிரண்டாவது கற்றூண் ஆணை களில் கூறப்பட்டுள்ள செய்திகள் இதில் மீண்டும் வலியுறுத்தப் பட்டுள்ளன. இக் கல்வெட்டின் இரண்டாவது மூன்றாவது பகுதி களுக்குப் பொருள் கொள்வதில் அறிஞர்களிடையே சிறிது வேறு பாடு உள்ளது.

ஏழாவது கற்றூண் ஆணை

'கடவுளர் விரும்புபவனும் காட்சிக்கினியவனுமான மன்னன் கூறுவதாவது':

1. 'இதற்குமுன் வாழ்ந்த மன்னர்கள் தர்மத்தின் வளர்ச்சி யுடன் மாந்தர் வளர்ச்சியையும் விரும்பினார்கள். இருந்தாலும் மாந்தர் தர்மம் வளர்ந்த அளவிற்கு வளர்ச்சியடையவில்லை.'

2. 'இதைப்பற்றிக் கடவுளர் விரும்புபவனும் காட்சிக்கினிய வனுமான மன்னன் கூறுவதாவது':

'இது (இவ்வண்ணம்) எனக்குத் தோன்றியது':

'இதற்கு முன்பு மன்னர்கள் தர்மத்தின் வளர்ச்சியளவிற்கு மாந்தர் வளர்ச்சியடைய விரும்பினார்கள். இருந்தாலும் மாந்தர் தர்மம் வளர்ந்த அளவிற்கு வளர்ச்சியடையவில்லை.'

'பின் எந்த வழியில் மாந்தரைத் தர்மத்தின் வழியில் நடக்கச் செய்வது? எந்த வழியில் மாந்தரைத் தர்மத்தின் வளர்ச்சியளவிற்கு வளரச் செய்வது? எந்த வழியில் அவர்களில் சிலரையாவது தர்மத்தின் வளர்ச்சிமூலம் நான் உயர்த்த முடியும்?'

3. 'இதைப்பற்றிக் கடவுளர் விரும்புபவனும் காட்சிக்கினிய வனுமான மன்னன் கூறுவதாவது':

'இது (இவ்வண்ணம்) எனக்குத் தோன்றியது':

'தர்மப் பேரறிக்கையை (Proclamation) நான் வெளியிடுவேன்; தர்மத்தில் நான் பெற்றுள்ள போதனையைப் போதிப்பேன்; மாந்தர் அதனைக் கேட்பதால் அதன்படி நடந்து, தங்களை உயர்த்திக்கொண்டு தர்மத்தின் வளர்ச்சியுடன் தாங்களும் பெரிதும் வளர்ச்சியுறுவார்கள்.'

'என்னுடைய இந் நோக்கத்திற்காகத் தர்மப் பேரறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன: அத் தர்மத்தினைப்பற்றி பல விதமான போதனைகளும் செய்யப்பட்டுள்ளன. என்னுடைய சமயப் போதகர்களும், அதேபோன்று, ஏராளமான பேர்களை நிருவகிக்கும் எனது பிரதிநிதிகளும் (புருஷர்கள்) என்னுடைய போதனையை விவரித்தும் விளக்கியும் கூறுவர்.'

'பல்லாயிரக்கணக்கான மக்களை ஆட்சிபுரிவதற்காக உள்ள என் மாகாணத் தலைவர்களும் 'அந்தந்த முறையில் என்னுடைய போதனையைத் தர்மத்தில் ஈடுபாடுடையவர்களுக்கு விவரிக்க' என்ற என் கட்டளையைப் பெற்றுள்ளனர்.'

4. கடவுளர் விரும்புபவனும் காட்சிக்கினியவனுமானவன் இவ்வாறு கூறுகிறான்':

'மேலும் அதே நேரத்திற்காகவே தர்மத் தூண்களை நிறுவி வைத்துள்ளேன்; தர்மக் கண்டனையாளர்களை (தர்மமகாமாத்திரர்களை) நியமித்திருக்கிறேன்; தர்மப் பேரறிக்கைகளை விடுத்துள்ளேன்.'

5. 'கடவுளர் விரும்புபவனும் காட்சிக்கினியவனுமான மன்னன் இவ்வாறு கூறுகிறான்.'

'சாலைகளில் மாந்தருக்கும் விலங்குகளுக்கும் நிழல்தரும் ஆல மரங்களை நட்டிருக்கிறேன்; மாந்தோப்புகளை வைத்திருக்கிறேன்; அரைக் கோசிற்கு[1] (ஒன்றேகால் மைல் தொலைவு) ஓரிடத்தில் கிணறுகளை வெட்டிவைத்துள்ளேன்; விடுதிகளும் கட்டப்பட்டுள்ளன; மற்றும் மாந்தருக்கும் விலங்குகளுக்கும் வசதியாக ஏராளமான தண்ணீர்ப் பந்தல்கள் பலவிடங்களிலும் வைக்கப்பட்டுள்ளன.

ஆனாலும், இவையெல்லாம் சிறிய இன்பமே (சுகமே).'

1 ரோமிலா தாபரின் மொழிபெயர்ப்பில் எட்டுக் கோசிற்கு ஓரிடத்தில் என்று காணப்படுகிறது.

'நான் செய்ததைப் போன்று இதற்குமுன் ஆண்ட மன்னர்கள் மக்களுக்குப் பலவித நலம்பயக்கும் செயல்களைப் புரிந்துள்ளனர். இருப்பினும், நான் செய்திருப்பது, நான் கருதியதுபோல, மக்கள் அதனுல் தர்மத்தின்வழி நடப்பார்கள் என்ற எண்ணத்தில்தான்.'

6. 'கடவுளர் விரும்புபவனும் காட்சிக்கினியவனுமானவன் இவ்வாறு கூறுகிருன்.'

'எனது தர்மமகாமாத்திரர்களும்கூட, அரசு, துறவிகளுக்கும் இல்லறத்தோருக்கும் ஆற்றிவரும் பலவித நற்செயல்களில் பணி புரிகின்றனர். அதேபோல் அவர்கள் எல்லாச் சமயத்தினரிடையே யும் பணியாற்றுகின்றனர். அந்தணர்களிடையேயும் ஆஜுவிகர் களிடையேயும் பணியாற்றுவதுடன் அவர்கள் (பௌத்த) சங்கத் தின் அலுவல்களிலும்கூடப் பணிபுரிகின்றனர். அவர்கள் சமணர் களிடையே பணியாற்றுகின்றனர்; வேறு பிற சமயத்தினரிடை யேயும் கூட அவர்கள் பணிபுரிகின்றனர்.

'மகாமாத்திரர்களில் பல்வேறு பிரிவினரும் தத்தம் பொறுப்புகளைக் கண்காணிக்கின்றனர். தர்மமகாமாத்திரர்கள் அம் மாதிரியான அலுவல்களில் பணியாற்றுவதுடன் பிற சமயத் தினரிடையேயும் பணிபுரிகின்றனர்.'

7. 'கடவுளர் விரும்புபவனும் காட்சிக்கினியவனுமான மன்னன் இவ்வாறு கூறுகிருன்'.

'இவ் விருவகை அதிகாரிகளும் (மகாமாத்திரர்களும், தர்ம மகாமாத்திரர்களும்) பிற அதிகாரிகளும், நிருவாகத்துறைத் தலை வர்களும், அரசிகளின் அறங்களையும் என் அறங்களையும் நிறை வேற்றுகின்றனர். இங்கும் (தலைநகரிலும்) மாகாணங்களிலும் உள்ள எனது உவளகங்களிளெல்லாம் (harems) மனநிறைவு கொள்ளக் கூடிய பல்வேறு முயற்சிகளை இவர்கள் பலவிதங்களி லும் புரிந்து வருகின்றனர்.'

'தர்மச் செயல்களைப் போற்றவும், தர்மத்தின் வழியே நடக் கவும் இதே அதிகாரிகள் என்னுடைய புதல்வர்கள், அதே போன்று பிற அரசகுமாரர்கள், அரசிகளின் புதல்வர்கள் முதலி யோரின் அறங்களை நிறைவேற்றுவதில் பணிபுரிகின்றனர்.'

'தர்மச் செயல்களாலும், தர்மத்தின் வழியே நடப்பதனு லும் இரக்கம், ஈகை, உண்மை, தூய்மை, சாந்தம், புனிதத் தன்மை முதலியவை மாந்தரிடையே பெருகும்.'

8. 'கடவுளர் விரும்புபவனும் காட்சிக்கினியவனுமான மன்னன் இவ்வாறு கூறுகிறான்':

'நான் புரிந்துள்ள நற்செயல்கள் எதுவாயினும், அவற்றை மாந்தர் ஏற்றுக்கொண்டுள்ளனர். எதிர்காலத்திலும் அவர்கள் அவற்றைச் செய்வார்கள். அதன்மூலம் அவர்கள் முன்னேற்ற மடைந்துள்ளனர்; இன்னமும் முன்னேற்றமடைவார்கள். எதி லென்றால், தந்தை தாய் சொற்கேட்டல், ஆசிரியர் சொற் பணிதல், முதியோரை மதித்துப் போற்றல், அந்தணர்கள், துறவிகள், ஏழைகள், துன்பமுற்றோர், இன்னும் அடிமைகள். யணியாள்கள் முதலியோரை நன்முறையில் நடத்துதல் முதலிய வற்றில்.'

9. 'கடவுளர் விரும்புபவனும் காட்சிக்கினியவனுமான மன்னன் இவ்வாறு கூறுகிறான்':

'மாந்தர்களிடம் மேற்கூறப்பட்ட தர்மத்தின் வளர்ச்சி இரு வழிகளில் ஏற்பட்டது. அதாவது தர்ம விதிகளாலும் (தர்ம) தியானத்தாலும். இந்த இரண்டில் தர்ம விதிகள் எளியன; ஆனால் தியானமோ மிகவும் உயர்ந்தது (அல்லது பயன் மிக்கது).'

'இருந்தபோதும், எந்தெந்த உயிரினங்களைக் கொல்லக் கூடாது என்பதுபற்றித் தர்ம விதிகளை ஏற்படுத்தியுள்ளேன். இதைத் தவிர வேறு பல தர்ம விதிகளையும் ஏற்படுத்தியுள்ளேன்.'

'இருந்தாலும் மாந்தரிடையே ஏற்பட்டுள்ள தர்மத்தின் வளர்ச்சியிலிருந்தும், அவர்கள் உயிரினங்களைக் கொல்லாமலும் பலியிடாமலும் இருப்பதிலிருந்தும், தியானமே உயர்ந்தது என் பதைக் காண்கிறோம்.'

'என்னுடைய பிள்ளைகளும் என் வழியினரும் (அல்லது கொட் பெயரர்களும்) இதன்படியே நடப்பார்கள்; அவ்வாறு நடந்து இம்மை மறுமைப் பயன்களைப் பெறலாம் என்ற நோக் கத்திற்காகவே இது வரையப்பட்டுள்ளது.'

'நான் முடிசூட்டிக் கொண்டு இருபத்தேழு ஆண்டுகள் ஆகி யிருந்தபொழுது தர்மத்தின் இவ்வேதத்தை எழுதியிருந்தேன்.'

'இதனைப்பற்றிக் கடவுளர் விரும்புபவன் இவ்வாறு கூறு கிறான்':

'தர்மத்தின் இவ்வேதத்தை எங்கெங்கெல்லாம் கற்றூண்கள் அல்லது கற்பாறைகள் உள்ளனவோ அங்கெல்லாம் செதுக்கி வைத்தல் வேண்டும். அதனால் அது என்றும் நிலைபெற்றிருக்கும்.'

குறிப்பு : அசோகர் கல்வெட்டுகளிலேயே மிகப் பெரியதும் மிக முக்கியமானதுமான இது ஒரே இடத்தில் மட்டுமே-அதாவது டெல்லி-தோப்ரா தூணில் மட்டும்-காணப்படுகின்றது. முன்னர்ப் பார்த்த கல்வெட்டுகளில் உள்ள கருத்துகளும் சொற்களும் இதில் திரும்பவும் உள்ளன. 'கடவுளர் விரும்புபவனும் காட்சிக்கினியவனுமான மன்னன்' என்ற மொழி சில இடங்களில் குறைந்துள்ளது. பத்துப் பகுதிகளாக உள்ள இக் கல்வெட்டில் அசோகர் தம் இருபத்தெட்டாம் ஆண்டுவரை தாம் மேற்கொண்ட சமய முயற்சிகளை விரிவாக மதிப்பிடுகிறார். தம் மக்களுக்கென வெளியிட்ட இந்த ஆணையில் (Edict) அசோகர் பிற நாடுகளுக்குச் சமயப்பரப்புக் குழுவினரைத் தாம் அனுப்பியதைக் குறிப்பிடாதது வியப்பிற்குரியதன்று. அசோகர் பயணிகளுக்காகப் புரிந்த நன்மைகள், கௌடில்யரின் அர்த்த சாஸ்திரமும் சம்யுத்த நிகாயமும் கூறுவதை ஒத்திருத்தல் நோக்கற்பாலது. பிந்தையதில் பழமரங்களை நடுவோரும், தோப்புகள் ஏற்படுத்துவோரும், சாலைகள் அமைப்போரும், கிணறுகள் வெட்டுவிப்போரும், தண்ணீர்ப் பந்தல்கள் வைப்போரும், தங்குமிடங்கள் அளிப்போரும் விண்ணுலகிற்குச் செல்வார்கள் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. இவற்றையெல்லாம் செய்ய வேண்டியது அரசர் கடமையென அர்த்தசாஸ்திரம் கூறுகின்றது.[1]

## சிறிய கற்றூண் ஆணைகள்
## (Minor Pillar Edict)

**சாரநாத் ஆணை** (The Sarnath Edict)

'கடவுளர் விரும்புபவனும் காட்சிக் [கினியவனுமான] [மன்னன்] இவ்வாறு கூறுகிறான்':

(1) [பாடலிபுத்திரத்திலும் மாகாணங்களிலும் உள்ள மகாமாத்திரர்களுக்குக் கடவுளர் விரும்பும் மன்னன் கட்டளையிடுவதாவது] எவராலும் சங்கம் பிளவுபடக் கூடாது...சங்கத்தைத் தவறான வழியில் நடத்திச் செல்வோர் யாராயிருந்தாலும், பிக்குவாக இருந்தாலும், அல்லது பிக்குணியாக இருந்தாலும், (அவர்கள்) வெள்ளுடை உடுத்திக்கொண்டு (மடத்தை விட்டு

[1] R. K. Mookerji, op. cit, p. 189. Fn. 3.

விலகி) வெளியே சென்று வாழும்படி கட்டாயப்படுத்தப்படுவர். இப்படி இக் கட்டளையைப் பிக்குகள் கூட்டத்திலும் பிக்குணிகள் கூட்டத்திலும் அறிவிக்கவேண்டும்.'

(2) 'கடவுளர் விரும்பும் (மன்னன்) இவ்வாறு கூறுகிறுன்':

'இக் கட்டளையின் ஒரு நகல் நீங்கள் அணுகக்கூடிய சம்சரணத்தில் வைக்கப்பட்டிள்ளது. இன்னொரு நகலே உபாசகர்கள் அணுகக்கூடிய இடத்தில் வைக்கும்படி செய்யவும். ஒவ்வொரு நோன்பு நாளும் உபாசகர்களும்கூட இக் கட்டளையைப் (படித்தோ அல்லது கேட்டோ) அறிதல் வேண்டும். ஆண்டு முழுதும் ஒவ்வொரு நோன்பு நாளும் மகாமாத்திரர்கள் இக் கட்டளையை அறியக் (நோன்பு) கூட்டத்திற்கு வரவேண்டும்; கட்டளையை நன்கு அறியவும் வேண்டும். உங்கள் அதிகார வரம்பிற்குட்பட்ட எல்லாவிடங்களிலும் இக் கட்டளையில் கூறியுள்ளபடி (சங்கத்தைப் பிளவுபடுத்த முயல்வோரை மடத்திலிருந்து) நீக்கிவிடவும். அதேபோன்று படைவீட்டு நகரங்களிலும், மாவட்டங்களிலும் இக் கட்டளையில் சொல்லியுள்ளபடியே (அத்தகையோரின்) நீக்கத்தைச் செய்யவும்.'

குறிப்பு: இக் கல்வெட்டு அசோகரின் சமயத்தை விளக்குவதற்குப் பெரிதும் பயன்படக்கூடியது; பௌத்த சமயத்தில் அவர் கொண்டிருந்த ஆழ்ந்த ஈடுபாட்டினைக் காட்டுகின்றது. பௌத்த சங்கம் பிளவுபடாமலிருந்தால்தான் வலிமையுடன் இருக்கமுடியும் என்பதை உணர்ந்த அசோகர் சங்கத்தின் ஒற்றுமையைக் குலைப்பவர்களுக்கான தண்டனைகளை அறிவிக்கின்ருர். அதை அறிவிக்கும் முறையைப் பார்க்குமிடத்து சங்கம் அவர் கட்டுப்பாட்டில் இருந்தது என்பது நன்கு புலப்படுகின்றது.

இக் கல்வெட்டின் முதல் மூன்று வரிகள் சிதைந்துள்ளன. அதிலுள்ள சொற்களைச் சாஞ்சி, கௌசாம்பிக் கல்வெட்டுகளின் உதவிகொண்டு அறிகிருேம். இதில் குறிப்பிடப்பட்டுள்ள மகாமாத்திரர்கள் தர்ம மகாமாத்திரர்களே என்று V.A. ஸ்மித் கருதுவது ஏற்புடையதே. சம்சரணம் என்பது பௌத்த 'விகாரத்தின் (மடத்தின்) உள்தாழ்வாரமே. பாதுகாப்பான நகரங்கள், மாவட்டங்கள் என்பவை படைகளையும் கோட்டைகளையும் உடையவைகளே, அவைகளுக்குத் தனி அதிகாரிகள் இருந்திருக்க வேண்டும். அதனுல்தான் அவைகளுக்குத் தனியாகக் கட்டளை அனுப்ப வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இனி, இவ் வாணை எந்த ஆண்டில் வெளியிடப்பட்டதெனத் தெரியவில்லை. கௌசாம்பிக் கற்றூணில் (இப்பொழுது அலகாபாத்தில் உள்ளது (முதல் ஆறு கற்றூண் ஆணைகள் செதுக்கப் பட்டுள்ள இடத்தின் கீழே இக் கல்வெட்டின் முதற் பகுதியின் நகல் ஒன்று காணப்படுகின்றது. எனவே, கற்றூண் ஆணைகள் வெளியிடப்பட்ட 28ஆவது ஆட்சியாண்டிற்குப் பிறகே இவ் வாணை வெளியிடப்பட்டிருத்தல் வேண்டும். பாடலிபுத்திரத்தில் நடைபெற்ற மூன்றுவது பௌத்த மகாநாடு பௌத்த சங்கத்தில் பிளவு ஏற்படாதிருக்கவும், கட்டுப்பாட்டை நிலைநிறுத்தவும் சில விதிகளை இயற்றியதென்பதை அறிவோம். அம் மகாநாட்டிற்குப் பிறகே இக் கல்வெட்டு வெளியிடப்பட்டிருக்க வேண்டும்.

**கௌசாம்பி ஆணை**

1. 'கடவுளர் விரும்பும் (மன்னன்) கொசம்பி மகாமாத்திரர் களுக்கு ஆணையிடுகிறுர்.'

2. ...............சங்கம்.........

3 & 4. ......சங்கத்தைத் தவறுன வழியில் நடத்திச் செல் வோர் யாராக இருந்தாலும், பிக்குவாக இருந்தாலும் பிக்குணி யாக இருந்தாலும், (அவர்கள்) வெள்ளுடை உடுத்திக்கொண்டு (மடத்தைவிட்டு விலகி), வெளியே சென்று வாழும்படி கட்டாயப் படுத்தப்படுவர்.

குறிப்பு: இக் கல்வெட்டு மிகவும் சிதைந்துள்ளது. இருப்பினும் இது சாரநாத் கல்வெட்டின் முதற்பகுதியினுடைய பிரதியே என்பது நன்கு தெரிகின்றது. இது முதல் ஆறு கற்றூண் ஆணைகள் உள்ள தூணில் அவற்றிற்குக் கீழே செதுக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து முன்பு பார்த்தபடி, இதன் காலத்தை ஒருவாறு அறிய முடிகின்றது. கி. பி. பதினுன்காம் நூற்றுண்டில் பிரோஸ் துக்ளக் காலத்தில் இக் கல்வெட்டுள்ள கற்றூண் அலகாபாத் திற்குக் கொண்டுவரப்பட்டது.

**சாஞ்சி ஆணை**

.........பிக்குகளுக்கும் பிக்குணிகளுக்குமான நெறி கூறப் பட்டுள்ளது,

'(என்னுடைய) பிள்ளைகளும் பெயரப் பிள்ளைகளும் ஆளுங் காலம் வரை, சந்திர சூரியர் உதிக்கும் வரை, (பௌத்த) சங் கத்தில் பிளவை ஏற்படுத்தும் (எவரும்) பிக்குவானுலும், பிக்குணி யானுலும் வெள்ளுடை உடுத்திக்கொண்டு (மடத்தைவிட்டு

விலகி) வெளியே சென்று வாழும்படி செய்யவேண்டும். என்னுடைய விருப்பம் என்ன? (பௌத்த) சங்கம் என்றும் இருக்கவேண்டும்; பிளவுபடாமல் இருக்கவேண்டும் என்பதே.'

குறிப்பு: இக் கல்வெட்டும் மிகவும் சிதைந்துள்ளது. இதில் கூறப்பட்டுள்ள செய்தி சாரநாத் கல்வெட்டில் உள்ளதுதான். இருப்பினும் சொற்றொடர் (வாசகம்) மாறி உள்ளது. இவ் வாணை சாஞ்சியிலோ அதற்கருகே உள்ள இடத்திலோ இருந்த மகாமாத்திரர்களுக்கு விடுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

அரசியின் ஆணை (The Queen's Edict)

'கடவுளர் விரும்பும் மன்னனின் சொற்படி எல்லாவிடங்களிலும் உள்ள மகாமாத்திரர்களுக்குக் கட்டளையிடப்பட வேண்டியது':

'இரண்டாவது அரசி எக் கொடையளிப்பினும்—அது மாந்தோப்பாயினும் அல்லது பூங்காவாயினும் அல்லது சத்திரமாயினும் அல்லது வேறு எதுவாக இருந்தாலும் அது அவளால் அளிக்கப்பட்டது என்பதைக் குறிப்பிடல்வேண்டும்.'

தீவரனுடைய தாயான இரண்டாவது அரசி காருவாகியின் (கோரிக்கை இது.)

குறிப்பு: இது அலகாபாத் தூணில் உள்ள கௌசாம்பி ஆணையை அடுத்துக் காணப்படுகின்றது. எனவே, அதற்குப் பிறகுதான் இது வெளியிடப்பட்டிருத்தல் வேண்டும். அதாவது இவ் வாணை அசோகரது இறுதிக் காலத்தில் வெளியிடப்பட்டிருக்கவேண்டும். இதில் கூறப்பட்டுள்ள அசோகருடைய மகன் தீவரன் தன் தந்தைக்கு முன்பே இறந்துபோயிருக்கலாம் என்று ஸ்மித் கருதுகிறார்.[1] C.D. சாட்டர்ஜி அளித்துள்ள இக் கல்வெட்டின் புதிய நகலில் 'திரிசரணம், புத்தர், தர்மம், சங்கம்; என்பது சேர்ந்துள்ளது.'[2]

## பிற கல்வெட்டுகள்

ரும்மிந்தெய் கல்வெட்டு (The Rummindei Inscription)

'கடவுளர் விரும்புபவனும் காட்சிக்கினியவனுமான மன்னன் முடிசூட்டிக் கொண்டு இருபதாண்டுகள் ஆகியிருந்தபொழுது

[1] Op. cit., p. 220.
Vide R. K. Mookerji, op. cit., p.982.

'சாக்கியமுனி புத்தர் பிறந்த இவ்விடத்தை' நேரே வந்து வழிபட்டமையை யொட்டி, குதிரை உருவம் உள்ள ஒரு கல் வைக்கப்பட்டதுடன் ஒரு கற்றூணும் நடப்பட்டது.'

'இது 'புனிதமானவர் (அல்லது பகவான்) பிறந்த இடமாய்' இருப்பதை யொட்டி லும்மினிக் (லும்பினி) கிராமத்தில் சமயத் தீர்வைகள் (Religious cesses) நீக்கப்பட்டுள்ளன; மேலும் நிலவரியும் எட்டில் ஒன்ருகக் குறைக்கப்பட்டுள்ளது.'

குறிப்பு: அசோகருடைய சமயத்தை மேலும் விளக்க இக் கல்வெட்டு உதவுகின்றது. அசோகர் புத்தர் பிறந்த இடத்திற்குச் சென்று வழிபட்டதைக் கூறுவதே இக் கல்வெட்டின் நோக்கம். அரசர் ஆணைப்படி இக் கல்வெட்டு வெளியிடப்பட்டதாகக் கூற முடியாது. லும்பினியில் வாழ்ந்தவர்கள் அசோகர் அவ்விடத் திற்கு வந்ததை யொட்டி இதனைச் செய்திருத்தல் வேண்டும். 'குதிரையுருவம் உள்ள கல்' என்பதைப் பொருள் கொள்வதில் அறிஞர்களிடையே கருத்துவேறுபாடு உள்ளது. சிலர் 'உருவம் உள்ள கல்' என்று கூறுகின்றனர்.[1]

இனி 'லும்மினி' என்று குறிப்பிடப்பட்டுள்ள கிராமம் தற் பொழுது ரும்மிந்தெய் அல்லது ரூபதெய் என்று வழங்கப்படு கிறது. இது நேபாளத்தில் உள்ளது. 'சாக்கியமுனி புத்தர் இங்குப் பிறந்தார்', 'இங்குப் புனிதமானவர் பிறந்தார்' என் பவை மேற்கோள்களே. திவ்வியாவதானத்தில் பிந்தியதை உபகுப்தன் அசோகரிடம் கூறியதாகச் சொல்லப்பட்டுள்ளது.

**நிக்லீவா கற்றூண் கல்வெட்டு (The Nigliva Pillar Inscription)**

'கடவுளர் விரும்புபவனும் காட்சிக்கினியவனுமான மன்னன் முடிசூட்டிக்கொண்டு பதினான்காண்டுகள் ஆகியிருந்தபொழுது கொணகமன புத்த ஸ்தூபியை இரண்டாவது முறையாக விரிவு படுத்தினன்; மேலும் பின்னர் அவன் முடிசூட்டிக்கொண்டு இரு பது ஆண்டுகள் ஆகியிருந்தபொழுது, நேரே வந்து வழிபட்ட துடன் ஒரு கற்றூணையும் நிறுவினன்.

குறிப்பு: இதுவும் இதற்குமுன் பார்த்த கல்வெட்டும் ஒரே காலத்தில் வரையப்பட்டவையே. இரண்டும் அசோகர் செய்த யாத்திரையைப்பற்றிய செய்திகளைக் கூறுகின்றன. இக்கல்வெட்டு ரும்மிந்தெய்க்கு 13 மைல் தொலைவில் உடைந்த ஒரு கற்றூணில் காணப்படுகின்றது. அத் தூண் முதலில் கொணகமன

[1] R. K. Mookerji, op, cit., p. 201.

புத்த ஸ்தூபி இருந்த இடத்தருகே இருந்திருக்கவேண்டும். எப்படியோ பிறகு வேறு இடத்திற்குக் கொண்டுபோகப்பட்டுள்ளது.

பௌத்த சமய வரலாற்றை அறிய இக் கல்வெட்டுப் பெரிதும் பயன்படக்கூடியது. கொணுகமன புத்தர் என்பவர் இருபத்து நான்கு புத்தர்களில் ஒருவர்; கௌதம புத்தருக்கு முன்பு வந்தவர்களில் ஒருவர்; சுருங்கக்கூறின் முந்தைய (பூர்வ) புத்தர்களில் ஒருவர். 'முந்தைய புத்தர்கள்' கோட்பாடு அசோகர் காலத்திலேயே இருந்தது; அவர்களில் ஒருவரான கொணுகமன புத்தருக்கு அசோகர் காலத்தில் ஒரு ஸ்தூபி இருந்தது. அதை அவர் வழிபட்டதுடன் இருமுறை விரிவு படுத்தினர் என்பவை இக் கல்வெட்டால் நன்கு அறியப்படுகின்றன. மகாயான பௌத்த சமயத்தில் 'முந்தைய புத்தர்கள்' கோட்பாடு முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது என்பது ஈண்டு நினைவுகூரத்தக்கது.

பராபர் குகைக் கல்வெட்டுகள் (Barabar Cave Inscriptions)

1. 'காட்சிக்கினிய மன்னன் முடிசூட்டிக்கொண்டு பன்னிரண்டு ஆண்டுகள் ஆகியிருந்தபொழுது இந்த ஆலமரக் குகை ஆஜீவிகர்களுக்கு அளிக்கப்பட்டது.'

2. 'காட்சிக்கினிய மன்னன் முடிசூட்டிக்கொண்டு பன்னிரண்டு ஆண்டுகள் ஆகியிருந்தபொழுது களத்திகா குன்றிலுள்ள இக் குகை ஆஜீவிகர்களுக்கு அளிக்கப்பட்டது.'

5. 'காட்சிக்கினிய மன்னன் முடிசூட்டிக்கொண்டு பத்தொன்பதாண்டுகள் ஆகியிருந்தபொழுது மழையிலிருந்து காப்பதற்காக இன்பமான களத்திகா மலையில் உள்ள இக் குகையை அளித்தேன்.'

குறிப்பு: இவற்றுள் முதல் கல்வெட்டுச் சிதைந்துள்ளது. மூன்றுவது தெளிவாக இல்லை; இங்குக் கொடுக்கப்பட்டுள்ள அதன் தமிழாக்கம் R. K. முகர்ஜியின் ஆங்கில மொழிபெயர்ப்பை ஒட்டியது.[1] அதில் குகையைக் கொடுத்தவர் யார் என்பது தெளிவாகவில்லை.

காண்டகார் கல்வெட்டு (The Kandahar (Shar-i-kuna) Incription)

இக் கல்வெட்டு ஆஃப்கானிஸ்தானத்தில் காண்டகார் அருகே உள்ள ஷாரிகுணக் கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

[1] Op. cit., p. 207.

இது கிரேக்க, அராமிய இரு மொழிகளிலும் வரையப்பட்டுள்ளது. அசோகர் முடிசூட்டிக்கொண்டு பத்தாண்டுகள் ஆகியிருந்த பொழுது இது வெளியிடப்பட்டது. கிரேக்க மொழியில் உள்ள பகுதியை முதலில் காண்போம்.

கிரேக்கப் பகுதி: 'நான் முடிசூட்டிக்கொண்டு பத்து ஆண்டுகள் ஆனபின் காட்சிக்கினிய மன்னன் மக்களிடையே தர்மபோதனையைத் தொடங்கினான். அதிலிருந்து அவனால் மக்கள் தர்மத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ளனர். மேலும், உலகம் முழுதும் எல்லா உயிரினங்களின் நலமும் மகிழ்ச்சியும் பெருகியுள்ளன. மேலும் உயிரினங்களைக் கொல்லுதலை அரசனும் எல்லா மக்களும், அரசனின் வேட்டைக்காரர்கள், (பொது) மீனவர்கள் உட்படக் கைவிட்டுவிட்டனர். அவர்கள் எல்லோருமே உயிர்வதையைக் கைவிட்டுவிட்டார்கள்.'

'மற்றும் அடக்கமில்லாது வாழ்ந்தவர்கள்கூட (இப்பொழுது) தங்களால் முடிந்த அளவிற்கு அடக்கமுள்ளவர்களாகியுள்ளனர். மேலும், இதற்குமுன் இருந்ததைப்போலன்றி அவர்கள் (இப்பொழுது) தாய் தந்தையர், முதியோர் சொற்கேட்கத் தயாராக உள்ளனர்.'

'இவ்வாறு நடந்துகொண்டிருப்பதால் இனிமேல் அவர்கள் தங்கள் நலத்திலும் மகிழ்ச்சியிலும் முன்னேற்றத்தை அடைவார்கள். அத்தகைய முன்னேற்றம் பெருகிக்கொண்டே இருக்கும்.'

அராமியப் பகுதி: 'தான் முடிசூட்டிக்கொண்டு பத்து ஆண்டுகள் ஆகியிருந்தபொழுது நமது தலைவன் (Lord) காட்சிக்கினிய மன்னன் மக்களிடையே தர்மத்தைப் போதிக்கத் தொடங்கினான்.'

'அதிலிருந்து துன்பம் அல்லது ஊறு குறைந்துள்ளது. மற்றும் எல்லா மக்களுக்கும் கெடுதல் ஏற்படுவது தவிர்க்கப்பட்டுள்ளது. மேலும் உலகமெங்கும் அமைதியும் அன்பும் ஏற்பட்டுள்ளன.'

'இதனுடன் இன்னொன்றும் நடந்துள்ளது. அது உணவைப் பற்றியது: நமது தலைவன் (Lord) மன்னன் உணவிற்காக (விலங்குகளையும் பறவைகளையும்) கொல்வது குறைந்துள்ளது. அதைப் பார்த்து மற்றெல்லா மக்களும் (உணவிற்காக உயிரினங்களை) கொல்வதை விட்டுவிட்டனர். மீனவர்கள்கூடத் தங்கள்

தொழிலைச் செய்யாதபடி (சில விதிகளால்) தடுக்கப்பட்டுள்ளனர்.'

மற்றும் தாய், தந்தை, முதியோர் சொற்கேட்டலும் அவர்களுக்கான கடமைகளைப் புரிதலும் இப்பொழுது இருந்து வருகிறது. தர்மத்தில் ஈடுபாடுடையவர்களுக்குப் பரஉலக விசாரணை காத்திராது.'

'தர்மத்தைப் பின்பற்றுவதால் எல்லோரும் மேன்மையுறுகிறார்கள்; எதிர்காலத்திலும் அவ்வாறே மேன்மையுறுவார்கள்.'

**குறிப்பு:** இக் கல்வெட்டின் தமிழாக்கம் R. K. முகர்ஜியின் ஆங்கில மொழிபெயர்ப்பை[1] அடிப்படையாகக் கொண்டது. ஆஃப்கானிஸ்தானத்தில் அசோகர் ஆட்சி நிலவியது என்பதற்கான முதல் கல்வெட்டுச் சான்று இது. மேலும், அசோகர் தமது பத்தாவது ஆட்சி ஆண்டிலிருந்தே 'தர்ம' போதனையைத் தொடங்கிவிட்டார் என்பதை இக் கல்வெட்டுத் தெளிவுபடுத்துகின்றது. அந்த ஆண்டில்தான் அசோகர் புத்த கயைக்கு யாத்திரை சென்று போதிமரத்தைத் தரிசித்து வந்தார்.

**எற்றகுடிச் சிறிய கற்பாறை ஆணை**

எற்றகுடி என்பது சித்தாபூருக்கு வடக்கிழக்கே எண்பது மைல் தொலைவில், கர்நூல் மாவட்டத்தின் தென்எல்லையில் அமைந்துள்ள ஒரு கிராமம் ஆகும். அங்கு அசோகருடைய 14 கற்பாறை ஆணைகளும் ஒரு சிறிய கற்பாறை ஆணையும் (எல்லாம் நகல்) கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 14 கற்பாறை ஆணைகளும் பிற இடங்களில் உள்ளதைப் போன்றே உள்ளன. ஆனால், சிறிய கற்பாறை ஆணையின் பிற்பகுதி புதியது. அதை மட்டும் கீழே கொடுத்துள்ளோம்.

'கடவுளர் விரும்பும் (மன்னன்) இவ்வாறு கூறுகின்றான்.'

'கடவுளர் விரும்பும் (மன்னன்) எந்தக் கட்டளையிட்டாலும் அதை நிறைவேற்றவேண்டும். இராஜுகர்களுக்கு மகாமாத்திரர்கள் பின்வருமாறு கட்டளையிடவேண்டும்: அவர்கள் உடனே நாட்டுப்புற மக்களுக்கும் இராஷ்டிரிகர்களுக்கும் பின் வருமாறு கட்டளை பிறப்பிக்கவேண்டும். தாய் தந்தை சொற்படி கேட்டல்வேண்டும்; அதேபோன்று ஆசிரியருக்கும் அடிபணிய வேண்டும். எல்லாவுயிர்களிடத்தும் அன்பு காட்டுதல் வேண்டும்;

[1] Asoka, pp 263—268.

உண்மையையே பேசுதல்வேண்டும், பெருமைவாய்ந்த இத் தர்ம குணங்களைப் பெருக்கிடவேண்டும்.'

'அதேபோன்று உங்களுக்கும் (மகாமாத்திரர்களுக்கும்) அரசன் வாய்மொழியிலேயே கட்டளையிடப்பட்டுள்ளது: இவ்வாறு யானைப்படையினர், காரணகர்கள் (காயஸ்தர் = எழுத்தர்கள் அல்லது நீதிபதிகள்), தேர்ப்படையினர், அந்தணர்கள் (அதாவது ஆசிரியர்கள்) போன்ற எல்லா மக்கட் பிரிவினருக்கும் கட்டளையிடவும்.'

'மேலும் நீங்கள் அந்தணர்களுக்கு அவர்களின் மாணவர்கள் மரபுநெறிப்படி பின்வரும் கடமைகளை ஆற்றும்படி அறிவுரை புகட்டுமாறு கட்டளையிடவும்: (1) ஆசிரியன் சொற்படி கேட்டல், (2) ஆசிரியனுக்கு எல்லாத் தொண்டுகளையும் உண்மையான பக்தனைப்போல் புரிதல், (3) உறவினர்களிடத்தும் அவ்வாறே நடந்துகொள்ளல் (முதலியவைகளே).'

'அதேபோன்று அவர்களின் (மாணவர்களின்) உறவினர் களுக்கும் கட்டளையிடவும்: அதேபோல் பிரம்மசரிய மரபு நெறிக்கேற்ப மாணவர்கள் ஆசிரியர்களுக்குத் தொண்டாற்றத் தங்களை அர்ப்பணித்துக் கொள்ளும் தொன்மையான கோட்பாடு நன்கு நிலைபெறுக.'

'அதேபோன்று நீங்களும் (ஆசிரியர்களும்) மாணவர் களுக்கு அவர்கள் இம் மாணவ மரபுவிதிகளைப் பின்பற்றுவதில் உறுதியாக இருக்கவேண்டுமென அறவுரை புகட்டவேண்டும்.'

'இவ்வாறு கடவுளர் விரும்பும் மன்னன் கட்டளையிடுகிறான்.'

குறிப்பு: இக் கல்வெட்டின் தமிழாக்கம் R. K. முகர்ஜியின் ஆங்கில மொழிபெயர்ப்பை அடிப்படையாகக் கொண்டது.[1] R. K. முகர்ஜியே இக் கல்வெட்டின் முழுப் பொருளும் தெளிவாக வில்லை என்று கூறுகிறார். இருப்பினும், அசோகர் எதைப்பற்றி என்ன கூறுகின்றார் என்பது புரியாமலில்லை. சமயப்பொறைக்கு எப்படிப் பன்னிரண்டாவது கற்பாறை ஆணை ஓர் இலக்கண மாய்த் திகழ்கின்றதோ அவ்வாறே ஆசிரியர் மாணவர் உறவுக்கு இக் கல்வெட்டு ஓர் இலக்கணமாய் அமைந்துள்ளது. இளந் தலை

[1] Asoka, pp. 258-261.

முறையினர் தம்முடைய தர்மத்தில் ஈடுபாடு கொள்வதற்காக அசோகர் இவ் வாணையை வெளியிட்டிருத்தல்வேண்டும்.

பொதுக் குறிப்பு: மேற்கூறிய கல்வெட்டுகள் தவிர வேறு சில கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனல், அவற்றைப்பற்றிய முழுச் செய்தி இன்னும் கிடைக்கவில்லை. 1915-ல் சர் ஜான் மார்ஷல் தட்சசீலத்தில் கி. மு. மூன்றும் நூற்றுண்டிற்குரியது என்று கருதப்படும் ஓர் அராமியக் கல்வெட்டைக் கண்டுபிடித்தார். ஆனல், அது அசோகருடையதா என்பது இன்னும் தெளிவாகவில்லை. அதில் கூறப்பட்டுள்ள செய்திகளைக் கொண்டும் எதையும் உறுதியாகச் சொல்வதற்கில்லை.

சமீபத்தில் விந்தியப் பிரதேசத்தில் ஜான்சி நகருக்கு 11மைல் தொலைவில் உள்ள குஜர்ரா கிராமத்தில் அசோகருடைய சிறிய கற்பாறை ஆணையின் பிரதி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதில் உள்ள செய்திகள் பிற நகல்களில் உள்ளவையே. இருப்பினும், அதில் சிறப்பாகக் காணப்படுவது அசோகரின் முழுப் பெயரும் பட்டமும்.

சிறிய கற்பாறை ஆணையின் மற்ருெரு பிரதி உத்தரப் பிரதேசத்தில் சுனர் அருகே உள்ள அரவுராக் கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆனல், அதன் முழு விவரமும் வெளியாகவில்லை.

டாக்டர் D.C. சர்க்கார் அமராவதியில் (ஆந்திரப் பிரதேசம்) பழங்காலக் கல்வெட்டு ஒன்றில் சிறுபகுதியைக் கண்டுபிடித்துள்ளார். அதில் காணப்படும் செய்தி அசோகருடைய ஆணைகளில் உள்ளதைப் போன்று இருக்கிறது. அக் கல்வெட்டு உள்ள கல்லும் அசோகத் தூணில் ஒரு பகுதிபோல உள்ளது. அக் கல்வெட்டு அசோகருடையது என்ருல், அமராவதி பௌத்த ஸ்தூபியை முதலில் அவரே கட்டியிருக்கவேண்டும் என்று D. C. சர்க்கார் கூறுகிருர்.[1]

இனி அசோகருடைய கல்வெட்டுகளைக் கண்டுபிடித்த வரலாற்றினைப் பற்றியும் இங்குக் குறிப்பிடுதல் அவசியம். 1970-ல் அசோகருடைய கல்வெட்டு முதல்முதல் கண்டுபிடிக்கப்பட்டது. அதிலிருந்து ஒன்றன்பின் ஒன்ருகக் கற்பாறைகளிலும் கற்றூண்களிலும் இருந்த பல கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. 1915-ல் அசோகரின் பெயரைக்கொண்டுள்ள மாஸ்கி கண்டுபிடிக்கப்பட்டது. பெரும்பாலான கல்வெட்டுகளைக்

[1] R. K. Mookerji, Asoka, p. 269.

கண்டுபிடித்தது இந்தியாவில் இருந்த மேல்நாட்டினர் என்பது குறிப்பிடத்தக்கது. நிற்க அவற்றைக் கண்டுபிடித்ததைவிடப் படித்ததே பெருஞ்சாதனையாம். வழக்கிலில்லாத பிராமி எழுத்தை ஆராய்ந்து கற்று அசோகரின் கல்வெட்டுகளைப் படித்துப் பொருள் கூறிய பெருமை ஜேம்ஸ் பிரின்செப்பிற்கே (James Prinsep) உரியது. நாணயச்சாலையில் பணிபுரிந்த பிரின்செப் ஆசியக் கழகத்தின் (Asiatic Society of Bengal) செயலாளராகவும் இருந்தார். அலெக்சாண்டர், கன்னிங்காம் போன்ற துணைவர்களுடன் 1837-ல் பிரின்செப் முதன்முதலில் அசோகருடைய கல்வெட்டுகளைப் படித்துப் பொருள் கூறினார். அதன் பின் அவர் ஆராய்ச்சியைப் பல அறிஞர்கள் தொடர்ந்து நடத்தினர். அதில் ஐரோப்பிய அறிஞர்கள் காட்டிய ஆர்வம் போற்றுதற்குரியது. அசோகரின் கல்வெட்டுகள் எல்லாவற்றையும் கண்டுபிடித்து விட்டதாக நாம் கூறுவதற்கில்லை. நமக்குத் தெரியாமல் இன்னும் சில இருக்கலாம்.[1]

[1] *Vide* **R. K. Mookerji, Asokan Inscription, Introduction pp. VII to XI & Asoka, Addenda, pp. 268 - 269.**

# மேற்கோள் நூற்பட்டியல்

## (BIBLIOGRAPHY)


1. Basham, A. L., *History and Doctrines of the Ajivikas*, 1951.

2. Bhandarkar, D. R., *Asoka*, 1925.

3. *Cambridge History of India*, Vol I, 1922.

4. Codrington, H. W., *A Short History of Ceylon*, 1929.

5. Eggermont, P. H. L., *The Chronology of the reign of Asoka Moriya*, 1956.

6. Kern, F., *Asoka*, 1956.

7. Krishnaswami Aiyangar, S., *The Beginnings of South Indian History*, 1918.

8. *Krishnaswami Aiyangar Commemoration Volume*, 1936.

9. Majumdar, R. C. (Ed.), *History and Culture of the Indian People, Vol. II—The Age of Imperial Unity*, 1951.

10. Mcphail, J. M., *Asoka*, 1926

11. Nilakanta Sastri, K. A., *Age of the Nandas and Mauryas*, 1967.

12. Radhakumud Mookerji, *Asoka*, 1962; *Asokan Inscriptions—A Commentary*, 1942.

13. Ramachandra Dikshitar, V. R., *The Mauryan Polity*, 1932.

14. Raychaudhuri, H. C., *Political History of Ancient India*, 1938.

15. Romila Thapar, *Asoka and the Decline of the Mauryas*, 1961.

16. Samaddar, J. N., *The Glories of Magadha*, 1927.

17. Sathianathaier, R., *Political and Cultural History of India, Vol.* I, 1964; *Studies in the Ancient History of Tondaimandalam*, 1944.

18. Shama Sastri, *Kaulitya's Arthasastra*, 1929.

19. Sircar, D. C., *Inscriptions of Asoka*, 1957.

20. Smith, V. A., *Asoka*, 1920.

# கலைச்சொற்கள்

## (ஆங்கிலம்—தமிழ்)

### A

| | | |
|---|---|---|
| Abacus | — | (தூணின் மீதுள்ள) கற்பலகை |
| Absolute power | — | வரம்பற்ற அதிகாரம் |
| Administration of Justice | — | முறை வழங்கல் |
| Ambassador | — | தூதுவன் |
| Architecture | — | கட்டடக்கலை |
| Audit | — | தணிக்கை |
| Autonomy | — | சுயநிர்வாக உரிமை |

### B

| | | |
|---|---|---|
| Bell-capital | — | மணிமுடி |
| Buddhist monk | — | பௌத்தத் துறவி |
| Buddhist nun | — | பௌத்தப் பெண் துறவி |

### C

| | | |
|---|---|---|
| Cavaley | — | குதிரைப் படை |
| Census | — | குடிக்கணக்கு |
| Centralized Administration | — | ஒருமுக அரசாங்கம் |
| Centralization | — | அதிகாரம் குவிந்திருத்தல் |
| Chariot division | — | தேர்ப்படை |
| Chronology | — | கால வரையறை |
| Collector-General | — | வருவாய் மேலதிகாரி |
| Committee | — | குழு |
| Conversion | — | மதமாற்றம் |
| Criminal Code | — | குற்றவியல் சட்டம் |
| Customs | — | சுங்கம் |

## D

Dharmalipi — தர்மவேதம்
Diameter — விட்டம்
Diplomacy — அரசியல் சூழ்ச்சி
District — மாவட்டம்

## E

Edict — (பேரரசனின்) ஆணை
Elephant corps — யானைப் படை
Emperor — பேரரசன்
Empire — பேரரசு
Excise — உள்நாட்டுச் சுங்கம்

## F

Federation — கூட்டாட்சி
Fine — தண்டம்
Fortnight — பிறை

## G

Genealogy — வம்சாவளி
Governor — மாகாணத் தலைவர், மாநிலத் தலைவர்
Guild — தொழில்வினைஞர் குழு

## H

Harem — உவளகம்
Herbs — மூலிகைகள்
His Gracious Majesty — காட்சிக்கினிய மன்னன்
His Sacred Majesty — கடவுளர் விரும்பும் மன்னன்
Hospital — ஆதுரசாலை

## I

Infantry — காலாட் படை
Inscriptions — கல்வெட்டுகள்
International Law — பன்னாட்டுச் சட்டம்

## J

Judicial Procedure — நீதிமன்ற நடைமுறை

## L

Lay Buddhists — உபாசகர்
League — கூட்டு

## M

Measures — நீட்டலளவு
Military Administrative Commission — படை நிருவாகக் குழு
Ministerial Council — அமைச்சர் குழு
Minor Rock Edict — சிறிய கற்பாறை ஆணை
Missionaries — சமயப் பரப்புக் குழுவினர்
Monarchy — முடியரசு
Monastery — மடம்
Moral Code — நன்னெறி விதிமுறை
Municipal Administration — நகர ஆட்சி

## N

Navy — கப்பற்படை

## P

Passport — பயண அனுமதி
Philosophers — மெய்ஞ்ஞானத்தோர்
Philosophy — தத்துவம்
Pilgrimage — புனித யாத்திரை
Plinth — அடிப்பீடம்
Pillar Edict — கற்றூண் ஆணை
Policy — கொள்கை
Predecessors — முன்னோர்
Proclamation — பேரறிக்கை
Province — மாகாணம்
Public Works — பொது மராமத்துப் பணிகள்

## R

| | | |
|---|---|---|
| Regnal year | — | ஆட்சியாண்டு |
| Religious cess | — | சமயத் தீர்வை |
| Religious toleration | — | சமயப்பொறை |
| Revenue official | — | வருவாய் அதிகாரி |
| Revision | — | மறுஆய்வு |
| Rituals | — | சமயச் சடங்குகள் |
| Rock Edict | — | கற்பாறை ஆணை |

## S

| | | |
|---|---|---|
| Scripture | — | வேதம் |
| Sculptured | — | சிற்ப வேலைப்பாடுள்ள |
| Sources | — | அடிப்படைச் சான்றுகள் |
| Stone railings | — | கல்வேலி |
| Subordinate officials | — | உதவி அதிகாரிகள் |
| Successors | — | வழியினர் (சந்ததியார்) |
| Superintendents | — | கண்காணிப்போர், கண்காணிப்பவர் |
| Stupi | — | ஸ்தூபி |

## T

| | | |
|---|---|---|
| Taluk | — | வட்டம் |
| Trade tax | — | வணிக வரி |
| Torture | — | சித்திரவதை |
| Transfer | — | வேலை இடமாற்றம் |
| Treasurer-General | — | வருவாய் மேலதிகாரி |
| Treaty | — | உடன்பாடு |

## V

| | | |
|---|---|---|
| Viceroy | — | அரசப் பிரதிநிதி |

## W

| | | |
|---|---|---|
| Weights | — | நிறுத்தலளவு |

# கலைச்சொற்கள்

## (தமிழ்—ஆங்கிலம்)

### அ

அடிப்படைச் சான்றுகள் — Sources
அடிப்பீடம் — Plinth
அரசியல் சூழ்ச்சி — Diplomacy
அரசப் பிரதிநிதி — Viceroy
அமைச்சர் குழு — Ministerial Council
அதிகாரம் குவிந்திருத்தல் — Centralization

### ஆ

ஆணை — Edict, an imperial decree
ஆட்சியாண்டு — Regnal year
ஆதுரசாலை — Hospital

### உ

உடன்பாடு — Treaty
உபாசகர் — Lay Buddhists
உதவி அதிகாரிகள் — Subordinate officials
உவளகம் — Harem
உள்நாட்டுச் சங்கம் — Excise

### ஒ

ஒருமுக ஆட்சி — Centralised administration

### க

கட்டடக்கலை — Architecture
கல்வெட்டுகள் — Inscriptions
கற்பாறை ஆணை — Rock Edict
கற்றூண் ஆணை — Pillar Edict

| | | |
|---|---|---|
| கண்காணிப்பவர்<br>கண்காணிப்போர் | — | Superintendents |
| கருவூல மேலதிகாரி | — | Treasurer - General |
| கடவுளர் விரும்பும் மன்னன் | — | His Sacred Majesty (Devanambiya) |
| கப்பற்படை | — | Navy |
| கல்வேலி | — | Stone railings |
| கால வரையறை | — | Chronology |
| காலாட்படை | — | Infantry |
| காட்சிக்கினிய மன்னன் | — | His Gracious Majesty (Piyadasi) |
| குழு | — | Committee |
| குடிக்கணக்கு | — | Census |
| குதிரைப் படை | — | Cavalry |
| குற்றவியல் சட்டம் | — | Criminal Code |
| கூட்டு | — | League |
| கூட்டாட்சி | — | Federation |
| கொள்கை | — | Policy |

## ச

| | | |
|---|---|---|
| சமயப்பொறை | — | Religious toleration |
| சமயப் பரப்புக் குழுவினர் | — | Missionaries |
| சமயத் தீர்வை | — | Religious cess |
| சடங்குகள் | — | Rituals |
| சித்திரவதை | — | Torture |
| சிறிய கற்பாறை ஆணை | — | Minor Rock Edict |
| சிற்ப வேலைப்பாடுள்ள | — | Sculptured |
| சுங்கம் | — | Customs |
| சுயநிர்வாக உரிமை | — | Autonomy |

## த

| | | |
|---|---|---|
| தர்மவேதம் | — | Dharmalipi |
| தணிக்கை | — | Audit |
| தண்டம் | — | Fine |
| தத்துவம் | — | Philosophy |
| தூதுவன் | — | Ambassador |
| தேர்ப்படை | — | Chariot division |
| தொழில்வினைஞர் குழு | — | Guild |

ந

நகர ஆட்சி — Municipal Administration
நன்னெறி விதிமுறை — Moral Code
நிறுத்தலளவு — Weights
நீட்டலளவு — Measures
நீதிமன்ற நடைமுறை — Judicial Procedure

ப

பலகை (தூணின்மீதுள்ள கற்பலகை) — Abacus
பன்னாட்டுச் சட்டம் — International Law
பயண அனுமதி — Passport
படை நிருவாகக் குழு — Military Administrative Commission
பிக்கு — Buddhist monk
பிக்குணி — Buddhist nun
பிறை — Fortnight
புனிதயாத்திரை — Pilgrimage
பேரரசு — Empire
பேரரசன் — Emperor
பேரறிக்கை — Proclamation
பொது மராமத்துப் பணிகள் — Public Works

ம

மடம் — Monastery
மதமாற்றம் — Conversion
மறு ஆய்வு — Revision
மணிமுடி — Bell-capital
மாநிலத் தலைவர் }
மாகாணத் தலைவர் } — Governor
மாகாணம் — Province
மாவட்டம் — District
முன்னோர் — Predecessors
முடியரசு — Monarchy
முறைவழங்கல் — Administration of Justice
மூலிகைகள் — Herbs
மெய்ஞ்ஞானத்தோர் — Philosophers

யா

| | | |
|---|---|---|
| யானைப் படை | — | Elephant corps |

வ

| | | |
|---|---|---|
| வட்டம் | — | Taluk |
| வரம்பற்ற அதிகாரம் | — | Absolute power |
| வருவாய் அதிகாரி | — | Revenue official |
| வருவாய் மேலதிகாரி | — | Collector-General |
| வம்சாவளி | — | Genealogy |
| வணிகவரி | — | Trade tax |
| வழியினர் | — | Successors |
| வாரியம் | — | Committee |
| விட்டம் | — | Diameter |
| வேதம் | — | Scripture |
| வேலை இடமாற்றம் | — | Transfer |

ஸ

| | | |
|---|---|---|
| ஸ்தூபி | — | Stupi, Buddhist place of worship |


# பொருட்குறிப்பு அகராதி


அசோகரின் இளமைப் பருவம், 16—19
அசோகரின் இறுதிக் காலம், 33—35
அசோகரின் சகோதரர்களும் மனைவியரும், 21—22
அசோகரின் சமயம், 63—67
அசோகரின் தர்மம், 67—75
அசோகரின் பெருமை, 89—95
அசோகரின் முன்னோர்கள், 1—5
அசோகரின்வழியினர், 95—100
அசோகரும் பிற சமயத்தினரும், 85—88
அடிப்படைச் சான்றுகள், 9—15
ஆட்சியின் தொடக்கம், 23—24
ஆட்சியின் முக்கிய நிகழ்ச்சிகள், 29—38
ஆட்சிமுறை, 48—62
இலங்கை, 125—130
கல்வெட்டுகள், 131—179
கல்வெட்டுகளின் காலம், 7—9
கல்வி, 113—115
கலிங்கப்போர், 24—25
கலைகள், 116—124
சமய நிலை, 101—106,
சமூக நிலை, 106—113
தென்னிந்தியா, 125—130
பட்டத்திற்கு வருதல், 19—20
பௌத்த சமயத்தைத் தழுவுதல், 25—29
பௌத்த சமயத்திற்குத் தொண்டு, 75—85
பேரரசின் பரப்பு, 36—41
பேரரசின் வீழ்ச்சி, 95—100
பொருளாதார நிலை, 106—113
வெளிநாட்டுக் கொள்கை, 41—43

நிழற்படங்கள் வழங்கிய


இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறையினர்க்கு

நன்றி




படம் 1

லௌரியா நந்தன்காரில் உள்ள கற்றூண்



படம் 2

பசாரில் (வைசாலியில்) உள்ள கற்றூண்




படம் 3

சங்கீசாவிலுள்ள யானைமுடி



படம 4

ரம்பூர்வாவிலுள்ள காளைமுடி



படம் 5

சாரநாத்திலுள்ள சிங்கமுடி




படம் 6

சாஞ்சியிலுள்ள சிங்கமுடி




படம் 7

தௌலி பாறையில் குடையப்பட்ட யானை



படம் 8

சாரநாத்திலுள்ள கற்றூண் பலகையில் காணப்படும் யானை உருவம்




படம் 9

சாரநாத்திலுள்ள கற்றூண் பலகையில் காணப்படும் குதிரை உருவம்



படம் 10

சாரநாத்திலுள்ள கற்றூண் பலகையில் காணப்படும் காளை உருவம்



படம் 11

சாரநாத்திலுள்ள கற்றூண் பலகையில் காணப்படும் சிங்க உருவம்